

## முத்துலட்சுமி ராகவன்

# எண்ணியிருந்தது ஈடேற...

### ஐந்தாம் பாகம்

# முத்துலட்சுமி ராகவன்

## எழுதிய

# எண்ணியிருந்தது ஈடேற...

## ஐந்தாம் பாகம்




லட்சுமி பாலாஜி பதிப்பகம்

68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,

சி.ஐ.டி நகர், தி.நகர்,

சென்னை - 600 035

அழைக்க : 95669 42486

மின்னஞ்சல் :bchandar24@yahoo.com

Website : www.muthulakshmiraghavan.com

# நூல் விவரப் பட்டியல்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | எண்ணியிருந்தது ஈடேற... 5 |
| நூலாசிரியர் | : | முத்துலட்சுமி ராகவன் |
| நூல் உரிமை | : | எழுத்தாளருக்கு |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : | முதற் பதிப்பு, ஏப்ரல் 2017 |
| தாள் | : | 11.6 Kg புக் பிரிண்ட் |
| நூல் அளவு | : | 1 X 8 கிரவுன் |
| பக்கங்கள் | : | 400 |
| விலை | : | ரூபாய் 200.00 |
| பதிப்பகம் | : | லட்சுமி பாலாஜி பதிப்பகம்<br>68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,<br>சி.ஐ.டி நகர், தி.நகர்,<br>சென்னை - 600 035<br>செல் : 95669 42486 |

# முக்கிய அறிவிப்பு

இந்தக் கதை எனது சொந்தக் கற்பனையில் உருவானது. இதன் பதிப்பிற்கான உரிமையை லட்சுமி பாலாஜி பதிப்பகத்திற்கு மட்டுமே தந்திருக்கிறேன்.

இதைத் தழுவி தொலைக்காட்சி தொடர்களையோ. திரைப் படத்தையோ எடுத்தாலும் இணையதளத்தில் என் அனுமதியின்றி வெளியிட்டாலும் நான் சட்ட பூர்வமான நடவடிக்கையை மேற்கொள்வேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

*இப்படிக்கு*

*முத்துலட்சுமி ராகவன்*

# ஆசிரியர் கடிதம்

**எ**ன் பிரியத்துக்குரிய வாசக... வாசகிகளே...!

தாய், தந்தை காட்டுவது பெற்றெடுத்த பிள்ளையென்ற பாசம்.. உடன் பிறந்தவர்கள் காட்டுவது ஒரே ரத்தம் என்ற பாசம்.. கட்டிய கணவர் காட்டுவது தாலி கட்டிய மனைவியென்ற பாசம்.. பெற்றெடுத்த பிள்ளை காட்டுவது தொப்புள் கொடி தந்த பாசம்.. உறவினர்கள் காட்டுவது சொந்தம் என்ற பாசம்..

இவை எதுவும் இல்லாமல் நம் வாழ்க்கைப் பயணத்தில் வழியில் சந்திக்கும் சிலர் காட்டும் ஆத்மார்த்தமான பாசத்திற்கு எவ்விதம் கைம்மாறு செய்யப் போகிறோம்..?

ஒரு பாடலில் சொல்வதைப் போல நான் பட்ட கடன் பூமியில் அதிகம் உண்டு.. அடைபட்ட கடனென்று எதுவும் இல்லை..

கைம்மாறு எதிர்பாராமல் மனதாரப் பாசத் தைப் பொழிந்த சிலரைப் பற்றி இந்த ஆசிரியர் கடிதத்தில் சொல்லப் போகிறேன்..

எனது குழந்தைப் பிராயத்திலே என்னைக் கொஞ்சி மடி தாங்கியது ‘குள்ளம்மா’ அத்தை.. அத்தைக்கு ஒரு குறையுண்டு.. இவர் கன்னித்தன்மை அடையாதவர்.. அதனால் பிறந்த வீட்டிலேயே இருந்து விட்டவர்.. திருமணம் என்பது கனவாக ஆகி விட்டதினாலேயோ என்னவோ.. தாய்மை பாசத்துடன் குழந்தைகளை அரவணைத்துக் கொள்வார்.. அத்தையின் குறைபாட்டைக் கூற நேர்வதால் அவரை நான் எங்கு சந்தித்தேன் என்ற விவரத்தை இங்கே பதியப் போவதில்லை.. தாயின் முகம் பார்க்கும் இரண்டு வயதுக் குழந்தைப் பிராயத்தில் அவர் மடியிலிருந்த நினைவுண்டு.. நான் பிறந்தபோதே.. கையில் எடுத்துக் கொண்டார் என்று அம்மா சொல்வார்..

குள்ளம்மத்தையின் மற்றுமொரு அடையாளம் வெள்ளைப் பணியாரம்.. எனக்குப் பிடிக்கும் என்பதற்காக தினந்தோறும் அவர் வீட்டில் வெள்ளைப் பணியாரம் செய்து ஊட்டுவாராம்.. அவர் வீட்டில் தொட்டில் கட்டிப் போட்டிருந்தாராம்.. வளர்ந்த பின்னால் அத்தை பற்றிய நினைவுகள் நிழல் போல என் நெஞ்சத்தில் நிறைந்திருந்தன.. நிழலை நிஜத்தில் ஓர்முறை தரிசித்து விட வேண்டும் என்று துடித்தேன்.. அத்தையைப் பற்றி விசாரித்துக் கொண்டே

இருந்தேன்.. சமிபத்தில் அத்தையைத் தேடிச் சென்று சந்தித்தேன்..

அதே சிரிப்பு.. அதே தாய்மை தவழும் மங்களரமான முகம்.. தம்பிக்கு திருமணம் செய்து தம்பியின் பிள்ளைகளை தன் பிள்ளைகளாக பாவித்து வளர்த்துக் கொண்டிருந்தார்.. என்னைக் கண்டதும் அவள் விழிகளில் மின்னிய வாத்சல்யாம்..!

அந்த நொடிகள் பொக்கிஷமானவை..

என் ஆறாம் வயதில் எனைத் தாலாட்டிய மற்றொரு அத்தையின் பெயர் நினைவில் இல்லை.. எனக்குத் தெரியாது என்று கூடச் சொல்லலாம்.. பொத்தாம் பொதுவில் அவரை 'போர்மேன் அத்தை..' என்றுதான் அழைப்பேன்..

அத்தைக்கு குழந்தைகள் இல்லை.. பிள்ளைக் கலி தீர்க்க நான் அவருக்குக் கிடைத்திருக்கிறேன் என்று சொல்லிக் கொஞ்சுவார்.. மஞ்சள் நிறத்தில் இருப்பவர் எதற்காக மஞ்சளை அரைத்துப் பூசிப் கொள்கிறார் என்பது அன்றைய வயதில் எனக்குத் தீராத குழப்பமாக இருந்தது.. அத்தை மஞ்சளில் மூழ்கி எழுந்ததைப் போல முகம், கை, கால்கள் எங்கும் மஞ்சள் மணத்துடன் படு அழகாக இருப்பார்.. அயர வைக்கும்

அழகு.. அவரது அழகில் ஈர்க்கப் பட்டுத்தான் நான் அவரையே சுற்றிச் சுற்றி வருவேன்..

போர்மேன் மாமா வார இறுதிகளில் தான் வந்து போவார்.. மற்ற தினங்களில் அத்தை மட்டும்தான் தனித்து இருப்பார்.. வாடகை வீடு.. மாமா எங்கே வேலை பார்த்தார், எதற்காக அவர் வேலை பார்க்கும் ஊருக்கு அத்தையை அழைத்துப் போகாமலிருந்தார் என்பது யாருக்குமே தெரியாது.. அவர் போர்மேன் வேலை பார்ப்பவர் என்று மட்டும் அப்பா சொல்வார்.. அவருக்கு அத்தை தாலி கட்டிய மனைவியா..? என்ற கேள்வி இன்றளவும் என் நெஞ்சில் மிதக்கின்றது.. அத்தையின் கழுத்தில் கனத்த தாலிச்சரடு இருந்தது.. அவள் மஞ்சளில் மூழ்கி எழும் போதெல்லாம் தாலிச்சரடும் மஞ்சளில் தோய்க்கப்பட்டு புது மஞ்சள் நிறத்துடன் புத்தம் புதிதாக இருக்கும்... நூல் சேலை.. கால் முழம் பூ.. இவற்றிலே தேவதையைப் போன்ற தேஜஸ்ஸுடன் இருக்க அத்தையால்தான் முடியும்..

வார இறுதிகளில் மாமா வரும்போது அல்வா வாங்கிக் கொண்டு வருவார்.. வாழையிலையில் மடித்துக் கட்டிய அல்வாப் பொட்டலத்தை அத்தை பத்திரப்படுத்தி வைத்து வாரம் முழுவதும் எனக்கு ஊட்டி விடுவார்.. பிந்தைய கால கட்டத்தில்

ஓர் திரைப்படத்தில் வில்லன் அல்வாக் கொடுத்து கதாநாயகியை ஏமாற்றும் காட்சி வந்து பிரபலமான போது என் மனதில் போர்மேன் அத்தையை நினைத்து வலி ஏற்பட்டது..

அத்தையைப் பற்றி எவரும் தவறாகப் பேசியதில்லை.. அனைவரும் அவரிடம் மரியாதையாகத்தான் நடந்து கொண்டதாக என் நினைவில் உள்ளது.. அத்தையும் அப்படித்தான் இருந்தார்.. வீட்டை விட்டு வெளியில் வர மாட்டார்.. கோவிலுக்கு மட்டும் போவார்.. அப்போதும் என் கை பிடித்து துணைக்கு அழைத்துக் கொண்டுதான் போய் வருவார்.. அத்தையின் மீது மஞ்சளும், மல்லிகைப் பூவின் மணமும் சேர்ந்த சுகந்தமான நறுமணம் கமழ்ந்து கொண்டிருக்கும்..

ஒருநாள் மாலை அத்தை என்னை அழைத்து மடியில் உட்கார வைத்து கண்ணீர் விட்டார்.. எனக்குத் தலைவ ாரிப் பூச்சூடி விட்டார்.. திண்பண்டங்களை என் கையில் தந்தார்.. வெகு நேரம் வரை அழுது கொண்டேயிருந்தார்.. ஏனென்று தெரியவில்லை.. ஏனென்று கேட்கவும் தெரியாத குழந்தைப் பிராயம் அது..

மறுநாள் அத்தையைத் தேடி அவள் வீட்டுக்குப் போன போது வீட்டு வாசலில் பூட்டுத் தொங்கிக் கொண்டிருந்தது.. அத்தை இரவோடிரவாக வீட்டைக் காலி செய்து விட்டார் என்று அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் சொன்னதாக அம்மா சொன்னார்..

எங்கே சென்றார் என்று தெரியாமல் காற்றில் கலந்து விட்ட புகை போல மறைந்து விட்டார்.. ‘போர்மேன் அத்தை..’ தன்னலமில்லாமல் அவர் காட்டிய தாய்ப்பாசம் பசுமையாக என் மனதில் பதிந்திருக்கிறது.. குள்ளமத்தையின் முகவரியை அறிந்திருந்தேன்.. தேடிப் போய் சந்தித்து விட்டேன்.. போர்மேன் அத்தையின் ‘முக’வரியும் எனக்கு நினைவில் இல்லை.. முகவரியும் தெரியாது.. எங்கே தேடுவன்..? எப்படிச் சந்திப்பேன்..?

அத்தையைப் பற்றிய பின்புலம் உறுதியானதாக இல்லாததால் அவரை நான் எங்கே சந்தித்தேன் என்ற விவரத்தை இங்கே பதியாமல் தவிர்க்கிறேன்.. இந்த உலகில் எங்கோ ஓர் மூலையில்.. ‘போர்மேன் அத்தை..’ இருக்கலாம்.. அவரது நல்வாழ்விற்கான பிரார்த்தனையை இங்கே சமர்ப்பிக்கிறேன்..

நான் அஞ்சல் துறையில் தேர்வானேன்.. கைக்குள் வளர்ந்தவள் என்பார்களே.. அது நான்தான்.. என் அப்பாவின் ஆளுமையின் கீழ் வளர்ந்தேன்.. அப்பா பெயருக்குத்தான் பள்ளி ஆளுமையின் கீழ் வளர்ந்தேன்.. அப்பா பெயருக்குத்தான் பள்ளி ஆசிரியர்.. ஹோதாவெல்லாம் நாட்டாமையைப் போல இருக்கும்.. தன்னிச்சையாக செயல்பட விட மாட்டார்.. சந்தோஷ் சுப்ரமணியம் கதைதான்.. இதைச் செய்தால் அதைச் செய் என்பார்.. அதைச் செய்தால் இதைச் செய் என்று கத்துவார்.. அவர் சொல்வதைத்தான் நான் செய்தாக வேண்டும்.. அப்படியொரு அடாவடி அண்ணனுக்கு அடுத்து குடும்பத்திற்கு மூத்த பெண் என்று எனக்குப் மகுடன் சூட்டப் பட்டிருந்ததால் என்னைப் பெற்றவர்களின் கண்டிப்பும் அதிகாரமும் என்மீதுதான் முதலில் பாயும்.. அடுத்துத்தான் தங்கைகளுக்கும், தம்பிக்கும்..

இப்படியாகத்தானே நான் போஸ்டல் டிரெயினிங் செண்டரில் டிரெயினிங்கிற்காக கால் பதித்தேன்.. வழக்கம் போல அப்பா காவல் பொறுப்பேற்று ஹாஸ்டலில் விட்டுப் போக வந்திருந்தார்.. மற்ற டிவிஷன்களில் இருந்து வந்தவர்களில் பலர் தனியாக வந்திருந்தார்கள்.. வயதுப் பெண்கள் தனித்துப் பயணம் செய்து வருவது சாத்தியமா

என்ற பிரமிப்பு எனக்குள் எழுந்தது.. அவர்களை 'ஆ' என்று பார்த்தேன்.. அவர்கள் சுதந்திரமாகப் பேசிச் சிரித்து வளைய வந்ததைப் பார்க்க ஆச்சரியமாக இருந்தது..

போர்ஸ்டல் டிரெயினிங் சென்டரில் ஒரு படிவத்தை நிரப்பித் தரச் சொன்னார்கள்.. அதைப் படித்துப் பார்த்துப் பூர்த்தி செய்ய விடாமல் அப்பா பறித்துக் கொண்டார்.. எனக்குப் பதில் அவர் படித்து.. இங்கே இதை எழுது.. இங்கே அதை எழுது என்று கட்டளையிட அவர் சொன்னதை மட்டும் செய்து கொண்டிருந்தேன்.. கடைசி யாக கையெழுத்துப் போடப் போகும் இடத்தில் கூட இங்கேதான் கையெழுத்துப் போடனும் என்று அவர் கை காட்டிப் படுத்தி எடுத்ததுதான் கொடுமையிலும் கொடுமை.. ஒரு வழியாக கையெழுத்திட்டு நிமிர்ந்த போதுதான்..

'சீனு அண்ணா..' வைப் பார்த்தேன்.. என்னை அப்பா பாடாய் படுத்திக் கொண்டிருந்ததை சுவராஸ்யமாக பார்த்துக் கொண்டிருந்தார்.. அந்த சுவராஸ்யம் என்னை சங்கடப் படுத்தியது.. எல்லாம்.. இந்த அப்பாவால் என்ற கோபமும் வந்தது..

இப்படித்தான் நான் சீனு அண்ணாவை முதன் முதலாக சந்தித்தேன்.. அவருடைய தங்கை பத்மாவதி என்னைப் போல போஸ்டல் டிபார்ட்மெண்டில் தேர்வாகி இருந்தார்.. தங்கையை ஹாஸ்டலில் விட வந்தவர் நான் படிவத்தை பூர்த்தி செய்த லட்சணத்தை வேடிக்கை பார்க்க ஆரம்பித்து விட்டார்.. பிந்நாள்களில் அடிக்கடி அந்தச் சம்ப வத்தைச் சொல்லிச் சொல்லி சிரிப்பார்..

“உனக்கு கையெழுத்தை எங்கே போடனும்னு கூடத் தெரியாதா..? அதையும் உன் அப்பா உனக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாரே.. ஹா.. ஹா..”

சீனு அண்ணா ஜாலியான சுபாவம் கொண்டவர்.. கண்களில் விஷமம் வழிந்தோடும்.. அவரை விட இளைஞர்களையும் ஈர்க்கும் உற்சாகம் கொண்டவர்.. எனக்கு நேர் எதிர் குணாதியம்.. கலாட்டா செய்வதில் மன்னன்.. அவருடைய மகளின் திருமணத்திற்கு வந்திருந்த கொழுந்தியாளிடம் (மனைவியின் தங்கை..) “உன் கல்யாணத்தப்ப பார்த்தது.. இப்பத்தான் எங்க வீட்டில காலடி வைத்திருக்க.. உன் புருஷனுக்கு என்மேல அவ்வ்வ்..வளவு நம்பிக்கை..!” என்று ‘லந்து’ செய்தார்..

பத்மாவதியின் உடல் பிறந்த அண்ணன் எனக்கு உடன் பிறவாத அண்ணனாக மாறியது விந்தையிலும் விந்தை..!

சீனு அண்ணா செண்டிமெண்ட்களுக்கு உட்படாதவர்.. அவருக்கும் செண்டிமெண்டுக்கும் ஏணியென்ன.. ஏரோப்பிளேன் விட்டாலும்கூட எட்டாது.. இருந்தும் அவர் எனக்கு அண்ணனானார்.. பத்மாவதியும் நானும் திண்டுக்கல் டிவிஷன் என்பதில் ஒன்று பட்டோம்.. நீளமான பத்மாவதியின் தலைமுடி அவளுடைய முழங்கால்களையும் தாண்டி கெண்டைக் காலைத் தொடும்.. என்னைவிட ஆறு வயது மூத்த பத்மாவதி தனியார் பள்ளியொன்றில் ஆசிரியையாக வேலை பார்த்துக் கொண்டிருந்தவர்.. நானோ மாணவியாக இருந்து வேலைக்குத் தேர்வாகியிருந்தவள்.. சுயமாக அவர் செயல்பட.. நான் எதற்கெடுத்தாலும் தயங்குவேன்.. பயப்படுவேன்..

பத்மாவதியும் நானும் தோழிகளானோம்.. பத்மாவதிக்கு அப்பா, அம்மா கிடையாது.. சீனு அண்ணாதான் எல்லாமுமாக இருந்தார்.. சீனு அண்ணாவின் மனைவி பானு அண்ணி.. பத்மாவதியை விட இரண்டு வயது இளையவர்.. அக்கா மகள்.. அதனால் பத்மா, அண்ணியை ‘பானு..’ என்று பெயர்

சொல்லித்தான் அழைப்பார்.. பிந்நாள்களில் நான் அண்ணியிடம் ஃபோனில் பேசும்போது..

“நான் யாருன்னு கண்டு பிடிங்க அண்ணி..” என்பேன்.. “முத்துலட்சுமிதானே..” உடனடியாக கண்டு பிடித்து விடுவார்..

“எப்புடிண்ணி..?” ஆச்சரியப்பட்டால்..

“என்னை அண்ணின்னு வாய் நிறையக் கூப்பிடறது நீ மட்டும்தானே..” என்று பிரியமாகச் சொல்வார்..

பானு அண்ணி எளிமையான சுபாவம் கொண்டவர்.. அதிர்ந்து பேச மாட்டார்.. அடாவடி சீனு அண்ணனுக்கு அப்படியொரு அமைதியின் சிகரமான மனைவி.. அவர்களுக்கு ஒரே மகள்.. திவ்யா..! அண்ணனின் குடும்பத்திலே நானும் ஒருத்தியான போது திவ்யாவுக்கு ஏழு வயது.. குழந்தை..!

நானும் பத்மாவும் தோழிகள் என்பதால் அண்ணனும், அப்பாவும் தோழர்களாக ஆனார்கள்.. டிரெயினிங் முடிந்து நான் வேலையில் சேர்ந்த போது அதிகாலை ஷிப்ட் போட்டு விட்டால் என் வீட்டிலிருந்து வந்து போகச் சிரமப் படுவேன்.. அண்ணனின் வீடு அலுவலகத்துக்குப் பக்கத்தில் இருந்தது..

“மார்னிங் ஷிப்ட் போட்டா தங்கச்சி என் வீட்டில இருந்து போகட்டும் நைனா..” என்று வெக இலகுவாக என் சிக்கலைத் தீர்த்து வைத்தார்..

ஆச்சரியமாக இருக்கிறது.. கைக்குள் வளர்க்கும் என் அப்பா என்னை அண்ணனின் வீட்டில் தங்கி அதிகாலை ஷிப்டிற்கு வேலைக்குச் சென்றுவர அனுமதித்தார்.. வேலை கூடுகிறதே என்று முகம் மாறாமல்..

“என்னை நம்பி உங்க வீட்டில் அனுப்பி வைத்திருக்கிறார்களே.. அது பெரிய விஷயம் இல்லையா..?” என்று என் குடும்பத்தைக் கொண்டாடினார் பானு அண்ணி..

ஜாலியான சீனு அண்ணா.. இளம் வயதில் இருக்கும் என்னைப் பார்க்கும் பார்வை அவருடைய ஏழுவயது மகள் திவ்யாவைப் பார்க்கும் பார்வையாகவே இருக்கும்.. ஒருமுறை நான் வேலை முடிந்து வீட்டுக்கு வந்த போது இருட்டி விட்டது.. அன்று அவர்களின் திருமணநாள்.. பிரியாணி செய்திருந்தார்கள்.. எனக்காக சூடு குறையாமல் ஹாட்பாக்ஸில் வைத்திருந்து பரிமாறி சாப்பிட வைத்தார்கள்..

காலப் போக்கில் அண்ணனின் குடும்பத்திலிருந்து பிரிந்து விட்டேன்.. பத்மாவதிக்கும்.. எனக்கும் திருமணமாகி அவரவர்

குடும்பங்கள் என்று ஒதுங்கி விட்டோம்.. பத்மா பேங்க் வேலைக்கு இடம் பெயர்ந்து சென்னைக்குச் சென்று வி.ஆர் வாங்கி சென்னையில் செட்டிலாகி விட்டார்.. நான் திருமங்கலம் திண்டுக்கல் என்று அல்லாடிக் கொண்டிருந்தேன்.. திண்டுக்கல்லில் நான் காலூன்றி சொந்தமாக வீடு கட்டி முடித்திருந்த சமயத்தில் சீனு அண்ணாவை மறுபடியும் சந்தித்தேன்..

ஏதோ ஞாபகத்துடன் திண்டுக்கல் முனிசிபாலிட்டி ஆபிசை நான் கடந்து போய் கொண்டிருந்த போது என் பெயரைச் சொல்லி யாரோ கூப்பிடுவதைப் போல இருந்ததில் திரும்பிப் பார்த்தேன்.. திண்டுக்கல் முன்சிபாலிட்டி அலுவலகத்திலிருந்து சீனு அண்ணா வந்து கொண்டிருந்தார்..

“அண்ணா..”

எதிர்பாராத சந்திப்பில் சந்தோஷப்பட்டு நின்று விட்டேன்..

“நீதானா இது..? கூப்பிடக் கூப்பிட யோசனையா போய்க்கிட்டு இருக்க.. அ ப்படியென்ன யோசனை..? நீ கூட இப்படி யோசிப்பியா..?” என்று ஆச்சரியப் பட்டார்..

அண்ணா ‘தி.மு.க’ கட்சியைச் சேர்ந்தவர்.. வைஸ் சேர்மன் பதவியிலிருந்தார்.. அவர் கட்சிக்காரர் என்றே

எனக்குத் தெரியாது.. இதில் 'வைஸ் சேர்மன்' என்றதும் பேந்தப் பேந்த விழித்தேன்..

"இதில் மட்டும் மாறலை.. அப்படியேதான் முழிக்கிற.." என்று சிரித்தவர் வீட்டுக்கு அழைத்தார்..

அதே பானு அண்ணி.. இளமை மாறாத அமைதியுடன் இருந்தார்.. திவ்யா வளர்ந்து கல்யாண வயதில் அழகாக இருந்தாள்.. அவளுக்குத் திருமணம் நிச்சயமாகியிருக்கிறது என்று அண்ணி சொன்னார்.. என் கணவரையும், மகனையும் விசாரித்தாள்..

இப்போது வீடு கட்ட, வாங்க எளிதாக லோன் கிடைப்பதைப் போல அப்போது லோன் கிடைக்காது.. வங்கிகளில் வீட்டுக்கடன் கொடுக்க மாட்டார்கள்.. சொசைட்டிகளில்தான் கிடைக்கும்.. எல்லோருக்கும் லோன் கிடைத்து விடாது..

நான் வீட்டை மாற்றியமைத்து மாடி கட்ட உத்தேசித்திருந்தேன்.. மாடியில் இரண்டு.. கீழ்தளத்தில் இரண்டு என்று நான்கு போர்ஷன்களாக கட்ட எண்ணம்.. கையில் இருந்த பணம் எனது எஸ்டிமேட்டிற்குப் போதாது..

அதை அண்ணியிடம் சொல்லிக் கொண்டிருந்த போது.. அதை கேட்டுக் கொண்டிருந்த சீனு அண்ணா..

“நாளைக்கு சொசைட்டிக்கு வா.. மேனேஜரைப் பார்க்கலாம்..” என்றார்..

மறுநாள் என் கணவரும், நானும் சொசைட்டிக்குப் போனோம்.. சீனு அண்ணா.. “என் தங்கை..” என்று என்னை அறிமுகம் செய்து வைத்ததில் அனைத்து வேலைகளும் விரைவில் நடந்து அந்த வார இறுதியில் எனக்குக் கடன் கிடைத்து விட்டது.. அண்ணனிடம் நன்றி சொன்ன போது..

“எவ்வளவோ பேருக்கு எவ்வளவோ செய்கிறேன்.. என் தங்கைக்கு இதைச் செய்ய மாட்டேனா..?” என்றார்..

சீனு அண்ணா பதவியில் இருந்த போதே திவ்யாவின் திருமணம் நடந்தது.. எம்.எல்.ஏ மணிமாறன் அவர்களும் சீனு அண்ணாவும் நெருங்கிய நண்பர்கள்.. திவ்யாவின் திருமணத்துக்கு நாங்கள் போன போது மணிமாறன் அவர்கள்தான் பந்தி விசாரணை செய்து கொண்டிருந்தார்..

மீண்டும் பரிவு.. நான்கைந்து வருஷங்கள் கழித்து சீனு அண்ணா வாக்கிங் வந்து கொண்டிருந்த போது சாலையில்

சந்தித்தேன்.. இளைத்திருந்தார்.. பதவி காலம் முடிந்திருந்தது.. வீட்டிற்கு அழைத்தார்.. போனேன்.. வழக்கமான பாசத்துடன் காபி போட்டுக் கொடுத்தார் பானு அண்ணி.. வசதியான வீட்டை விட்டு எளிமையான வீட்டிற்கு மாறியிருந்தார்கள்.. அண்ணன் இளைத்திருக்கிறாரே என்று அண்ணியிடம் விசாரித்த போது அண்ணி அழுதார்..

சீனு அண்ணனுக்கு பிளட் கேன்சராம்.. நாள்களை எண்ணிக் கொண்டிருந்தாராம்.. நம்ப முடியவில்லை.. அந்த உடல் நிலையிலும் ஏதோ ஒரு ஜோக்கை சொல்லி விட்டுப் பகபகவென சிரித்துக் கொண்டிருந்தார்..

அதுதான் சீனு அண்ணாவை கடைசியாக நான் பார்த்தது.. நான் உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுத் திரும்பி வந்த போது சீனு அண்ணா இறந்து விட்ட செய்தி எனக்குக் காத்திருந்தது..

எதிர்பார்ப்பில்லாமல்.. இதை நான் உனக்குச் செய்தேன் என்று சொல்லிக் காட்டாமல் எனைத் தாங்கிய உறவுகள் இவர்கள்.. பாசம் காட்டியவர்கள்.. தாய்மடி தந்து தாங்கியவர்கள்.. பாதுகாத்தவர்கள்..

இப்போது சொல்லுங்கள்.. இவர்களுக்கு நான் பட்ட கடனை அடைத்து விட்டேனா..? அடைத்து விடத்தான் முடியுமா..?

**- நட்புடன்**

**முத்துலட்சுமி ராகவன்**

# அத்தியாயம் 134

**ம**ழையில்லாத இரவு நேரத்து வானம் பனி மேகம் சூழ அழகாக இருந்தது.. ஹாலில் இருந்த சோபாவில் கம்பளி மூடி சரிந்து உட்கார்ந்து தோட்டத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் நந்தினி.. மழையில்லாத வயநாட்டின் இரவுப் பொழுதுகள் அழகானவை என்று தோன்றியது.. மழை கொட்டிக் கொண்டிருப்பதும் அழகுதான்.. மித மிஞ்சிய அழகு தெவிட்டாதா..? அது போல்தான் வயநாட்டின் மழையும்.. நல்ல வேளையாக நந்தினியை ஜலதோஷம் தாக்கவில்லை.. அது முற்றுகையிட முடியாதபடிக்கு அவள்தான் எக்ஸிமோக்கள் போல இருபத்தி நான்கு மணி நேரமும் பனிக்குல்லாயும் கனத்த ஸ்வெட்டருமாக காட்சியளிக்கிறாளே..

ரவிச்சந்திரனுக்கு அதில் பலத்த ஆட்சேபமுண்டு என்பதில் அவள் கன்னம் சிவந்தாள்.. அவளை ஊடுருவிப் பார்க்கும் லேசர் பார்வைக்கொன்றும் குறைவில்லைதான்.. அந்தப் பார்வையோடு ஒரு ஏக்கப் பெருமூச்சையும் சேர்த்து வெளியிடுவான்.. அதுதான் சுகமான ஓர் இம்சை.. அது ஏன் என்று அவளுக்குப் புரியவில்லை.. அவளுக்காக அவன்

ஏங்குவதை உள்ளூர அவள் விரும்புகிறாளா..? ரசிக்கிறாளா..?

ஆழ்கடலின் ஆராய்ச்சியைப் போல ஆழ்மனதின் இந்த ஆராய்ச்சிகளின் பக்கம் அவள் தலை வைத்துப் படுப்பதில்லை.. அவள் மனதில் என்ன இருக்கிறது என்று அறிய அவள் அச்சம் கொள்கிறாளா என்ற வினா அவளுக்குள் சுழன்று கொண்டுதான் இருக்கிறது.. அதற்கு விடை காண அவள் முயல்வதேயில்லை..

இரவு உணவுக்குப் பின்னால் அவள் அறையின் ஜன்னல் வழியாகத் தோட்டத்தை வேடிக்கை பார்த்தபடி சற்று நேரம் உட்கார்ந்திருப்பது வழக்கம்.. ரம்யாவுடன் அவள் அறைக்கு வந்த ரவிச்சந்திரன் அவள் ஜன்னலோரமாக உட்கார்ந்திருப்பதைக் கண்டு புருவங்களை உயர்த்தி அவளைக் கிறங்கடித்தான்..

இவன் ஏன் இத்தனை அழகனாக இருந்து தொலைக்க வேண்டும்.. அவளை மயக்கித் தொலைக்க வேண்டும் என்ற பொருமலோடு..

“என்ன்ன்ன்...ன...?” என்றாள் நந்தினி..

ரம்ய மாலினி பக்கத்தில் இருந்ததால் எதற்காக இந்த கோபம் என்று வெளிப்படையாக விசாரிக்க முடியாமல் அவன் புருவங்களையும் இமைகளையும் சுருக்கி ஓர் பார்வை பார்த்து விட்டு ஏன் என்று கேட்பதற்காக புருவங்களை உயர்த்தி மறுபடியும் அவளை கிறக்கடித்துத் தொலைந்தான்..

‘சும்மாதான் இருந்து தொலையேண்டா..’

தாள முடியாத தாபம் கலந்த தவிப்போடு அவள் வாய்க்குள் மொணமொணத்தாள்.. அதை உற்றுக் கேட்ட ரம்ய மாலினி..

‘‘அண்ணா.. உன்னைத்தான் தாளித்துக் கொட்டிக் கிட்டு இருக்காங்க.. ஹா..ஹா..’’ என்று வாய் பொத்தி சிரித்தாள்.. ‘‘கேட்டுக்க.. எதுக்கெடுத்தாலும் இவளுக்கே சப்போர்ட் பண்ணுவியே.. மேடம் என்ன செய்கிறாங்கன்னு பார்த்தியா.. கொஞ்சம் கூட பாஸ்ன்னு பயப்பட மாட்டா.. சான்ஸ் கிடைத்தாப் போதும்.. தாளித்துக் கவிழ்த்திருவா..’’

ரவிச்சந்திரனின் பார்வை அவள் மீது படிந்து மேய்ந்தது..

‘பக்கத்திலே தங்கச்சியை வைத்துக்கிட்டுப் பார்க்கிற பார்வையைப் பாரேன்.. ராஸ்கல்..’ நந்தினி தவித்துப் போனாள்..

“இங்கே உட்கார்ந்துக்கிட்டு என்ன பண்றீங்க..” ரம்ய மாலினி சுவாதீனமாக நந்தினியின் பக்கத்தில் உட்கார்ந்தபடி கேட்டாள்..

“ச்சும்மா.. தோட்டத்தை வேடிக்கை பார்க்கிறேன்..”

“யூஷுவலா.. நைட் டின்னர் சாப்பிட்டு வந்தவுடன் நீங்க தோட்டத்தை வேடிக்கை பார்க்க ஆரம்பிச்சுடறிங்க.. அன்றைக்கு நான் வந்தப்பகூட இங்கேதான் உட்கார்ந்திருந்தீங்க..”

“யு ஆர் கரெக்ட் ரம்யா.. நைட் டின்னர் முடிஞ்சு வந்ததும் நான் இங்கே உட்கார்ந்து தோட்டத்தை வேடிக்கை பார்த்துக்கிட்டு இருப்பேன்.. நைட் டயத்தில இருக்கிற அமைதி பகலில் இருக்கறதில்லை..”

“சரிதான்.. பட்.. எப்போதான் தூங்குவீங்க..?”

“தூக்கம் வர்றப்போ தூங்குவேன்..”

“எப்போதான் தூக்கம் வரும்..?”

“அது எப்ப வரும் எப்படி வரும்ன்னு தெரியாது.. வர்றப்ப தானா வந்திரும்..”

“செம ஸ்லாங்.. சூப்பர் ஸ்டாரோட டயலாக்கை பிய்த்து உதறாருகிறாங்கல்ல அண்ணா..”

“அது சூப்பர் ஸ்டார் பேசின டயலாக்.. எழுதினது வேற ஒருத்தங்க..” வியாக்கினம் பேசினான் ரவிச்சந்திரன்..

‘நீ இருக்கியே..’ என்று ஒரு பார்வை பார்த்தாள் நந்தினி..

‘யெஸ்.. நான் இருக்கேன்.. நீயும் கூட வா.. சேர்ந்து இருக்கலாம்..’ அவன் கண்கள் அழைத்தன..

‘எப்படிப் பார்க்கிறான் பார்..’ நந்தினிக்குள் எதுவோ நிகழ்ந்தது..

ரவிச்சந்திரன் அவள் பார்வையில் மட்டும் படும்படி ரம்ய மாலினியின் பார்வைக்க மறைவாய் நின்று அவளைப் பார்த்துக் கண்சிமிட்டினான்.

‘கடவுளே..!’ வியர்த்து விட்டது நந்தினிக்கு..

குளிர் நிரம்பிய அந்த இரவுப் பொழுதில் அவனது அழைக்கும் பார்வை கதகதப்பை ஊட்டும் கணப்பாய் அவளுக்குள் புகுந்து சுகம் நிரம்பிய ஓர் அவஸ்தையை உண்டு பண்ணியது..

இளமைப் பருவத்தின் புரிபடா உணர்வுகளுடன் போராட நேரிடுவதைப் போன்ற கொடுமை வேறேதும் இல்லை..

நந்தினிக்கும் ரவிச்சந்திரனுக்கும் இடையில் நடந்து கொண்டிருந்த உணர்ச்சிப் போராட்டத்தைக் கவனிக்காமல் ரம்ய மாலினி எதையோ பேசிக் கொண்டிருந்தாள்.. அவன் பார்த்துக் கொண்டிருந்த பார்வையில் நந்தினியின் காதுகளில் ரம்ய மாலினி பேசிய எந்த வார்த்தைகளுமே நுழையவில்லை.. தன் போக்கில் ஊம் கொட்டித் தலையாட்டியபடி மனம் படபடக்க ரவிச்சந்திரனைப் பார்ப்பதும் அவன் தீர் க்கமாக ஓர் பார்வை பார்த்து வைத்தால் பயந்து போய் தலையைக் கவிழ்ந்து கொள்வதுமாக இருந்தாள்..

“ஏன்னு சொல்லுங்க..”

ரம்ய மாலினி நந்தினியின் தோளைப் பிடித்து உலுக்கினாள்..

நந்தினி எதையென்று சொல்லுவாள்..? ரம்ய மாலினி கேட்ட ‘ஏன்’ எதைப் பற்றிய ‘ஏன்’ என்றே அவளுக்கு விளங்கித் தொலைக்கவில்லை.. இந்த லட்சணத்தில் ஏன்னு சொல்லுங்க என்று ரம்ய மாலினி அடம் பிடித்தால் அவள் என்னதான் செய்வாள்..?

“என்னங்க.. இந்த விழி விழிக்கறீங்க.. இங்கே பார்ப்பதை விட மாடி ஹாலில் உட்கார்ந்து பார்த்தால் தோட்டம் மட்டுமில்லை.. இந்த ஊரோட வியு பாயிண்ட்ஸே பிரமாதமாத் தெரியும்.. அங்கே உட்கார்ந்து பார்க்கிறதை விட்டு விட்டு ரூமுக்குள்ளே தனியா உட்கார்ந்தா வேடிக்கை பார்ப்பீங்க..?”

ரம்ய மாலினி சொல்வது உண்மைதான்.. மாடி ஹால் முழுக்க முழுக்க கண்ணாடிகளால் மூடப் பட்டிருக்கும்.. வெளியிலிருந்து பார்த்தால் உள்ளே எதுவும் தெரியாது.. உள்ளேயிருந்து பார்த்தால் வெளியில் இருக்கும் அத்தனை வியு பாயிண்ட்ஸும் பிரமாதமாகத் தெரியும்..

நந்தினிக்கும் அங்கிருந்து வேடிக்கை பார்க்கப் பிடிக்கும்தான்.. அரண்மனைக்கு வந்த புதிதில் மாடி ஹாலின் பிரம்மாண்டமான அழகில் சொக்கிப் போய் அங்கேயிருந்த சோபாக்களில் உட்கார்ந்து வேடிக்கை பார்த்ததுண்டு.. அப்படி வேடிக்கை பார்க்கும் போதுதான் அஜந்தாவிடம் மாட்டிக் கொள்கிறாளே.. எதற்கு வம்பு என்றுதானே அறையின் ஜன்னலைத் தேர்ந்தெடுத்தாள்..

அதைச் சொன்னதும் ரம்ய மாலினி பல்லைக் கடித்தாள்..

“பார்த்தியா அண்ணா.. அவள்தான் இந்த அரண்மனைக்குச் சொந்தக்காரி போலவும் நாமெல்லாம் யாரோ போலவும் பிஹேவ் பண்றா.. பாட்டியும் அவளுக்குச் சப்போர்ட் பண்றாங்க..”

‘நாமெல்லாம்..’ என்று அவள் நந்தினியையும் கூட்டுச் சேர்த்துக் கொண்டதில் மனதுக்குள் இதமாக உணர்ந்தாள் நந்தினி.. ரம்ய மாலினியின் பெருந்தன்மையில் மனம் நெகிழ்ந்தாள்.. அஜந்தாவின் மாமன் மகளுக்கு இப்பேற்பட்ட பரந்த மனதா..?

‘வீணா அத்தையின் மகள் இப்படித்தான் இருப்பாள்.. அவந்திகாவின் மகள் வேறு எப்படி இருப்பாள்..?’

“நாம்தான் அவளை வளர்த்து விடறோம்.. அவளைக் கண்டு பயந்து ஒதுங்கிப் போனா அப்படித்தான் பிஹேவ் பண்ணுவா..” ரவிச்சந்திரன் கோபமாகச் சொன்னான்..

இது அவளுக்கானது என்பதில் நந்தினி பார்வையை உயர்த்தி ரவிச்சந்திரனைப் பார்த்தாள்.. அவனது விழிகளில் இருந்த கோபத்தில் திகைத்துப் போனாள்..

‘இவன் எதுக்காக கோவிச்சுக்கிறான்..? இவனோட அத்தை மகளைக் கண்டா பயந்து ஒதுங்கித்தானே ஆகனும்..?

வில்லங்கம் பிடிச்சவ.. வம்புக்கும் வந்துட்டு நாம எதையாச்சும் வாயிருக்க மாட்டாம சொல்லிட்டா அதை அப்படியே திரிச்சு ஒன்றுக்கு கோடியா பாட்டியிடம் பத்த வைச்சுடறாளே.. அவளைக் கண்டா பயந்து ஒதுங்கித்தானே ஆகனும்..?'

"வாயடிக்கிறதெல்லாம் நம்மிடம்தான்.. அவளைக் கண்டா வாலைச் சுருட்டி வைத்துக்கிட்டு ரூமுக்குள்ள பதுங்கிக்கிறது.. இதில பெரிய ஜான்ஸிராணி போல பேசியாகி றது.." ரவிச்சந்திரன் தாக்கினான்..

"என்னங்க நந்தினி அண்ணன் இப்படித் தாக்குது..?" ரம்ய மாலினி தூண்டி விட்டாள்..

"உங்க அத்தை மகளைக் கண்டாப் பதுங்காம என்ன செய்கிறதாம்..? அவதான் எதுக்கெடுத்தாலும் பாட்டின்னு கூவி பஞ்சாயத்தைக் கூட்டிடறாளே.. பாட்டி என்னைக் கூப்பிட்டுக் கேள்வி கேட்டாப் பரவாயில்லை.. அத்தையைக் கூப்பிட்டு விடறாங்களே.. என்னால் பாட்டியிடம் அவங்க பேச்சு வாங்கனுமா..?"

வீணாவுக்காக நந்தினி அஜந்தாவிடம் வம்பு வளர்க்காமல் ஒதுங்கிப் போகிறாள் என்பதில் ரவிச்சந்திரனின் முகம்

கனிந்தது.. அண்ணனும் தங்கையும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்..

“அம்மா இவங்களைக் கொஞ்சறதிலயும் ஓர் அர்த்தம் இருக்கு அண்ணா..” என்றாள் ரம்ய மாலினி..

“யெஸ்.. யெஸ்.. என்னமா பாவம் காட்டறா.. அம்மாவுக்காக அஜந்தாவிடம் புறமுதுகு காட்டறாளே.. வாட் எ அபெக்ஷன்..! வாட் எ அபெக்ஷன்..! வாவ்..”

ரவிச்சந்திரன் புகழ்கிறானா இல்லை இகழ்கிறானா என்று தெரியாமல் குழம்பிப் போனாள் நந்தினி..

‘இவன் என்னதான் சொல்கிறான்..? இவன் பேச்சைக் கேட்டா அப்ரிஷியேட் பண்றதைப் போல இல்லையே..’

“மேடம் என்னோட கெஸ்ட்டா வந்திருக்காங்க ரம்யா.. அஜந்தாவைக் கண்டு பயந்து இவங்க ஒதுங்கிப் போனா அது எனக்குத்தான் குறைவு.. சொல்லி வை..”

“ஏன்..? நீ இங்கேதானே இருக்கிற..? நீயே சொல்லி வைத்தால் ஆகாதா..? நானும் நந்தினியும் ஃபிரண்ட்ஸா இருக்கிறது உனக்குப் பொறுக்கலையா...? எங்க

ஃபிரண்ட்ஷிப்பை கட் பண்ண இண்டர்நேஷனல் லெவல்ல சதி பண்ற.. பார்த்தியா..?''

''ஆமாமாம்.. மூழ்காத ஷிப் உங்க ஃபிரண்ட்ஷிப்தான்.. போவியா.. லுக் நந்தினி.. இனிமே நைட் டின்னர் முடிந்ததும் நீ மாடி ஹாலில் கொஞ்ச நேரம் உட்கார்ந்து சீனரியை ரசிச்சுட்டு அப்புறமாத்தான் உன் ரூமுக்கு வர்ற.. மனசிலாயி..''

''மனசில் ஆகலை பாஸ்.. இது அநியாயம்.. உங்களிடம் வேலை பார்த்தா நீங்க இப்படியெல்லாம் ரூல் போடுவிங்களா..?''

''இதுக்கு மேலேயும் போடுவேன்... நைட் டின்னருக்குப் பின்னாலே நீ மாடி ஹாலில் உட்கார்ந்துட்டுத்தான் ரூமுக்கு வரனும்.. திஸ் இஸ் மை ஆர்டர்..''

கட்டளையை சிரமேற்கொண்டாக வேண்டிய கட்டாயத்திற்கு ஆளான நந்தினி.. அடுத்தடுத்து வந்த நாள்களில் இரவு உணவுக்குப் பின்னர் மாடி ஹாலில் உட்கார்ந்து தோட்டத்தை ரசிக்க ஆரம்பித்தாள்..

அஜந்தா வம்புக்கு வந்தாள்தான்.. அவளாவது நந்தினியை சுதந்திரமாக நடமாட விடுகிறதாவது.. அவள் வம்பு

வளர்க்க வாய் திறக்கும் சமயத்தில் மிகச் சரியாக ரவிச்சந்திரன் அங்கே பிரசன்னமாகி விடுவான்.. கூர்மையான அவனது பார்வை வீச்சைத் தாங்க முடியாமல் ஓடி விடுவாள் அஜந்தா..

“எத்தனை நாள் நீங்க காவல் காக்க முடியும்..?” நந்தினி கவலைப்பட்டாள்..

“தேவைப்படுகிற வரைக்கும்..” என்றான் ரவிச்சந்திரன்.. எதுவரை அவனுடைய காவல் தேவைப்படும் என்று அவனும் விளக்கம் சொல்லவில்லை.. அவளும் கேக்கவில்லை.. எது எப்படியோ.. நந்தினியின் ஆசைப்படி அவள் மாடி ஹாலில் உட்கார்ந்து இரவுப் பொழுதில் தோட்டத்தின் அழகு எப்படிப் பரிமளிக்கிறது என்று மனமாற பார்த்து ரசிக்க முடிந்தது.. அது ஒரு வரம் என்று அவள் மனம் சொல்லியது..

# அத்தியாயம் 135

**ர**விச்சந்திரன் வரம் கொடுக்கும் வள்ளலாகத்தான் இருந்தான்.. உத்ராவின் வருகைக்கு முன் அவள் வருபதைப் பற்றி டைனிங் ஹாலில் அறிவித்தான்..

“என்னோட ஃபிரண்ட்..! நியு மேரிட்..! ஹனி மூனுக்காக வயநாடு வர்றான்.. என் அரண்மனையில்தான் தங்குவான்.”

‘என் அரண்மனை..’யில் அவன் கொடுத்த அழுத்தத்தில் டைனிங் ஹாலில் அமைதி நிலவியது.. அஜந்தாவின் பேச்சைக் கேட்டுக் கொண்டு யாழினி வீணாவைக் கூப்பிட்டுக் கண்டித்து வைக்கும் அளவிற்குப் போய் விட்டதில் ரவிச்சந்திரன் கோபம் கொண்டிருந்தான்.. யாழினியுடன் சகஜமாகப் பேசுவதைத் தவிர்த்திருந்தான்.. தன் குடும்பத்தோடு தனியாகப் போய் விடுவதாக அவன் பயமுறுத்தியதில் அரண்டு போன அருள்மொழிவர்மன் பேரனிடம் தனிந்து பேசி சமசரம் செய்து கொண்டதால் பிரிந்து போவதைப் பற்றிய பேச்சைப் பேசுவதில்லை என்றாலும் அன்றைய வாக்குவாதத்திற்குப் பின்னால் என் அரண்மனை, என் குடும்பம் என்று பேசுவதை வழக்கப் படுத்தியிருந்தான்.. அந்த ‘என்..’ என்ற வார்த்தையில்

தானும், தன் மனைவியும் அடங்கவில்லையென்பதில் தனிமைத்துயர் கொண்டார் அருள்மொழிவர்மன்.. ரவிச்சந்திரன் அவரையும், யாழினியையும் தனித்து நிறுத்தியதில்லை.. அவன் குடும்பத்தில் தாத்தாவும், பாட்டியும் அடக்கமென்றுதான் சொல்லிக் கொண்டிருந்தான்.. யாழினிதான் அதைக் கெடுத்துக் கொண்டாள்..

என்று மகள்வழிப் பேத்தியின் பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுத்து மருமகளிடம் யாழினி கேள்வி கேட்க முயன்றாளோ.. அன்றிலிருந்தே ரவிச்சந்திரன் தாத்தாவையும் பாட்டியையும் தள்ளி நிறுத்தி விட்டான்.. அவர்களை அஜந்தாவின் குடும்பத்தோடு இணைத்து விட்டான்..

‘‘யாழினி சம்சாரிச்சத மனசில கொள்ளாண்டாம் ரவி.. மோளின் மீதான பிரேமத்தில அங்ஙன பறஞ் ...’’

‘‘நான் எதுக்கு தாத்தா மனதில் வைத்துக்கப் போறேன்..? அவங்களாச்சு.. அவங்க மகளாச்சு.. எனக்கென்ன போச்சு..? அம்மா இதுவரைக்கும் மாமனார், மாமியார், நாத்தனார், நாத்தனாரோட குடும்பம்ன்னு சேவை செய்து களைத்துப் போயிட்டாங்க.. அவங்களுக்கும் வயசாகிருச்சு.. அவங்களும் மாமியாராகப் போகிறாங்க.. ஒன்றுக்கு இரணட்டாய்

சம்பந்திகளின் குடும்பங்கள் வந்து போவாங்க.. மருமகள், மருமகன்னு புதிதான உறவுகள் வருவாங்க.. அவங்க முன்னாடி அம்மா தலை நிமிர்ந்து நிற்க வேண்டாமா..? ஆடிய காலும், அதட்டின வாயும் சும்மாயிருக்காது தாத்தா.. அஜந்தாவுக்கு அவளைத் தவிர மத்தவங்க சந்தோஷமா சிரித்துப் பேசிக்கிட்டிருந்தா பொறுக்காது... வம்பிழுப்பா... பாட்டியிடம் கம்ப்ளெயிண்ட் பண்ணுவா.. நியாயமான மகள் வழிப் பேத்தியைக் கொண்டிருக்கிற பாட்டி உடனே மருமகளைக் கூப்பிட்டு விசாரணைக் கமிஷன் வைப்பாங்க.. மருமகளும் ஒரு பொசிஷனில் இருக்கிறதை நினைத்துப் பார்க்க மாட்டாங்க.. இப்படியிருந்தா புதிதாக வரும் உறவுகள் எப்படி அம்மாவை மதிப்பாங்க..? இது சுளீ வராது தாத்தா.. காலம் முழுக்கப் பாரம் சுமக்க என்னால் முடியாது.. எனக்கு என் குடும்பத்தோட கௌரவம் ரொம்பவும் முக்கியம்.. இது என் அரண்மனை.. ஆனாப் பாருங்க.. இதைச் சொந்த அரண்மனையா நினைச்சு அழிச்சாட்டியம் பண்றது அத்தையும், மாமாவும், அவங்க பெத்த பிள்ளைகளும்தான்..

அப்பா உங்களுக்காகன்னு பார்த்து எதையும் பேச மாட்டார்.. அம்மா மகளைப் பொத்திப் பொத்திப் பாதுகாத்து ஒதுங்கி ஒதுங்கிப் போவாங்க.. அரண்மனைக்கு வரும் எங்க

விருந்தாளிகள் அஜந்தாவுக்குப் பயந்து நடந்துக்கனும்னு பாட்டி ஆர்டர் போடுவாங்க.. எதுக்கு தாத்தா இத்தனை ரோதனையும்..?"

அருள்மொழிவர்மனுக்கு கன்னத்தில் அறை வாங்கியதைப் போல உணர்ந்தார்.. அவந்திகாவைப் போன்ற மகளைப் பெற்ற குற்றத்திற்காக அவரும் அவருடைய மனைவியும் பேரனுக்கு ரோதனையாக ஆகி விட்டார்களே.. அவர்களை ரோதனையென்று ரவிச்சந்திரன் சொல்லி விட்டானே..

"எதுக்கும் ஓர் லிமிட் இருக்கனும் தாத்தா.. இங்கே லிமிட் கிராஸாகி ரொம்ப வருஷங்களாகுது.. இதை சரி பண்ணனும்னு நீங்களும் நினைக்கலை.. பாட்டியும் நினைக்கலை.. இது சரியாகிடக் கூடாதுங்கிறதில கவனமா இருக்கீங்க.. என்னாலே எப்படி இதைச் சகித்துக்க முடியும்..? சொல்லுங்க.."

"ரவி.."

"என் அரண்மனையிலே என் தங்கை சுதந்திரமா நடமாட முடியலை.. என் அம்மா அதிகாரத்தோட இருக்க முடியலை.. எங்களோட விருந்தாளிகள் நிம்மதியா தங்கிப்

போக முடியலைன்னா நான் இவ்வளவு பெரிய ஆளை இருந்து என்ன பிரயோசனம்..? சொல்லுங்க..”

“ஷமிக்கனும் ரவி..”

“யாரை..? எதுக்கு..? எனக்கு வேறு வேலையே இல்லையா..? உங்க மகளும், அவங்க குடும்பமும் உட்கார்ந்து சாப்பிடுகிற ராஜ வாழ்க்கையா எனக்கு வாய்த்திருக்கு..? நான் ஓடியாகனும் தாத்தா.. ஒரு செகண்டையும் வேஸ்ட்டாக்காம ஓடியாகனும்.. எனக்கு நிற்க நேரமில்லை..”

“ஞான் அறிஞ் கொச்சு மோனே..!”

“அறிந்து என்ன செய்துட்டிங்க.. அட்லீஸ்ட் என் குடும்பத்தையாவது நிம்மதியாய் இருக்க விடறிங்களா..? யாருக்காக நான் ஓடிக்கிட்டு இருக்கேன்..? என் குடும்பத்துக்காக தாத்தா... என் அப்பாவுக்காக.. அம்மாவுக்காக.. தங்கைக்காக..”

தாத்தா, பாட்டிக்காக என்று ரவிச்சந்திரன் சொல்லவில்லை.. இனிச் சொல்லவும் மாட்டான் என்பதில் இடிந்து போனார் அருள்மொழிவர்மன்.. மனதில் உண்டாகும் விரிசலை எதனாலும் சரி செய்ய இயலாது என்பதை

வாழ்க்கையின் அனுபவ பாடங்களில் கற்றுத் தேர்ந்திருக்கும் அந்த முதியவர் துயரம் கொண்டார்..

“நிண்ட குடும்பத்தில ஈ தாத்தாவுக்கும், பாட்டிக்கும் ஸ்தலமில்லையோ கொச்சு மோனே..?”

“ஷமிக்கனும் தாத்தா.. நீங்களும் பாட்டியும் தனியில்லை.. அத்தையையும் அவங்களோட குடும்பத்தையும் இழுத்துக் கொண்டு நிற்கறிங்க.. உங்க பாரத்தை நீங்கதான் சுமக்கனும்.. நான் சுமக்கக் கூடாது.. அது முடியவும் முடியாது.. நன்றியில்லாதவங்களுக்கு செய்கிற உதவிகள் எல்லாமே புல்லுக்கப் பாய்ச்சுகிற நீர்தான் தாத்தா..”

“யாழினியிண்ட ஞான் பறஞ் ..”

“டூ லேட்.. இதை ஏற்கனெவே நீங்க செய்திருக்கனும்.. அம்மா பெரியவங்களிடம் காட்டற மரியாதையை நீங்க உங்களுக்குச் சாதகமா யூஸ் பண்ணிக்கறிங்க..”

“அங்ஙன இல்லா கொச்சு மோனே.. ஆ மனுஷிக்கு மோளிண்ட உள்ள பிரியமானு இதி போல பறஞ் .. மதியில்லா மனுஷி மீது பிணக்கம் வேண்டாம் ரவி..”

“யாருக்கு அறிவு இல்லை..? பாட்டிக்கா..? குட் ஜோக் தாத்தா.. அது இருக்கு நிறைய.. மகளிடம் ஓர் முகமும் மருமகளிடம் ஓர் முகமும் காட்டுகிற அறிவு இருக்கில்ல..? மகள் வழிப் பேரன் பேத்திகள் மீது பாசம் காட்டனும்.. மகன் வழிப் பேரன்.. பேத்திகள் மீது அதிகாரத்தைக் காட்டனும்கிற அறிவு இருக்கில்ல..? இதை விடவும் அறிவு அதிகமானா உலகம் தாங்காது தாத்தா..”

என்ன சொன்னாலும் பேரனின் மனம் திரும்பாது என்று புரிந்து கொண்டதில் அருள்மொழிவர்மன் சோர்ந்து போனார்.. ரவிச்சந்திரனின் குற்றச்சாட்டுகளில் உண்மையில்லையென்று மறுக்க முடியாதே... யாழினி அவந்திகாவிடம் ஒரு முகமும் வீணாவிடம் ஒரு முகமும் காட்டுவது உண்மைதானே.. வீணா பொறுமைசாலியென்பதால் மருமகளைத் தாங்கிப் பேசுகிறாள்.. வீணாவும் அவந்திகாவைப் போல சுயநலவாதியாக நியாய, அநியாயம் பார்க்காதவளாக இருந்திருந்தால் யாழினி யார் பக்கம் பேசியிருப்பாள்..? மகளின் பக்கம்தானே..

யாழினியின் மனதிலிருப்பதை அருள்மொழிவர்மன் அறிவார்.. இத்தனைக்குப் பிறகும் அவள் அவந்திகாவின் பிள்ளைகளை ரவிவர்மனின் பிள்ளைகள் மனம் முடித்துக்

கொள்ள வேண்டும் என்று விரும்பினாள்.. எப்படியாவது ரவிச்சந்திரனின் மனம் மாறி அவன் அஜந்தாவை மணம் முடித்துக் கொண்டால் அபராஜிதனுக்கு ரம்ய மாலினியைத் திருமணம் செய்து கொடுப்பதற்கு ரவிச்சந்திரனை அஜந்தா சம்மதிக்க வைத்து விடுவாள் என்ற அபிலாசை யாழினியின் மனதில் இருந்தது.. அப்படி நடந்து விட்டால் அவந்திகாவின் எதிர்காலமும் அவளுடைய பிள்ளைகளின் எதிர்காலமும் பாதுகாப்பானதாக மாறிவிடும்.. அவந்திகாவைப் பற்றிய கவலையின்றி யாழினி கண்களை மூடலாம்..

இது மட்டுமே யாழினியின் எண்ணமாக இருந்தது.. இதனால் ரம்ய மாலினியின் வாழ்க்கையும், ரவிச்சந்திரனின் வாழ்க்கையும் வீணாகி விடும் என்பதை அவள் நினைத்தும் பார்க்கவில்லை.. அத்தையின் பிள்ளைகள் சற்று முன்னே பின்னே இருந்தால் என்ன..? ரவிவர்மனின் பிள்ளைகள் அவர்களை அனுசரித்துப் போனால்தான் என்ன என்ற அராஜகமான நியாயம் அவள் மனதில் வேரூன்றி வளர்ந்திருந்தது..

அந்த வித்தை யாழினியின் மனதில் ஊன்றி தினந்தோறும் தண்ணீர் பாய்ச்சி வளர்த்துக் கொண்டிருந்தாள் அவந்திகா..

“அம்மே.. நிங்களும் அச்சனும் ஜீவிக்கிற காலம் வரைதான் எனிக்கு ஈ கொட்டாரத்தில ஸ்தலம் கிட்டி.. நிங்க காலத்துக்குப் பின்னே ஞான் எங்கு போயி..?”

தினந்தோறும் இதை ஒரு சுலோகம் போலச் சொல்லிச் சொல்லி அழுது கொண்டிருந்தாள் அவந்திகா.. கரைப்பார் கரைத்தால் கல்லே கரையும்.. பெற்ற அன்னையின் மனம் கரையாதா..?

“கரையாண்டாம் மோளே..” என்று யாழினி மகளைத் தேற்றினாள்..

“எங்ஙனம் கரையாமலிருக்க அம்மே.. ஈ ரவிச்சந்திரன் எண்ட மோளை விவாகம் கழிச்சா எனிக்கு புலரி கிட்டுமல்லோ.. அஜந்தாளிண்ட எந்தா குறை..?”

“ஞான் அறிஞ் மோளே.. பட்ஷே.. ரவிச்சந்திரன் மனசில அஜந்தாளிண்ட ஆக்ரஹாம் இல்லையல்லோ..”

“எங்ஙன வரும் அம்மே..? ஆ வீணா அவளிண்ட மோனிடம் அஜந்தாவைப் பற்றிக் குறைவா பறஞ் .. ஒந்நு திவசம் கூட நம்மட அஜந்தாவைப் பற்றி நல்லவிதமா மோனிடம் சம்சாரிச்சதில்லயல்லோ..? பிறகு எங்ஙன ரவிக்கு அஜந்தாவிடம் பிரேமம் வரும்..? கேட்டோ..”

அப்படித்தானோ என்று யாழினிக்குத் தோன்றி விட்டது.. வீணாவுக்கு அவந்திகாவையும், அவந்திகாவின் குடும்பத்தையும் பிடிக்காது என்பதை யாழினிக்கு நினைவூட்டினாள் அவந்திகா.. இப்படியொரு நாத்தனார் யாழினிக்கு இருந்தால் உணவில் விஷம் வைத்து அவளை பரலோகம் அனுப்பி விட்டுத்தான் வேறு வேலை பார்ப்பாள் என்பதை வசதியாக மறந்து போனாள் யாழினி.. ஒரு மனிதரின் மீது பாரமாக ஏறி உட்காரலாம்.. அவர்களைப் பாதாளலோகத்தில் அமிழ்த்தி புதைத்து விடும் அளவிற்கு பாரமாகி நசுக்கக் கூடாது என்பதை யார் அவளுக்குச் சொல்வது..?

யாழினி கொடுத்து வைத்தவள்.. அவளுடைய மாமனார் அருள்மொழிவர்மனுக்கு உரிய வயது வந்ததும் பொறுப்புக்கள் அனைத்தையும் மகனிடம் ஒப்படைத்து விட்டு ஒதுங்கிக் கொண்டார்.. அன்று கைப்பற்றிய குடும்ப அதிகாரத்தை அருள்மொழிவர்மன் விட்டுக் கொடுக்கவே இல்லை.. அவளுடைய அப்பா செய்ததைப் போல ரவிவர்மனுக்கு உரிய வயது வந்ததும் இவர் அதிகாரத்தை மகன் கையில் கொடுத்து விடவில்லை.. இறுக்கிப் பிடி த்துக் கொண்டு அதிகாரத்தைத் தன்னிடமே தக்க வைத்துக் கொண்டார்.. ரவிவர்மனுக்குத்

திருமணமாகி ரவிச்சந்திரனுக்கும், ரம்ய மாலினிக்கு தகப்பனான பின்பும் அவருக்குக் குடும்பத்தின் அதிகாரம் கிடைக்கவே யில்லை.. ரவிவர்மனும் அதை எதிர்பார்க்காமல் தாய், தந்தைக்கு அடங்கிய மகனாக இருந்தார்..

யாழினி அந்த அரண்மனையின் மகாராணியாக இருந்தாள்.. அவளுடைய மாமியார் அவளிடம் பணிந்து போனார்.. நாத்தனார்கள் இருவரும் அவரவரின் புகுந்த வீடுகளில் சமர்த்தாக குடும்பம் நடத்தி யாழினிக்கு தலைவலியைக் கொடுக்காமல் பிறந்த வீட்டிற்கு சீர் செய்து கொண்டிருந்தார்கள்.. அவளுக்கு வாய்த்த மருமகளான வீணா தங்கத்திலும் தங்கம்.. சொக்கத் தங்கம்..! மாமியாருக்கு முன்னால் நின்று கூடப் பேச மாட்டாள்..

இப்படிப்பட்ட வாழ்வு கிடைக்கும் வரை வாய்த்த யாழினிக்கு வீணாவின் வேதனைகளைப் பற்றி என்ன தெரியும்..?

தாய், தகப்பனுக்கு அடங்கிய கணவன்.. அதிகாரத்தை விட்டுக் கொடுக்காத மாமனார், மாமியார்.. பிறந்த வீட்டை அழித்து அதில் வாழ வந்த அண்ணியைக் கொன்று விடத் திட்டம் தீட்டும் நாத்தனார்.. வீணா பெற்ற பிள்ளைகளின்

வாழ்வைப் பாழாக்க நினைக்கும் நாத்தனார் பிள்ளைகள்.. மைத்துனன் மனைவிக்கு மரியாதை கொடுக்கத் தெரியாத அல்லது கொடுக்க விரும்பாத.. வீட்டோடட்டு மருமகனாய் வந்து உயிரைக் குறைக்கும் நாத்தனார் கணவன்..!

வீணாவின் இடத்தில் மட்டும் யாழினி இருந்திருக்க வேண்டும்.. உன் தங்கையையும் அவள் குடும்பத்தையும் அவர்களின் வீட்டுக்கு அனுப்பி வைத்து விட்டு என்னுடன் குடும்பம் நடத்த வா.. அதுவரை என் பிறந்த வீட்டில் நான் இருந்து கொள்கிறேன் என்று ஓடிப் போயிருப்பாள்..

அப்படிச் செய்யவில்லை என்பதை விட அது போன்ற நினைவுகளை நினைத்தும் பார்த்ததில்லை என்பதுதான் வீணா.. இத்தனைக்கும் அவள் அவளுடைய பெற்றோருக்கு ஒரே வாரிசு..!

# அத்தியாயம் 136

**வீ**ணாவைப் போன்ற மருமகள் கிடைப்பதற்கு யாழினி புண்ணியம் செய்திருக்க வேண்டும்.. அவளும் அப்படித்தான் நினைத்தாள்.. வீணாவை விட்டுக் கொடுக்காமல் தாங்கிப் பேசினாள்..

ஆனால் எல்லாவற்றிலும் பொறுமையின் சிகரமாக பொறுத்துப் போன வீணா அவந்திகாவின் பிள்ளைகள் விஷயத்தில் மட்டும் பொறுத்துப் போகாமல் பொங்கி எழுந்ததில் யாழினியின் மனதின் ஓரத்தில் சிறு மனத்தாங்கல் உண்டானது.. அனைத்திலும் விட்டுக் கொடுத்துப் போகும் மருமகள் தான் பெற்ற பிள்ளைகளை விட்டுக் கொடுக்காமல் கச்சை கட்டி நின்றதில் யாழினி கோபம் கொண்டாள்.. அதை மருமகளிடம் வெளிப்படுத்தவும் செய்தாள்.. யாழினி எதைக் கேட்டாலும் மறுக்காமல் பதில் சொல்லும் வீணா பிள்ளைகளின் திருமண விஷயத்தில் மட்டும் மௌனம் சாதித்தாள்.. மகனைக் கேடயமாக்கி யாழினியின் முன் நிறுத்தி விட்டு அவன் பின்னால் ஒளிந்து கொண்டாள்..

எவராலும் அசைக்க முடியாத இரும்பு மனிதனை மகனாக பெற்று விட்ட கர்வம் மருமகளுக்கு என்று பொறுமித் தவித்தாள் யாழினி.. மகனைக் கட்டுக்குள் வைத்ததைப் போல பேரனைக் கட்டுக்குள் வைக்க அவளால் முடியவில்லை.. ரவிச்சந்திரன் கட்டுக்குள் அடங்காத சிங்கமாய் இருந்தான்.. ஆர்ப்பரிக்கும் அலைகடலாய் அச்சுறுத்தினான்.. அவனுடைய தகப்பனால் கைப்பற்ற முடியாத குடும்ப அதிகாரத்தை மிக எளிதாக கைப்பற்றித் தன் வசப்படுத்திக் கொண்டான்..

அருள்மொழிவர்மனின் சிகையே ரவிச்சந்திரனின் கைபிடிக்குள் எனும்போது யாழினி எம்மாத்திரம்..?

அவளால் பேரனை எதிர்கொள்ள முடியவில்லை.. அவன் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியவில்லை.. அவந்திகா சறுக்கிக் கொண்டே போக ரவிச்சந்திரன் உயர்ந்து கொண்டே போனான்.. ஒரு கட்டத்தில் யாழினியின் சொத்துக்கள் உட்பட அனைத்துக் குடும்பச் சொத்துக்களையும் அவனுடையதாக்கிக் கொண்டு அருள்மொழிவர்மனையும், யாழினியையும் அவன் தயவில் வாழ வைத்தான்..

ரவிவர்மனின் உழைப்பிலும் சொத்திலும் உரிமை கொண்டாடுவதைப் போல ரவிச்சந்திரனின் உழைப்பிலும்,

சொத்திலும் உரிமை கொண்டாட முனைந்த யாழினியையும், அருள்மொழிவர்மனையும் தள்ளி நிறுத்தி..

“என் குடும்பம்..” என்று தன் தாய், தந்தையையும் தங்கையையும் கை காட்டினான்..

ரவிச்சந்திரனின் மீது வீணாவுக்குத்தான் முதல் உரிமை என்பதில் ஆரம்பமானது வீணாவின் மீதான யாழினியின் வன்மம்.. அவந்திகாவின் பிள்ளைகளைப் பற்றி மாமனார், மாமியாரிடமோ.. கணவரிடமோ புகார் கூறாமல் வீணா தன் மகனிடம் புகார் கூறி அவன் மூலம் அவந்திகாவின் பிள்ளைகளை கண்டித்து கட்டுக்குள் வைத்ததில் அந்த வன்மம் முற்றியது.. ரம்ய மாலினியை அபராஜிதன் தொந்தரவு செய்தான் என்பதை ரவிச்சந்திரனுக்கு வீணா தெரியப்படுத்திவிட.. ரவிச்சந்திரன் அபராஜிதனை நையப் புடைத்து வயநாட்டை விட்டு நாடு கடத்தி மும்பைக்கு விரட்டி விட்டான்.. அதில் யாழினி வீணாவின் மீது ஆத்திரம் கொண்டாள்..

“எந்துக்கு ரவியிண்ட ஈ விவகாரங்கள பறஞ் ..? என்னிடம் பறஞ்ருந்தா ஞான் அபராஜிதன ஏனெண்டு கேட்டிருப்பேனல்லோ..?”

யாழினி கோபப்பட்டபோது வீணா நிமிர்ந்து மாமியாரைப் பார்த்தாளே ஓர் பார்வை..! அந்தப் பார்வையை அந்த ஜென்மம் முழுக்க யாழினி மறக்க மாட்டாள்.. அப்படியொர் தீர்க்கமான தீட்சண்யம் மிக்கப் பார்வையைப் பார்த்து வைத்தாள் வீணா.. குஞ்சைப் பாதுகாக்க பருந்தை எதிர்த்து நின்று போரிடும் தாய்ப் பறவையின் பார்வை அது..

யாழினி வாயடைத்துப் போனாள்.. எதிர்ப்பை வெளிப்படுத்திய மருமகளின் பார்வையை அவளால் எதிர்கொள்ள முடியவில்லை.. அப்போது அருள் மொழிவர்மனும் அங்கேதான் இருந்தார்.. சர்வ வல்லமை மிக்க ரவிச்சந்திரனை மகனாக பெற்றிருக்கும் திமிரினால் வீணா அப்படிப் பார்த்து விட்டுப் போகிறாள் என்று கணவரிடம் யாழினி பொருமினாள்..

எனக்கு அவந்திகாவைப் போல தங்கை இருந்து அவளுக்கு அபராஜிதனைப் போல மகன் இருந்து நம் மகளிடம் அவன் வம்பு செய்தால் நீ என் அம்மாவை எப்படிப் பார்ப்பாய் யாழினி.. என்று அவர் கேட்டு வைத்தார்.. யாழினியால் பதில் சொல்ல முடியவில்லை..

ரவிச்சந்திரனை எதிர்க்க முடியாமல் அடங்கிப் போக நேரும் ஒவ்வொரு தருணத்திலும் வீணாவின் மீது ஓர் விதமான பகையுணர்வு ஏற்படுவதை யாழினியால் தடுக்க முடியவில்லை.. மருமகளின் குணமறிந்து சீராட்டுபவள்தான் அவள்.. மகளா, மருமகளா என்று வரும்போது அவந்திகாவின் நலனை முன்னிட்டு வீணா அவளுடைய பிள்ளைகளின் நலனைச் சற்றுப் பின் தள்ளினால்தான் என்ன என்ற நியாயமற்ற கோபம் யாழினிக்குள் எழுந்து தொலைத்தது..

நீரு பூத்த நெருப்பு என்பார்களே.. அதுபோல மரு மகளின் மீது யாழினிக்கு இருந்த மெலிதான கோபத்தை ஊதி ஊதிப் பெரிதாக்கினாள் அவந்திகா.. அவளால்தான் அருள்மொழிவர்மனுக்கும், யாழினிக்கும் துன்பங்கள் உண்டாகின்றன என்பதை அப்படியே தலைகீழாக மாற்றி.. ரவிச்சந்திரனாலும், வீணாவாலும் அவந்திகாவும் அவளது குடும்பமும் அல்லல் படுகின்றார்கள் என்று அழுது புலம்புவாள்..

“அம்மே.. ஞான் எங்க போயி..?” என்று கேவும் அவளது கேள்வியில் யாழினியின் உயிர் துடிக்கும்..

“ஞான் அருள்மொழிவர்மனிண்ட மோள் அம்மே.. நிங்க வயிற்றில உதிச்சு.. எனிக்கு எந்து பெகுமானமும் கிட்டலயல்லோ..” என உருவேற்றுவாள்..

அவந்திகா யோகானந்தனின் மனைவி.. பிறந்த வீட்டின் அனைத்துச் சொத்துக்களையும் கபளீகரம் செய்து அருள்மொழிவர்மனின் நிம்மதியைப் பறித்தவள் என்பதை எப்போதுமே சொல்ல மாட்டாள்..

“அம்மே.. ஞான் நிங்க மோள்..” என்று அருள்மொழிவர்மன், யாழினியின் மகளாக மட்டுமே தன்னை அடையாளப் படுத்திக் கொள்வாள்..

“அம்மே... அச்சா..” என்று அவள் குரல் கொடுப்பது அன்றுதான் பிறந்த மழலை குரல் கொடுப்பதைப் போலவே இருக்கும்..

அவந்திகாவின் நினைவைத் தவிர வேறு எந்த நினைவும் யாழினியின் மனதில் வந்து விடாமல் பார்த்துக் கொண்டாள் அவந்திகா.. அவளுக்குத் தெரியும்.. அவந்தி காவின்

கவலைகளை ஒன்றுக்குப் பத்தாக எடுத்துரைத்து அருள்மொழிவர்மனைப் பாடாய் படுத்தி அவந்திகாவிற்குத்

தேவைக்கு அதிகமாக செய்ய வைத்து விடுவாள் யாழினி என்பது..

பரந்த மனப்பான்மை கொண்ட யாழினி மெல்ல, மெல்ல அவந்திகாவின் நலனை மட்டுமே நினைவில் கொள்ளும் குறுகிய மனப்பான்மை கொண்டவளாக மாறிப் போனாள்.. அதை உணர்ந்த அருள்மொழிவர்மனாலும் மனைவியைக் கடிந்து கொள்ள முடியவில்லை.. அவந்திகாவின் மீது அவருக்கும் பாசம் உண்டே.. என்று அபராஜிதனை ரவிச்சந்திரனிடம் சொல்லி வீணா வயநாட்டை விட்டு வெளியேற்றினாளோ அன்றிலிருந்தே யாழினிக்கும் வீணாவுக்கும் இடையே கண்ணுக்குத் தெரியாத பனிப்போர் ஆரம்பமாகி விட்டது..

“அஜந்தாவுக்கு ரவி கிட்டுமல்லோ.. பட்ஷே.. ஈ வீணா மோனிண்ட மனசில விஷத்தையல்லோ விதைச்சு.. ஆ மனுஷி எத்திவசமும் நம்மட அஜந்தாவப் பத்தித் தப்புத்தப்பா பறஞ் .. பின்னே எங்ஙனம் ரவியிண்ட மனசில அஜந்தா மீது ஆக்ரஹாம் வந்து அம்மே..?”

அஜந்தாவைப் பற்றிக் குறைவாக பேசி மகனின் மனதில் வீணா விஷத்தை விதைக்கிறாள்.. அதனால்தான்

ரவிச்சந்திரன் அஜந்தாவை வெறுக்கிறான் என்று யாழினியிடமும் முறையிட ஆரம்பித்தாள் அவந்திகா.. ரவிச்சந்திரன் அஜந்தாவை திருமணம் செய்து கொண்டால் அனைத்து ச் சிக்கல்களும் தீர்ந்து விடும் என்று எடுத்துரைத்தாள்.. அஜந்தா ரவியின் மனைவியாகி விட்டால் எப்பாடுபட்டாவது அபராஜிதனுக்கு ரம்ய மாலினியைத் திருமணம் செய்து கொடுக்க வைத்து விடுவாள்.. அதன் பின்னால் அந்த அரண்மனை மீண்டும் அருள்மொழிவர்மனின் கைகளுக்குள் வந்துவிடும்.. யாழினியின் அதிகாரம் மீண்டு விடும்..

வயநாட்டு அரண்மனையில் யாழினியின் பேரன்களும் பேத்திகளும் சந்தோஷமாக வாழ்வார்கள்.. அப்படி மட்டும் நடந்து விட்டால் ரவிச்சந்திரன் என் குடும்பம் என்று அருள்மொழிவர்மனையும் யாழினியையும் பிரித்து நிறுத்தி வீணாவைக் கூட்டுச் சேர்த்துக் கொள்ள மாட்டான்.. இப்போதே யாழினியின் நிலைமை இப்படியாகி விட்டது.. ரவிச்சந்திரன் வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டால் யாழினியால் அந்த அரண்மனையில் இருக்க முடியுமா.. என்ற கேள்வியைத் தினம் தினம் கேட்டு உருவேற்றி விட்டாள் அவந்திகா.. யாழினியின் மனதில் பயம் வந்தது..

உண்மையில் அந்த பயம் அவந்திகாவின் மனதில்தான் இருந்தது.. ரவிச்சந்திரனின் திட்டத்தை அவளறிவாள்.. அவந்திகாவின் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து வைத்து அரண்மனையை விட்டு வெளியேற்றி விட வேண்டும்.. அஜந்தாவுக்கு அவளுடைய புகுந்த வீட்டில் இடம் கிடைத்து விடும்.. அபராஜிதனுக்கு மும்பை பங்களாவையும், எக்ஸ்போர்ட் கம்பெனியையும் எழுதிக் கொடுத்து மும்பையிலேயே குடித்தனம் வைத்து அவன் பொறுப்பில் அவந்திகாவையும், யோகானந்தனையும் அனுப்பி வைத்து விட வேண்டும்.. இதை பலமுறை ரவிச்சந்திரன் சொல்லியிருக்கிறான்.. இந்தமுறை அபராஜிதனோடு அவந்திகாவின் குடும்பத்தை மட்டுமல்ல, அருள்மொழிவர்மனையும், யாழினியையும் சேர்த்து அனுப்பி வைத்து விடவேண்டும் என்று சொல்லி விட்டான்..

“ரவி எங்ஙன ஈ விதம் பறஞ் அம்மே.. ஆ சிறு பையன் மனசில ஈ ஓர்மையுண்டுண்டு ஞான் அறியேன்.. நிங்களயும் அச்சனயும் வயநாட்டு கொட்டாரத்த விட்டு வெளியேற்றுமோ..?”

அங்கலாய்ப்பதைப் போல யாழினியின் மனதில் கொந்தளிப்பை உண்டாக்கினாள் அவந்திகா.. அவளும்

அஜந்தாவும் கூட்டுச்சதி செய்து வீணாவைக் கொல்லப் பார்த்தார்கள் என்பதை யாழினி மறக்கும்படி செய்து விட்டாள்.. வீணாவும், ரவிச்சந்திரனும் கூட்டுச்சதி செய்து அருள்மொழிவர்மனையும், யாழினியையும் அரண்மனையை விட்டுத் துரத்தப் பார்க்கிறார்கள் என்று யாழினியின் மனதில் பதிய வைத்து விட்டாள்..

வீணா மனது வைத்தால் ரவிச்சந்திரனுக்கு அஜந்தாவை திருமணம் செய்து கொடுத்து விட முடியும் என்று யாழினியின் காதுகளில் ஓதினாள்.. தாயின் மீது மாறாத பாசம் கொண்ட ரவிச்சந்திரன் அப்படிச் செய்தாலும் செய்வான் என்று யாழினியின் மனதில் தோன்றி விட்டது.. ரவிச்சந்திரன் கட்டுக்கடங்காதவன்.. தனது திருமண விஷயத்தில் எவர் சொல்வதையும் கேட்க மாட்டான்.. அஜந்தாவைக் கண்டாலே அவனுக்கு ஆகாது என்பதை பூசி மெழுகி மறைத்து விட்டாள் அவந்திகா.. வீணா கை நீட்டிச் சுட்டிக் காட்டும் பெண்ணைத்தான் திருமணம் செய்து கொள்வேன் என்று ஓர்முறை டைனிங் ஹாலில் குடும்ப அங்கத்தினர்களின் மத்தியில் அவன் அறிவித்திருந்ததை யாழினிக்கு நினைவு படுத்தினாள்..

அது சிக்கலான தருணம்.. வீணாவைக் கொல்ல அவந்திகாவும் அஜந்தாவும் திட்டம் தீட்டியதை ரவிச்சந்திரன் கண்டுபிடித்து அம்பலப்படுத்திய தருணம்.. வீணாவுக்கு ஒன்றென்றால் அவன் சும்மா விடமாட்டான் என்று கர்ஜித்த பொழுதுதான் அவன் தாய் சொல்லைத் தட்டாத தனயன் என்பதை தெளிவு படுத்தினான்.. அப்போதும் ஒன்று கூறினான்..

“அம்மா அஜந்தாவைக் கை நீட்ட மாட்டாங்கன்னு எனக்குத் தெரியும்.. அவங்களை யாராவது ஃபோர்ஸ் பண்ணி அஜந்தாவைக் கை நீட்டிட்டாங்கன்னா அதை மட்டும் நான் ஏற்றுக்க மாட்டேன்.. அஜந்தாவைத் தவிர எந்தப் பெண்ணை அம்மா கை நீட்டினாலும் கண்களை மூடிக்கிட்டு அவளை என் மனைவியா ஏத்துக்குவேன்.. மைண்ட் இட்..”

தெள்ளத் தெளிவாக அஜந்தாவின் மீதான அவனது வெறுப்பை ரவிச்சந்திரன் வெளிப்படையாக கூறி விட்ட பின்பும்..

“எல்லாம் ஆக்டிங் அம்மே..” என்றாள் அஜந்தா..

“ரவியிண்ட அம்மை கிழிச்சு கோட்டை ரவி என்றுமே தாண்டியதில்லையல்லோ.. வீணா மட்டும் விரல் நீட்டி

அஜந்தாதான் எண்ட மருமகள்ன்னு சுட்டிக் காட்டினா ரவி அதி மீறுமோ..?”

ஏன் வீணா அதைச் செய்யக்கூடாது என்ற மாமியாரின் கோபம் யாழினியின் மனதில் மையம் கொண்டது..

# அத்தியாயம் 137

‘**நா**ளை உத்ரா வந்து விடுவாள்..’

நந்தினியின் மனதில் சந்தோஷம் அலைமோதியது.. அவள் சென்னையில் மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸில் ஏறியதிலிருந்து இன்றுவரை நடந்து முடிந்திருக்கும் நிகழ்வுகளை உத்ராவிடம் பகிர்ந்து கொள்ள வேண்டு மென்று மனம் பரபரத்தது.. அடிக்கடி உத்ராவுடன் பேசிக் கொண்டிருந்தாள்தான்.. தினமும் நந்தினியிடம் பேசுவதாக உத்ரா வாக்குக் கொடுத்திருந்தாள்தான்.. ஆனால் திருமணம் பண்ணிக் கொள்ளப் போகும் மணப் பெண்ணாக அவள் மணமேடை ஏற வேண்டிய சூழலில் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாத சுழல் ஏற்பட்டு விட்டது.. திருமணம் முடிந்த பின்பாவது தினமும் பேசுவாள் என்று எதிர்பார்த்தாள் நந்தினி.. உத்ராவுக்கு அனைத்தும் மறந்த போய் வினித்தே சகலமும் என்று ஆகி விட்ட நிலையில் நந்தினியின் நினைவு எப்படி வரும்..?

“உத்ரா..” நந்தினிதான் ஃபோனில் அழைப்பாள்..

உத்ராவின் திருமண நேரத்தில் ஒருவாரம் போகட்டும் நந்தினி.. அதன் பின்பு உன்னிடம் தினமும் பேசுகிறேன் என்று உத்ரா சொல்லியிருந்தால் பொறுமை காத்து உத்ராவைத் தொந்தரவு செய்யாமல் இருந்தாள் நந்தினி.. திருமணம் முடிந்ததும் ஃபோன் செய்ய முயன்றால் ஃபோன் ஸ்விட்ச் ஆஃப் என்று வந்தது.. தினமும் முயன்று பதினைந்தாவது நாளில் சுபயோக சுபநேரத்தில் ஃபோன் உயிர்ப்பாகி..

“ஹலோ..” என்று உத்ராவின் குரல் ஒலித்ததில் உற்சாகமாகிப் போனாள் நந்தினி..

“ஏண்டி குரங்கே.. கல்யாணம் ஆனவுடனே ஃபிரண்ட்ஸை மறந்திரனும்னு கட்டாயம் ஏதும் இருக்கா..? தினமும் ஃபோன் பண்றேன்னு பிராமிஸ் பண்ணினவதானேடி நீ.. ஒரு வாரம் போகட்டும்ன்னு சொன்ன.. இப்ப இரண்டு வாரத்துக்கு மேலேயே ஓடிப் போயிருச்சு.. ஒரு ஃபோன் பண்ணனும்னு உனக்குத் தோணிச்சா..?” என்று இவள் பாய்ந்து கொண்டிருக்க.. உத்ரா அருகில் கேட்ட வினித்தின் குரலில் கவனமாக..

“இல்லேங்க.. ஸ்ஸ்ஸ்.. நந்தினி லைனில் இருக்கிறா.. என்னது.. எந்த லைனிலா.. இந்தக் குறும்புதானே

வேணாம்கிறது.. எந்தக் குறும்புன்னு தெரியலையா..? ஒன்றிரண்டுன்னு இருந்தாத்தானே சொல்ல முடியும்..? உடம்பு முழுக்க குறும்பு.. வேண்டாம்.. விட்டிருங்க.. ஸ்...ஆ.. நந்தினி.. நான் அப்புறமாப் பேசறேன்.. வினித்.. உங்களை..” ஃபோன் கட்டாகி விடும்..

அடுத்துப் ஃபோன் பேச நந்தினி தயங்குவாள்.. இந்த ரீதியில் பேசிக் கொண்டிருப்பவளை எப்படித் தொந்தரவு செய்வது..? உத்ராவின் உலகம் வேறாகிப் போனதில் நந்தினியின் மனதில் தனிமைத்துயர் எழுந்தது.. உத்ராவை வினித்திடம் பறி கொடுத்து விட்டதைப் போல உணர்ந்தாள்..

மனதில் பொங்கும் உணர்வுகளை இனம் காண முடியாமல் தவித்துக் கொண்டிருந்தாள் நந்தினி.. ரவிச்சந்திரனின் மீது அவளுக்குள் தோன்றியிருக்கும் சொந்தத்திற்குப் பெயர் என்ன..? காதலா.. இல்லை.. பாசமா..?

இதற்கு உத்ராவின் விடை என்னவாக இருக்கக் கூடும் என்று அறிந்து கொள்ள அவள் மனம் துடித்தது.. மனதில் அலை மோதும் இந்தத் தவிப்புகளுக்கான அடிப்படை எதுவாக இருக்கக் கூடும்..? ரவிச்சந்திரனின் காதலை நந்தினியால்

ஏற்றுக் கொள்ள முடியவில்லை.. அதே சமயத்தில் அவள் மீது அவன் உரிமை பாராட்டுவதைத் தடுக்கவும் முடியவில்லை.. அது ஏன்..?

ரவிச்சந்திரனின் மீதான தனது மயக்கத்திற்கு காரணம் அழகும் கம்பீரமும் கவர்ச்சியும் நிரம்பிய ஆணழகனின் மீது ஏற்படும் இயல்பான பெண்மையின்

ஈர்ப்பா..? இல்லை.. அதையும் தாண்டிய ஏதோ ஒன்றா..?

அவன் கோபம் கொண்டால் ஏன் அவள் தவித்துப் போகிறாள்.. அவளை அவமானப் படுத்தும் வகையி ல் அவன் பேசுகிறான்.. அடித்துத் துன்புறுத்துகிறான்.. இவற்றை எதிர்க்க எதற்காக அவள் தயங்க வேண்டும்.. அவனை விட்டுப் பிரிந்து செல்ல முடியாமல் கால்களைப் பிணைத்திருக்கும் தளை எது..?

இந்த சந்தேகங்களைத் தெளிவு படுத்திக் கொள்ள உத்ராவின் துணையை நாடினாள் நந்தினி.. உத்ராவோ அவளுடைய துணையுடன் சுகித்துக் கொண்டிருந்தாள்.. தோழிக்கு நேரம் ஒதுக்க அவளால் முடியவில்லை.. நந்தினியின் மனதில் அலையடித்தது.. பொங்கி வரும்

உணர்வுப் பேரலைகளில் மூழ்கி அவள் மூச்சுத் திணறிக் கொண்டிருந்தாள்.. எவரிடமும் பகிர்ந்து கொள்ள முடியாத ரகசிய உணர்வலைகளைத் தோழியிடம் மட்டும்தான் பகிர்ந்து கொள்ள முடியும்..

அந்தப் பகிர்தலுக்காக காத்திருந்தாள் நந்தினி..

வினித்தும் உத்ராவும் தேநிலவு கொண்டாட வயநாட்டு அரண்மனைக்கு வரப் போகிறார்கள் என்பதை ரவிச்சந்திரன் அறிவித்த போது டைனிங் ஹாலில் அமைதி நிலவியது.. 'என் அரண்மனை' என்று ரவிச்சந்திரன் பிரித்துப் பேசியதில் கலவரம் கொண்ட அருள்மொழிவர்மன் பேரனைச் சமாதானப் படுத்த முயன்று தோற்றுப் போனார்..

பேரனிடம் கோபம் கொண்டிருந்த யாழினியின் காதுகளில் கூடுதலாக ஓர் செய்தியைச் சேர்ப்பித்தாள் அஜந்தா..

“பாட்டி.. நீங்க ஒந்நு அறியுமோ..?”

யாழினிக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது.. அஜந்தா புதிர் போட்டு விளையாடும் நிலையிலா அவளது குடும்பம் இருக்கிறது..?

'ஈ பெண்குட்டிக்கு சற்றுக்கூட கிலேசமில்லா..' பல்லைக் கடித்தாள் யாழினி..

"எந்தா அஜந்தா.. நீ பப்பாவோ..? ஈ தருணத்திலதான் ஒந்நு, ரண்டு படிக்குமோ..?"

"ஞான் பறஞ் ஒற்று அதில்லா பாட்டி.."

"வேற எந்துவாம் கொச்சு மோளே.. என்னிடம் விளையாண்டாம்.. கேட்டோ.."

"ஆ நிமிஷம் பாட்டி.."

"எந்துக்கு.."

"ரவியத்தாணின்ட ஃபிரண்டு ஹனிமூனுக்கோசரம் நம்மட கொட்டாரத்துக்கு வருமெண்டு பறஞ்ஞுல்லோ.."

அஜந்தா நமது அரண்மனையென்று உரிமை கொண்டாடியதில் யாழினியின் மனதிலிருந்த ரணம் ஆறிப் போனதைப் போல இருந்தது.. அஜந்தாவின் அடாவடியை ரசிக்க ஆரம்பித்தாள் யாழினி.. அந்த அரண்மனையின் மீது அவளுக்கு உரிமையில்லை என்பதைச் சுட்டிக் காட்டும் ரவிச்சந்திரனுக்கான எதிர்ப்புணர்வு யாழினியின் மனதில் தோன்றியிருந்தது.. அவளையுமறியாமல் அவள்

அஜந்தாவுக்குத் துணை போக ஆரம்பித்து விட்டதை அவள் மனம் உணரவில்லை..

“ம்ஹும்.. நம்மளிண்ட கொட்டாரத்துக்கு எவர் எவரோ வந்து..”

யாழினி விட்ட பெருமூச்சில் சந்தோஷமாகிப்போனாள் அஜந்தா.. பாட்டியின் மனதிலிருந்த அதிருப்தியை கண்டு கொண்டவளுக்கு வெகு திருப்தியாக இருந்தது.. அவளுக்கு இதுதானே வேண்டும்..? கலங்கிய குட்டையிலிருந்துதான் மீன் பிடிக்க முடியும்.. தெளிவாக குளத்து நீர் அஜந்தாவிற்கு உதவுமா..?

அஜந்தா வயநாட்டு அரண்மனைக்கு வீணாவையே மகாராணியென்று ஒப்புக் கொள்ள மாட்டாள்.. யாழினியையா ஒப்புக் கொள்வாள்..? ஈ கொட்டாரம் எண்ட தாத்தா, பாட்டியின் கொட்டாரம் என்று சொல்வதெல்லாம் அந்த அரண்மனையின் மீது அருள்மொழிவர்மனின் பேத்தி என்ற வகையில் அவளுக்கும் உரிமையிருக்கிறது என்று சொல்வதற்காக.. மற்றபடி யாழினியை அந்த அரண்மனையின் மகாராணி சிம்மாசனத்தில் உட்கார வைப்பதால் அவளுக்கு என்ன கிடைத்து விடப் போகிறது..? அவளுக்கு அவள் அந்த

சிம்மாசனத்தில் உட்கார வேண்டும்.. பட்டத்து ராஜாவான ரவிச்சந்திரனை அடிமையாக்கி விழியசைவில் சுழற்றி வைக்கும் பட்டத்து ராணியாக அரசாள வேண்டும்.. அப்படியொரு தருணம் வரும்போது அவள் வீணாவுடன் சேர்த்து யாழினியையும் மூலையில் உட்கார வைப்பாள்..

இது தெரியாத யாழினி அஜந்தாவுக்கு என்ன குறையென்று மனதுக்குள் குமைந்து கொண்டிருந்தாள்..

வீணா மனது வைத்து அஜந்தாவை மருமகளாக்கிக் கொண்டால்தான் என்ன..? அபராஜிதனுக்கு ரம்ய மாலினியைத் திருமணம் செய்து கொடுத்து அரண்மனையோடு மருமகனாக்கிக் கொண்டால்தான் என்ன..? யாழினியின் பார்வைகள் இருவரும் சம்பந்திகளாக ஒரே அரண்மனையில் ஒன்றாக வாழ்வார்களே.. யாழினியின் பேரன்களும், பேத்திகளும் வாழ்வில் ஒன்றுபட்டு சந்தோஷமாக வாழ்வார்களே.. வீணா ஏன் அதை கெடுக்கிறாள்..?

“ஈ வீணாவிண் மதி கெட்ட மனசால ரவி மாறிப் போயிட்டானல்லோ..”

“ஓ..! இதி அறிய நிங்களுக்கு இத்தினி திவசமாச்சோ..? எனிக்கும் அம்மைக்கும் எண்டைக்கோ தெரியுமே.. நிங்கதான் ஆ வீணாவுக்கு எதிரா எவர் பறஞ்ஞாலும் அவரை விரோதியெண்டு பறஞ் ..”

“ஆ மனுஷி வல்லிய குணம் கொண்டவளென விஜாரம் கொண்டு... கேட்டோ..”

“அத்தினியும் வேஷம் பாட்டி..”

யாழினி ஆமோதிப்பாய் தலையை அசைத்தாள்.. வீணாவைக் கொண்டாடிய மாமியார் அவள்.. அவளையும் மருமகளுக்க எதிராக திசை திருப்பி தலையை அசைக்க வைத்து விட்டாள் அஜந்தா..

நடப்பதைக் கவனித்துக் கொண்டிருந்த அவந்திகாவுக்கு மகளின் சாகச குணத்தில் பெருமை வந்தது..

‘என் மோள் கைகாரியாக்கும்..’

“ஞான் பறயஞ்ஞனும்னு விஜாரம் கொண்டதை பறஞ்யாண்டாமோ..?”

“எந்தா பறயுனு கொச்சு மோளே..?”

“அத்தானிண்ட ஃபிரண்டு ஹனிமூன் கொண்டாட நம்மட கொட்டாரத்துக்கு வருமெண்டு பறஞ்ஞுல்லோ..”

“அதிக்கு எந்தா..?”

“ஆ மனுஷனிண்ட யார் யார் எவருன்னு அறியுமோ..?”

“ஆ மனுஷி எவராயிருந்தா எவருக்கு எந்தா..? இதி பறயனுமெண்டா வந்து..?”

“இல்ல பாட்டி.. ஆ மனுஷி ஈ நந்தினியிண்ட பிராண ஸ்நேகிதியாமில்லோ.. கேட்டோ..”

“எந்து பறஞ் ..?”

யாழினியால் தன் காதுகளை நம்ப முடியவில்லை.. அவந்திகாவுக்கு அது தெரியுமென்பதைப் போல முகத்தைச் சுளித்தாள்..

“நீ பறயறயது நிசமானு..?”

“நிசத்திலும் நிசம் பாட்டி.. ஆ பெண்குட்டியோட பேரு உத்ராவாம்.. ஆ மனுஷியும் ஈ நந்தினியும் காலேஜில் ஒந்நாய் படிச்சு.. ஆ மனுஷிக்கோசரம்தான் ஈ கொட்டாரத்தில விருந்து.. ரவியிண்ட் ஃபிரண்டுன்னு பறஞ்ஞுது சும்மானு..”

அந்த அளவுக்கு முக்கியத்துவம் கொண்டவளா நந்தினி..? யாழினி கொதித்துப் போனாள்.. வயநாட்டு அருள்மொழிவர்மன் என்ற பெயர் பெற்றிருந்த அவளுடைய கணவரை செல்லாக் காசாக்கி மூலையில் உட்கார வைத்து விட்டு கேரளத்து வயநாட்டின் ரவிச்சந்திரன் என்று பட்டம் கட்டிக் கொண்டதுமல்லாமல் அவளையும் அருள்மொழிவர்மனையும் அரண்மனையை விட்டு அவந்திகாவின் குடும்பத்தோடு வெளியேறி விடும்படி சொல்லி விட்டவனல்லவா ரவிச்சந்திரன்..

அவளும் அருள்மொழிவர்மனும் அந்த அரண்மனையில் உரிமையில்லாதவர்களாக வாழ வேண்டும்.. எங்கிருந்தோ ஜோலி (வேலை) பார்க்க வந்த பெண்ணொருத்தி தனது தோழியை தேநிலவு கொண்டாட அரண்மனைக்கு அழைத்து சீராட்டுவாளா..?

அன்றிரவு டைனிங் ஹாலில் உத்ராவைப் பற்றிய கேள்வியை எழுப்பினாள் யாழினி..

“நினக்கு ஃபிரண்டுன்னு பறஞ் .. பட்ஷே.. நிண்ட செக்கரட்டரியோயாட ஃபிரண்டோட ஹஸ்பெண்டாமல்லோ ஆ மனுஷன்..? அவன் எங்ஙனம் நினக்கு ஃபிரண்டாயி..?”

ரவிச்சந்திரன் யாழினியை உறுத்துப் பார்த்து விட்டு அருள்மொழிவர்மனிடம் திரும்பினான்.. பேரனின் புறக்கணிப்பில் யாழினியின் முகம் மாறியது.. அவள் பேரனை விட்டு விட்டு அவனைப் பெற்ற அன்னையான வீணாவை முறைத்தாள்..

ரவிச்சந்திரன்தான் யாழினியிடம் பேசுவதில்லையே.. அவன்..

“தாத்தா..” என்று ஆரம்பித்தான்..

“ஒந்றும் பறயாண்டாம் கொச்சும் மோனே..” அவசரமாக அவர் பேரனை சமாதானப் படுத்த முயன்றார்.

“கேள்வின்னு வந்தாச்சு.. பதில் சொல்லித்தான் ஆகனும் தாத்தா..” அழுத்தமாக சொன்னான் ரவிச்சந்திரன்..

அருள்மொழிவர்மன் தலை வேதனையுடன் மனைவியை முறைத்தார்.. யாழினிக்கென்ன.. பேச்சை ஆரம்பித்து விடுவாள்.. ரவிச்சந்திரனிடம் பாட்டுக் கேட்பது அவர்தானே..

# அத்தியாயம் 138

“**வி**னித் என்னுடைய ஃபிரண்ட்.. அவரோட வொய்ஃப் உத்ரா நந்தினியின் ஃபிரண்ட்.. அவங்க இரண்டுபேரும் கேட்டுக்கிட்டதாலேதான் நந்தினிக்கு நான் வேலை கொடுத்தேன்.. இந்த விளக்கம் போதுமா தாத்தா.. இல்லை.. இன்னும் கொஞ்சம் வேணுமா..?”

ரவிச்சந்திரனின் இடக்கான பேச்சில் அருள்மொழிவர்மனே வாயை மூடிக் கொண்டு உட்கார்ந்திருக்கும் போது யாழினியால் என்ன கேட்க முடியும்..?

எரிச்சலுடன் அவள் மௌனமானாள்.. அஜந்தாவால் அப்படியிருக்க முடியுமா..? பிரச்னை வெடிக்கும் என்று பார்த்தால் கேள்வி கேட்ட பாட்டி வாய்க்குப் பூட்டுப் போட்டுக் கொண்டாளே..

ஆதலினால் அஜந்தா வாய் திறந்தாள்..

“அது எப்படி அத்தான்..? கரெக்டா உங்க ஃபிரண்டோட வொய்ஃப் உங்க செக்கரட்டரிக்கும் ஃபிரண்டா இருக்கா..? எங்கேயோ இடிக்குதே..”

தங்கையின் குத்தலான பேச்சை ரசித்துச் சிரித்தான் அபராஜிதன்.. ரவிச்சந்திரனின் கண்கள் இடுங்கின.. சிரித்த முகமாய் ரவிச்சந்திரனைப் பார்த்தவன் அவன் பார்த்த பார்வையில் அரண்டு போனான்.. தொண்டையில் இருந்த உணவு அங்கேயே தேங்கி நின்று கொண்டதில்..

“விக்.. விக்.. விக்..” என்று கண்களில் நீர் தளும்ப விக்கித் தள்ளி விட்டான்..

“வெள்ளம் கழிச்சு மோனே..” அவந்திகா அவசரமாக மகனின் கையில் தண்ணீர் தம்ளரைத் திணித்தாள்..

ஒருவழியாய் தொண்டையில் சிக்கியிருந்த உணவை உள்ளே தள்ளி அவன் ஆசுவாசமாகும்வரைக் காத்திருந்த ரவிச்சந்திரன்..

“எதுக்குச் சிரிச்ச..?” என்று விசாரித்தான்..

“நத்திங் அத்தான்..”

“என்னைத்தை நத்திங்..? உன் தங்கையென்ன ஜோக்கா சொல்லிட்டா..? ரசிச்சுச் சிரிக்கிற..? ஜோக் அடிக்கிற பிறவியா உன் தங்கை..?”

“அது.. வந்து.. அத்தான்..”

“நீயெல்லாம் வாயைத் திறந்து பேசவே கூடாது.. சிரிச்சு வைக்கிற..? எதனால் இந்தச் சிரிப்பு..? உன்னை வயநாட்டு அரண்மனையில கால் பதிக்க விட்டதிற்கா..?”

அபராஜிதனின் சிவந்த முகம் அவமானத்தில் சிறுத்து விட்டது.. டைனிங் ஹாலில் நந்தினியும் ரம்ய மாலினியும் இருந்தார்கள்.. அவர்கள் முன்னால் ரவிச்சந்திரன் அவனை அவமானப் படுத்தி விட்டதில் நிலை குலைந்தாள்.. அவனால் தலை நிமிர முடியவில்லை..

“நீ ஆண்பிள்ளையென்பதால் மும்பைக்கு அனுப்பி வைத்தேன்.. உன் தங்கை வஞ்சகத்திலும் சூழ்ச்சியிலும் உன்னைவிட ஆயிரம் அடி அதிகமாக பாய்வாள்.. இருந்தும் என்ன செய்து தொலைக்க.. இவள் பெண்ணாகப் பிறந்து தொலைத்து விட்டாளே.. அரண்மனையில் இவள் இருப்பதை சகித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது..

இந்த லட்சணத்தில் இவள் கமெண்ட் அடிக்கிறாள்.. நீ சிரிக்கிறாய்.. இது சரிப்படாது.. நீ நாளைக்கே மும்பைக்கு கிளம்பு.. போகும்போது உன் அருமைத் தங்கையையும் உன் குடும்பத்தையும் கையோடு அழைத்துக் கொண்டு போ.. உன் தாத்தா பாட்டியையும் சேர்த்துத்தான் சொல்றேன்..”

‘உன் தாத்தா பாட்டியா..?’ அருள்மொழிவர்மனுக்குச் சகிக்கவில்லை..

ரவிச்சந்திரனின் தாத்தா, பாட்டியென்பதில் கிடைக்கும் பெருமானம் (மதிப்பு, மரியாதை) அபராஜிதனின் தாத்தா, பாட்டியென்பதில் கிடைத்து விடுமா..?

“ரவி..”

“நீங்க சும்மாயிருங்க தாத்தா.. ஆரம்பித்து வைக்கிறது பாட்டி.. அப்புறம் இவங்களுக்கு பயம் எப்படி வரும்..? நந்தினியும் என் ஃபிரண்டோட வொய்ஃபும்தானே ஃபிரண்ட்ஸ்..? நானும் அந்தப் பெண்ணும் ஃபிரண்ட்ஸில்லையே.. இதுக்கு உங்க பேத்திக்கு எங்கேயோ இடிக்குதாமே.. இவளோட ஒட்டு மொத்தக் குடும்பத்தையும் உட்கார வைத்துத் தாங்குகிறேனில்ல..? இடிக்கத்தான் செய்யும்..”

நந்தினி விழியுயர்த்தி அஜந்தாவைப் பார்த்தாள்.. அதைப் பார்த்து விட்ட அஜந்தா ஆவேசம் கொண்டாள் ..

அவளை இந்த நந்தினி இளப்பமாக பார்ப்பதா..?

“வேண்டாம் அத்தான்.. எங்க அம்மை அருள்மொழிவர்மனோட மோளாக்கும்.. இந்த அரண்மனையில பிறந்து வளர்ந்தவங்களாக்கும்..”

“அந்தக் கொடுமையினாலதான் அருள்மொழிவர்மன் இந்த அரண்மனையை வித்து உங்கப்பா பட்ட கடனை அடைச்சாரு.. உனக்கெல்லாம் ஒரு தடவை சொன்னாப் புரியாதா..? தினமும் சொல்லிக்கிட்டே இருந்தாலும் அடங்க மாட்டேங்கறியே..”

“அத்தான்..”

“அறஞ்சேன்னா பல்லைக் கழட்டி விடுவேன்.. சட்டமா பேசற..? இந்தச் சட்டத்தை உங்கப்பா வீட்டிலே போய் பேசு.. என் அரண்மனையிலே பேசாதே..”

அஜந்தா எதையோ பேசப் போனாள்.. கலவரத்துடன் அவளது கையை அழுத்தித் தடுத்தாள் அவந்திகா.. அபராஜிதன் வந்து தொலைத்திருக்கிறான்.. அந்த கோபத்தில் இருக்கும் ரவிச்சந்திரன் அபராஜிதனோடு அவந்திகாவின் குடும்பத்தை மும்பைக்கு ஃபிளைட் ஏற்றி விடும் அபாயம் இருக்கிறது..

“எதியும் பறயாண்டாம் மோளே..” முணுமுணுத்தாள்.. அஜந்தா அடங்கித் தொலைத்தாள்.. முகத்தில் எள்ளும்

கொள்ளும் வெடிக்க அவள் சன்னமாக முணுமுணுத்ததில் ரவிச்சந்திரன் இமைக்காமல் ஓர் பார்வை பார்த்தான்..

“மோளே..” அவந்திகா கெஞ்சினாள்.. அஜந்தாவின் முணுமுணுப்பும் நின்று விட்டது..

‘இவன் கம்மாண்டரேதான்..’ நந்தினி மனதுக்குள் சிலாகித்தாள்..

‘எப்படித்தான் அத்தனைபேரையும் ஒரு கட்டுக்குள் வைத்திருக்கிறானோ..’ அவளுக்கு வியப்பாக இருந்தது..

“இப்பச் சொன்னதுதான் தாத்தா.. வினித்தும் உத்ராவும் ஹனிமூனுக்கு வந்து போகிறவரைக்கும் இந்த அரண்மனையில யாரும் வாயடிக்கிற வேலையை வைத்துக்கக் கூடாது.. சத்தமா மூச்சு விட்டாக்கூட நான் நானா இருக்க மாட்டேன்.. சொல்லிட்டேன்..”

“அதிக்கெந்து ரவி.. அங்ஙனமே இருந்தானு.. நினக்கு பெந்துன்னா எனிக்கும் அங்ஙனதானு..”

“அவர் பெந்தில்ல தாத்தா.. ஃபிரண்ட்..”

“வல்லதும் ஒந்நு.. நினிக்கு ஸ்நேகிதமெண்டா.. எனிக்கும் அதே..”

அஜந்தா தலையில் அடித்துக் கொண்டாள்.. கூர்மையான ரவிச்சந்திரனின் பார்வையை புறக்கணித்து அருள்மொழிவர்மனைப் பார்த்து..

“உங்க வயதென்ன..? வரப் போகும் ஆளின் வயதென்ன..? அந்த ஆளுக்கு இப்போத்தான் மேரோஜியிருக்கு.. ஹனிமூன் கொண்டாட வரப் போகிறான்.. நீங்க பேரன், பேத்தி எடுத்து கொள்ளுப் பேரன், பேத்திகளையும் பார்க்க ரெடியா இருக்கீங்க.. உங்களுக்கு அவன் ஃபிரண்டா..? ஏன் தாத்தா இப்படி..?”

“ஸ்நேகிதம் கொள்ள வயசு தடையில்லையல்லோ..”

“என்னவோ போங்க.. சொல்கிறது ரவியத்தானில்ல.. நீங்க இதுவும் பேசுவீங்க.. இன்னமும் பேசுவீங்க..”

எப்படித்தான் இவளால் எந்தப் பேச்சையும் கேட்காததைப் போல இயல்பாக தட்டி விட்டுவிட்டுப் பேச முடிகின்றதோ என்று ஆச்சரியப்பட்டுப் போனாள் நந்தினி..

அஜந்தா மட்டும் இருந்து பேச்சு வாங்கியிருந்தால் பரவாயில்லை.. அனைவரும் அங்கிருக்கிறார்கள்.. பணியாள்கள் வேறு... அனைவரின் முன்னாலும்

ரவிச்சந்திரன் பேசித் தெளித்திருக்கிறான்.. இவள் எதுவும் நடக்காததைப் போலப் பெரியவரை கேலி செய்கிறாள்..

அஜந்தா எப்படியோ தட்டி விட்டுப் போகிறாள்.. அதைப் பற்றி ஆச்சரியப்பட்டு நந்தினிக்கென்ன ஆகப் போகிறது..? உத்ராவும், வினித்தும் வந்து போகிறவரை எவரும் வம்பு வளர்க்காமல் இருந்தால் சரி.. அவளுக்கு அதுதான் வேண்டும்..

“கவலையே படாதீங்க.. யாரும் வாயைத் திறக்க மாட்டாங்க..” தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்த போது சொன்னாள் ரம்ய மாலினி..

ரவிச்சந்திரனுடன்தான் தோட்டத்தில் உலவுவாள் நந்தினி.. அவன் இல்லாத பொழுதுகளில் ரம்ய மாலினி வந்து சேர்ந்து கொள்வாள்.. அவன் இருக்கும் போது அவள் வருவதில்லை.. அது ஏனென்று நந்தினிக்குப் புரியவில்லை..

மாடி ஹாலில் இரவு உணவுக்குப் பின்னால் நந்தினி உட்கார்ந்து தோட்டத்தை வேடிக்கை பார்க்கும் போது அங்கே அரட்டைக் கச்சேரி களைகட்டும்.. வீணாவும் ரம்ய மாலினியும் வந்து விடுவார்கள்.. ரவிச்சந்திரன்தான் நந்தினியின் பின்னாடியே வந்து விடுவானே.. அவனும் ரம்யாவும் சேர்ந்து

கொண்டு நந்தினியைக் கலாய்ப்பார்கள்.. நந்தினி வீணாவிடம் தஞ்சம் புகுவாள்.. வீணா நந்தினிக்கு ஆதரவாக பிள்ளைகளிடம் சண்டைக்குப் போவாள்..

அஜந்தா இல்லாத பொழுதுகள் இனிய பொழுதுகளாகத்தான் இருந்தன.. மாடி ஹாலில் நந்தினி இருக்கும் போது அஜந்தா வரத்தான் செய்தாள்.. வம்பு வளர்க்கத்தான் முயன்றாள்.. அவள் வாயைத் திறந்தவுடனே நந்தினி தயாராக வைத்திருந்த பஞ்சை எடுத்து இரு காதுகளிலும் அடைத்துக் கொண்டதில் அவளுடைய முகம் விகாரமாகி கோணிப் போனது.. நந்தினி செய்ததை யாழினியிடமும் சொல்ல முடியாது..

அவள் தரையைக் கால்களால் உதைத்து விட்டுப் போன பின்பு மறைவிடத்தை விட்டு வெளியே வந் த ஓமனா ஓடோடிப் போய் ரம்ய மாலினியிடமும் வீணாவிடமும் அந்தச் செய்தியை ஒலி பரப்பி விட்டாள்..

“அஜந்தா அம்மையின் வதனம் கோணிப்போயி..”

ஓமனா முகத்தைக் கோணியதை நினைத்து நினைத்துச் சிரிப்பாள் ரம்ய மாலினி..

“அண்ணன் ஆர்டர் போட்டுட்டா யாரும் அதை மீற மாட்டாங்க நந்தினி.. அப்படி மீறினா பின் விளைவுகள் பயங்கரமா இருக்கும்ன்னு அவங்களுக்குத் தெரியும்..”

“பட்.. இப்போப் பேசறாங்களே..”

“இப்போப் பேசறது வேறு.. அண்ணனோட கெஸ்ட் வந்தவுடன் பேசறது வேறு.. அண்ணன் கோபப்பட்டா என்னாகும்ன்னு அனுபவிச்சவங்க அவங்க.. அடக்கித்தான் வாசிப்பாங்க.. ஸோ.. யு டோன்ட் வொர்ரி..”

ரவிச்சந்திரனின் ஆளுமை மீது நந்தினிக்குள் ஆதர்சம் பெருகியது.. ‘கம்மாண்டர்’ என்று மனதுக்குள் செல்லமாக அழைத்துக் கொண்டாள்.. மழையில்லாத அரண்மனையின் தோட்டம் போல அவள் மனது குளுமையாக இருந்தது..

‘ஏன் இன்னும் அவன் வரலை..?’

மாடிப்படிகளைப் பார்த்தாள்.. ரவிச்சந்திரனின் காலடியோசைக்காக அவளது காதுகள் ஏங்கின.. இரவு உணவு முடிந்து நந்தினி மாடிக்கு வந்தவுடன் அவனும் வந்து விடுவான்.. வீணாவும், ரம்ய மாலினியும் சற்றுப் பொறுத்துத்தான் வருவார்கள்.. அவர்கள் வருகிறவரை இருவரும் எதையாவது பேசிக் கொண்டிருப்பார்கள்..

எதுவென்று மனதில் பதியாது.. ஆனால் பேசிக் கொண்டிருக்கப் பிடிக்கும்..

அர்த்தமற்ற பேச்சுக்கள் கூட சில தருணங்களில் அழகானவை..

“என்ன..? விழித்துக் கொண்டே தூங்குகிறாயா..?”

அவன் குரலில் மனம் துள்ள நிமிர்ந்து பார்த்தாள்.. அந்த ‘ஆள் மயக்கி கம்மாண்டர்..’ அவளையே பார்த்த வண்ணம் நின்றிருந்தான்.. ஆளை மயக்கும் பார்வை.. ஆகர்ஷிக்கும் பார்வை.. காந்தமென இழுக்கும் பார்வை..!

இருவரின் பார்வைகளும் பிண்ணிப் பிணைந்தன.. அவளைக் கடித்துத் தின்று விடுபவனைப் போல அவன் பார்த்த அந்தப் பார்வையில் அவள் முகம் சிவந்தாள்.. அதை ரசனையுடன் ஊன்றிப் பார்த்தபடி பக்கத்தில் உட்கார்ந்தான் அவன்.. அவள்மீது அவன் பட்டதில் அவள் நகர்ந்து உட்கார்ந்தாள்.. அவனும் நகர்ந்தான்..

ஒரு கட்டத்தில் அவள்மீது அவன் சரிய.. அவசரமாக விலகி எழுந்து எதிர் சோபாவில் அமர்ந்தவளுக்கு மூச்சுத் திணறுவதைப் போல இருந்தது..

இதைத்தான் அனுபவம் புதுமை என்று கவிஞர் பாடி வைத்தாரோ..?

# அத்தியாயம் 139

**'ய'** வடிவ மலைப்பாதையில் ரவிச்சந்திரனின் கார் மலையை விட்டுக் கீழிறங்கிக் கொண்டிருந்தது.. அது சுகமான கார்ப் பயணம் என்று தோன்றியது நந்தினிக்கு.. அருகிலிருந்த ஆணழகனை அடிக்கடி ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டாள்.. அடர் நீலத்தில் சட்டையும் ஆகாய நீலத்தில் ஜீன்ஸும் அணிந்திருந்தான்.. கண்களில் கூலிங்கிளாஸ்.. சன்னமான விசிலோடு காரை ஓட்டிக் கொண்டிருந்தான்..

அலையடிக்கும் அவனழகில் படகாக மிதந்தது அவள் மனம்.. அவனைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போல இருந்தது.. யதேச்சையாக அவள் பக்கம் திரும்பியவன் அவனையே பார்த்துக் கொண்டிருந்த அவளது பார்வையைக் கண்டு புருவங்களை உயர்த்தி இறக்கிக் கிறங்க வைத்தான்..

'ஆத்தி...!'

இமைகளை மூடித் தன் கட்டுப்பாட்டைத் தக்க வைத்துக் கொண்ட நந்தினி.. அவனைப் பார்த்துக் கொண்டிருந்தால் இப்படித்தான் ஏதாவது ஒன்று ஆகும் என்று சாலையைக் கவனிக்க ஆரம்பித்தாள்..

கேரளத்தின் பசுமை அவள் மனதை குளிரச் செய்தது.. எங்கு பார்த்தாலும் இயற்கையின் அழகு கொட்டிக் கிடந்தது..

‘இப்படியிருந்தா பின் ஏன் கேரளாவை கடவுளின் தேசம்ன்னு கொண்டாட மாட்டாங்க..’

சாலையின் இருபக்கமும் கொடி வீடுகளைப் போல அடர்ந்திருந்த மலர்ச்செடிகள்.. ஓங்கி உயர்ந்திருந்த மரங்கள்.. அவற்றை மறைத்துக் கவிந்திருந்த பனிப் புகையென்று அது பணிதேசம் போல காட்சியளித்தது..

கேரளத்தின் இயற்கையெழிலில் மனம் மயங்கினாள் நந்தினி.. தஞ்சைக்கு வரச் சொல்லி அவளுடைய பெற்றோர் அழைக்கும் போது எப்படி இந்த இயற்கையை விட்டுப் பிரிவாள் என்று ஏக்கம் கொண்டாள்.. இயற்கையழகில் மனம் லயிப்பது கூடப் போதையில் மூழ்குவதைப் போன்றதுதான்.. எளிதில் மீண்டு வர மனம் வராது.. இயற்கை மிகப் பெரும் போதை..

எதற்கோ காரின் ஜன்னல் கதவுகளைத் திறந்து மூடினான் ரவிச்சந்திரன்.. பனி நிரம்பிய குளிர்காற்று அவள் முகத்தில் அப்பி விலகியது.. சிலிர்த்துப் போனாள் நந்தினி.. மாசில்லாத காற்றும்.. கண்ணுக்குக் குளிர்ச்சியான பசுமையும் கொண்ட

இயற்கையென்பது மிகப் பெரும் வரம்.. அது கேரளத்து மக்களுக்குக் கிடைத்திருக்கிறது..

“கொடுத்து வைத்தவங்க..” வாய் விட்டுச் சொல்லி விட்டாள்..

“யார் கொடுத்து வைத்திருக்காங்க..? எதைக் கொடுத்து வைத்திருக்காங்க..?” காரை ஓட்டியபடி அவள் பக்கமாக திரும்பிக் கேட்டான் ரவிச்சந்திரன்..

“கேரளத்து மக்களைத்தான் சொல்கிறேன்.. இப்படியாப்பட்ட ஊரில வாழ கொடுத்து வைத்திருக்கனும்..”

ரவிச்சந்திரன் அவளைப் பார்த்த ஆழ்ந்த பார்வையில் அவளுக்கு மூச்சுத் திணறல் உண்டானது.. பார்வைகள் புதிரானவை.. அதிலும் ரவிச்சந்திரனின் பார்வைகள் புதிரிலும் புதிரானவை.. புதிதிலும் புதிதானவை.. அவனுடைய பார்வைப் பின்னலில் சிக்கிவிட்டால் மனம் மீண்டு வருவது கடினம்..

“நீயும் கெடுத்து வைத்தவளா ஆகி விட வேண்டியது தானே..? நீ கொடப்பதை வாங்கி வைத்துக்கத்தான் நான் காத்திருக்கிறேனே..”

‘நினைத்தேன்..’

உதட்டைக் கடித்தபடி மௌனமானாள் நந்தினி.. எங்கே சுற்றினாலும் பேச்சு இங்கேதான் வந்து நிற்கிறது.. ஒன்று கோபப்படுவான்.. இல்லையென்றால் கொஞ்சுவான்.. இரண்டில் அவன் எதைச் செய்தாலும் நந்தினியின் பாடுதான் திண்டாட்டமாகி விடுகிறது.. அவனது கோபத்தையும், வேகத்தையும் அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

பச்சைப் போர்வையைப் போர்த்தியதைப் போன்ற ரம்யம் கொண்ட கேரளத்துச் சாலைகளின் அழகு அவளை ஈர்த்தது.. வயநாட்டின் மலைப்பாதை சீரானது.. ஹேர்பின் பெண்டு வளைவுகள் இல்லாத சுகமான மலைப்பாதை பயணம்.. இருபக்கமும் அடர்ந்திருந்த இளம் பச்சை செடிகளின் இலைகளை கிள்ள வேண்டும் போல இருந்தது.. அவனிடம் சொன்னால் செடிகளுக்கு வலிக்காதா என்று அதட்டுவான்.. மண்ணின் மைந்தன்.. அவனுடைய கோபத்துக்கும், முரட்டுத்தனத்துக்கும் செடிகளுக்கு வலிக்கும் என்ற மென்மையான உணர்வுகளுக்கும் எதிர்மறைப் பொருத்தம் என்று நினைத்துக் கொண்டாள் ரவிச்சந்திரன் ‘மாறுபட்ட உணர்வுகள், ஆளை ஈர்க்கும் அழகு என்று அந்த மாயக்கண்ணனைப் போல மனதையும் மதியையும் மயகுகிறான் இவன்..’ நந்தினி சொக்கிப் போனாள்..

சொக்குப்பொடி போட்டு அவளை சொக்க வைக்கும் சொக்கநாதனான அவன் அடிக்கடி அவளைப் பார்த்து இமைகளைச் சிமிட்டி மயக்கத்தில் ஆழ்த்தினான்..

அந்த வசீகரனின் ஆளை மயக்கும் அற்புத அழகு மனதை கொள்ளை கொள்வது.. நந்தினியின் மனமும் கொள்ளையடிக்கப்பட்டது.. மனதை மீட்க அவள் போராடிக் கொண்டிருந்தாள்..

பனிப்புகை சூழ்ந்த சாலையின் நடுவே அனாசியமாக சென்றது கார்.. வேகத்தைக் குறைக்காமல் ஓட்டியவனின் தீரத்தில் அவள் லயித்தாள்..

“என்ன யோசிக்கிற..?”

“ஒண்ணுமில்லை..”

“அப்படின்னு நீ சொன்னா நம்பிடுவேனா..? நீ என்ன நினைக்கிறேன்னு நான் சொல்லவா..?”

அவனைத்தான் நினைக்கிறாள் என்பதைச் சொல்லி விடுவானோ.. அரண்டு போனாள் நந்தினி..

“கோழிக்கோடு ரயில்வே ஜங்ஷனுக்குப் போய்க்கிட்டு இருக்கோமே.. அப்படியே மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸில தாவி

ஏறி வயநாட்டை விட்டு ஓடிப் போயிரனும்னு நினைத்துக் கொண்டிருப்ப..” அவன் முகம் இறுகியது..

நந்தினி திகைத்தாள்.. எதற்கெடுத்தாலும் அவள் சொல்லும் மங்களூர் எக்ஸ்பிரஸ் வந்து நிற்கும் கோழிக்கோடின் ரயில் நிலையத்திற்குத்தான் அவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள்.. அவன் சொல்வதைப் போல ரயிலில் தாவி ஏறி வயநாட்டை விட்டு ஓடிப் போய் விட வேண்டும் என்று ஏன் அவளுக்குத் தோன்றவில்லை..?

“என்ன..? நான் சொன்னது சரிதானே..?”

“நீங்க என்னைக்குத் தப்பாச் சொல்லியிருக்கீங்க..”

“ஸோ.. நான் சொன்னதைப்போல எஸ்கேப் ஆகிறதைப் பத்தித்தான் பிளான் பண்ணிக்கிட்டு இருந்திருக்க..”

“யெஸ் பாஸ்..”

“உன்னை..”

முகம் கடுகடுக்க பற்களை நறநறத்தான் ரவிச்சந்திரன்.. சிடுமூஞ்சி என்று மனதுக்குள் அழகு காட்டிக் கொண்ட போதும்..

‘கடுகடுன்னு முகத்தில முள்ளைக் கட்டிக் கிட்டாலும் நல்லாத்தான் இருக்கான்..’ என்று ஜொள்ளியது அவள் மனம்.. அவன் மீதான ஆசையில் அவள் இதழ்களில் இளநகை அரும்பியது.. கிட்டாதாயின் வெட்டென மறக்க வேண்டும்தான்.. இங்கே எட்டாக்கனி அவளுக்குக் கிட்டுகிறது.. இருந்தும் அதை ஏற்றுக் கொள்ள இதயம் ஏன் அஞ்சுகிறது..?

‘‘மனதுக்குள்ள என்னைத்தானே திட்டுகிற..?’’

‘போடா.. நீயும் உன் ஷெர்லெக் ஹோம்ஸ் கண்டு பிடிப்பும்..’

அவளையுமறியாமல் அவள் உதட்டைச் சுழித்து அழகு காட்டி விட்டாள்.. விழிகள் மின்ன..

‘‘ஏய்ய்..’’ என்றான் அவன்..

‘‘ரோட்டைப் பார்த்து ஓட்டுங்க பாஸ்..’’ என்றாள் அவள்.. கடுகடுப்பு மாறி சிரித்த முகமாகி விட்டான் அவன்..

சன்னமான விசிலொலி திரும்பியிருந்தது.. வயநாட்டு மலையிலிருந்து இறங்கி கோழிக்கோடில் கார் நுழைந்த போது அவள் எக்கி எக்கி வேடிக்கை பார்த்தாள்.. அங்கே

கழிந்த நாள்களின் மலரும் நினைவுகள் அவள் மனதில் சிறடித்து விரிந்தன..

“பார்த்து.. விழுந்து விடப் போகிற..” கிண்டலடித்தான் ரவிச்சந்திர..

“யாழ் ஹோட்டலுக்குப் போவோமா பாஸ்..” ஆவலுடன் கேட்டாள் நந்தினி..

அவளை மாற்றுடைகளை எடுத்துக் கொள்ளச் சொல்லியிருந்தான்... கோழிக்கோட்டில் தங்கப் போகிறார்களா என்ற ஆவல் கலந்த வினா நெஞ்சில் எழும்பிய பேதும் அவனிடம் அதைக் கேட்காமல் மாற்றுடைகளை ஒரு லெதர் பேக்கில் திணித்துக் கையில் எடுத்துக் கொண்டாள் நந்தினி.. அவனிடம் கேட்டால் எப்போது பார்த்தாலும் ஊரைச் சுற்றிக்கிட்டே இருக்கனுமா என்று கேட்டாலும் கேட்டு வைப்பான். அவன்தான் எந்த நேரம் எதை கேட்டுப் பிடுங்குவான் என்று தெரிந்து தொலைக்க மாட்டேன் என்கிறதே.. நீ வேலை பார்க் க வந்தயா இல்லை ஊர் சுற்ற வந்தாயா என்று கடித்து வைத்தால் அவள் முகத்தை எங்கு கொண்டு போய் வைத்துக் கொள்வாள்..?

அவளை மாற்றுடைகளை பேக் பண்ணச் சொல்லி விட்டு அவன் வீசின கை வெறுங்கையாக ஹாயாக கையை உதறிக் கொண்டு கூலிங்கிளாஸ் சகிதம் கிளம்பி விட்டான்..

'என்னை மட்டும் எங்காச்சும் பார்சல் பண்ணிக் கடத்தி விடப் போகிறானோ..?' அவளுக்கு சந்தேகம் வ ந்து விட்டது.. எங்கே அனுப்பி வைத்தாலும் அஜந்தா இல்லாத இடம் அவளுக்கு சொர்க்கபுரிதான் என்றாலும் அங்கு ரவிச்சந்திரன் இல்லாவிட்டால் சொர்க்கம் சொர்க்கமாக இருக்காதே..

இதில் வேறு உத்ராவும் வினித்தும் தேநிலவு கொண்டாட வயநாட்டுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள்..

'உத்ரா.. உன்னை மீட் பண்ணுவேனாடி..?'

நந்தினி மனதுக்குள் புலம்பவே ஆரம்பித்து விட்டாள்.. குழப்பமான அவள் முகத்தைப் பார்த்து விட்டு விளக்கம் கேட்ட ரம்ய மாலினி விழுந்து விழுந்து சிரித்து வைத்தாள்..

"இவ்வளவு இன்னொஸெண்டாவா இருப்பீங்க..? அண்ணனை என்னன்னு நினைச்சீங்க..?"

'அது என்னென்னவோ நினைப்பு மனசில ஓடுது.. என்னன்னுதான் தெளிவாத் தெரிய மாட்டேங்குது..'

“யாழ் ஸ்டார் ஹோட்டல்ஸோட ஓனர்.. யாழ் ஹோட்டல்லில் அண்ணனுக்குன்னு தனி ரூமும்.. பேமிலிக்குன்னு தனி ஷீட்டும் இருக்கும்.. டைனிங் ஹாலும் அப்படித்தான்..”

“இதுதான் எனக்குத் தெரியுமே..”

“அப்போ ஏன் அண்ணன் மாத்திக்க டிரஸ் பேக் பண்ணிக்கலை அப்படிங்கிறதும் உங்களுக்குத் தெரிஞ்சிருக்குமே..”

“அதுதானே தெரியலை..”

நந்தினி பரிதாபமாய் விழித்து வைக்க..

“சமர்த்து..” என்று சிரித்தாள் ரம்ய மாலினி..

நந்தினி சமர்த்தாய் இருப்பது சிரிப்புக்குரிய விஷயமா என்ன..?

“அண்ணனுக்கு ரூம் இருக்கிறப்ப.. அங்கே மாத்திக்கிறதுக்கான டிரஸ்ஸஸூம் இருக்காதா..?”

“அப்படியா.. அவருக்குன்னு இருக்கிற ரூம்களில மாத்திக்கிறதுக்கான டிரஸ்ஸூம் ரெடியா இருக்குமா..?”

“இருக்கும்.. அண்ணன் திடிர்.. திடிர்ன்னுதான் ஹோட்டல் விசிட்டுக்குப் போகும்.. பிளான் பண்ணிப் போகாது.. ஸோ.. அதுக்கான திங்ஸ் எல்லாமே அந்தந்த ஹோட்டல்ஸ் ரூமில ரெடியா இருக்கும்.. டிரஸ் உட்பட..”

“வாவ்.. சூப்பர் மேன்தான்..”

“இதை இன்னுமா நீங்க தெரிஞ்சுக்கலை..?”

ரம்ய மாலினி என்னவோ விளையாட்டாகத்தான் கேட்டாள்.. நந்தினிக்குத்தான் என்னவோ போல் ஆகிவிட்டது.. ரவிச்சந்திரனின் உயரத்தை அவள் தெரிந்து கொள்ளாமலே சிறுபிள்ளைத்தனமாய் விளையாடிக் கொண்டிருக்கிறாளோ..

‘ஸோ வாட்..?’ மனதுக்குள் வீம்பு எழுந்தது..

அவன் பெரிய அப்பாடக்கராகவே இருக்கட்டுமே.. அவனிடம் நந்தியென்ன நிரந்தரமாகவா வேலை பார்க்கப் போகிறாள்..? செல்வச் செழிப்பு மிக்க மேகநாதனின் மகள் இத்தனை நாள் செக்கரட்டரி வேடம் போட்டதே பெரிது.. மேகநாதனின் மனம் மாறிய அடுத்த நொடியில் தஞ்சைக்கு இளவரசியாக பறந்து விடுவாளே..

“தெரிந்துக்காமத்தான் விட்டுட்டேன் ரம்யா..”

“இனித் தெரிந்துக்கங்க..”

இதையும் ரம்ய மாலினி விளையாட்டாகத்தான் சொன்னாள்.. நந்தினியின் மனதில்தான் புதுப்புது அர்த்தங்கள் தோன்றி வைத்தன.. அவை காரில் போய் கொண்டிருந்த அந்த நேரத்திலும் அவள் மனதில் சுழன்று கொண்டிருந்தன..

“யாழ் ஹோட்டலோட ஓனரைப் பார்த்துக் கேட்கிற கேள்வியா இது..?”

அப்படிக் கேட்கக் கூடாதா கேள்வியையா அவள் கேட்டு விட்டாள்..? யாழ் ஹோட்டலில் தங்கப் போகிறோமா என்றுதானே கேட்டாள்..?

“ஏன் பாஸ்..?”

“ஏற்கனெவே சொல்லியிருக்கேன் நந்தினி.. என் ஹோட்டல்ஸை செக் பண்ண நான் தனியா டேஸ் பிக்ஸ் பண்ணி வருவதில்லை.. எப்போ எந்த ஊரில் இருக்கிறேனோ அப்போ.. அந்த ஊரில் இருக்கிற என்னோட ஹோட்டல்லில் ஸ்டே பண்ணி செக் பண்ணுவேன்.. என்னோட விசிட் சர்ப்ரைஸ் விசிட்டாத்தான் இருக்கும்.. மனசிலாயி..”

“மனசில் வைச்சுக்கிட்டேன் பாஸ்..”

“என்னைத்தானே..”

அவன் திரும்பி கவர்ச்சிகரமாய் கண்களைச் சிமிட்டியதில் அவள் மனம் பொங்கியது.. அழகன் இவன் என்று மயங்கியது..

‘பேரழகன்..!’

அந்தப் பேரழகன் பார்வையிட உலகத்தில் எத்தனையோ பேரழகிகள் காத்துக் கொண்டிருக் கிறார்களே.. அவர்களை விட்டு விட்டு ஒழுங்காய் தலையைக் கூட வாரிக் கொள்ளாத நந்தினியை ஏன் பார்வையிடுகிறான்.?

இந்தக் கேள்விக்குத்தான் நந்தினி விடை தேடிக் கொண்டிருந்தாள்..

# அத்தியாயம் 140

**வி**னித்தும், உத்ராவும் ரயிலை விட்டு இறங்குவதற்கு நந்தினி ரயிலுக்குள் பாய்ந்து உத்ராவைக் கட்டிக் கொண்டாள்.. பதிலுக்கு அவளும் நந்தினியைக் கட்டிக் கொள்ள தோழிகளின் அளவளாவுதலைக் கலைக்காமல் தனியொரு மனிதனாக வினித் மட்டும் பெட்டிகளை இறக்கிக் கொண்டிருந்தான்..

“நீதான் வேலை செய்ய மாட்டேன்னா உன் ஃபிரண்டையும் வேலை செய்ய விடாமல் டிஸ்டர்ப் பண்ணுவியா..?”

ரவிச்சந்திரனின் அதட்டலில் தன்னிச்சையாக விலகி நின்ற நந்தினி அவனைப் பார்த்தாள்.. கடுகடுவென முகத்தில் கடுமையை படற விட்டிருந்தான்..

‘எதுக்காக கோவிச்சுக்கிறான்..?’ நந்தினிக்கு விளங்கவில்லை..

அதற்குள் உத்ரா மீதமிருந்த பைகளைக் கைப்பற்றி ரயிலை விட்டு இறங்கியிருந்த வினித்திடம் நீட்டினாள்.. மனைவியின் கடமையுணர்வை மெச்சியவனாக இணக்கமாக

சிரித்தான் வினித்... புரிதலுடன் கூடிய பார்வையை அவர்கள் இருவரும் பார்த்துக் கொண்டார்கள்.

“எல்லா பேக்ஸையும் எடுத்தாச்சா..?”

“எடுத்தாச்சுன்னுதான் நினைக்கிறேன்.. ஒன் மினிட் ப்ளீஸ்.. சீட்டை ஓர் தரம் செக் பண்ணிட்டு வந்துடறேன்..”

“அதை நான் செய்துக்குவேன்.. நீயும் நந்தினியும் ரயிலை விட்டு இறங்குங்க..”

பொறுப்புள்ள கணவனாக வினித் மறுபடியும் ரயிலில் ஏறி

அவர்கள் அமர்ந்திருந்த இருக்கைகளின் பக்கத்தில் ஏதேனும் பைகள் இருக்கின்றனவா என்று ஆராய்ந்து விட்டுத் திரும்பி வந்தான்..

“தேங்க்ஸ்..” நன்றி கலந்த பெருமிதத்துடன் சொன்னாள் உத்ரா..

“போதும்டி.. நான் ஒருத்தி இங்கேயிருக்கேங்கிறதை மறந்துட்டு நீ உன் ஹஸ்பெண்ட்கிட்ட மட்டும் உருகி வழியாதே..” பொறாமையுடன் உத்ராவின் தோளில் கை வைத்து தன் பக்கமாக திருப்பிக் கொண்டாள் நந்தினி..

“ஹேய்.. லக்கேஜை தனியா இறக்கிக்கிட்டு இருக்காருடி... அதுக்கு ஒரு தேங்க்ஸ் சொல்ல வேணாமா..?” தோழியை சமாதானம் செய்தாள் உத்ரா..

“அதெல்லாம் தெரிந்திருந்தா உங்க ஃபிரண்ட் எங்கேயோ போயிருப்பாளே.. இப்படி ஏன் இருக்கப் போகிறா..?”

ரவிச்சந்திரன் ஷொட்டு வைக்க.. வினித்தின் முன்னால் இப்படிப் பேசுகிறானே என்று முகம் வாடினாள் நந்தினி.. அதை கண்டு கொண்ட உத்ரா தோழியின் உள்ளங்கையைப் பிடித்து ஆதரவாக அழுத்திக் கொடுத்து விட்டு..

“என் ஃபிரண்டு கெட்டிக்காரி சார்..” என்று பரிந்துரைத்தாள்..

“நீங்கதான் அப்ரிஷியேட் பண்ணிக்கனும்.. ஃபிரண்டாச்சே.. விட்டுக் கொடுக்காமல்தான் பேசுவீங்க..” அசட்டையாகத் தோள்களைக் குலுக்கினான் ரவிச்சந்திரன்..

“விட்டுக் கொடுக்கனும்ங்கிற அவசியமே இல்லை சார்.. இவதான் காலேஜ் ஃபர்ஸ்ட்.. கோல்டு மெடல் வாங்கிப் பாஸ் பண்ணியிருக்கா.. தெரியுமா உங்களுக்கு..”

# எண்ணியிருந்தது ஈடேற... 5

உத்ரா சொன்ன செய்தியில் நந்தினி அப்படியே நின்று விட்டாள்.. அவளின் இன்ப அதிர்ச்சியைக் கேலியாக பார்த்த ரவிச்சந்திரன் கிண்டல் புன்னகையுடன்..

"பாருங்க.. நீங்க சொன்ன நியுஸை உங்க ஃபிரண்டாலேயே நம்ப முடியலை.. ஆர் யு ஷ்யூர்..? கன்பர்மா தெரியுமா.. இல்லை.. ஃபிரண்ட் மேல இருக்கிற ஓவர் பிரியத்தினால நீங்களா எதையாச்சும் சொல்கிறீங்களா..?" என்று உத்ராவிடம் கேட்டான்..

"எப்படி நீங்க இப்படிச் சொல்லலாம்..?" ரவிச்சந்திரனிடம் சண்டைக்குக் கிளம்பினாள் நந்தினி..

"நீ பாஸ் பண்ணியிருப்பேங்கிறதே டவுட்.. இதில காலேஜ் ஃபர்ஸ்ட், கோல்டு மெடல்ன்னு சொன்னா சிரிப்புச் சிரிப்பா வராதா..? ஹா.. ஹா.." ரவிச்சந்திரன் உரக்கச் சிரித்து கடுப்பைக் கிளப்பினான்..

"வரும்.. வரும்.." கடுப்பாகிப் போனாள் ந ந்தினி..

"பொறு நந்தினி பொறு.. ஆதாரத்தோடுதான் வந்திருக்கிறேன்.. சார் போட்டுத் தாக்கறதைப் பத்தித்தான் தினம் தினம் கதைகதையாய் என்னிடம் செல்ஃபோனில் கொட்டிக்கிட்டு இருக்கியே.. ஆதாரம் இல்லாம் வாய்

திறப்பேனா..?” நந்தினியை உத்ரா ஆற்றுப் படுத்திக் கொண்டிருக்க..

“டிவெண்டி ஃபோர் அவர்ஸும் செல்ஃபோனை காதை விட்டு எடுக்காம கம் போட்டு ஒட்ட வைச்சு.. வாய் வலிக்காம பேசிக்கிட்டு இருந்ததெல்லாம் என்னைப் பற்றியும், என் கொடுமைகளையும் பற்றித்தானா..?” என்று பிடித்துக் கொண்டான் ரவிச்சந்திரன்..

“ஏண்டி.. நீயெல்லாம் ஒரு ஃபிரண்டா..? வேலை பாருடின்னு என்னை இவர்கிட்ட மாட்டி விட்டிருக்கிறது போதாதுன்னு போட்டுக் கொடுக்கிறதுக்காகவே மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸை பிடித்து வந்திருக்கிறயா..? பிசாசே..!

பாருங்கண்ணா.. உங்க வொய்ப் போட்டுக் கொடுக்கிறா..” வினித்திடம் புகார் செய்தாள் நந்தினி..

“உன் ஃபிரண்ட் ஒண்ணும் போட்டுக் கொடுக்கலை.. இப்ப நீதான் அவங்களைப் பத்தி வினித்திடம் போட்டுக் கொடுக்கிற..” எரிச்சலுடன் சொன்னான் ரவிச்சந்திரன்..

எதற்காக இப்படி எரிச்சல்படுகிறான் என்று புரியாமல் திருதிருத்தாள் நந்தினி.. நீண்ட நாள்கள் கழித்து சந்தித்துக் கொள்ளும் தோழிகள் எப்படிப் பேசிக் கொள்வார்களோ

அப்படித்தானே அவளும் உத்ராவும் பேசிக் கொள்கிறார்கள்..? உயிர்த்தோழியிடம் சலுகை எடுத்துக் கொண்டால் அது தவறாகி விடுமா..?

“இப்படித்தான் எதற்கெடுத்தாலும் எதையாவது சிடுசிடுன்னு சொல்லி என்ன தவறு செய்தேன், அதுதான் எனக்கும் விளங்கவில்லைன்னு என்னை புலம்ப வைக்கிறாண்டி உத்ரா.. போன ஜென்மத்தில எனக்கு மாமியாரா பொறந்திருப்பானோ என்னவோ.. வேண்டாத மருமகள் கைபட்டாலும் குற்றம், கால் பட்டாலும் குற்றம்ன்னு எதுக்கெடுத்தாலும் குற்றம் கண்டு பிடித்து என்னை ஒரு வழியாக்கறாண்டி..” தோழியிடம் முணுமுணுப்பாக புலம்பித் தள்ளினாள் நந்தினி..

அவள் முணுமுணுப்பதைக் கவனித்து விட்ட ரவிச்சந்திரன்..

“என்னைப்பத்தி உங்க ஃபிரண்ட் கம்ப்ளெயிண்ட் பண்றதைப் போல இருக்கே.. என்னங்க சொல்கிறா..?” என்று விசாரித்தான்..

“சொல்லிராதேடி..” முணுமுணுப்பாய் அலறினாள் நந்தினி..

“சொல்லிட்டுத்தான் வேலையைப் பார்ப்பேன்.. போவியா..” தோழிக்கு ஆறுதல் சொன்ன உத்ரா..

“எங்க முதலாளி தங்க முதலாளின்னு சொன்னா சார்..” என்று ரவிச்சந்திரனிடம் சிரிக்காமல் படு தீவிரமாக முகத்தை வைத்துக்கொண்டு உண்மை போலச் சொன்னாள்..

வேலிக்கு ஓணான் சாட்சி என்பதைப் போல நம்பாத பார்வைபார்த்த ரவிச்சந்திரன்..

“நம்பிட்டேன்..” என்று துளிக்கூட நம்பாத குரலில் சொன்னான்..

“இதையாவது நம்புவீங்களா..?”

உத்ரா நீட்டிய செல்ஃபோனில் காலேஜின் நோட்டிஸ் போர்டில் ஒட்டப்பட்டிருந்த லிஸ்ட் இருந்தது.. அதில் முதலாவதாக நந்தினியின் பெயரும் இருந்தது.. அவள்தான் கல்லூரியின் முதல் மாணவி.. பல்கலைக் கழகத்தின் தங்கப் பதக்கத்தைப் பெறுகிறாள் என்ற விவரத்தில் புருவங்களை உயர்த்திய ரவிச்சந்திரன்..

“மெடிக்கல் மிராக்கிள்..” என்றான்..

“எஜுகேசனல் மிராக்கிள் சார்..” எடுத்துக் கொடுத்தான் வினித்..

“யெஸ்.. யெஸ்.. ஷ்யூர்.. ஷ்யூர்.. உலகத்தின் அதிசயங்களில இதுவும் ஒன்று..”

“நான் நினைத்தேன்.. நீங்க சொல்லிட்டிங்க..”

“இஸ் இட்..?”

நான் பேச நினைத்ததையெல்லாம் நீ பேசுகிறாயே தோழா என்ற பரவசப் பார்வையை பார்த்து வைத்தான் ரவிச்சந்திரன்.. அதில் புளகாங்கிதப் பட்டுப் போன வினித்..

“கூட்டணி போடறிங்களா..? இருக்கு உங்களுக்கு..” என்று தோளில் அடி வாங்கினான்..

“ஹி.. ஹி.. சும்மா ஒரு இதுக்குப் பேசிக்கிட்டோம் உத்ரா.. நாம சொன்ன வார்த்தைக்காக சார் இத்தனை நாளா நந்தினியைப் பொறுத்துக்கிட்டு இருக்கார்.. இதைக் கூடப் பேசிக் கூட்டணி போடலைன்னா எப்படி..?” சமரசம் பேச முனைந்தான் வினித்..

“என்னைப் பொறுத்துக்கிட்டு இருக்காரா..?”

நந்தினி இடுப்பில் கை வைத்து முறைத்ததில் வினித் கன்னத்தில் போட்டுக் கொள்ள ஆரம்பித்து விட்டான்..

“வாய் தவறி வந்திருச்சுங்க..”

“அஃது..”

ஒற்றை விரலை உயர்த்தி வினித்தை எச்சரித்து விட்டுத் திரும்பிய நந்தினி ரவிச்சந்திரனின் அக்னி பார்வையில் திகைத்துப் போனாள்..

‘இப்ப என்ன தப்புச் செய்துட்டேன்னு பொசுக்கிற பார்வையைப் பார்க்கிறான்..? சுட்டெரிக்கிற அக்கினி வெயிலில தமிழ்நாட்டில வறுபடாம தப்பிச்சு கேரளாப் பக்கம் எஸ்கேப் ஆகிட்டோம்ன்னு மகிழ்ந்து போயிருந்தேன்.. அக்கினி நட்சத்திரம் முடிந்து கோடை கால வெயிலும் குறைந்து காற்றடிக்கிற ஆடி மாதத்தில ஆடிப் போயிருக்கிற அப்பா எனக்கு அழைப்புக் கொடுத்து அழைச்சுக்கிற வரைக்கும் அக்கினி நட்சத்திரத்துக் கத்தரி வெயிலில இருந்து தப்பிச்சு குளுகுளுன்னு வயநாட்டில வாழ்ந்துட்டுப் போகலாம்ன்னு நினைச்சா.. இவன் விட மாட்டான் போல இருக்கே.. கேரளத்துக் குளிரிலும் நான் பயந்து நடுங்கி வேர்த்து

விருவிருத்துப் போகனும்ங்கிற பிளானோடு இருக்கான்..' மனதுக்குள் புலம்பித் தள்ளியவள்..

"பார்த்தியாடி.." என்று உத்ராவிடம் முறையிட்டாள்..

"பார்த்துக்கிட்டுத்தாண்டி இருக்கேன்..." யோசனையுடன் சொன்னாள் உத்ரா..

'என்ன கழுதைக்கு இம்புட்டு யோசனை யோசிக்கிறா..?'

ஒரு மண்ணும் புரியவில்லை நந்தினிக்கு..

'இப்படி எதிர்மறைத் துருவங்களாய் அடித்துக் கொண்டிருப்பவர்களின் மத்தியில் என்னத்தை தேநிலவு கொண்டாடிக் கிழிக்கப் போகிறோம்ன்னு யோசிக்கிறாளே..'

உத்ரா வினித்தை நெருங்கினாள்.. அவளது விழிகளில் தெரிந்த சமிக்ஞையில் அவன் அவசரமாகக் குனிந்து உத்ராவுக்கு காதைக் கொடுத்தான்.. அவள் சன்னக்குரலில் கிசுகிசுப்பாய் எதையோ சொன்னாள்.. இவன் ரவிச்சந்திரனையும், நந்தினியையும் ஓர்முறை பார்த்துவிட்டு தலையை மேலும் கீழுமாக ஆட்டி வைத்தான்..

'என்னத்தை ஓதறா.. இப்பவே மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸில ரிடர்ன் டிக்கெட்டை வாங்கிருங்க.. இதுககிட்டேயிருந்து

எஸ்கேப் ஆகி சென்னைப் பக்கம் ஓடிப் போயிரலாம்ன்னு சொல்கிறாளோ.. வினித் அண்ணாவும் பெண்டாட்டி சொல்லைத் தட்டாத தாசனாய் ஆகட்டும்ன்னு பூம்பூம் மா டு போல தலையைத் தலையை ஆட்டறாரோ..' சம்சயம் கொண்டாள் நந்தினி..

தோழிக்கும் அவளது கணவனுக்கும் இடையில் உள்ள நெருக்கம் நந்தினிக்குள் ஏக்கத்தை உண்டு பண்ணியது.. அவளறியாத ஓர் ரகசியத்தை உத்ரா தன் கணவனிடம் பகிர்ந்து கொள்கிறாள் என்பதில் வினித்தின் மீது பொறாமை கொண்டாள் நந்தினி.. உத்ராவும் வினித்தும் சிரித்துக் கொண்ட ரகசியச் சிரிப்பில் இவளுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது.. அவர்களுக்குள் நிலவிய இணக்கம் நந்தினிக்குப் பிடித்தமில்லாததாக இருந்தது.. உத்ரா அவளிடமிருந்து விலகிப் போய் விட்டதைப் போல உணர்ந்தாள்..

உத்ராவும் வினித்தும் ரகசியப் பேச்சை நிறுத்திய பாடாய் இல்லை.. போதும்.. பேச்சை நிறுத்துங்கள் என்று எப்படிச் சொல்வது..? பல்லைக் கடித்தபடி ரவிச்சந்திரனைப் பார்த்த நந்தினி மறுபடியும் திகைத்தாள்..

ஊடுறுவும் ஆழ்ந்த பார்வையுடன் நின்றிருந்தான் அவன்.. துளைக்கும் அவனது பார்வையில் இருந்த ஏதோ ஒன்றில் தடுமாறினாள் நந்தினி.. காதல் பார்வையில்லை அது.. காதல் பார்வையைத்தான் எப்போதும் பார்த்து வைப்பானே.. காதலையும் தாண்டிய ஏதோ ஒன்று.. அவளுக்கே அவளுக்கான செய்தி.. அவனது பார்வையில் பொதிந்திருப்பதைப் போல அவளுக்கு தோன்றி வைத்தது.. அவனது அந்தப் பார்வை சொல்லும் சேதி என்ன என்று யோசித்தாள் நந்தினி..

வினித்தும் உத்ராவும் அவர்களின் உலகத்திலிருந்து வெளியேற மனமில்லாதவர்களாக கிசுகிசுப்பான பேச்சும்.. ரகசிய சிரிப்புகளுமாக இருந்தார்கள்.. அது ரயில் நிலையம் என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள் என்று நந்தினிக்குத் தோன்றியது..

ரவிச்சந்திரன் அவள் பக்கத்தில் வந்தான்.. மர்மப் பார்வையுடன் வினித் உத்ராவின் முகத்தருகே குனிந்ததைப் போல நந்தினியின் முகத்தருகே குனிந்தான்.. ஏனோ தெரியவில்லை.. அந்த நொடியில் அவன் காட்டிய அந்த நெருக்கத்தை நந்தினி விரும்பினாள்.. அவளுக்கு அது பிடித்திருந்தது..

“என்ன்ன்..?” இமைகள் படபடக்க உத்ரா வினித்திடம் பேசிய ரகசியத் தொனியில் அதட்டலாக கேட்டாள்..

“அவங்களை ஏன் அப்படி முறைச்சுப் பார்க்கிற..?” வினித் உத்ராவிடம் கிசுகிசுக்கும் அதே ரகசியத் தொனியில் கிசுகிசுத்து அவளை அசத்தினான் அந்த அசத்தல் மன்னன்..

‘வாவ்..!’ நந்தினியின் மனம் குதூகலித்தது..

தோழியுடன் நடந்த மறைமுக போட்டியில் அவள் வென்று விட்டதைப் போல ஒரு சந்தோஷம் உண்டானது..

‘நீ மட்டும்தான் உன் ஆள்கிட்ட ரகசியம் பேசி என்னைக் கடுப்படிப்பியா..? என்னிடம் ரகசியம் பேசவும் ஆள் இருக்கான்..’ கெக்கலி கொட்ட வேண்டும் போல இருந்தது..

“முறைக்காம என்ன செய்வாங்களாம்...? பாருங்களேன்.. இவ என்னோட பெஸ்ட் அண்ட் ஃபர்ஸ்ட் ஃபிரண்ட்.. எப்பவும் எனக்கு மட்டும்தான் ஃபர்ஸ்ட் பிரிஃபரன்ஸ் கொடுப்பா.. இன்றைக்கு என்னடான்னா என்னை விட்டுட்டு வினித் அண்ணாகிட்ட ரகசியம் பேசிக்கிட்டு இருக்கா..” ரகசியக் குரலில் காய்ந்தாள் நந்தினி..

“நீயென்ன அவங்களோட ஹஸ்பெண்டா..?” நிதானமாக கேட்டான் ரவிச்சந்திரன்..

“ஹஸ்பெண்டுன்னா ஃபிரண்ட்ஸை பிரிக்கனுமா..?”

நந்தினி ஆத்திரம் கொண்டாள்..

“வினித்தா உத்ராவை உன்னிடமிருந்து பிரிக்கிறார்..? உத்ராதானே உன்னை மறந்து வினித்திடம் கொஞ்சிக்கிட்டு இருக்காங்க..?”

ரவிச்சந்திரனின் அறிவுறுத்தலில் சிந்தனையான நந்தினி..

“ஆமாமில்ல..” என்றாள் குழந்தையாக..

இவள் குழந்தைதானே என்ற நினைவில் பிரியத்துடன் சிரித்தான் ரவிச்சந்திரன்..

# அத்தியாயம் 141

**அ**வனுடைய பிரியம் கலந்த பார்வை நந்தினியை ஈர்த்தது.. அதற்கு முன்பும் அவன் அப்படிப் பார்த்திருக்கிறான்தான்.. அப்போதெல்லாம் ஈர்க்கப் பட்டதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் இருந்தவள் இப்போது விழிகள் பளபளக்க அவனைப் பார்த்தாள்.. அவன் விழிகள் மின்னின..

“என்ன்ன்…ன..?” அவன் புருவங்கள் உயர்ந்து இறங்கின.. “பாஸ்..” நந்தினி கிறங்கித் தடுமாறினாள்..

ரவிச்சந்திரனை அந்தக் கிறக்கம் உற்சாகப் படுத்தியது.. மயக்கத்தை மறைக்கத் தெரியாத அந்தப்பேதைப் பெண்ணின் மீதான காதல் அவனை அலைக்கழித்தது.. வா.. என்னிடம் வந்து விடு.. என்று இழுத்து அணைத்துக் கொள்ள வேண்டும் போல கைகள் பரபரத்தன.. நந்தினியிடம் நெருங்கி நின்றான்.. அவள் தள்ளிப் பின் வாங்கவில்லை.. அவளது முகத்தை உராயும் அவனது சட்டையிலிருந்து வந்த இனிமையான நறுமணத்தை முகர்ந்து மயங்கி விழிகளை மூடினாள்.. அப்படியே அவன் மார்பில் சாய்ந்து விட வேண்டும் போல

மனம் அலைபாய்ந்தது.. அதன் மீதான ஆசை அதிகரித்ததில் அவள் தடுமாறினாள்.. இந்தத் தடுமாற்றம் புதிதல்ல என்றாலும் கட்டுப்படுத்த முடியாமல் அவன் கைகளில் புகுந்து கொள்ளச் சொல்லும் இந்தத் தடுமாற்றம் அவளுக்குப் புதிதுதான்..

அவனைக் கட்டிக் கொள் என்றது மனது.. விட்டு விலகு என்று எப்போதும் அறிவுறுத்தும் அவளது அறிவு எதுவும் சொல்லாமல் மௌனம் சாதித்தது.. அது ஏனென்றும் அவளுக்குப் புரியவில்லை.. அது குறித்த ஆராய்ச்சியிலும் அவள் இறங்கவில்லை..

‘நானா இப்படி நினைக்கிறேன்..?’

அவள் பதறிப் போனாள்.. அவன் கைகளில் புதிதாக அவள் புகுந்து விடப் போவதில்லை.. அவன் மார்பில் முகம் புதைப்பதும் அவளுக்குப் புதிதல்ல.. அவன் மீதான அவளுடைய மயக்கமும் புதிதல்ல.. ஆனால் இன்று வந்திருக்கும் இந்த மயக்கம் புதிது..

**‘இன்று வந்த இந்த மயக்கம்..**

**என்னை எங்கெங்கோ**

**கொண்டு செல்லுதம்மா..’**

புதிதாக வந்திருக்கும் தளர்ச்சியுடன் கண்மூடினாள் நந்தினி.. அவள் தோள்களைத் தொட்டிருக்கும் ரவிச்சந்திரனின் கரங்கள் எந்த நொடியிலும் அவள் முதுகின் மீது பரவி இறங்கி அவளைத் தன்னோடு அணைத்துக் கொள்ளக் கூடும் என்ற எதிர்பார்ப்பில் அவள் மனம் படபடத்தது..

அவள் எண்ணியது ஈடேறியிருக்கும்தான்.. அவள் தோளில் பதிந்திருந்த அவனது கரங்கள் இறுக்கமாக பதிந்து அவள் முதுகில் இறங்க ஆரம்பித்தனதான்.. வினித்தும் உத்ராவும் இவர்கள் இருவரையும் கவனிக்காத மோன நிலையில் இருந்தார்கள்தான்.. ரவிச்சந்திரன் நந்தினியைக் கட்டியணைத்திருந்தால் அவர்கள் இருவரும் இவர்களைக் கவனித்திருக்க மாட்டார்கள்தான்.. ரயில் நிலையத்தில் யாருமில்லைதான்.. இறுக்கமான அணைப்பும் ஆழ்ந்த முத்தமும் சாத்தியப் பட்டிருக்கக் கூடும்தான்..

ஆனால்.. வில்லாதி வில்லனாக..

“கூ..” என்ற கூவலுடன் ரயில் ஒன்று வந்து நின்று சந்தடியில்லாத ரயில் நிலையத்தில் சளசளப்பையும் பரபரப்பையும் உற்பத்தி செய்தது..

எங்கிருந்துதான் வந்தார்களோ.. வந்து நின்ற ரயிலில் ஏறவும், இறங்குபவர்களை வரவேற்கவுமான கூட்டம் குவிந்து விட்டது.. அந்தக் கூட்டத்துடன் ரயிலில் இருந்து இறங்கிய பயணிகளின் கூட்டமும் சேர்ந்து கொண்டதில் அணைத்து நின்ற இரண்டு ஜோடிகளும் பிரிந்து விலகி ரயில் நிலையத்தை விட்டு வெளியே நடக்க ஆரம்பித்தார்கள்..

அப்போதுதான் நந்தினியின் நினைவு வந்ததைப் போல.. "நந்தினி.." என்று வந்து ஒட்டிக் கொண்டாள் உத்ரா.. தோழியின் மீது கொண்டிருந்த மனத்தாங்கல் வெயில் கண்ட பனித்துளி போல மறைந்து விட..

"இப்போதுதான் என் நினைவு வந்ததா..?" என்று கோபித்துக் கொண்டாள் நந்தினி..

"மறந்தால்தானே நினைக்கிறதுக்கு..?" செண்டிமென்டாய் கவிழ்த்தாள் உத்ரா..

"ஹ..! யாரிடம் லவ் டயலாக்கை விடற..? இதுக்கெல்லாம் மயங்கற ஆள் நானில்லை.."

"வேற எதுக்கு மயங்குவ..? ரவி சாரோட புருவம் உயர்த்துகிற மேனரிசத்துக்குத்தான் மயங்குவியா..?"

ஆழ்ந்த குரலில் கேட்டாள் உத்ரா.. மருண்டு போய் தோழியைப் பார்த்தாள் நந்தினி..

‘இதை எப்படி இவள் கண்டு பிடித்தாள்..?’ என்ற மருட்சி அவள் விழிகளில் நிரம்பியிருந்தது..

“இதுக்கெல்லாம் வெற்றிலையில் மை தடவி ஜோசியமா பார்க்கனும்..? அவரை நேருக்கு நேராப் பார்க்கவே நீ பயப்படற.. அவரோட இமைகள் அசைஞ்சாலே அலருகிற.. அவர் புருவங்களை உயர்த்திட்டா அவ்வளவுதான்.. எபௌட்டொன் போட்டு புறமுதுகு காட்டி திரும்பி நின்னுக்கிற.. என்னதாண்டி நடக்குது..?”

“அது என்னென்னவோ நடக்குதுடி உத்ரா..” மைண்ட் வாய்ஸில் பேசுவதாக நினைத்துக் கொண்டு நந்தினி சவுண்டு வாய்ஸில பேசிவிட ‘ஜெர்க்’கானாள் உத்ரா..

“என்னது..?”

தூக்கிவாரிப் போட அவள் கேட்டதில் தன்னுணர்விற்கு வந்த நந்தினி சவுண்டு வாஸ்ஸில் பேசி விட்டதில்..

‘சவுண்டு வாய்ஸில பேசிட்டேன் போல இருக்கே..’ என்று உத்ராவை விட ‘ஜெர்க்’ ஆனாள்..

“ஏய்ய்.. கள்ளி.. இங்கே என்னதான் நடக்குது..?” உத்ரா குடைந்தாள்..

“நீயும், நானும் நடக்கிறோம்.. வினித்தும் பாஸும் நடக்கிறாங்க.. மற்றும் இந்த ஜங்ஷனில் இருக்கிறவங்க எல்லோரும் நடக்கிறாங்க.. நீ வாம்மா.. மின்னல்..!”

நந்தினியின் லூட்டியில் சிரித்து விட்டாள் உத்ரா..

“நீ இருக்கியே..”

தோழியை செல்லமாக அடித்து விட்டு அணைத்துக் கொண்டாள்.. வினித்துடன் நடந்து கொண்டிருந்த ரவிச்சந்திரன் திரும்பிப் பார்த்தான்.. உத்ராவின் அணைப்பில் இருந்த நந்தினியை அவன் உறுத்துப் பார்த்ததில்..

“நான் உன்னை ஹக் பண்ணிக்கிறதில உன் பாஸுக்கு என்னடி அப்ஜெக்ஷன்..” என்றாள் உத்ரா..

‘இவன் என்ன கழுதைக்கு இப்படிப் பார்த்து என்னை மாட்டி விடறான்...’ மனதுக்குள் ரவிச்சந்திரனைத் திட்டியபடியே..

“ஹி.. ஹி.. அப்ஜெக்ஷனாவது ஒண்ணாவது.. நீயா எதையாவது இமாஜின் பண்ணிக்காதே..” என்றாள் நந்தினி..

“அதுக்கு நீயேண்டி ஒரு மார்க்கமா சிரித்து வைக்கிற..?”

ரவிச்சந்திரனை விடத் தீர்க்கமாக பார்த்து வைத்தாள் உத்ரா.. நந்தினி திருதிருத்து வைத்ததில்..

“ஏதோ இருக்கு.. அது என்னன்னுதான் தெரிய மாட்டேங்குது..” என்றாள்..

“செஞ்சிக்குப் போனதும் வெத்தலையில் மைதடவி ஜோசியம் பாரு..” என்று அலட்சியமாக சொல்வதைப் போலக் காட்டிக் கொண்டு.. அப்போதைக்கு எஸ்கேப் ஆனாள் நந்தினி..

‘கிரேட் எஸ்கேப்..’ அவள் மனம் தன்னைத்தானே சிலாகித்துக் கொண்டது..

பிரிட்டிஷ்காரர்களுக்கு கடுக்காய் கொடுத்துத் தப்பிய நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ்கூட இப்படித் தன்னைத் தானே சிலாகித்துக் கொண்டிருக்க மாட்டார்..

ரவிச்சந்திரனின் காரில் எப்போதும் போல முன் பக்கத்து சீட்டில் இயல்பாக ஏறி உட்கார்ந்து விட்டாள் நந்தினி.. உத்ராவும் கூட இருக்கிறாள் என்ற உணர்வில் அவசரமாய் அவள் கீழே இறங்குவதற்குள் காரில் ஏறி விட்ட ரவிச்சந்திரன்..

“ஏன் இறங்கற..?” என்று கடிந்து கொண்டான்..

“உத்ரா..” இழுத்தாள் நந்தினி..

“அவங்களுக்கென்ன..?”

“இல்லை.. அவளும் நானும் பின் சீட்டில் உட்கார்ந்துக்கலாம்ன்னு..”

ரவிச்சந்திரன் பார்த்த பார்வையில் நெருப்புப் பொறி பறந்தது.. இப்போதைய அக்னி பார்வை எதற்கானது என்று தெரியாமல் நடுங்கிப் போனாள் நந்தினி..

“உத்ராவும் வினித்தும் ஹனிமூன் கப்புள்.. நியு மேரிட்.. அவங்களை முன் சீட்டிலும் பின் சீட்டிலுமாக பிரித்து உட்கார வைத்துட்டு நீ உன் ஃபிரண்ட் பக்கத்தில் உட்கார்ந்துக்குவியா..? எப்படி இப்படியெல்லாம் திங்க் பண்ணற..? உன்னை நம்பி ஹனிமூன் கொண்டாட இவங்க கிளம்பி வந்திருக்காங்க பாரு.. இவங்களோட மனோ தைரியத்தை பராட்டித்தான் ஆகனும்.. அசத்தற போ.. ஏங்க உத்ரா.. நிஜமாவே உங்க ஃபிரண்ட் காலேஜ் ஃபர்ஸ்ட்டா..? கோல்டு மெடலிஸ்டா..?” மட்டம் தட்டினான் ரவிச்சந்திரன்..

“ஹலோ பாஸ்.. அவதான் எவிடென்ஸுக்கு செல் ஃபோனில் படம் பிடிச்சுட்டு வந்து காண்பிச்சாள்ல..” ரோஷத்துடன் மூக்கை விடைத்தாள் நந்தினி..

“உன் விஷயத்தில என்னாலே எந்த எவிடென்ஸையும் நம்ப முடியாது நந்தினி.. நீ அப்பேற்பட்ட கேட்டகிரி..”

ரவிச்சந்திரன் காரைக் கிளப்பினான்.. நந்தினி உத்ராவும் வினித்தும் காருக்குள் இருக்கிறார்கள் என்பதையே மறந்து போனவளாக ரவிச்சந்திரனுடன் அனல் பறக்கும் வாக்குவாதத்தில் ஈடுபட்டாள்.. அவனுடைய அத்தை மகள் அஜந்தா எந்த கேட்டகிரி என்ற கேள்வியை அவன் முன் வைத்தாள்.. அவளை விட நந்தினி ஒன்றும் குறைந்து போய்விடவில்லையென்று வழக்கு வைத்தாள்.. அஜந்தாவை ரவிச்சந்திரன் ஒன்றும் இழுக்கவில்லையே என்று அவன் சொன்னான்..

அப்படியென்றால் அவளை இழுக்க வேண்டும் என்று ரவிச்சந்திரன் நினைக்கிறானா என்ற கேள்வியை நந்தினி எழுப்பினாள்.. இதுவரை அப்படியொரு நினைவு ரவிச்சந்திரனுக்கு வந்ததில்லை எனவும் நந்தினி ஆசைப்படுவதால் அதை நினைத்துப் பார்ப்பதாகவும்

ரவிச்சந்திரன் உறுதியளித்தான்.. இதற்காகத்தானே இந்த பாலகுமாரன் ஆசைப்படுகிறான் என்று நந்தினி எகிறினாள்.. ஆசைப்படுவது நந்தினி.. ரவிச்சந்திரனல்ல என்று அவன் அறிவுறுத்தினான்..

“ஆமாமாம்.. நீங்களும் உங்க அத்தை மகளும் கொஞ்சிக் குழாவனும்னுதான் நான் ஆசைப்பட்டுக்கிட்டு இருக்கேன்..”

நந்தினி கழுத்தை ஒரு வெட்டு வெட்டித் திரும்பினால் எதிரே ‘யாழ்’ ஹோட்டல் தெரிந்தது..

“அதுக்குள்ளே ஹோட்டல் வந்திருச்சா..?”

‘ஙே..’ என்று விழித்தாள்..

“நம்மிடம் வர ஹோட்டலுக்கு என்ன காலா இருக்கு..? நாமதான் காரில ஹோட்டலுக்கு வந்திருக்கோம்..” அதற்கும் ஒரு ஷொட்டு வைத்தான் ரவிச்சந்திரன்..

“சான்ஸ் கிடைச்சாப் போதுமே.. மட்டம் தட்டி உட்கார வைச்சிருவீங்களே.. எப்போ, எப்போன்னு காத்திருப்பீங்களே..?” உதட்டைச் சுழித்து அழகு காட்டினாள் நந்தினி..

“நீதான் சான்ஸை அள்ளியள்ளிக் கொடுக்கிற அட்சய சுரபியாய் இருக்கியே..” புருவங்களை உயர்த்தி இறக்கி அவளை கிளீன் போல்டாக்கினான் ரவிச்சந்திரன்..

“ஆனாலும் இது அநியாயம் பாஸ்..”

“எது..?”

“சண்டை போட்டுக்கிட்டே ஹோட்டலுக்கு வந்து நிற்கிறது..”

“நீ சண்டை போட்டுக்கிட்டு இருந்த.. நான் காரை ஓட்டிக்கிட்டு இருந்தேன்.. கார் ஹோட்டலுக்கு வந்தாச்சு.. தட்’ஸ் ஆல்..”

“ஆனாலும் பாஸ்.. நீங்க அநியாயத்துக்கு சூப்பர் மேனா இருக்கீங்க..”

குறைபடுவதைப் போல பிரமித்த நந்தினியின் பேச்சில் கவரப்பட்டவனாக சில்லென்ற ஓர் பார்வையைச் செலுத்தினான் ரவிச்சந்திரன்..

‘ஹப்பா.. அக்கினி குளிர்ந்திருச்சு..’

அடுத்த பாட்டுக் கிளம்பச் சற்றுத் தாமதமாகும் என்ற கனிப்பில் இடையில் கிடைத்த இளைப்பாறுதலில் நிம்மதியானாள் நந்தினி..

காரை விட்டு இறங்கியவள் பின்சீட்டிலிருந்து இறங்கிய உத்ராவையும் வினித்தையும் பார்த்து விட்டு..

“அச்சச்சோ..” என்று கையை உதறினாள்..

“இப்ப என்ன ஆச்சு..?” விசாரித்தான் ரவிச்சந்திரன்..

‘நல்லவேளை.. புருவங்களை உயர்த்தலை.. இல்லைன்னா வினித் அண்ணா முன்னாடி இவன்கிட்ட மயங்கிப் போய் நின்னு மாட்டியிருப்பேன்..’ தற்காலிகமாக நிம்மதியானாள் நந்தினி..

அந்த நிம்மதிக்கு எத்தனை மணித்துளிகள் உத்தரவாதமிருக்குமென்றுதான் அவளுக்குத் தெரியாதே.. ரவிச்சந்திரன் எந்த நொடியில் புருவங்களை உயர்த்தி வசீகரித்து வைப்பான் என்பதை யாரறிவார்..?

‘இவனே அறிய மாட்டான்..’

என்னதான் அவன் புருவங்களை உயர்த்தும் போது மயங்கி விடக் கூடாது என்று மனப்பாடம் பண்ணி மனதுக்குள்

நெட்டுரு போட்டுக் கொண்டாலும் அந்த மன்மதன் மலரம்பைத் தொடுக்க கரும்பு வில்லில் நாணேற்றுவதைப் போல அவன் புருவங்களை உயர்த்தி இறக்கி விட்ட ால் அவள் அனைத்தையும் மறந்து ஆவென்று மயங்கி நின்று விடுகிறாளே..

‘ஆல்ரெடி உத்ரா கண்டு பிடிச்சுத் தொலைச்சுட்டா.. வினித் அண்ணாதான் பாக்கி.. இந்த ஓட்டைவாய் உத்ரா அண்ணாவிடம் போட்டுக் கொடுக்காமல் இருக்க வேண்டும்..’ நந்தினி மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்... இதை மட்டும் அவள் வாய் விட்டுச் சொல்லியிருக்க வேண்டும்.. வினித்தும் ரவிச்சந்திரனும் அங்கே நின்று கொண்டிருக்கிறார்கள் என்கூட நினைத்துப் பார்க்காமல்..

‘யாருடி ஓட்டை வாய்..? நீயா இல்லை நானா..? ஒரு ஓட்டை வாயே ஓட்டை வாயைப் பற்றிப் பேசுகிறதே.. அடடே.. மூணு புள்ளி.. அண்ட் ஆச்சரியக்குறி கவிதையெல்லாம் உனக்குத்தாண்டி பொருந்தும்.. நீ எனக்குப் பட்டம் கட்டறயா..?’ என்று கச்சை கட்டிக் கொண்டு கிளம்பியிருப்பாள் உத்ரா..

அவள் வினித்தின் முன்னால் கச்சை கட்டுவதைப் பற்றி நந்தினிக்கு யாதொரு கவலையும் இல்லை.. அங்கே ரவிச்சந்திரனும் இருக்கிறானே..

# அத்தியாயம் 142

“எதுக்குடி இந்த அச்சச்சோ..?”

ஓட்டைவாய் என்று தோழியின் மனதுக்குள் நாமகரணம் சூட்டப் பட்டிருப்பதை அறியாதவளாக கேட்டாள் உத்ரா..

“அண்ணாவும் நீயும் பின்சீட்டில் உட்கார்ந்திருக்கிறதை மறந்தே போயிட்டேண்டி உத்ரா..”

உத்ரா தோழியைப் பார்த்த பார்வை ‘அடிப்பாவி..!’ என்றது..

“உன்னை நம்பி என் ஹஸ்பெண்டோடு ஹனிமூனுக்கு வந்திருக்கேன் பாரு... என்னைச் சொல்லனும்.. எப்படிங்க இவளை நம்பி ஹனிமூனுக்கு கிளம்பி வந்தீங்கன்னு உன் பாஸ் கேட்டதுதான் கரெக்ட்.. அவர் வாய்க்கு சர்க்கரை போடனும்..”

“என் வாய்க்கு..?”

“பாகற்காய் ஜுஸை ஊத்தனும்..”

“எதுக்குடி இந்த கொலைவெறி..?”

“இன்னும் உன் குரல்வளையில் கை வைக்காமலிருக்கிறேன்னு சந்தோஷப்படு.. பக்கத்தில் என் ஹஸ்பெண்ட் இருக்கிறதினால நீ இன்னைக்குத் தப்பிச்சிட்ட... இன்னொரு நாள் மாட்டாமலா போவ..?”

“இன்னைக்கு மட்டும் ஏன் விட்டு வைச்சிருக்க உத்ரா.. அண்ணா முன்னாலே அமைதியின் சிகரம் போல வேஷம் போடற உன் இமேஜ் டேமேஜாகிரும்ன்னுதானே..?”

“உன் விஷயத்தில இமேஜையெல்லாம் யோசிக்கக் கூடாதுடி.. உன்னை..”

உத்ரா நந்தினியின் குரல்வளையை நெறிக்கப் போவதைப் போல பாவனை செய்தாள்.. அவள் கைகளை மாலையாக்கிக் கொண்டு கலகலவென சிரித்தாள் நந்தினி..

“ஸாரிடி உத்ரா.. உனக்கும் அண்ணாவுக்கும் கோழிக்கோடின் அழகைக் காட்டிப் பேசிக்கிட்டே வரனும்னு நினைத்தேன்..”

“அதை மறந்துட்டு உன் பாஸ்கூட சண்டை போட ஆரம்பிச்சிட்ட.. போகுது போ.. நீ காட்டலைன்னா என்ன.. நாங்க ரசிச்சுப் பார்த்துக்கிட்டுத்தான் வந்தோம்.. கேரளத்துப் பசுமையைப் பத்திச் சொல்லனுமா என்ன..? கண்களுக்கு

செமத்தியான விருந்து.. தொட்டுக் கொள்ள சைட்-டிஷ்ஷா உங்க சண்டை..” என்ற உத்ரா.. குரலைத் தாழ்த்தி நந்தினியின் காதுகளுக்கு மட்டும் கேட்கும்படி சன்னக் குரலில்..

“அப்படியே டாம் அண்ட் ஜெர்ரி சண்டையைப் பார்க்கிறதைப் போலவே இருந்ததுடி.. இப்படியாடி உன் பாஸ் கூட சண்டை போடுவ.. அவர் உனக்குச் சம்பளம் கொடுக்கிற முதாளிங்கிற பயம் இருக்க வேண்டாமா..?” என்று கடிந்து கொண்டாள்..

“அவர் மட்டும் என்னைத் திட்டலாமா..?”

“உளராம வர்றியா..?”

நந்தினி முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டாள்.. உத்ரா தோழியை அணைத்துச் சமாதானம் சொன்னாள்.. அவர்கள் ரிசப்ஷனுக்குப் போனார்கள்.. பழக்கமான பணியாள்களின் புன்னகையில் முகம் மலர்ந்த நந்தினி அவர்களிடம் குசலம் விசாரிக்க ஆரம்பித்தாள்.. ரவிச்சந்திரனின் ஆட்சேபப் பார்வையில்..

“பாருடி..” என்று உத்ராவிடம் தஞ்சம் புகுந்தாள்.. அவர்கள் லிப்டில் ஏறி அவர்களுக்கான அறைகள் ஒதுக்கப் பட்டிருந்த தளத்தில் வெளிப்பட்டார்கள்..

ரவிச்சந்திரன் கூடவே வந்ததில் வியப்பான நந்தினி..

“நீங்க உங்க ரூமுக்குப் போகலையா பாஸ்..?” என்று கண்களை மலர்த்தினாள்..

“வினித்தும் உத்ராவும் நம்ம கெஸ்டாச்சே.. ரூம் வாசல் வரைக்கும் வந்துட்டுப் போகலாம்ன்னு நினைத்தேன்..” என்ற ரவிச்சந்திரனின் பதிலில் மலைத்தாள்..

தி கிரேட் பிஸினெஸ் ஸ்டார் ரவிச்சந்திரன்.. கேரளத்து ராஜாதிராஜன்.. அவனிடம் வேலை பார்க்க வந்திருக்கும் அபலை (?) நந்தினியின் தோழிக்கு இந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறானா..?

இந்த முக்கியத்துவத்தை அவளும் அவனுமாக முதன் முதலாக இதே ‘யாழ்’ ஹோட்டலுக்கு வந்த போது நந்தினிக்குக் கொடுக்கவில்லையென்ற நினைவில் அவள் மனதில் பொறாமை வந்தது..

“ஹோட்டல் எப்படியிருக்கு..?” என்று ரவிச்சந்திரன் உத்ராவின் அபிப்ராயத்தைக் கேட்டதில் அந்தப் பொறாமை அதிகரித்தது..

‘என்னிடம் இப்படிக் கேட்கலையே..’ என்று மனம் குமைந்தாள்..

“ஸோ பியூட்டிஃபுல் சார்..” உத்ரா மெந்நகை புரிந்ததில்..

‘போதும்டி.. உனக்குக் கல்யாணமாகிருச்சு.. உன் ஆள் உன் பக்கத்தில் நிற்கிறார்..’ என்று பொருமித் தவித்தாள்..

‘அப்போ கம்மாண்டர் என்ன உன்னோட ஆளா..?’ என்று நந்தினியின் மனம் கேட்டதில் திணறிப் போனாள்..

“யு நோ உத்ரா.. எங்க பாஸுக்கு இந்த ஹோட்டலில் ஸ்பெஷலா ரூம் இருக்கு.. இவரோட பேமிலிக்குன்னு ஸ்பெஷல் காட்டேஜ்.. இங்கேன்னு மட்டுமில்லை.. பாஸோட யாழ் ஹோட்டல்ஸ் எல்லாத்தில யும் அப்படித்தான்.. பாஸோட ஸ்பெஷல் ரூமையும் காட்டேஜையும் யாரும் ஆக்குப்பை பண்ண மாட்டாங்க..”

ரவிச்சந்திரனைப் பற்றி உத்ராவுக்குத் தெரியாத விவரங்கள் தனக்குத் தெரியும் என்ற ரீதியில் பெருமைப் பட்டுக் கொண்டாள் நந்தினி..

“ஈஸிட்..?”

நந்தினி சொன்னதிற்கு தலையாட்டி இளநகை பூத்த உத்ரா வினித்துடன் அறைக்குள் போக முயன்றாள்..

“ஓகே பாஸ்.. ஸீ யு..” என்றபடி அவர்களைத் தொடரப் போன நந்தினியைப் பிடித்து இழுத்து நிறுத்திய ரவிச்சந்திரன்..

“நீ எங்கே போகிற..?” என்று அதட்டினான்..

“ரூமுக்கு.. உத்ராகிட்டப் பேச நிறைய மேட்டர் இருக்கு பாஸ்.. அவகூடப் பேசனும்.. குளித்து டிரஸ் மாத்தி ரெஸ்ட் எடுக்கனும்.. அப்புறமா ஊர் சுற்றப் போகனும்..” அடுக்கினாள் நந்தினி..

“அறைஞ்சேன்னா பாரு.. இப்படித்தான் எதையாவது ஏடா கூடமா பண்ணி வைப்பேன்னு கெஸ் பண்ணி நானும் கூடவே வந்து தொலைத்தேன்.. நான் நினைத்தது சரியாத்தான் இருக்கு.. நீ என்ன பண்ணி வைப்பேன்னு நான்

நினைத்தேனோ அதைத்தான் பண்ணிக்கிட்டு இருக்கிற.. இப்படி வா..” என்றவன்..

அவர்கள் இருவரும் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று புரியாமல் தள்ளி நின்றிருந்த உத்ராவிடம்..

“ஓகே.. நீங்க குளித்து ஃபிரஷ்ஷாகி ரெஸ்ட் எடுத்ததும் ஃபோன் பண்ணுங்க.. நாம் பிரேக்ஃபாஸ்டை முடித்துட்டு கோழிக்கோடை சுற்றிப் பார்க்கப் போகலாம்..” என்று கையாட்டி விடை கொடுத்தான்..

“தேங்க் யு சார்..” உத்ராவும் வினித்தும் தலையாட்ட திரும்பிப் பார்க்காமல் நந்தினியை இழுத்தபடி நகர்ந்தான் ரவிச்சந்திரன்.. திரும்பிப் பார்த்த நந்தினி..

“டோர் குளோஸாகிருச்சு சார்..” என்று புலம்பினாள்..

ரவிச்சந்திரன் அவளைப் பார்த்த பார்வையில் அடித்துத் துவம்சம் பண்ணிவிடும் கொலைவெறி தெரிந்தது..

“ஏன் உனக்குக் காதல் வர மாட்டேங்குதுன்னு இப்பத்தான் தெரியுது..”

தலையில் அடித்துக் கொண்டு அவளைத் தள்ளிக் கொண்டு போனவன் அவளுக்காக புக் செய்யப்பட்டிருந்த அறையின் முன்னால் அவளை கதவைச் சுட்டிக் காட்டினான்..

“இந்த டோரைத் திறந்து உள்ளே போ.. இதுதான் உனக்காக அலாட் பண்ணியிருக்கிற ரூம்..”

“நான் தனியா இருக்கனுமா..?”

“வேணும்ன்னாச் சொல்லு.. நான் உன்னுடன் தங்கிக்கறேன்..”

அவன் கண்களைச் சிமிட்டியதில் அவளுக்கு ஜிவ்வென்று ஆகிப் போனது.. அவளை மயக்கும் மன்மதனைப் பார்த்த அவளது பார்வையில் அவன் மயங்கிப் போனான்.. அவனுடைய அனைத்து அடையாளங்களையும் மறந்து ஒரு பெண்ணின் மனதை ஜெயிக்கத் துடிக்கும் ஆண்மகனாக அவள் முன் நின்றான்..

அவள் காணக்கிடைக்காத கற்பகத்தருவைப் போன்றவள்.. உலகம் வியக்கும் இளம் கோடீஸ்வரத் தொழிலதிபனிடம் வாயாடும் உணர்வில்லாமல் ஆணழகன் ரவிச்சந்திரனிடம் வாயாடும் உணர்வோடு மயங்கித் தவிப்பவள்.. அவளுக்கு அவனுடைய உயரமும் பணமும் ஒரு

பொருட்டல்ல.. அவளைக் கவர்வது அவன் மட்டுமே.. அவனுடைய அதீத கம்பீரமான ஆண்மை நிரம்பிய அழகு மட்டுமே..

“நினைப்புத்தான் உங்களுக்கு..”

வெட்கச் சிகப்புடன் முகம் மிளிர நாணத்துடன் நந்தினி சொன்ன அந்த வார்த்தைகள் நிரம்பிய அந்த இனிய மணித்துளிகள் அரிதானவை என்று நினைத்துக் கொண்டான் ரவிச்சந்திரன்..

பொக்கிஷமாய் பத்திரப் படுத்த வேண்டியவை.. இதுபோன்ற தருணங்கள் அரிதாகத்தான் வாய்க்கும்.. அவை அரிதானவையாக இருப்பதினால்தான் அழகு நிரம்பியவையாக இருக்கின்றன..

அரிதான எதுவுமே அழகுதான்..

“உன் நினைவுதான் எனக்கு.. இது உனக்குத் தெரியாதா..?” அவன் குழைந்தான்..

“ப்ளீஸ் பாஸ்.. நான் உத்ரா ரூமிலே அவகூட ஸ்டே பண்ணிக்கிறேனே..” நந்தினி கெஞ்சினாள்..

“நீயெல்லாம் இன்ஜினியரிங் முடித்திருக்கேன்னு வெளியில் சொல்லிக்காதே..” தலையில் அடித்துக் கொண்டான் ரவிச்சந்திரன்..

“இதென்ன பாஸ் அநியாயமா இருக்கு.. ரொம்ப நாள் கழிச்சு மீட் பண்ணியிருக்கிற ஃபிரண்ட் கூட தங்கியிருக்கனும்னு சொன்னா அது ஒரு குத்தமா..?” சண்டைக்கு கிளம்பினாள் நந்தினி..

“முதலில் நீ உள்ளே போ சொல்றேன்.. நான் இந்த ஹோட்டலோட ஓனர்.. காரிடாரில் நின்று உனக்கு விளக்கம் சொல்லிக்கிட்டிருக்க முடியாது..”

அறைக் கதவைத் திறந்து அவளை உள்ளே தள்ளிக் கொண்டு போனான் ரவிச்சந்திரன்.. மறக்காமல் அறைக் கதவையும் தாழிட்டான்..

“ஏன் டோரை லாக் பண்றீங்க..?” சந்தேகமாக அவனைப் பார்த்தாள் நந்தினி..

“ஊம்..? உன்னை ஸ்வாஹா பண்ணப் போகிறேன்.. ஆரம்பிக்கவா..?” அவளை மேலும் கீழுமாக மேய்ச்சல் பார்வை பார்த்தான் ரவிச்சந்திரன்..

“பாஸ்..” கலவரத்துடன் பின்னால் நகர்ந்தாள் நந்தினி..

“இதெல்லாம் தெரியுது.. புதிதாய் கல்யாணமாகி ஹனிமூன் கொண்டாட வந்திருக்கிற கப்புள் ஸ்டே பண்ணியிருக்கிற ரூமிலே கூட ஸ்டே பண்ணுவேன்னு அடம் பிடிக்கிறது எவ்வளவு பெரிய மடத்தனம்ன்னு மட்டும் தெரிய மாட்டேங்குது.. இம்சை..”

“இம்சையா..? யாருக்கு..?”

“உன் ஃபிரண்டுக்குத்தான்.. வேற யாருக்கு.. உன்னுடன் ஸ்டே பண்றதுக்கா அவங்க வய நாட்டுக்கு வந்திருக்காங்க..?”

‘இதில இப்படியொன்னு இருக்கா..?’

பலத்த சிந்தனையுடன் உட்கார்ந்து விட்ட நந்தினியைப் பார்க்கப் பார்க்கச் சிரிப்பாக வந்தது ரவிச்சந்திரனுக்கு.. ரசித்துச் சிரித்துக் கொண்டிருந்தவனைப் பார்த்த நந்தினி முறைத்தாள்..

‘என் பிழைப்பைப் பார்த்தா இவனுக்குச் சிரிப்பா இருக்கா..?’

“ஹேய்.. ஏன் இப்படி முறைக்கிற..?” “நீங்க ஏன் இப்படி சிரிக்கறீங்க..?”

“நீ அடிக்கிற லூட்டியைப் பார்த்தா சிரிப்பு வராம என்ன செய்யும்..? ஹனிமூன் கப்புள் கூட ஸ்டே பண்ணப் போறாளாம்.. வெளியில் சொல்லிராதே.. நான் சந்தேகப் பட்டுக் கேட்டதை மத்தவங்களும் கேட்டு வைச்சிறப் போறாங்க.. ஹா.. ஹா..”

“சிரித்தது போதும் பாஸ்..”

முகச் சிணுக்கத்துடன் சிணுங்கினாள் நந்தினி.. அவளைக் கட்டிப் பிடித்து நெற்றியில் முத்தம் பதிக்க வேண்டும் போலத் தோன்றியதை கட்டுப் படுத்திக் கொண்டு அறைக் கதவைத் திறந்து டாட்டா சொன்னான் ரவிச்சந்திரன்..

“டோரை குளோஸ் பண்ணிக்க..”

அவனுடைய அக்கறையில் மனம் நெகிழ்ந்தவளாக அறைக் கதவைப் பூட்டித் தாழிட்டு விட்டுத் தன் பேக்கிலிருந்த மாற்றுடைகளை சுவர் அலமாரியில் அடுக்க ஆரம்பித்தாள் நந்தினி.. இதற்கு முன்னால் ‘யாழ்’ ஹோட்டலில் அவளும் ரவிச்சந்திரனும் தங்கியிருந்த போது நடந்த நிகழ்வுகளை மனம் அசைபோட்டது.. புத்தாண்டு தொடங்கும் இரவுக் கொண்டாட்டத்தில் அவளும் ரவிச்சந்திரனும்

நடனமாடிய நொடிகள் நினைவுக்கு வந்ததில் அவளுக்குத் தனிமை பிடித்துப் போனது.. கட்டிலில் கண்மூடி விழுந்து கோழிக்கோடில் அவனும் அவளும் சுற்றிய அந்த நாள்களை நினைத்துப் பார்க்க ஆரம்பித்தாள்..

நினைவுகள் சுகமாக இருந்ததில் அப்படியே தூங்கிப் போனாள்.. காதருகில் கிணிகிணியென்ற இனிய ஓசையுடன் அவளை அழைத்த செல்ஃபோன்..

“ஏய்ய்.. சோம்பேறி..” என்று அவளை எழுப்பி விட்டது..

‘சோம்பேறியா..? நானா..?’ என்று கோபம் கொள்ள வாய் திறந்தால்..

“ஹாவ்..” என்ற கொட்டாவி முன்னால் வந்து காரியத்தைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கியது..

“சோம்பேறிங்கிறதை அப்படியே புரூவ் பண்ற..? உன்னை நம்பி வந்த உன் ஃபிரண்ட்கூட ஊர் சுற்றப் போற உத்தேசமில்லையா..?”

ரவிச்சந்திரனின் கேலியில் அரக்கப் பறக்க எழுந்து குளித்து.. தலையை ஏனோ தானோ என்று சீவிக் கொண்டு

உத்ராவை அழைக்க ஓடப் போனவளை தடுத்து நிறுத்தியது செல்ஃபோன்..

“என்ன பண்ணிக்கிட்டு இருக்க..?”

“உத்ராவைக் கூப்பிடப் போய்க்கிட்டு இருக்கேன் பாஸ்..”

அதற்குள் தயாராகி உன் தோழியைக் கூப்பிடப் போய் கொண்டு இருக்கிறாயா என்ற பாராட்டுதலை அவள் எதிர்பார்த்தால்.. அவனோ..

“தத்தி..” என்ற பட்டத்தைக் கொடுத்தான்..

“தத்தையா..?”

“அது கிளி..! மலையாளத்தில கிளியை தத்தைன்னு சொல்லுவாங்க.. இது தத்தி.. தமிழில் இதை என்னன்னு சொல்லுவாங்க.. சொல்லு..”

அவன் பாடம் எடுத்ததில் கடுப்புக் கிளம்பியதில் அவள் நகத்தைக் கடித்துத் துப்ப ஆரம்பித்தாள்.. மறுமுனை நகத்தைக் கடிக்காதே என்று அதட்டியது..

‘டெர்ரர்..! எல்லாத்தையும் கண்டு பிடிச்சுருவான்..’

# அத்தியாயம் 143

“எப்புடி பாஸ்..” அழுமாட்டாத குறையாக வினவினாள்..

“இதுக்கு ஷெர்லெக் ஹோம்ஸா வரனும்..?”

“அவரையே ஏன் சார் இழுக்கறிங்க..?”

“வேண்டும்ன்னா உன்னை இழுக்கவா..?”

“சான்ஸ் கிடைச்சிருச்சா..?”

“நீதான் அடிக்கடி உன் கையை இழுக்கச் சொல்லிச் சான்ஸை அள்ளியள்ளிக் கொடுக்கிற.. பாரி வள்ளல் பரம்பரைடி நீ..”

“என்னடா.. இம்புட்டு நேரமா ‘டீ’ போடலையேன்னு பார்த்தேன்.. வந்துருச்சா..?”

“பதிலுக்கு நீ என்னடான்னு ‘டா’ போடறியா..?”

“ஹைய்யய்யோ.. அப்படியெல்லாம் இல்லை பாஸ்.. ஞான் அப்பாவியாக்கும்..”

“யார்..? நீ..? அப்பாவி..?”

“பின்னே.. உங்க அத்தைமக ரத்தினமா அப்பாவி..?”

“அவ பேரு அஜந்தாவாச்சே..”

“அதை என்ன்ன்..னமா ரசிச்சுச் சொல்றீங்க பாஸ்..”

“பொறாமை..?”

“என்னத்துக்காம்..?”

“எதுக்கோ.. எனக்கு எப்படித் தெரியும்..?”

“உங்களுக்கா தெரியாது..? யாரு நீங்க..?”

“அதை நீதான் சொல்லேன்..”

“கம்மாண்டர்..”

அவனைச் சொல்லி விட்டு இவள் அவனுக்கான பட்டப் பெயரை ரசித்துச் சொன்னாள்..

“ஹுஹும்..?”

உல்லாசமாக ஒலித்தது அவன் குரல்.. அவன் அவளுடைய காதலனல்ல.. காதல் சொல்லியவன் மட்டும்தான் என்ற விவரமே அவளுக்கு மறந்து விட்டது.. அவனுடன் பேசிக் கொண்டிருக்கும் அந்த உரையாடல் முற்றுப் பெறாமல் நீடிக்க வேண்டும் என்று விரும்பினாள்.. நேரில் முகம்

சிவக்கத் தடுமாறி நிற்பதை விடப் பே ானில் பேசுவது வசதியானதாகவும் எளிதானதாகவும் இருந்தது..

“எதுக்கு என்னைத் தத்தின்னு சொன்னீங்களாம்..?”

“பின்னே..? ஹனிமூன் கொண்டாட வந்தவங்க என்ன ரூமுக்குள்ளே உட்கார்ந்து நியுஸ் சேனலையா வாட்ச் பண்ணிக்கிட்டு இருப்பாங்க..? அவங்க வாட்ச் பண்ண நினைக்கிற விஷயங்களே வேற..”

முதலில் அவன் என்ன சொல்கிறான் என்று புரியாமல்தான் ஊம் கொட்டினாள் நந்தினி.. புரிந்ததும் முகம் செக்கச் சிவக்க..

“ச்ச்சீய்..” என்றாள்..

“இப்போப் போய் நீ கதவைத் தட்டினா எப்படியிருக்கும்..? உன்னை உள்ளே வான்னு சந்தோஷமா அழைத்துக்குவாங்களா..? பூஜை வேளைக் கரடின்னு மனதுக்குள்ளே அர்ச்சனை பண்ணுவாங்க..”

“ஆமாமில்ல..”

“இப்போப் சொல்லு.. அவங்க ரூமுக்கு போகப் போறியா..?”

“மாட்டவே மாட்டேன்.. பட்.. வேற என்னதான் செய்கிறது..?”

“டைனிங் ஹாலுக்கு வா.. நான் ஃபோன் பண்ணி அவங்களை பிரேக்ஃபாஸ்ட்டுக்கு இன்வைட் பண்றேன்..”

இவன்தான் எப்படியெல்லாம் யோசித்துச் செயல் படுகிறான் என்ற வியப்பு தோன்றியது நந்தினிக்கு.. அதனால்தான் இந்த இளம் வயதில் பிஸினஸ் உலகின் நட்சத்திரக் கதாநாயகனாக இவனால் ஜொலிக்க முடிகிறது.. அழிந்து கொண்டிருந்த குடும்பச் சொத்துக்களை இறுக்கிப் பிடித்துப் பாதுகாக்க முடிகிறது..

அவனை நினைக்க நினைக்க நந்தினிக்கு பிரமிப்பாக இருந்தது.. அப்பேற்பட்டவன் எப்படி அவளிடம் காதல் சொல்கிறான்..?

‘யானைக்கும் அடி சறுக்கும் என்பது இதுதான் போல..’ நந்தினிக்குச் சிரிப்பு வந்தது..

துள்ளலுடன் டைனிங் ஹாலுக்குக் கிளம்பியவள் ஏதோ நினைவுக்கு வந்தவளாக தேங்கி நின்று அவசரமாக கண்ணாடி பார்த்துத் தலையைக் கோதி விட்டுக் கொண்டாள்..

‘அழகா இருக்கேனா..?’

அவள் இதுபோல கண்ணாடி பார்ப்பவளல்ல.. தன் தோற்றத்தைக் குறித்த பிரக்ஞை சிறிதும் இல்லாதவள்.. அப்போது மட்டும் ஏன் கண்ணாடி பார்க்கிறாள்..? தன் அழகைக் குறித்து கவலை கொள்கிறாள்..?

‘நானே நானா..? யாரோதானா..?’

தனக்குத்தானே ஒரு குட்டை வைத்துக் கொண்டு ஹேண்ட் பேகை தோளில் மாட்டிக் கொண்டு அறையை விட்டு வெளியேறி லிப்டில் புகுந்தாள் நந் தினி.. தரைத் தளத்தில் வெளிப்பட்டு ரவிச்சந்திரனின் பிரத்யேக டைனிங் ஹாலை நோக்கி நடந்தபோது அவளுக்குள் மலரும் நினைவுகள் தோன்றின..

அதிக காலமானால்தான் மலரும் நினைவுகள் என்று சொல்ல வேண்டுமா என்ன..? சில நாள்களே ஆகியிருந்தாலும் கடந்து போன நாட்களின் நினைவுகள் மலரும் நினைவுகள்தான்..

‘அதிலும் ஆ சுந்தரனோடு கழித்த நாள்கள் நறுமணம் கமழும் நாள்கள் அல்லவோ..’

ஆ வல்லிய சுந்தரன் அவளுக்காக அவனுடைய பிரத்யேக டைனிங் ஹாலில் காத்திருந்தவன்.. அங்கிருந்த பணியாள்கள் மரியாதையுடன் அவளை வரவேற்றுப் பூங்கொத்தை பரிசளித்தார்கள்.. தன்னை ஓர் மகாராணி போல உணர்ந்த நந்தினிக்கு குதூகலமாக இருந்தது.. ரவிச்சந்திரன் அவளைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற நினைவுடன் சன்னமாக சிரித்தபடி..

“தேங்க்ஸ்..” என்றாள்..

“வெல்கம் மேம்..” என்றார்கள் பணியாள்கள்.. பூங்கொத்துடன் வந்தவளை சுவராஸ்யமாகப் பார்த்த ரவிச்சந்திரன்..

“வரவேற்பெல்லாம் பலமாய் இருக்கே..” என்றான்..

“கண் வைக்காதீங்க பாஸ்..” சிணுங்கினாள் நந்தினி..

“அதுதானே முடியாது..”

அவன் சீட்டில் சாய்ந்து அமர்ந்து கொண்டு அவளையே பார்த்தான்.. அவளை அங்குலம் அங்குலமாக ரசித்த அவன் பார்வையில் அவள் குழம்பிப் போனாள் ..

‘இப்போத்தானே கண்ணாடி பார்த்துட்டு வந்தேன்..? அப்படியொன்னும் அழகாய் இருக்கிறதைப் போலத் தெரியலையே.. இவன் கண்ணுக்கு மட்டும் நான் அழகாய் தெரியறேனா..? எப்படி..?’

அவன் பார்வையில் முகம் சிவந்தவள்.. “இப்படிப் பார்க்காதீங்க பாஸ்..” என்றாள்..

“வேறு எப்படிப் பார்க்க..? இப்படிப் பார்க்கவா..?”

இந்தப் பார்வை முந்தைய ரசிப்புப் பார்வையைப் போல இல்லாமல் மேய்ச்சல் பார்வையாக இருந்ததில் பதறிப் போனாள் நந்தினி..

“இப்படியும் பார்க்காதீங்க பாஸ்..”

“லுக் நந்தினி.. உன்னை சைட்டடிக்காம இருக்க என்னால் முடியாது.. ஸோ.. நான் எப்படி சைட் அடிக்கனும்னு நீயே டிசைட் பண்ணிச் சொல்லு.. அப்படி சைட்டடிக்கிறேன்.. இந்த அளவுக்கு நான் கன்செஷன் கொடுக்கிறதே பெரிய விஷயம்.. எப்படி டீல் ஓகேவா..?”

அவன் ‘டீலா, நோ டீலா..?’ என்று டீல் பேசியதில் நந்தினியின் தலை கிறுகிறுத்தது.. நல்ல வேளையாக

அவளைக் காப்பாற்ற உத்ரா வினித்துடன் வந்து சேர்ந்து விட்டாள்.. புத்தம் புது மலரைப் போல இருந்தாள்.. வினித் அவளுடைய தோளைச் சுற்றிக் கையோடு கை போட்டு இறுக்கியிருக்க.. இவள் அவன் இடுப்பில் கை போட்டு வளைத்திருந்தாள்.. ஜங்க்ஷனில் இருந்ததைப் போல சுற்றுச் சூழலை மறந்து ரகசியக் குரலில் எதையோ பேசியபடி வந்து கொண்டிருந்தார்கள்..

“உத்ரா வந்துட்டா..” சந்தோஷமான நந்தினி..

“ஹாய்..” என்று குரல் கொடுத்தாள்..

ஊஹும்.. இவள் குரல் உத்ராவின் காதுகளில் விழுந்ததைப் போலவே தெரியவில்லை.. அவள் பருகு பருகு என வினித்தின் முகத்தையே இமைக்காமல் காதலுடன் பார்த்துக் கொண்டு கனவுலகில் மிதக்கிறவளைப் போல மிதந்து வந்து கொண்டிருந்தாள்..

நந்தினிக்கு ஏமாற்றமாகி விட்டது.. உத்ராவைப் பார்க்கப் போகிறோம் என்ற எதிர்பார்ப்புடன் நாள்களை எண்ணிக் காத்திருந்தவளுக்கு தோழியின் பாரா முகத்தைக் கண்டு அழுகையழுகையாக வந்தது..

‘காலையிலும் இப்படித்தான்.. ஏர்லி மார்னிங்குன்னு கூடப் பார்க்காம நான் விடிகாலைத் தூக்கத்தைத் தியாகம் பண்ணிட்டு இவளை ரிஸீவ் பண்ண ஜங்க்ஷனுக்கே போய் நின்னா.. இவ என்கூடப் பேசாம வினித் அண்ணா கூடக் கொஞ்சிக் குழாவிக்கிட்டு இருந்தா.. ஹோட்டலுக்கு வந்ததும் நின்று ஒரு வார்த்தை பேசாம ரூமுக்குள்ள ஓடிட்டா.. இப்பவாவது என் நினைப்பு வந்து பேசறதுக்கு ஓடோடி வருவான்னு பார்த்தா.. பொன்னே பூவேன்னு அன்னடைபோட்டு வினித்தண்ணாவைக் கட்டிப் பிடிச்சு கண்ணோடு கண் பார்த்து கிசுகிசுன்னு கொஞ்சிக்கிட்டு வர்றா.. என் நினைப்பே இவளுக்கில்லையா..?’

ரவிச்சந்திரனிடம் அங்கலாய்த்தால் அவன்..

“உன் நினைவு எதுக்கு வரனும்..?” என்று புருவங்களை உயர்த்தி இறக்கி இம்சித்தான்..

“ஹலோ பாஸ்.. நானும் அவளும் பெஸ்ட் ஃபிரண்ட்ஸ்..”

“ஸோ வாட்..?”

“என்னை விட அவளுக்கு வினித் அண்ணா உசத்தியாப் போயிட்டாரில்ல..?”

நந்தினிக்குக் கண்கள் கலங்கி விட்டன.. அவளையே உற்றுப் பார்த்த ரவிச்சந்திரனின் முகத்தில் ஏதோ வந்து போனது.. வழக்கம் போல அது என்ன வென்றுதான் தெரியவில்லை..

‘இவன் தேங்காயை உடைக்கிறதைப் போலத் தெள்ளத் தெளிவா எடுத்துச் சொன்னாலே என் மண்டையில் ஏறாது... இதில் மர்மமா பார்த்து வைக்கிறதையா கண்டு பிடிக்கப் போறேன்..?’

நந்தினி நீ அறிவுத் திருக்கடல்டி என்று அவளது மனம் எள்ளி நகையாடியதில்..

‘ம்ஹூம்.. இப்படியிருந்தா இவன் எனக்குத் ‘தத்தி’ பட்டம்தானே கொடுப்பான்..’ என்று நொந்து போனாள் நந்தினி..

பேசாமல் என்ன பார்வை உந்தன் பார்வை என்று கேட்டு விடலாம் என்று அவனிடமே கேட்டாள்..

“எல்லோரும் உன்னைப் போலவே இருப்பாங்களா..?”

அதே கண்கள் என்பதைப் போல அதே மர்மப் பார்வையுடன பூடகமாக கேள்வி கேட்டான் ரவிச்சந்திரன்.

“நான் எப்படி இருக்கிறேனாம்..?”

“அழகாய் அப்சரஸ் மாதிரி இருக்கிற..”

கிடைத்த வாய்ப்பை நழுவ விடாமல் அவன் ஜொள்ளினான்.. ஆனாலும் இது அதிகப்படிதான் என்று தோன்றியது நந்தினிக்கு.. இவன் அப்சரஸ்களைப் பற்றிக் கேள்விப்பட்டதில்லை போல.. இவனுடைய யாழினிப் பாட்டியே அப்சரஸ்களை மிஞ்சிய பேரழகுடன் இருக்கிறாள்.. அவந்திகா ஜொலிக்கிறாள்.. அஜந்தாவைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்... அவள் மட்டும் வில்லித்தனமான வேலைகளைப் பார்க்காதவளாக இருந்திருந்தால் நந்தினி அவளுக்குப் பூப்போட்டு பூஜை செய்திருப்பாள்..

இப்பேற்பட்ட பேரழகிகளை உறவினர்களாக வைத்துக் கொண்டு அழகிகள் புடைசூழ வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த மன்மதனாகப் பட்டவன் நந்தினியைப் போய் அப்சரஸ் என்கிறான்..

“நீங்க வயநாட்டில பிறந்து உலகம் சுத்தற வாலிபர்ன்னு நினைச்சேன் பாஸ்..”

“அந்த நினைவுக்கு என்ன குறை வந்திருக்கு..?”

“ஊஹும்.. நீங்க.. பொய்யிலே பிறந்து பொய்யில வளர்ந்தவரா இருக்கீங்க..”

“எதை வைத்து அப்படிச் சொல்கிற..?”

“என்னைப் போய் அப்சரஸ்ன்னு சொல்கிறீங்களே.. இதை மட்டும் அப்சரஸ்கள் கேள்விப்பட்டாங்கன்னு வையுங்க.. கூட்டம் கூட்டமாக் கிளம்பி உங்களை அடிக்க வந்திருவாங்க..”

“ஹா.. ஹா..”

ரவிச்சந்திரன் சிரித்துக் கொண்டிருக்க அங்கே வந்த உத்ராவும் வினித்தும் நந்தினியை விட்டு விட்டு ரவிச்சந்திரனிடம் சிரித்து வைத்தார்கள்.. அவர்களுக்கு வெல்கம் சொல்லி பூங்கொத்துகளை பணியாளர்கள் கொடுத்து வரவேற்றதில் நந்தினியின் தனக்கு மட்டும்தான் அந்த வரவேற்பு என்ற இறுமாப்பு இடிந்து தரை மட்டமானது.. காற்றுப் போன பலூனைப் போல உற்சாகம் வடிந்து போனதில் முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டாள்.. போதாக் குறைக்கு உத்ராவும் வினித்தும் ரவிச்சந்திரனுக்கு..

“தேங்க் யு சார்..” என்று ஒ ருமித்த குரலில் நன்றி.. சொல்லி நந்தினியின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டார்கள்.. கோபத்தில் கொதிகலனான நந்தினி..

“இங்கே நானும் இருக்கேன்..” என்று குரல் கொடுத்தாள்..

“இதென்னடி புதுசா இருக்கு..?” உத்ரா கோபித்துக் கொள்ள அது புரியாமல் நந்தினி தன் உடையைப் பார்த்து விட்டு.

“இங்கே.. கோழிக்கோடில்தாண்டி பர்ச்சேஸ் பண்ணினேன்.. நல்லா இருக்கா..?” என்று கேட்டு வைத்தாள்..

“இவ இருக்காளே..”

இமைகளைச் சுருக்கிக் கழுத்தைச் சாய்த்துக் கணவனிடம் செல்லமாக கூறினாள் உத்ரா.. வினித் அதை ரசித்துத் தலையை ஆட்டிச் சிரித்தான்.

“நான் பேசினா என்கிட்டப் பேசனும்.. அது என்ன எதுக்கெடுத்தாலும் உன் ஹஸ்பெண்ட்கிட்டயே பேசி ஷோ்

பண்ணிக்கறது..? என்னைப் பார்க்கத்தானே வயநாட்டுக்கு வந்திருக்கிற..'' நந்தினி சிடுசிடுக்க..

''அவங்க ஹனிமூன் கொண்டாட வயநாட்டுக்கு வந்திருக்கிறாங்க..'' என்று ஷொட்டுக் கொடுத்தான் ரவிச்சந்திரன்..

''இவ இப்படித்தான் சார்..''

இப்போது ரவிச்சந்திரனிடம் அபிப்ராயம் தெரிவித்தாள் உத்ரா.. வினித்தை விட இவன் அதிகமாக அதை ரசித்துத் தலையாட்டி விட்டு உரக்கச் சிரிக்க வேறு செய்தான்..

''ஹா.. ஹா..''

'அப்படியே வில்லன் சிரிப்பு..'

அழகிய வில்லன் என்று பல்லைக் கடித்தவ ளுக்கு அவள் எப்படித்தான் என்று புரியவில்லை.. பொத்தாம் பொதுவில் இவள் இப்படித்தான் என்று உத்ரா சொல்லி வைக்கிறாளே.. அவள் எப்படித்தான் என்பதை விலாவாரியாக விளக்கித் தொலைத்தால் ஆகாதா..?

''நீயென்னடி யாரோ போல போட்டுக் கொடுக்கிற..?''

உத்ராவை பிலுபிலுவெனப் பிடித்துக் கொண்டாள்..

“ச்ச்சும்மாடி..”

உத்ரா நந்தினியின் தோளைக் கட்டிச் சமாதானப் படுத்தியதில் நந்தினி குளிர்ந்து போனாள்.. ரவிச்சந்திரனும் அவளும் எதிரும் புதிருமாக உட்கார்ந்திருந்ததில் உத்ரா அவளுக்குப் பக்கத்தில்தான் உட்காருவாள் என்று எதிர்பார்த்தாள்.. பக்கத்தில் உட்காரும் தோழியிடம் பேச அவளுக்கு ஆயிரம் விவரங்கள் இருந்தன.. தொண்டைக் குழியில் தேக்கி வைத்திருந்த வார்த்தைகளைக் கொட்டிக் கவிழ்க்க இவள் தயாராகிக் கொண்டிருக்க உத்ரா தயங்கி நின்று வினித்தைப் பார்த்தாள்.. இருவரின் விழிகளும் கலந்து பேசிக் கொண்ட செய்தி என்னவாக இருக்கக் கூடும் என்று நந்தினிக்குப் புரியவில்லை..

# அத்தியாயம் 144

**'கண்ணும் கண்ணும் கலந்து**

**சொந்தம் கொண்டாடுதே'**

**எ**ன்றென்றும் பசுமையான இனிய கானம் நந்தினியின் மனதில் வலம் வந்து போனது.. அன்றுதான் சந்தித்துக் கொண்ட காதலர்களைப் போல வினித்தும் உத்ராவும் ஒருவரையொருவர் பார்வையில் சாப்பிட்டுக் கொண்டிருக்க.. உத்ரா தன் பக்கத்தில் உட்கார்ந்து சாப்பிடத் தோதாக நந்தினி தன் சேரை நகர்த்திக் கொண்டிருந்தாள்.

"என்ன்ன்..ன..?" புருவங்களை உயர்த்தினான் ரவிச்சந்திரன்.. அதில் மயங்கி விடாமலிருக்க பகீரத பிரயத்தனங்களை மேற்கொண்டு தப்பித்தாள் நந்தினி..

'இதை இதை ஒண்ணைக் கண்டு வைச்சிருக்கான்..'

அவளது தடுமாற்றத்தை வினித்தும் உத்ராவும் கண்டு கொண்டிருப்பார்களோ என்ற பயத்துடன் இதயம் படபடக்க அவர்களைப் பார்த்தாள்.. ஊஹும்.. அவர்கள் இருவரும் ஒருவரையொருவர்தான் கண்டு கொள்வதில்தான் கவனமாக

இருந்தார்கள்.. நந்தினியின் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை..

உத்ரா என்று அழைக்கப் போனாள்..

“உஷ்ஷ்..” வாயில் ஆள்காட்டி விரலை வைத்துத் தடுத்த ரவிச்சந்திரன் அவளிடம்..

“என்ன செய்கிற..?” என்று அதட்டினான்..

“உத்ராவைக் கூப்பிடப் போறேன்..”

“இப்ப எதுக்காக சேரை நகர்த்தின..?”

‘அதுக்குத்தான் என்ன்ன்..னன்னு புருவங்களைத் தூக்கி மயக்கினானா..? ஆள் மயக்கி..’

“கேட்டதுக்குப் பதில் சொல்லு..”

“உத்ரா என் பக்கத்தில் உட்காரனுமில்ல..? அவ கம்பர்டபிளா உட்கார்ந்துக்க இடம் கொடுக்கிறேன்..”

“ஒரு மண்ணும் கொடுக்க வேண்டாம்.. இங்கே வா..”

“எதுக்காக கூப்பிடறிங்க..?”

“ஊம்..? என் மடியில் உட்கார்ந்துக்கிறதுக்காக, கூப்பிடறேன்.. வந்து உட்கார்ந்துக்கறியா..?”

“என்னது..”

“மூச்.. சத்தம் போடக் கூடாது.. இந்தப் பக்கம் வந்து என் பக்கத்தில் உட்கார்..” “உத்ரா..?”

“உன் பக்கத்தில் உட்காரத்தான் அவங்க ஹனிமூன் வந்திருக்காங்களா..? அவங்களோட ஹஸ்பெண்ட் பக்கத்தில உட்கார விடு.. கம்..”

ரவிச்சந்திரனை அதட்டலை மறுத்துப் பேச முடியாமல் உதடுகளை கம்போட்டு ஒட்டிக் கொண்டவளாக வாயைத் திறக்காமல் எழுந்து ரவிச்சந்திரனின் பக்கத்தில் போய் உட்கார்ந்தாள்..

“டேக் யுவர் சீட்..” என்றான் ரவிச்சந்திரன்..

‘இது என்ன டைனிங்ஹாலா.. இல்லை இண்டர்வியு ரூமா..?’

நந்தினி உதட்டைச் சுழித்தாள்..

“தேங்க்ஸ்..”

இப்போதும் ஒருமித்த குரலில் கூறியபடி ஒருவர் மடியில் ஒருவர் உட்காராத குறையாக இடித்துக் கொண்டு அவர்கள் உட்கார்ந்தார்கள்..

‘இதுக ரெண்டும் தனித்தனியாப் பேசாதுகளா..? நான் பேச நினைப்பதையெல்லாம் நீ பேச வேண்டும்ங்கிற மாதரி ஸேம் மைண்ட் வாய்ஸ சவுண்ட் வாஸ்ஸாக்கி பின்னிப் பெடலெடுக்குதுகளே..’ நந்தினிக்கு அதிசயமாக இருந்தது..

“உங்களுக்கு எந்தெந்த வெரைட்டீஸ் பிடிக்குமோ அதை எடுத்துக்கங்க..” ரவிச்சந்திரன் டைனிங் டோபிளில் பரத்தப் பட்டிருந்த தட்டுக்களைக் காட்டிச் சொன்னான்..

உத்து கை நீட்டுவதற்குள் வினித் அவள் மீது சாய்ந்து உணவு வகைகளை அவள் முன்பு இழுத்து வைத்தான்.. அவன் மீது அப்பாத குறையாக அவள் படிந்து பரவி... பரிமாறினாள்... ஊட்டத்தான் இல்லை.. ரவிச்சந்திரனும் நந்தினியும் இல்லாமலிருந்திருந்தால் அதையும் செய்திருப்பாள்.. கண்களை விரித்து விரித்து அவர்களை வேடிக்கை பார்த்த நந்தினிக்கு மனதே தாங்கவில்லை..

‘என்னடா கல்யாணம் ஆகாத கன்னிப் பெண்ணொருத்தி எதிரில் உட்கார்ந்திருக்கிறாளேங்கிற நினைவு இருக்கா இதுகளுக்கு..?’

“இப்ப எதுக்காக முட்டைக் கண்ணை முழிச்சு முழிச்சு அவங்களைப் பார்த்துக்கிட்டு இருக்க...?” முழங்கையால் அவள் விலாவில் இடித்தான் ரவிச்சந்திரன்..

“ரொம்ப ரொம்ப ஓவரா ரொமான்ஸ் பண்ணுறாங்க பாஸ்..” அழமாட்டாத குறையாகச் சொன்னாள் நந்தினி..

“இப்பத்தானே கல்யாணம் ஆ கியிருக்கு..? மேரேஜ் ஆன நியுலி மேரிட் கப்புள் இப்படித்தான் பிஹேவ் பண்ணுவாங்க..?”

“இந்தச் சினிமாப் பாட்டில பாடுவாங்களே.. நாங்க புதுசாக் கட்டிக்கிட்ட ஜோடிதானுங்கோன்னு.. அது போலவா..?”

“அப்படித்தான் வைத்துக்கயேன்..”

‘யாரை..?’ என்று கேட்கத் தோன்றியதை ஓர் திடுக்கிடலுடன் மனதுக்குள் அழித்தாள் நந்தினி.. அவளா இப்படிக் கேட்க நினைத்தாள்..? கடவுளே..!

‘இந்த உத்ராக் குரங்கு பண்ற அலப்பறையில என்னென்னவோ பேசத் தோணுது..’

நந்தினியின் முகம் போன போக்கை கவனித்த ரவிச்சந்திரன் அவளருகே தலையை சரித்து..

“அவங்க ரொமான்ஸ் பண்ணினா நீயேன் மூட் அவுட் ஆகிற..?” என்று விசாரித்தான்..

“என்னவோ போங்க பாஸ்.. புதிதாக் கல்யாணமான ஜோடிகள் எல்லாம் இப்படி ரொமான்ஸ் பண்ணித்தான் ஆகனும்னு கட்டாயம் ஏதும் இருக்கா என்ன..?”

“இதெல்லாம் கட்டாயத்தில வர்றதில்லை.. ஹார் மோன்களினால வர்றது.. உனக்குச் சொன்னப் புரியாது..”

“ஆமாமாம்.. நான் பப்பா..”

“பின்னே.. இல்லையா..?”

இவர்கள் பாட்டுக்கு இந்தப் பக்கம் பேசிக் கொண்டிருக்க வினித்தும் உத்ராவும் அந்தப் பக்கம் தாழ்ந்த குரலில் பேசியபடி மெதுவாக சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்..

பேச்சுவாக்கில் சிலபல தட்டுக்களைக் காலி செய்து முடித்த நந்தினி கை கழுவலாமா என்று உத்ராவைப் பார்த்தாள். அவள் முதலில் விண்ட ஓர் விள்ளலை.. கையில் வைத்த வண்ணம் வினித்திடம் கொஞ்சிக் கொண்டிருந்தாள்..

பொறுத்தது போதும் என்று பொங்கியெழுந்த நந்தினி..

"அடிப்பாவி..! நானே சாப்பிட்டு முடிச்சுக் கை கழுவக் கிளம்பிக்கிட்டு இருக்கேன்.. நீ ஒரு விள்ளலைக் கூட உள்ளே தள்ளாம அசையாம உட்கார்ந்திருக்கிறயேடி.. இப்படியே உட்கார்ந்திருந்தேன்னு வைய்யி.. லஞ்ச் டைம் வந்து டின்னர் டைமும் வந்து சேர்ந்திரும்.. ஊரைச் சுத்திப் பார்க்காம டைனிங் ஹாலிலேயே குடியிருந்திரலாம்ன்னு பிளான் பண்ணியிருக்கயா..?" என்று ஒரு சவுண்டு விட்டாள்..

இனிய கனவு கலைந்ததில் கடுப்பான உத்ரா..

"உனக்கு நந்தினின்னு பெயர் வைத்திருக்கக் கூடாதுடி... சவுண்டு சரோஜான்னு பெயர் வைத்திருக்கனும்.. உன் சத்தத்திலே கோழிக்கோடே ஆடிப் போயிருச்சு.." என்று கடுப்படித்தாள்..

"ஆமாண்டி.. கோழிக்கோடு ஆடுது.. நீ வந்து நட்டுவாங்கம் வாசி.. ஹனிமூனுக்கு வந்தவ இப்படியா ஸ்லோ மோஷனில சாப்பிடுவ..? கிளம்பு.. கிளம்பு.."

நந்தினி உலுக்கிய உலுக்களில் அவசரமாக தட்டை காலி செய்து விட்டு எழுந்தாள் உத்ரா.. கோழிக்கோடில் சுற்றிப் பார்க்க வேண்டிய இடங்களைக் குறித்த தனது

மேதாவிலாசத்தைப் பிட்டுப்பிட்டு வைத்துக்கொண்டே கை கழுவப் போனாள் நந்தினி..

“ம்.. ம்.. ம்.. ம்..”

உத்ராவின் கவனம் நந்தினியின் பேச்சில் இல்லவே இல்லையென்பது தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது... கடனும்கு ஊம் கொட்டியபடி அவள் வினித்தைப் பார்வையில் துழாவிக் கொண்டிருந்தாள்..

சற்றுத் தள்ளி ரவிச்சந்திரனுடன் நின்று கொண்டிருந்த வினித்தும் அப்படித்தான் இருந்தான்.. மனைவியின் பக்கமாக நொடிக்கொரு முறை பார்வையைச் செலுத்தியபடி ரவிச்சந்திரனிடம் பேசிக் கொண்டிருந்தான்..

“அப்படியே ஸ்டன் ஆகிப் போயிட்டேன்னா பார்த்துக்கயேன்..”

நந்தினி சொல்லிக் கொண்டிருக்க வினித்தை பார்த்துவிட்ட உத்ரா கை கழுவிக் கொண்டிருந்த நந்தினியை அம்போ என விட்டுவிட்டு முகமலர்ச்சியுடன் வினித்தை நோக்கி விரைந்து விட்டாள்.

“கம்மாண்டர் அங்கே முறைத்த முறைப்பில.. ஹா.. ஹா..”

பொங்கிச் சிரித்தபடி திரும்பிய நந்தினி அங்கே உத்ராவுக்குப் பதில் ரவிச்சந்திரன் நின்று கொண்டிருந்தில் பேஸ்தடித்தவளாக பேந்தப் பேந்த விழித்தாள்..

“கம்மாண்டர் முறைத்தா உனக்குச் சிரிப்பு வருமா..? ம்ம்ம்..”

அவன் புருவங்களை உயர்த்தினான்..

“இங்கே உத்ரா நின்றுக்கிட்டிருந்தாளே..”

உத்ராவைத் தேடும் முனைப்பில் அவனது புருவம் உயர்த்துதலைக் கண்டு கொள்ளாமல் அவள் தப்பித்தாள்.

“உத்ரா உன் கம்மாண்டரா மாறிடலை.. பட்ஷி ஹஸ்பெண்டைத் கண்டதும் பறந்து அங்கே போயாச்சு.. அங்ஙன நோக்கு..”

ரவிச்சந்திரன் சுட்டிக்காட்டிய திசையில் பார்த்த நந்தினி பற்களை நறநறத்தாள்.. உத்ரா வினித்தின் மார்பில் ஏறக்குறைய சாய்ந்து அவனுடைய சட்டையில்

பொத்தான்களைப் பிய்த்து விடுபவளைப் போலத் திருகியபடி பேசிக் கொண்டிருந்தாள்..

“இப்பத்தான் இங்கே நின்றுக்கிட் டு இருந்தா பாஸ்.. நம்பிக் கை கழுவ அந்தப் பக்கமா திரும்பினேன்.. இந்தப் பக்கமா எஸ்ஸாகிட்டா பார்த்தீங்களா..” அங்கலாய்த்தாள் நந்தினி..

“ஹனிமூனுக்கு வந்தவங்ககிட்ட இப்படி மொட்டை ரம்பம் போட்டா எஸ்ஸாகாம என்ன செய்வாங்க..?”

“நான் மொட்டை ரம்பம் போடறேனா..?”

“யெஸ் மை டியர்..”

ஏனோ அவன் சொன்ன மை டியர் காதில் தேனாக பாய்ந்து அவளை மயக்கியது.. உத்ரா வினித்தின் சட்டை பொத்தான்களைப் பிய்க்க முயன்று கொண்டிருந்ததைப் போல அவளும் ரவிச்சந்திரனின் மார்பில் சாய்ந்து அவனுடைய சட்டை பொத்தான்களைப் பிய்த்து வீச ஆசை கொண்டாள்..

‘இவன் தான் எத்தனை அழகு..!’

மயக்கத்துடன் அவள் பார்த்ததில் ரவிச்சந்திரனின் கண்கள் மின்னின..

“நந்தினி..” தாபத்துடன் அழைத்தான்..

“ம்ம்ம்..” போதையுடன் முணுமுணுத்தாள் அவள் ..

ரவிச்சந்திரன் அவளது கை விரல்களுடன் விரல் கோர்த்துக் கொண்டதை அவள் ஆட்சேபிக்கவில்லை.. கையை உறுவிக் கொள்ளவும் முயலவில்லை.. அவன் கையோடு கை பிணைய உத்ராவை நோக்கிப் போனவளுக்கு கர்வமாக இருந்தது..

‘நீ என்னை அம்மோன்னு விட்டுட்டு உன் ஆளிடம் ஓடி வந்திட்டா நான் தனியா நின்னிருவேனா..? பார்.. கம்மாண்டரே எனக்குக் கம்பெனி கொடுத்துக்கிட்டு இருக்கான்..’

“போகலாமா..?”

ரவிச்சந்திரன் கேட்டதும் மரியாதைக்காக கால் இன்ச் விலகி நின்ற அந்த இருவரும் நந்தினியின் கர்வப் பார்வையைக் கவனிக்காமல்..

“ஓ..” என்று ஒருமித்த குரலைக் கொடுத்தார்கள்.. கோழிக்கோடில் ரவிச்சந்திரனும் நந்தினியும் சுற்றிப் பார்த்த அதே இடங்களை மறுபடியும் சுற்றிப் பார்த்த போது

நந்தினியின் மனதில் மலரும் நினைவுகளாக அந்தக் காட்சிகள் விரிந்தன. . அவற்றைப் பற்றிப் பகிர்ந்து கொள்ள உத்ராவை நாடினாள்.. அவளோ கேரளத்தின் இயற்கையழகில் ஆழ்ந்து போனவளாக வினித்துடன் ஒட்டிக் கொண்டிருந்தாள்..

“இப்படியா பசை போட்டதைப் போல ஒட்டிக்கு வாங்க..?” பொருமினாள் நந்தினி..

“குளிருதே.. பாவம்.. அவங்க என்ன செய்வாங்க..?” பரிந்துரைத்தான் ரவிச்சந்திரன்..

“குளிருக்கும் குளோஸ் ஃபிரண்டைக் கண்டுக்காம திராட்டில் விடறதுக்கும் என்ன கனெக்ஷன் பாஸ்..?”

“ஹஸ்பெண்டைக் கட்டிக்கிட்டா குளிர் குறையும்.. அந்தக் கனெக்ஷன்தான்..” விளக்கம் சொன்னான் ரவிச்சந்திரன்..

“எப்படி..?”

“இப்படி..?”

கடலோரத் தீவின் மத்தியில் ஈரம் படர்ந்த பாறைகளின் மறைவில் வினித்தும் உத்ராவும் காணாமல் போயிருக்க.. அருகில் யாருமற்ற தனிமையில் நந்தினியைத் தழுவி இறுக்கிக் கொண்டான் ரவிச்சந்திரன்..

அவன் மார்பில் கை வைத்துத் தள்ளி விடத்தான் நினைத்தாள் நந்தினி.. அவனைத் தொட்ட கையைப் பிடித்து விரித்து உள்ளங்கையில் அவன் முத்தம் கொடுத்ததில் அவளுக்கு உலகமே மறந்து விட்டது..

தன்னையும் அறியாமல் அவன் கைகளுக்குள் அடைக்கலமானாள் நந்தினி.. உச்சியில் உணர்ந்த அவனது முத்தத்தின் ஸ்பரிசத்தில் மூழ்கிப் போனவளாக இமைகளை மூடிக் கொண்டாள்..

எதிர்ப்பேயில்லாத தழுவல் ஒரு சொர்க்கம்.. ரவிச்சந்திரன் அந்தச் சொர்க்கத்தில் திளைத்திருந்தான்.. மறுப்பில்லாமல் அவன் அணைப்பில் அடங்கியிருந்த நந்தினியை விடுவிக்காமல் இறுக்கிக் கொண்டிருந்தான்..

தீவிலிருந்து போட்டில் திரும்பும் போது உத்ரா நந்தினியைத் தவிர்த்து வினித்திடம் பேசிக் கொண்டிருந்ததில் நந்தினி பாதிப்படையவில்லை.. அவள் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ரவிச்சந்திரனின் ரகசிய தொடுகைகளில் குளிர் காய்ந்து கொண்டிருந்தாள்..

மாலையில் பூங்காவில் சுற்றி வரும் போது உத்ராவுக்கும் வினித்துக்கும் தனிமையைக் கொடுக்க வேண்டும் என்று

சொல்லி ரவிச்சந்திரன் நந்தினியுடன் எதிர்திசையில் பிரிந்து நடந்தபோது நந்தினியின் மனம் எதிர்பார்ப்பில் குறுகுறுத்தது..

அவள் நினைத்ததுதான் நடந்தது.. வெகு இயல்பாக அவளுடைய தோளின் மீது கை போட்டுத் தன் பக்கமாக இழுத்துக் கொண்டான் ரவிச்சந்திரன்.. அவனுடைய கை அவளுடைய தோள்களை வளைத்திருக்க நந்தினியின் கை அவனுடைய இடுப்பில் படிந்தது..

'நேத்து இப்படித்தானே வினித் அண்ணாவும் உத்ராவும் வந்தாங்க..'

நந்தினி ரவிச்சந்திரனின் தோளில் தலை சாய்த்துக் கொண்டாள்.. கடந்து போனவர்களில் ஒருவர் தமிழர் போல.. தன் மனைவியிடம் சொன்னார்..

"புதுசாக் கட்டிக்கிட்ட ஜோடி போல இருக்குடி.."

# அத்தியாயம் 145

அன்று இரவு தூக்கம் பிடிக்காமல் படுக்கையில் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள் நந்தினி.. மனதுக்குள் இருந்த இனம் புரியாத பரபரப்பிற்குக் காரணம் தெரியாமல் திகைத்தாள்.. அதை இதை நினைத்து அசை போட்டபடி மெல்லத் துயிலில் ஆழ்ந்தவளை செல்ஃபோனில் குட்மார்னிங் சொல்லி எழுப்பி விட்டான் ரவிச்சந்திரன்..

“நல்லாத் தூங்கினியா..?”

என்றைக்கும் இல்லாத திருநாளாக அன்றைக்கு அவன் கேட்ட கேள்வியில் திகைத்துப் போனாள் நந்தினி..

‘நான் தூங்காம இருந்தது இவனுக்கு எப்படித் தெரியும்..?’

“ஹலோ.. தூங்கு மூஞ்சி.. ஃபோனை காதில் வைத்துக்கிட்டே தூங்கறியா..?”

அவனது கிண்டலுக்கு சண்டையிட வேண்டுமென்று ஏன் தோன்றவில்லையென்று ஆச்சரியப்பட்டுப் போனாள் நந்தினி..

“நான் ஒண்ணும் தூங்கல பாஸ்..” சிணுங்கினாள்..

“அதுதான் தெரியுதே..” என்றவன்..

“ஏன் துங்கலை..?” என்று மென்மையாக வினவினான்..

“என்னன்னு தெரியலை பாஸ்.. நைட் முழுக்கத் தூக்கமே வரலை.. விடியற்காலையிலதான் கண் சொக்குச்சு..”

குழந்தையாகச் சொன்னாள் நந்தினி..

மறுமுனையில பேச்சில்லை.. மௌனமாக இருந்ததில்..

“ஹலோ பாஸ்.. லைனில் இருக்கீங்களா..?” என்று குரல் கொடுத்தாள்..

“நான் எப்பவுமே உன் லைனில்தான் இருப்பேன் நந்தினி.. விட்டு விலகவே மாட்டேன்..” கரகரத்த குரலில் சொல்லி விட்டு ஃபோனை வைத்து விட்டான் ரவிச்சந்திரன்..

அன்றைக்கு ஓர் கலைவிழாவுக்கு போவதாக இருந்தது.. நந்தினி உத்ராவிடம் ஒரே நிறத்தில் சேலை கட்டிக் கொள்ளலாம் என்று குதித்தாள்..

“சந்தன நிறத்தில் ஜரிகை புள்ளிகளும் சன்னமான ஜரிகை பார்டருமான சேலையைக் கட்டலாம்.. நாம ரெண்டு

பேரும் ஒண்ணு போல எடுத்தோமே.. அந்தச் சேலையைக் கொண்டுட்டு வந்திருக்கியா உத்ரா..?"

"ம்ம்ம்..?"

"நானும் கொண்டு வந்திருக்கேன்.. நாங்க கோழிக் கோடில சுத்திப் பார்த்தப்ப பாஸ் இதே போல ஃபங்ஷன் ஒண்ணுக்கு அழைத்துக்கிட்டுப் போனார்.. அந்த நினைவில எதற்கும் இருக்கட்டும்ன்னு அந்த ஸாரியைத் தூக்கி உள்ளே திணிச்சுக்கிட்டேன்.. அது எப்படி யூஸாகுதுன்னு பார்.."

உத்ரா அந்தச் சேலையைக் கட்டிக் கொண்டிருப்பாள் என்ற நினைவுகள் தலையை நனைத்துக் குளித்த நந்தினி முடியை உலர விட்டுத் தளர்வாக பின்னலிட்டு சந்தன நிறத்தில் ஜரிகை புள்ளிகள் அள்ளித் தெளித்ததைப் போன்ற சேலையை வெகு நேர்த்தியாக உடுத்திக் கொண்டாள்.. கண்களில் மை தீட்டல்.. நெற்றியில் மெரூன் வண்ணத்தின் மையத்தில் சிறு வெள்ளைக்கல் பதித்த ஸ்டிக்கர் பொட்டு.. காதுகளில் தங்க சிமிக்கி.. கழுத்தில் அட்டிகை என்று தயாராகி கண்ணாடியில் பார்த்துக் கொண்டவளுக்கு தன்னையே அடையாளம் தெரியவில்லை.. அந்த அளவுக்கு அழகாக இருந்தாள்..

‘ஈ வல்லிய சுந்தரியை நோக்கறப்போ.. ஆ வல்லிய சுந்தரன் சொக்கிப் போயி..’ திருப்தியாக உணர்ந்தாள்.. அவளை டைனிங் ஹாலில் பார்த்தவுடன் ரவிச்சந்திரனின் கண்களில் தெரிந்த மின்னல் அவளை வீழ்த்தியது..

அவள் ‘பங்கரை’யாக வந்து நின்றாலே பருகு பருகு எனப் பார்த்து வைப்பான்.. இதுபோல நேர்த்தியான அலங்காரத்துடன் வந்து நின்றால் விட்டு வைப்பானா..?

ரவிச்சந்திரனின் பார்வை அந்தப் பக்கம், இந்தப் பக்கம் எனக் கணப்பொழுதுகூட நகரவில்லை.. பிய்த்துத் தின்று விடுவதைப் போன்ற ஆவலுடன் அவள்மீதே நிலைத்து நின்றது..

நந்தினிக்கு வெட்கமாக இருந்தது.. உத்ராவும் வினித்தும் பார்த்தால் என்ன நினைப்பார்கள் என்ற சங்கடத்துடன் அவர்களைப் பார்த்தவளுக்கு ஏமாற்றமாகி விட்டது .. அவர்கள் எப்பொழுதும் போல கட்டியணைத்துக் கண்ணோடு கண் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள்.. நந்தினியின் ஏமாற்றத்திற்குக் காரணம் அதுவல்ல..

நீயும் நானும் ஒன்று போல எடுத்த சேலையை இன்றைக்குக் கட்டிக் கொள்ளலாம் என்று உத்ராவிடம்

நினைவுறுத்தி விட்டு அந்தச் சேலையைக் கட்டிக் கொண்டு வந்திருந்தாள் நந்தினி.. உத்ராவோ அடர் நீல நிறத்தில் பட்டு ரோஜா வண்ண ஜரிகை பார்டர் கொண்ட புடவையைக் கட்டியிருந்தாள்.. புடவை முழுவதும் ஜரிகைப் பொட்டுக்கள்.. பட்டு ரோஜா வண்ணத்தில் கைகளுக்கு ஜரிகை பார்டர் வேலை செய்த ரவிக்கை..

புடவை அழகாகத்தான் இருந்தது.. உத்ராவுக்குப் பாந்தமாக பொருந்தியிருந்தது.. அவளது அழகும் கூடித் தெரிந்தது..

ஆனால் தோழியும் தானும் ஒரே வேலைப்பாடுகள் கொண்ட சந்தன நிற ஜரிகைச் சேலையை அணிந்து கொள்ள வேண்டும் என்று ஆசையாசையாக அந்தப் புடவையை கட்டிக் கொண்டிருந்த நந்தினியின் ஆசையில் மண் விழுந்தது..

“என்னடி இப்படிச் செஞ்சிட்ட..? இந்தப் புடவையைக் கட்டியிருக்க..?”

கொஞ்சிப் பேசிக் கொண்டிருந்த சதிபதிகளின் மத்தியில் புகுந்து உத்ராவை மட்டும் தனியாக பிய்தெடுத்துப் பொருமினாள்..

“அதுவாடி..” உத்ராவின் கண்களிரண்டும் வினித்திடமே இருந்தன.. அதிலிருந்த மையலில் கடுப்பானாள் நந்தினி..

“ஏய்ய்.. முதலில் என் கேள்விக்குப் பதிலைச் சொல்லு.. அப்புறமா ரொமான்ஸ் பண்ணு.. அண்ணா உன்னோட ஹஸ்பெண்ட்தான்.. காலம் முழுக்க உன்னோடுதான் லைஃப்ல ஜர்ன் பண்ணப் போகிறார்.. அவரோட தலைவிதி அப்படியிருக்கு.. என்னவோ லவ்வரைப் போல கோந்து போட்டு ஒட்டிக்காதே.. கடுப்பாய் இருக்கு..”

“உனக்கேண்டி கடுப்பா இருக்கு..? அவர் என் புருஷன்..”

‘என் புருஷன்..’ என்ற வார்த்தையை ரசித்துக் சொன்னாள்

உத்ரா.. அவளது விழிகள் செருகிய செருகலில் மயக்கம்,

கியக்கம் போட்டுத் தொலைத்து விடப் போகிறாளோ என்று கவலையாகி விட்டாள் நந்தினி.. புதிதாய் திருமணமான பெண்கள் ஏன் ‘என் புருஷன்..’ என்ற வார்த்தையில் இனிப்பபைத் தடவி வைத்திருக்கிறார்களா என்ன..? சொல்லச் சொல்ல இனிக்குதடா.. புருஷா. . உள்ளமெல்லாம் உன் பெயரைச் சொல்லச் சொல்ல இனிக்குதடா என்று நாக்கைச்

சப்புக் கொட்டுவதன் மர்மம் என்னவாக இருக்கக் கூடும் என்று திருதிருத்தாள் நந்தினி..

“அவர் உன் புருஷன்தான்.. உனக்கு மட்டும்தான்.. இல்லைன்னு யார் சொன்னது..? எனக்கு அவர் அண்ணன்.. காதல் கண்ணன் இல்லை.. மனசிலாயி..”

“ஹை.. கேரளாவுக்கு வந்ததில மலையாளத்தில யெல்லாம் பேசித் தள்ளர.. எப்புடிடீ..”

“ஆமாண்டி.. மனசிலாயிங்கிறது கஷ்டமான மலையாள வார்த்தை பாரு.. அதை நான் பேசிப்புட்டேன்.. நீ சந்தோஷப்படற.. மகளே.. பேச்சையா மாத்தப் பார்க்கிற.. மலையாள தேசத்தில தடுக்கி விழுந்தாக் கூட ‘மனசிலாயி’ன்னுதான் கேட்டு வைப்பாங்க.. இதை அப்ரிஷியேட் பண்ணி எஸ்கேப் ஆகப் பார்க்கிறா.. யாருகிட்ட..? முதலில் ஏன் வேற கலர் சேலையைக் கட்டியிருக்கேங்கிறதுக்கான பதிலைச் சொல்லு..”

என் கேள்விக்கென்ன பதில் என்று விடாக்கண்டியாக நந்தினி நச்சரித்ததில் விழிகள் சொக்க மயக்கத்துடன் உத்ரா சொன்னாள்..

“இது முதன் முதலா அவர் எனக்கு வாங்கிக் கொடுத்த சேலைடி நந்தினி.. எனக்கு இது ரொம்ப ஸ்பெஷல்..”

“அதுக்கு..?”

நந்தினியும் உத்ராவும் ஒன்று போல வாங்கிய அந்தச் சேலை உத்ராவுக்கு ஸ்பெஷலானதில்லையா..? நந்தினிக்கு அது ஸ்பெஷலாக இருக்கிறதே.. உத்ராவுக்கு ஏன் அது ஸ்பெஷலாக இல்லாமல் போய் விட்டது..? வேறு ஒரு சேலை ஸ்பெஷல் லிஸ்டில் முதன்மை பெற்று விட்டது எதனால்..?

தன் நெருக்கமான தோழி அந்நியப் பட்டு விட்டதைப் போல உணர்ந்தாள் நந்தினி.. உத்ராவின் திருமணம் அவளையும் நந்தினியையும் பிரித்து நிறுத்தி விட்டதாக நந்தினிக்குத் தோன்றியது... மனதுக்குள் தனிமை சூழ்ந்தது..

“இந்த ஹனிமூன்டேஸ் எங்களுக்கு ஸ்பெஷல் டேஸ் நந்தினி.. அவரும் நானும் சேர்ந்து அட்டெண்ட் பண்ணப் போகிற ஃபர்ஸ்ட் ஃபங்ஷன் இது.. இந்த ஸ்பெஷல் டேயில அவள் ஃபர்ஸ்ட் ஃபர்ஸ்ட் வாங்கிக் கொடுத்த ஸ்பெஷல் சாரியைக் கட்டிக்கனும்னு அவர் ஆர்டர் போட்டார்.. நான் ஒபே பண்ணினேன்.. தட்ஸ் ஆல்..”

“அண்ணா ஆர்டர் பண்ணினாரா..? நானும் நீயும் ஒன்று போல எடுத்த சேலையை இன்றைக்கு உடுத்திக்கலாம்ன்னு நாம பிளான் பண்ணியிருந்தது அண்ணாவுக்குத் தெரியாதா..?”

“தெரியும் நந்தினி..”

“தெரிந்துமா இப்படிச் சொன்னார்..?”

“ம்ம்ம்.. யு நோ.. அவர் எனக்காக நிறைய சாரிஸ் வாங்கிக் கொடுத்திருக்கார்.. விதவிதமாக ஜ்வல்ஸ்.. அத்தனையும் அழகு.. நீயே பார்க்கிறயே.. இந்தச் சேலை எவ்வளவு அழகா லவ்லியா இருக்கு..? அவரோட செலக்ஷன் எல்லாமே சூப்பர்தான்..”

“உன்னையும் சேர்த்துன்னு நான் சொல்லனு மாக்கும்..?”

“கோவிச்சுக்காதேடி நந்தினி.. நீயே சொல்லு.. அழகழகா அவள் வாங்கிக் கொடுத்திருக்கிற சேலைகளைக் கட்டிக்கிட்டு அவர்கூட நான் ஊர் சுத்தனும்னு அவர் ஆசைப்படறார்.. அவர் கேட்கிறதைச் செய்யனும்னு நான் ஆசைப்படுறேண்டி..”

கடைசி வார்த்தைகளைச் சொல்லும் போது எதற்காக உத்ரா அந்த அளவுக்குக் கன்னம் சிவந்தாள் என்று நந்தினிக்குப் புரியவே இல்லை.. உத்ராவின் பரவசமும், கள்ளச் சிரிப்பும், காதல் பார்வையும் அவள் வேறு உலகத்தில் சஞ்சரிப்பதை நந்தினிக்கு தெரியப்படுத்தின.. அந்த உலகில் வினித்திற்கு மட்டும்தான் அவள் இடமளிப்பாள், நந்தினிக்கு அங்கு இடமில்லையென்பதில் நந்தினி விக்கித்துப் போனாள்..

“ஸோ.. நீ இதையெல்லாம் பெரிது படுத்திக்காதே.. என்ன..? இன்றைக்கு என்னோட ஃபீலிங்ஸ் பத்தி உனக்குப் புரியாமலிருக்கலாம்.. நாளைக்கு உனக்கும் மேரேஜ் ஆகும்.. அப்போ இது புரியும்.. மனசிலாயி..! எப்படி நானும் கேரளாவுக்கு வந்ததில் மலையாளம் பேச ஆரம்பிச்சுட்டேனில்ல.. ஹா.. ஹா..”

சிரித்து மகிழ்ந்து போன உத்ரா அதைப் பகிர்ந்து கொள்ளும் சாக்கில் நந்தினியை விட்டு விலகி வினித்திடம் ஓடி விட்டாள்.. தனித்து நின்ற நந்தினியின் அருகில் வந்த ரவிச்சந்திரனின் விழிகளில் அனுதாபம் தெரிந்தது..

“வாட்’ஸ் தி பிராப்ளம்..?” கனிவான வினவினான்..

“இந்தச் சேலை பிடிக்கலை.. அதுதான் பிராப்ளம்..” கண்ணீருடன் பொருமினாள் நந்தினி..

“வொய்..? இந்தச் சேலையில் நீ எப்படியிருக்கிற தெரியுமா..? அப்சரஸ் போலவே இருக்கிற..”

அவனது விழிகளில் தெரிந்த மயக்கமும் அவனது ஆசைப்பார்வையும் அவள் பேரழகியென்ற வர்ணனையும் அடி வாங்கியிருந்த அவளது மன ரணத்திற்கு மருந்தாக மாறின.. இதமாக உணர்ந்தாள் நந்தினி..

“இதைப் போய் மாத்தனும்ங்கறியே.. ஆர் யு மேட்..? ஃபங்ஷன் ஹாலின் ஸ்டாரா.. நீதான் அசத்தப் போகிற.. பாரேன்..”

நந்தினிக்கு வெட்கமாகி விட்டது.. உத்ரா வேறு நிறத்தில் சேலை அணிந்திருந்தாள் என்பதே மறந்து போய் விட..

“கேலி பண்ணாதீங்க பாஸ்..” என்று சிணுங்கினாள்..

“கேலியா..? நானா..? நோ .. நோ.. நீ கண்ணாடி பார்க்கலையா..? இல்லைன்னா என் கண்களைப் பார்.. உன்னிடம் நான் மயங்கும் மயக்கம் தெரியும்..”

கண்களைச் சிமிட்டினான் ரவிச்சந்திரன்.. உத்ராவை மறந்து போனாள் நந்தினி.. தன்னை மகாராணி போல உணர்ந்தாள்.. ரவிச்சந்திரன் ரசிக்கும் சேலையை அணிந்திருப்பதை விரும்பினாள்..

உத்ரா எந்தச் சேலையை வேண்டுமானாலும் கட்டிக் கொள்ளட்டும்.. அதைப்பற்றி நந்தினிக்கென்ன..? வினித் விரும்பும் சேலையை உத்ரா அணிந்திருந்தால் ரவிச்சந்திரன் விரும்பும் சேலையை நந்தினி அணிந்திருக்கிறாள்..

அவள் ஒன்றும் உத்ராவுக்குக் குறைந்தவளல்ல..

கலாச்சார விழா நடக்கும் ஹாலுக்குள் அவர்கள் நுழைந்ததும் அனைவரின் பார்வையும், வரவேற்பும் ரவிச்சந்திரனின் பக்கமாக திரும்பின.. உத்ரா வினித்துடன் ஒட்டிக் கொண்டிருக்க.. ரவிச்சந்திரனுடன் நின்றிருந்த நந்தினி முக்கியத்துவம் பெற்றாள்.. ரவிச்சந்திரனுக்குக் கிடைத்த வரவேற்பும் மரியாதையும் நந்தினிக்கும் கிடைத்தன..

“வெல்கம் சார்.. வெல்கம் மேம்..”

சிகப்புக் கம்பள விரிப்பு வரவேற்பு கிடைத்ததில் நந்தினி சிறகில்லாமல் வானில் பறந்தாள்.. உத்ராவும் வினித்தும்

அவர்களுக்குப் பின்னால் வர நேர்ந்ததில் அவளது மகிழ்ச்சி இரட்டிப்பானது..

‘பார்.. என்னுடன் வந்திருந்தால் உனக்கும் இந்த வரவேற்பு கிடைத்திருக்கும்.. உன் ஹஸ்பெண்ட் கூட ஒட்டிக் கொண்டால் இப்படி ஒட்டுப் புல்லைப்புல் எங்க பின்னாலே ஒட்டிக்கிட்டு வர வேண்டியதுதான்..’

கித்தாய்ப்பாக உத்ராவை பார்த்து வைத்தாள்.. ரவிச்சந்திரனின் பக்கத்தில் நந்தினி உட்கார... அவர்கள் இருவருக்கும் பின்னால் வினித்தும் உத்ராவும் உட்கார்ந்தார்கள்..

# அத்தியாயம் 146

**ர**விச்சந்திரன்தான் அப்படியொரு ஏற்பாட்டைப் பண்ணியிருந்தான்.. அவனுடன் மூன்று விருந்தாளிகள் வருவார்கள் என்று அறிந்தவுடன் விழாக் கமிட்டியைச் சேர்ந்தவர்கள் முன் வரிசையில் நான்கு இருக்கைகளை ரவிச்சந்திரனுக்காக ஒதுக்கியிருந்தார்கள்.. அதைப் பற்றி அவர்கள் ரவிச்சந்திரனிடம் சொன்ன போது அவன் முன் வரிசையில் இரண்டு இருக்கைகளும் இரண்டாவது வரிசையில் இரண்டு இருக்கைகளுமாக மாற்றியமைக்கச் சொன்னான்.. அப்போது உத்ராவும் வினித்தும் ரவிச்சந்திரனின் பக்கத்தில் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்.. அவர்கள் நின்று கொண்டிருந்த இடம் கடற்கரையாக இருந்ததில் நந்தினி கடலோரமாக சென்று கடலலைகளில் நனைந்து விளையாடிக் கொண்டிருந்தாள்..

‘‘நியு மேரிட் கப்புள்.. ஹனி மூனுக்காக வந்திருக்கீங்க.. முன்வரிசையில் எங்கள் பக்கத்தில் உட்கார்ந்திருப்பதில் உங்களின் பிரைவசி அஃபெக்ட் ஆகலாம்.. அதனால்தான் செகண்ட் ரோவில் உங்களுக்கான சீட்களை அலாட் பண்ணச்

சொன்னேன்..” என்று ரவிச்சந்திரன் விளக்கம் சொன்னது அவர்கள் இருவருக்கும் பிடித்திருந்தது..

“எங்க மனசறிஞ்சு திங்க் பண்றீங்க சார்..” வினித் முகம் மலர்ந்ததில் உத்ரா முகம் சிவக்க அவன் கையில் செல்லமாக கிள்ளி வைத்தாள்..

இவை எதையும் அறியாத நந்தினி.. ஏதோ ஒருவகையில் உத்ராவை ஜெயித்து விட்டதைப் போலச் சந்தோஷப் பட்டுப் போனாள்..

‘துரோகி.. கல்யாணம் ஆனதும் ஃபிரண்ட்ஷிப்பைத் தூக்கிக் கடாசிட்டா.. புருஷனாம் புருஷன்.. வயநாட்டுக்கு என்னைப் பார்க்க வரலையாம்.. ஹனிமூனை என்ஜாய் பண்ண வந்தாளாம்.. என்னடா.. இப்படிப் பேசினா நம்ம ஃபிரண்டோட மனசு கஷ்டப் படுமேன்னு ஒரு செகண்ட் நினைச்சுப் பார்த்திருப்பாளா..?’

நந்தினியால் தாங்கவே முடியவில்லை.. அவளுடைய மனப் புழுக்கத்தை விரட்டுவதைப் போல மேடையில் மோகினியாட்டம் ஆரம்பமானது.. நந்தினி ஒரு கலாரசிகை.. இசை, நடனம் இவற்றில் ஈர்க்கப்படுபவள்.. வெகு விரைவில் உத்ராவை மறந்து நடனத்தில் லயித்து விட்டாள்..

கண்கள் விரிய நடனத்தில் ஆழ்ந்திருந்தவளின் பக்கம் நகர்ந்து அமர்ந்தான் ரவிச்சந்திரன்.. இயல்பாக வைப்பதைப் போல அவள் கைமீது கை வைத்தான்.. அவனது ஸ்பரிசத்தில் நந்தினியின் கவனம் கலைந்தது.. ரோமங்கள் அடர்ந்த அவனது முலங்கையின் சிவந்த நிறத்தில் மனம் சிக்கி ஊசலாட..

“ஸ்ஸ்ஸ்.. பின்னாடி உத்ராவும் வினித் அண்ணாவும் உட்கார்ந்திருக்கிறாங்க..” என்று எச்சரித்தாள்..

அந்த அளவது எச்சரிக்கையை விரும்பி ரசித்தான் ரவிச்சந்திரன்... இதுபோன்ற எச்சரிக்கையை உத்ரா வினித்திடம் சொல்வதைக் கேட்டிருக்கிறான்... வினித் உத்ராவிடம் நெருங்கி நிற்கும் சமயங்களில் ரவிச்சந்திரனைக் கண்டு விட்டால்..

“ரவி சார் இருக்கிறார்..” என்று சன்னக் குரலில் கணவரை எச்சரிப்பாள்..

அதே எச்சரிக்கையை நந்தினியிடம் செவியுற்றவனுக்கு கிளர்ச்சி ஏற்பட்டது... உடந்தைப் பட்டவனிடம் பேசும் உரிமையான எச்சரிக்கை வார்த்தைகளை நந்தினி பேசுவதை அவள் அறிவாளா என்று தனக்குள் கேட்டுக் கொண்டான்..

அருகில் இருந்தவளைப் பார்த்தான்.. நடனத்தை ரசிக்கும் ஆர்வத்தில் அவன் பக்கமாக சரிந்து அவ னுடைய தோளில் தலை சாய்த்திருந்தாள்.. ரவிச்சந்திரனின் மனதில் தென்றலடித்தது..

மோகினியாட்டம் முடிந்ததும் சிறிய இடைவேளை விட்டார்கள்.. அவர்களைத் தேடிப் பழச்சாறு வந்தது.. மிதப்பாக எடுத்துக் கொண்ட நந்தினி.. பார்த்தாயா என்பதைப் போல உத்ராவைப் பார்த்தாள்.. அவளோ பழச்சாறு நிரம்பிய கண்ணாடி கிளாஸை சுவைத்தபடி கன்னம் சிவக்க வினித்திடம் கதை பேசிக் கொண்டிருந்தாள்..

‘அப்படி என்னத்தைப் பேசுவாளோ..? இருபத்தி நான்கு மணிநேரமும் பேச்சு.. பேச்ச.. பேச்சுத்தான்..’

பல்லைக் கடித்தபடி திரும்பியவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.. ரவிச்சந்திரனின் மீது சாய்ந்து ஏறக்குறைய அவனுடைய மடியில் அமர்ந்து விடுபவளைப் போல அவன்மீது அப்பிக் கொண்டிருந்தாள் ஒருத்தி.. கேரளத்துப் பெண்களுக்கேயுரிய சந்தனம் கலந்த மஞ்சள் நிறம்.. அழகான முகம்.. வடிவான உடல்.. அழகி என்பதையும் தாண்டி

பேரழகியிலும் பேரழகி என்று சொல்லலாம்.. அப்படியொரு தேஜஸ்..

‘இவன் வீட்டுப் பெண்கள்தான் அழகிகள்ன்னா.. இவன்கூடப் பழகற பெண்களும் இப்பத்தான் தேவலோகத்தில இருந்து டிராவல் பண்ணி பூமியில வந்து குதிச்சிருக்கிறதைப் போல ஜொலித்துத் தொலைகிறாளுக.. இந்த ஊர்தான் அழகு தேசம்ன்னு பார்த்தா இங்கிருக்கிற பெண்கள் தேவலோக ரம்பைகளா இருக்கிறாங்களே..’ பொறாமையில் காய்ந்தாள் நந்தினி..

அந்த அழகி ரவிச்சந்திரனின் தோளைத் தொட்டுத் தொட்டுப் பேசினாள்.. அவன்மீது சரிந்து சிரித்தாள்.. செல்லமாக அவன் மார்பில் தலையை மோதினாள்.. அவனுடைய கைவிரல்களுடன் விரல் பிணைந்தாள்..

‘பேசாம எழுந்து போயிடலாமா..?’ என்று யோசித்தாள் நந்தினி.. அவள் செய்த ஜல்ராக்களை தாங்க முடியவில்லை.. அவள் செய்த அட்டூழியங்களைக் கூட நந்தினியால் பொறுத்துக் கொள்ள முடிந்தது.. ரவிச்சந்திரன் அதற்கு இடம் கொடுத்துக் கொண்டிருந்ததைத்தான் பொறுக்க முடியவில்லை..

‘என்னைப் பக்கத்தில் வைத்துக்கிட்டே இவகிட்ட இத்தனை ஜல்சாப் பண்றானே.. நான் இல்லாமலிருந்தா எந்த ரேன்ஜுக்கு ஜல்சா பண்ணுவான்..’ கற்பனை செய்து பார்க்க முடியவில்லை..

‘இப்படியிருக்கிறவன் என்ன அலுவலுக்காக என்னிடம் ஐ லவ் யு சொன்னானாம்.. இவனோட பொங்கலுக்கும் பித்தலாட்டங்களுக்கும் நான்தான் கிடைத்தேனா..?’

அவளுக்கு அழுகையழுகையாய் வந்தது.. சற்று முன் வானத்தில் சிறகடித்துப் பறந்து கொண்டிருப்பதைப் போல உணர்ந்தவள் ஆழ்குழியில் அமிழ்வதைப் போல உணர்ந்தாள்..

பின்னாடியிருந்து யாரோ தோளில் தட்டியதை உணர்ந்தவள் திரும்பிப் பார்த்தாள்.. உத்ராதான் அவ ள் தோளில் தட்டிக் கொண்டிருந்தாள்..

‘அட..! இவளுக்கு நான் இருக்கிறது கூட நினைவில் இருக்கா..? புருஷன் பக்கத்திலிருந்தா ஃபிரண்டை கண்ணுக்குத் தெரியாதே..’

‘என்ன..?’ என்பதைப் போல புருவங்களை உயர்த்தினாள் உத்ரா அந்தப் பெண்ணின் பக்கமாக

நாசுக்காக விரல் நீட்டி அவள் யார் என்பதைப் போல அபிநயித்தாள்.. 'எனக்குத் தெரியாது..' என்று கை விரித்தாள் நந்தினி..

தோழியின் முகச் சுருக்கத்திற்கான காரணம் புரியாமல் தோள்களைக் குலுக்கி விட்டு அந்தப் பெண்ணைப் பார்த்தாள்.. ரவிச்சந்திரன் அமர்ந்திருந்த சோபாவின் கைப்பகுதியில் உட்கார்ந்து அவன் மீது சாய்ந்து கதை பேசிக் கொண்டிருந்தாள் அவள்.. அதற்கு மேலும் பொறுமை காக்க முடியாமல்..

"பேசாம அவளை மடியில் உட்கார வைத்துக்கங்களேன்.." என்று ரகசியக் குரலில் சிடுசிடுத்து விட்டாள்..

"ஓ.."

அவன் கண்களில் பல்ப் எரிந்தது.. அவளுடைய பொறாமையை கண்டு கொண்டவன் அதை விசிறி விட்டுக் குளிர் காய யத்தனித்தான்..

"இதுகூட நல்ல ஐடியாவா இருக்கே.." நந்தினியைப் போலவே ரகசியக் குரலில் சீண்டினான்..

இடைவேளை முடிந்து மேடையில் வேறு நிகழ்ச்சி ஆரம்பித்ததில் அந்தப் பெண் நகர மனமில்லாமல் நகர்ந்து விட்டாள்.. நந்தினிக்கு அங்கே இருக்கவே பிடிக்கவில்லை.. எந்த நொடியிலும் அந்தப் பெண் திரும்பவும் வந்து விடுவாள் என்ற அச்சம் அவள் உள்ளத்தை வியாபித்திருந்தது.. பதக், பதக் என்ற மனதுடன் எதை ரசிப்பது..? நிகழ்ச்சியில் மனம் லயிக்க முடியாமல் அவதிப் பட்டவள்..

"போகலாம் பாஸ்.." என்று அனத்தினாள்..

"போகனுமா..?" விசித்திரமாக அவளைப் பார்த்து வைத்த ரவிச்சந்திரன்..

"புரோக்ராம் இன்னும் முடியலை.." என்று அறிவுறுத்தினான்..

"தெரியும் பாஸ்.. இருந்தாலும் போகலாம்.."

"அப்படியெல்லாம் பாதியிலே எழுந்து போகக் கூடாது..

மத்தவங்க போகலாம்.. நான் அப்படிச் செய்துவிட முடியாது..

இந்த ஃபங்ஷனில் நான் சீஃப் கெஸ்ட்.. ஃபங்ஷன் முடிகிற வரைக்கும் இருந்தாகனும்.. பாதியிலே போனா

ஃபங்ஷ னை ஆர்கனைஸ் பண்ணி என்னை இன்வைட் பண்ணியிருக்கிறவங்களை இன்சல்ட் பண்ணியதாகி விடும்..”

“அப்ப நான் போகிறேனே.. நீங்க இருந்து ஃபங்ஷனை நிறுத்தி நிதானமா ரசிச்சு முடிச்சுட்டு வாங்களேன்..”

“வாட்..?” அவளை முறைத்த ரவிச்சந்திரன்.. “உனக்கு என்ன தான் பிராப்ளம்..?” என்றான்..

“தலைவலி பாஸ்..” புளுகினாள் நந்தினி..

“சூடா ஒரு கப் டீ கொண்டு வரச் சொல்கிறேன்.. குடிச்சிட்டுத் தெம்பா உட்காரு.. புரோக்ராம் முடிந்துதான் நாம போக முடியும்..”

ரவிச்சந்திரனின் விரலசைவில் ஒருவர் ஓடிவந்து பவ்யமாக குனிந்து நின்றார்.. அவள் காதருகே டீ கொண்டு வரும்படி முணுமுணுத்தான் ரவிச்சந்திரன்.. அடுத்த சில நொடிகளில் நந்தினிக்கு டீ வந்து சேர்ந்தது.. கடனேயென்று வாங்கிக் குடித்து வைத்தாள்.. அவள் குடித்து முடிப்பதற்கும்.. இப்போது நந்தினி அவர்கள் வீணையை மீட்டியபடி பாடுவார்கள் என்ற அறிவிப்பு சுத்தமான மலையாளத்தில் ஒலிப்பதற்கும் சரியாக இருந்தது..

‘ஆரானு ஆ நந்தினி..?’

அவளுடைய பெயருடையவயள் யாராக இருப்பாள் என்று நந்தினி கூட்டத்தைப் பார்க்க.. கூட்டம் நந்தினியைப் பார்த்துக் கொண்டிருந்தது.. அவளுடைய தோளில் தட்டிய உத்ரா..

“உன் பெயரைத்தான் அளொன்ஸ் பண்ணியிருக்காங்கடி..” என்றாள்..

“நானா..? பாடப் போகிறது நானா..?” பயந்து போனாள் நந்தினி..

“நீயேதான்.. கோ.. கோ..” ரவிச்சநதிரன் அவளது கைபிடித்து எழுப்பி விட்டான்..

கேளரத்துப் பட்டு உடுத்திய பெண்கள் இருவர் நந்தினியை அழைத்துக் கொண்டு மேடையில் உட்கார வைத்தார்கள்..

“நீ வீணை வாசித்தா சரஸ்வதியே வீணை வாசிக்கிறதைப் போல இருக்குன்னு சொல்வாங்கன்னு பீற்றிக்கிட்டயே.. அதை உண்மையான்னு டெஸ்ட் பண்ணத்தான் உன்னை இந்த மேடையில பாட வைக்கும்படி ஃபங்ஷன் ஆர்கனைசர்களிடம் சொல்லியிருந்தேன்..” என்று

அவளது காதருகே கிசுகிசுத்து அனுப்பி வைத்திருந்தான் ரவிச்சந்திரன்..

‘எப்படி மாட்டி விட்டுட்டான்னு பாரு..’ மனதுக்குள் புலம்பியபடி வீணையை மடியில் சாய்த்துக் கொண்டு நிமிர்ந்தவளுக்கு மற்றொரு அதிர்ச்சி காத்திருந்தது..

நந்தினி உட்கார்ந்திருந்த சோபாவில் ‘அந்தப் பெண்’ உட்கார்ந்திருந்தாள்.. ரவிச்சந்திரனின் கைமீது கை வைத்து தோள் சாய்ந்து அவள் பேசிக் கொண்டிருந்ததில் மடியிலிருந்த வீணையைக் கையிலெடுத்து அவள் தலையில் மொத்து மொத்து என மொத்தி விடும் ஆவேசம் கொண்டாள் நந்தினி..

‘என்னை மேடைக்கு அனுப்பிட்டு என் சீட்டை அவளுக்குக் கொடுத்திருக்கிறயாடா..?’ நந்தினியின் வயிறு எரிந்தது..

ரவிச்சந்திரனோ அந்தப் பெண் பேசுவதைக் கவனிக்காமல் மேடையிலிருந்த நந்தினியையே பார்த்துக் கொண்டிருந்தான்..

‘பக்கத்தில் அவளை உட்கார வைத்துக்கிட்டு என்னைப் பார்வையிடறான்..’ நந்தினிக்குள் ஆற்றாமை பெருகியது.. அவளது சொத்து கொள்ளை போய் கொண்டிருப்பதைப் போல

அவள் உணர்ந்தாள்.. மெலிதாக வீணையை மீட்டி ஸ்வரம் ஏற்றியவளின் இமைகள் தானாக மூடிக் கொண்டன.. மூடிய இமைகளுக்குள் ரவிச்சந்திரன் வந்து நின்றான்..

**"யமுனை ஆற்றிலே..**

**ஈரக் காற்றிலே..**

**கண்ணனோடுதான் ஆட..**

**பார்வை பூத்திட..**

**பாதை பார்த்திட..**

**பாவை ராதையோ வாட.."**

ஏக்கத்துடன் அவள் குரல் கண்ணனைத் தேடியது.. அவளது முகத்தில் பிரதிபலித்த காதலின் தேடலில் தன்னைத் தொலைத்தான் ரவிச்சந்திரன்.. மேடையில் பாடிக் கொண்டிருந்தவள் வேறு ஒரு நந்தினியாக இருந்தாள்.. அவனறிந்த நந்தினி விளையாட்டுத் தனமானவள்.. குழந்தையைப் போன்றவள்.. இது போன்ற தீவிர முகபாவம் அவளிடம் இருந்ததில்லை..

**"இரவும் போனது..**

**பகலும் போனது..**

**மன்னன் இல்லையே கூட..**

**இளைய கன்னியின்**

**இமைத்திடாத கண்**

**இங்கும் அங்குமே தேட..”**

நந்தினியின் குரல் தேம்பியது.. மனதளவில் அவள் கண்ணனைத் தேடிக் கொண்டிருந்த தேடல் அவளது குரலில் ஒலித்தது.. இமைகளைத் திறந்து ரவிச்சந்திரனைப் பார்த்த அவளது பார்வை கண்ணனைப் பார்க்கும் பார்வையாக இருந்தது..

**“ஆயர்பாடியில் கண்ணன்**

**இல்லையோ..?**

**ஆசை வைப்பதே அன்புத்**

**தொல்லையோ..?**

**பாவம்.. ராதா..!”**

அவளது விழிகள் நான் பாவமில்லையா என்று ரவிச்சந்திரனிடம் கேட்டதில் அவன் நெக்குருகிப் போனான்.. பலத்த கைதட்டல் அரங்கத்தை நிறைத்திருந்தது.. மேடையை

விட்டுக் கீழே இறங்கிவந்த நந்தினியை எதிர்கொண்டு கை கொடுத்து இறக்கி விட்டவன் அவளை இருக்கைக்கு அழைத்து வந்து அந்தப் பெண்ணை எழுந்து கொள்ளச் சொல்லி விட்டு அவனருகில் அமர்த்திக் கொண்டான்..

அந்தப் பெண்ணின் முகம் சிறுத்துப் போனது... வலிய வரவழைத்துக் கொண்ட முறுவலுடன் வேகமாக அங்கிருந்து வெளியேறி விட்டாள்..

# அத்தியாயம் 147

**மெ**லிதான மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தில் இரவு விருந்து நடந்து கொண்டிருந்தது.. குளிர் நிரம்பிய கோழிக்கோடில் மெலிதான மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் உண்ணும் இரவு விருந்து அற்புதமானதாக இருந்தது.. நந்தினி பாடிக் கொண்டிருந்த போது தோழியையே பார்த்துக் கொண்டிருந்த உத்ராவாக இப்போது உத்ரா இல்லை..

கிளர்ச்சியைக் கிளப்பும் அந்தச் சூழலில் உடல் கதகதப்பைத் தேடியதில் கணவனிடம் ஒன்றிக் கொண்டு ரகசியம் பேசிக் கொண்டிருந்தாள்..

நந்தினி மேடையை விட்டு இறங்கியபோது ரவிச்சந்திரன் அவளுக்கு கைகொடுத்து இறக்கி விட்டு உடனழைத்து வந்து அருகில் உட்கார வைத்துக் கொண்ட போது அடுத்த வரிசையில் அவளுக்குப் பின்னால் உட்கார்ந்திருந்த உத்ரா எட்டி நந்தினியின் தோளைத் தொட்டுத் திருப்பிக் கை கொடுத்து..

“வாவ்..! உன் பாட்டு நல்லாயிருந்ததுடி..” என்று பாராட்டினாள்..

“நீ கேட்டியா..?” என்றாள் நந்தினி..

“முட்டாள் மாதிரி கேள்வி கேட்கிறா பாரு.. இந்த ஆடிட்டோரியத்தில உட்கார்ந்திருக்கிறவ உன் பாட்டைக் கேட்காம இருப்பேனா..? என்னடி கேள்வியிது..? நீயெல்லாம் காலேஜ் ஃபர்ஸ்ட்.. கோல்ட் மெடலிஸ்ட்ன்னு சொல்லிக்காதே..” வாரினாள் உத்ரா..

“ஹைய்யே..! உனக்குத்தான் உன் ஹஸ்பெண்ட் பக்கத்தில இருந்தா ஃபிரண்டைக் கண்ணுக்குத் தெரியாதே.. இதில என் பாட்டை எப்படிக் கேட்டிருப்பன்னுதான் கேட்டேன்..” நிதானமாக பதில் சொன்னாள் நந்தினி..

அதற்கு ‘என்னடி இப்படிச் சொல்லிட்ட..?’ என்று கேட்காமல் உத்ரா முகமலர்ச்சியுடன் வினித்தைப் பார்த்து..

“இவ சொல்கிறதைக் கேட்டிங்களா..?” என்று அவன் விலாவில் இவளது முழங்கையால் செல்லமாக ஒரு இடி இடித்து விட்டு வெட்கச் சிரிப்பு சிரித்தாள்..

‘இவ கொஞ்சறதுக்கு சான்ஸை கொடுத்துட்டேனா..?’

நந்தினி பல்லைக் கடிக்க.. வினித் உத்ராவைக் காதலுடன் பார்த்து அவள் தோளில் கை போட்டுக் கொண்டான்..

அதற்காகவே காத்திருந்ததைப் போல உத்ரா அவன் தோளில் தலை சாய்த்துக் கொண்டாள்.. வினித் அவள் காதோரம் எதையோ சொல்ல உத்ராவின் இமைகள் தானாக மூடிக் கொண்டன.. நந்தினியின் தோளைத் தொட்டு திருப்பியது உத்ராதான் என்ற நினைவின்றி அவள் கணவனுடன் சல்லாபிக்க ஆரம்பித்தாள்..

‘இதுக்கு ஏண்டி என் தோளைத் தொட்டுத் திருப்பி உன்னைப் பார்க்க வைக்கிற..?’

சங்கடத்துடன் திரும்பிக் கொண்டாள் நந்தினி.. மேடையில் கஜல் பாட்டு ஆரம்பித்திருந்தது.. அதன் லயத்தில் ஈர்க்கப் பட்டவளாக நந்தினி சரிந்து அமர்ந்து இசையில் லயித்தாள்.. ரவிச்சந்திரனின் கரம் அவளது தோளைச் சுற்றி வளைத்துக் கொண்டபோது மறுப்பேதும் சொல்லாமல் அவன் தோளில் தலை சாய்த்துக் கொண்டாள்.. ‘உத்ராவுக்கு மட்டும்தான் சாய்ந்து கொள்ள தோள் கிடைக்குமா..? நந்தினிக்கும் கிடைக்கும்..’ என்று அவள் மனம் சமாதானம் அடைந்தது..

மனதின் மெல்லிய உணர்வுகளின் இழைகளால் நெய்யப்பட்டதைப் போன்ற சங்கீதம்.. கஜல் பாடல் மன

உணர்வுகளுடன் பேசுவது.. அதன் ஆலாபனையில் ஆழ்கடலில் முத்தெடுக்க மூழ்குவதைப் போல அமிழ்ந்து விடும் மனமானது பல்லவியில் முத்தெடுத்துக் குதூகலத்துடன் கடல் நீரில் நீந்தும்..

இதுபோன்ற இரவும், இசையும், ரவிச்சநதிரனின் அருகாமையும், சாய்ந்து கொள்ளக் கிடைத்திருக்கும் அவனது தோளும் என்றென்றும் கிடைக்க வேண்டும் என்ற ஏக்கம் மனதுக்குள் வியாபித்ததில் நந்தினி திகைத்துப் போனாள்..

**‘நானே நானா..?**

**யாரோ தானா..?**

**மெல்ல.. மெல்ல..**

**மாறினேனா..?**

**தன்னைத்தானே மறந்தேனே..**

**என்னை நானே கேட்கிறேன்..’**

மருட்சியுடன் பாடியது மனது.. அவளது தோளை வளைத்திருந்த ரவிச்சந்திரனின் கரம் இறுக்க மாக அவள் தோளில் பதிந்திருந்ததில் இவன் இப்படித்தான் என்ற மனதிருப்தி கொண்டாள் நந்தினி.. அவள் மேடையில் பாடிக்

கொண்டிருந்தபோது எவளோ ஒருத்தி அவளுடைய இருக்கையை ஆக்ரமித்திருந்ததில் பதறிய மனது.. ரவிச்சந்திரன் அவளுடைய கையைப் பிடித்து மேடையை விட்டு இறக்கி.. அவளுடைய இருக்கையை ஆக்ரமித் திருந்தவளை அகற்றி.. அவளைத் தன்னருகே அமர்த்திக் கொண்டதில் சமாதானம் அடைந்திருந்தது.. அவன் அவளை விட்டுக் கொடுக்க மாட்டான்.. விட்டு நகர மாட்டான் என்பதில் அவள் மனதில் விரவிய அமைதியை வார்த்தைகளால் வடிக்க இயலாது..

அது ஏன் என்றுதான் நந்தினிக்குப் புரியவில்லை.. ரவிச்சந்திரன் பெண்களுடன் பழகுபவன் என்பதை அவள் அறிவாள்.. அவன் விலகிப் போனாலும் அவன் மீது ஈர்ப்பு கொண்ட பெண்கள் அவன்மீது விழுந்து பழகுவார்கள் என்பதையும் அவள் அறிவாள்.. அதனாலேயே அவன் காதல் சொன்னபோது அவனது காதலை அவள் மறுத்தாள்..

இருந்தும் ஏன் ஏக்கம் கொள்கிறாள்..? பாவம் ராதா என்று பாடினாளே.. அவள் பாவப்பட்டது ராதைக்காகவா.. இல்லை.. நந்தினியென்ற அவளுக்காகவா..?

விழா முடிந்ததும் இரவு விருந்து ஆரம்பமானது.. மெலிதான வெளிச்சத்தில் சன்னமான மேற்கத்திய இசை ஒலித்துக் கொண்டிருக்க ஆங்காங்கே போடப்பட்டிருந்த வட்ட வடிவமான டேபிள்களைச் சுற்றிப் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் விருந்தினர்கள் அமர்ந்தார்கள்.. பேரர்கள் அவர்களுக்கான உணவு வகைகளைக் கேட்டுக் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போனதில்..

'நல்லவேளை..! பஃபே டைப் விருந்தாக இது இல்லை..' என்று நினைத்துக் கொண்டாள் நந்தினி..

அவளுக்கு 'பஃபே' விருந்து முறை பிடிக்காது.. கையில் தட்டை ஏந்தி அவர்கள் பரிமாறும் உணவுக்காக தட்டை நீட்டி.. ஒன்றின் மீது ஒன்று வந்து விழுந்து நிறைய.. நிரப்பப்பட்ட உணவு வகைகளை ஓரமாக நின்று மொக்குவதை சுத்தமாக விரும்ப மாட்டாள்.. அவள் தஞ்சாவூர்க்காரி.. தலை வாழை இலை போட்டு பரிமாறுவதைப் போல உண்டா என்று கேட்டு வைப்பாள்..

வட்டவடிவ டேபிளைச் சுற்றிப் போடப்பட்டிருந்த நான்கு நாற்காலிகளில் உத்ராவும் வினித்தும் அருகருகே அப்பிக் கொள்வதைப் போல அமர்ந்து கொள்ள.. ரவிச்சந்திரனும்

நந்தினியும் அவர்களுக்கு எதிரே பக்கத்தில் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார்கள்.. அந்தச் சூழல் நந்தினியின் மனதை மயக்கியது.. ரவிச்சந்திரன் தன் நாற்காலியை இழுத்து நகர்த்தி அவளருகே ஒட்டினார் போலப் போட்டுக் கொண்டு முழுவதுமாக அவள்மீது பட்டதில் கிறக்கம் கொண்டாள்.. ரவிச்சந்திரனின் பாதம் நகர்ந்து அவள் பாதம் மேலே படிந்து நகர்ந்ததில் கிளர்ந்தவள் மனதுக்குள்..

‘ஹம்மா..!’ என்று அரற்றினாள்..

நந்தினி அவனைத் தொட்டுத் தொட்டுப் பேசுகிறவள்தான்.. புதிதாக அவனைத் தொடவில்லை.. அவனது அணைப்புக்குள் அடங்கி மார்பில் முகம் புதைத்துக் கொள்வதை வெகு இயல்பாக செய்பவள்.. அப்போதெல்லாம் வராத கிளர்ச்சி.. இப்போது அவனது சன்னமான உராய்தலிலும் பாதத்தின் ஸ்பரிசத்திலும் வந்து தொலைத்தது.. கனவில் மிதப்பவளைப் போல அவள் இருந்தாள்..

‘யாழ்..’ ஹோட்டலுக்குத் திரும்பும் போது யாரும், யாருடனும் பேசிக் கொள்ளவில்லை.. வார்த்தைகள் தேவையற்ற அழகானதொரு மௌனம் அங்கு கவிழ்ந்திருந்தது.. ஹோட்டலை அடைந்ததும் வினித்தும்

உத்ராவும் ‘குட்நைட்’ சொல்லி விட்டுப் பிரிந்து சென்றுவிட.. ரவிச்சந்திரன் மட்டும் நந்தினியுடன் அவளது அறையின் வாசல் வரைக்கும் வந்தான்.. கதவைத் திறந்த நந்தினி.. அவனைத் திரும்பிப் பார்த்தாள்.. அவளையே பார்த்துக் கொண்டிருந்த ரவிச்சந்திரனின் விழிகளில் நிரம்பியிருந்த தாபம் அவளை அசைத்தது.. ஓர்நொடி அனைத்தையும் மறந்து அவன் கைகளுக்குள் சரண் ஆகி விடலாமா என்று மயங்கிப் போனாள்.. அவள் விழிகளில் தெரிந்த அழைப்பில் அவன் கண்கள் பிரகாசித்தன.. அவளை நோக்கி ஓர்அடி எடுத்து வைத்தான்..

“பாஸ்..” நந்தினி தழதழத்தாள்..

“சொல்லுடி..” அவன் கரகரத்தான்..

என்ன சொல்வாள்..? வா.. வந்து என்னுடன் கலந்துவிடு என்று சொல்வாளா..? அதைச் சொல்ல வேண்டும் போலதானே மனமும் உடலும் துடிக்கின்றன.. அதைச் சொல்லி விட்டால்..?

அதற்கடுத்து என்னவெல்லாம் நடக்கும் என்பதை நினைத்துப் பார்த்த நந்தினியின் பெண்மனம் துவண்டது.. அவள் குழந்தைத்தனமான சுபாவம் கொண்டவள்தான்..

ஆனால் குழந்தையில்லையே..

“குட்நைட்..” அவன் முகம் பார்க்காமல் சொன்னாள்..

“குட்நைட்..?”

அவனது உறுமல் மீண்டிருந்தது.. உறுத்துப் பார்த்த அவனது விழிகளை நோக்கும் தெம்பு அவளுக்கில்லை.. அதுவரை அவர்களுக்குள் நடந்து கொண்டிருந்த இனம் புரியாத உணர்வுப் போராட்டத்திற்கான மதிப்பை அவள் கொடுக்க வில்லையென்று அவன் சினந்தான்.. அவனுக்கும் அவளுக்கும் இடையில் நிகழ்ந்த கிளர்ச்சிகளும், கிறக்கங்களும் கண்ணாமூச்சி விளையாடியதை அவள் மறந்து விட்டாளா..? அவன் விழிகளுக்குத் திரையிட்டு ஒளிந்து மறைந்து விளையாடும் இந்த விளையாட்டை எப்போது அவள் நிறுத்துவாள்..? ஆயர் பாடியில் கண்ணனில்லையோ.. ஆசை வைப்பதே அன்புத் தொல்லையோ என்று பாடிய அவளது பாடல்வரிகளில் தொனித்த ஏக்கமெல்லாம் பொய்யா..? அவனுக்காக அவள் ஏங்கித் தவிக்கிறாள் என்று நினைத்தானே.. ஒரு நொடியில் அந்த நினைவுகளுக்கு யாதொரு எதிர்காலமும் இல்லையென்று ஆக்கி விட்டாளே.. அவனுடைய உணர்வுகளுடன் விளையாடுகிறாளா..?

“நீ மாறவே மாட்டியாடி..?”

அவன் குரலில்தான் எத்தனை கோபம்..!

நந்தினியால் தலை நிமிர முடியவில்லை.. அசையாமல் நின்றிருந்தவளை இமைக்காமல் பார்த்தவனிடமிருந்து ஆழ்ந்த பெருமூச்சு வெளிப்பட்டது..

“குட் நைட்..”

வேக நடையுடன் அவன் லிஃப்டை அணுகினான்.. போகிறானே என்ற தவிப்புடன் நந்தினி அவனைப் பார்த்த அதே நொடியில் அவன் அவளைத் திரும்பிப் பார்த்துவிட பார்வையை விலக்கிக் கொள்ளும் நினைவின்றி அப்படியே நின்று விட்டாள்.. அவளைப் பார்த்த அவனது பார்வையில் தெரிந்த கோபம் கலந்த திருப்தியில் இனம் புரியாத வகையில் இவள் மனமும் திருப்தி கொண்டது..

“ஏண்டி..?”

ஆற்றாமையுடன் கேட்டான் ரவிச்சந்திரன்.. ஏனென்ற அந்த கேள்விக்கு என்ன விடையை இவள் சொல்வாள்..? இவளுக்கே விடை தெரியாமல் மருட்டுகிற வினா அல்லவா அது.. உதட்டைக் கடித்தவளின் கண்கள் கலங்கி விட்டன..

“ம்ப்ச்..” அவன் லிப்டில் புகுந்து விட்டான்..

சென்று விட்டான் என்ற நினைவுடன் கதவை அடைத்து விட்டு உடையைக் கூட மாற்றாமல் கட்டிலில் விழுந்த நந்தினிக்கு அடர்ந்த கானகத்தில் தொலைந்து விட்டதைப் போல இருந்தது.. வழி தெரியாத இருள் நிரம்பிய கானகம்.. அவளை மீட்டு அழைத்துச் செல்லும் சூரியனைப் போன்றவன் சென்று விட்டான்.. அவளை விட்டு விலகிச் செல்ல மாட்டான்.. நாளை மீண்டும் வருவான் என்ற நம்பிக்கையுடன் தூங்கிப் போனாள் நந்தினி.. மறுநாள் அவன் வரவில்லை..

அவனுக்குப் பதிலாக அவனது செல்ஃபோனின் அழைப்பொலிதான் வந்தது..

“இம்பார்டண்ட் வொர்க் வந்திருச்சு.. ஸோ.. இன்றைக்கு உத்ராவும், வினித்தும் தனியாகத்தான் ஊர் சுற்றப் போக வேண்டும்.. அவர்களுக்கும் தனிமை தேவைதானே.. கார் அரேன்ஜ் பண்ணியிருக்கேன்.. அவங்க ஊரைச் சுற்றட்டும்.. நீ ரூமில் ரெஸ்ட் எடு..”

என்ன இவன் இப்படிச் சொல்கிறான் என்று அவள் நினைத்துக் கொண்டிருக்கும் போதே செல்ஃபோன் துண்டிக்கப்பட்டு விட்டது.. நந்தினிக்குச் சோர்வாக இருந்தது..

எதனால் என்றுதான் விளங்கவில்லை.. சென்னையிலிருந்து மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸில் கால் பதித்து அவள் ஏறிய நாள் முதலாய் இன்றுவரை ரவிச்சந்திரன் அவளை விட்டுப் பிரியாமல் அடைகாத்து வருகிறான்.. அவளில்லாமல் தனியாக எங்கும் சென்றதில்லை.. அன்று செல்கிறான் என்பதினால் வரும் சோர்வா அது..?

‘ஊரைச் சுத்த முடியலைங்கிறதில வர்ற எரிச்சலாயிருக்கும்..’ என்று அனுமானித்தாள்..

அதிலும் ஊரைச் சுற்ற முடியவில்லை என்பதினால் எரிச்சல் வருகிறதா.. இல்லை அவனுடன் சேர்ந்து ஊரைச் சுற்ற முடியவில்லை என்பதினால் அந்த எரிச்சல் வருகிறதா என்று அவளது மனது வியாக்கினமாக விசாரித்து வைத்தது..

‘எதற்கெடுத்தாலும் நீ எக்குத்தப்பாய் கேட்டு வைப்பாய்.. உன் கேள்விக்கெல்லாம் பதில் சொல்ல முடியாது.. போ..’ என்று மனச்சாட்சியிடம் காய் விட்டு விட்டு சுருண்டு படுத்தாள் நந்தினி..

மறுபடியும் செல்ஃபோன் ஒலித்தது.. ரவிச்சந்திரன் தான் முடிவை மாற்றிக் கொண்டு ஊர் சுற்றப் போகலாம் என்று

அழைக்கிறானோ என்று ஆவலாக ஃபோனை எடுத்துக் காதுக்குக் கொடுத்தாள்..

“என்னடி.. டைனிங் ஹாலில் வெயிட் பண்ணிக் கிட்டு இருக்கோம்.. நீ இன்னும் வரலை.. சீக்கிரமாகக் கிளம்பி வா..” என்றாள் உத்ரா..

தோழியின் அழைப்பில் உற்சாகமான நந்தினி மனச் சோர்வை விட்டுத் துள்ளிக் குதித்து எழுந்தாள்..

# அத்தியாயம் 148

**ந**ந்தினிக்கு உற்சாகமாக இருந்தது.. அவளுடைய தோழி திருமணத்திற்குப் பின் மாறி விட்டாள் என்று மருகிக் கொண்டிருந்தாள்.. அவளுக்கு நெருக்கமான உத்ராவை உத்ராவின் திருமணம் பிரித்து நிறுத்தி விட்டதாக கோபம் கொண்டிருந்தாள் அவ்வாறு இல்லை.. உத்ராவுக்கு நந்தினியின் நினைவு இருக்கிறது என்பதில் குதூகலமாக இருந்தது.

“உத்ரா..”

அதி விரைவில் குளித்து முடித்துத் தயாராகி உத்ராவின் முன்னால் “டொய்ங்...” என்று பிரசன்னமானவளைக் கண்டு நெஞ்சில் கை வைத்து பயப்படுவதைப் போல பாவனை செய்த உத்ரா..

“நல்லாத்தான் கிளம்பி வர்றேடி.. இப்படியா பயமுறுத்துவ..?” என்று செல்லமாக கடிந்து கொண்டாள்..

“நீ பயப்படற ஆளாக்கும்.. போடி.. போ..” என்றபடி கலகலத்துச் சிரித்த நந்தினி..

“அண்ணாவுக்கும் உனக்கும் கார் காத்திருக்குமே.. பாஸ் சொன்னார்.. எனக்காக காத்திருக்காம நீங்க கிளம்பியிருக்கலாமே..” என்று ஒரு பேச்சுக்கு சொல்லி வைத்தாள்..

“உன்னைத் தனியே விட்டுட்டு எப்படிடீ போகிறது..?”

நந்தினி எதிர்பார்த்த பதிலைச் சொன்னாள் உத்ரா.. நந்தினியின் மனம் நிறைந்தது.. அவளருகில் ரவிச்சந்திரன் இருந்தால்தான் உத்ரா நந்தினியை மறந்து வினித்திடம் ஒட்டிக் கொள்கிறாள்.. நந்தினி தனித்திருந்தால் பழைய தோழமையுடன் அரவணைத்துக் கொள்கிறாள் என்பதில் மீண்ட சொர்க்கத்தை அவள் உணர்ந்தாள்..

நட்புக் கூட ஒரு வகையில் காதல் போன்றதுதான்.. உயிர்த் தோழமை பொறாமை நிறைந்தது... என் தோழமைதான் எனக்கு மட்டும்தான் என்ற உரிமையுணர்வைக் கொண்டது.. தோழமையிடம் மற்றவர்கள் உரிமை பாராட்டுவதை விரும்பாதது.. தோழமையின் குடும்பத்தினரிடம் கூட விட்டுக் கொடுக்காதது..

# எண்ணியிருந்தது ஈடேற... 5

ஆழ்ந்த தோழமை என்பது வரம்.. அது கிடைக்கப் பெற்றவர்கள் பாக்கியசாலிகள்.. அந்த வகையில் நந்தினி பாக்கியசாலி..

காலை டிஃபனை முடித்து விட்டு ஊர் சுற்றிக் கிளம்பினார்கள்.. வினித் டிரைவரின் அருகில் உட்கார்ந்து கொண்டு தன் இடத்தை நந்தினிக்கு விட்டுக் கொடுத்தான்.. தோழியின் பக்கத்தில் உட்கார முடிந்ததில் சந்தோஷப்பட்டுப் போனாள் நந்தினி..

“நாங்க கோழிக்கோடுக்கு வந்து இறங்கினப்ப இருட்டா இருந்துச்சுடி.. குளிர் வேற.. நம்ம ஊர் ஞாபகத்தில இறங்கிட்டேனா.. ஸ்வெட்டர் போடலை.. பேக்கில இருந்து எடுக்கலாம்ன்னா ஸ்வெட்டர் துணிகளுக்கு அடியில் இருக்கு.. உனக்குத்தான் என்னைப் பற்றித் தெரியுமே.. ஜங்ஷனில இருந்த பெஞ்சில பேக்கை வைத்து துணிகளைப் பரத்த ஆரம்பிச்சுட்டேன்.. பாஸ் தான் அதட்டி அவரோட கோட்டை எனக்குக் கொடுத்துப் போர்த்திக்கச் சொன்னார்..”

“ஊஹும்..?”

“நீலிமலைக் காட்டில மீன்முட்டி அருவிகளைப் பார்க்கலாம் வான்னு கூப்பிட்டார்.. நானும் பக்கத்தில இருக்கிற

அருவியா இருக்கும்ன்னு நம்பிக் கிளம்பிட்டேண்டி.. அங்கே போனா நீலிமலை அடிவாரத்தில வடுவாஞ்சலில ஜீப்பை ஓரம் கட்டி நிறுத்திட்டு மலையேறலாம் வான்னு கூப்பிடறார்.. முட்டி பெயர்ந்திருச்சுடி உத்ரா..”

“நீ மலையேறினயா..? இண்ட்ரெஸ்டிங்.. என்கிட்டச் சொல்லவே இல்லை பார்த்தியா..?”

“நீ கேட்கலைன்னு சொல்லு... மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸில ஏற்றி விட்டுப் போனவள்தான்... செல்ஃபோனில் உனைப் பிடிக்கவே ஒரு மாதமாகிருச்சு... அப்பவும் ஒழுங்காப் பேசினயாடி.. புதுப் பெண்ணுன்னு பீற்றிக்கிட்டு ஒன் ஆர் டூ செகண்ட்ஸ் பேசின... அதுவும் என்னடி நந்தினி.. அப்புறமாப் பேசறேங்கிற வார்த்தைகள்தான்.. கீறல் விழுந்த ரிகார்ட்டைப் போல எப்படித்தான் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொன்னியோ.. சொன்னதைச் சொல்லும் தத்தைங்கிறது நீதாண்டி..”

“என்னது..? அத்தையா..? வினித்தோட தங்கை மகன் இப்படித்தான் கூப்பிடுவான்.. எல்.கே.ஜி தான் படிக்கிறான்.. குழந்தைடி அவன்.. என்னமாய் பேசறான் தெரியுமா..?

ஏங்க.. நாம உங்க தங்கை வீட்டுக்கு விருந்துக்குப் போயிருந்தப்ப அவன் பண்ணின சுட்டித்தனம் நினைவில் இருக்கா.. ஐஸ்கிரிமை முகத்தில அப்பிக்கிட்டு.. அத்தை நான் ‘கூல் பாய்’ன்னு சொன்னானே.. நாம கூட நீ ‘ஐஸ் பாஸ்’டான்னு கொஞ்சினோமே..”

எங்கே சுற்றினாலும் உத்ராவின் பேச்சு வினித்தும் வினித் சார்ந்த உறவினர்களும் என்று மையம் கொள்வதில் பல்லைக் கடித்தாள் நந்தினி.. இருந்திருந்து அன்றைக்குத்தான் நந்தினியின் பக்கத்தில் உட்கார்ந்து இரன்டொரு வார்த்தைகள் பேசுகிறாள்.. அதற்குள் வினித்தின் தங்கை மீது பாசமழையை பொழிய ஆரம்பித்து விட்டாளே..

“நான் சொன்னது தத்தை..! அத்தையில்லை.. தத்தைன்னா மலையாளத்தில் கிளின்னு அர்த்தம்.. நம்ம ஊரில் கூடத் தத்தையொன்றுன்னு பாட்டு இருக்கு..”

“அப்படியா..?”

உத்ரா சுவராஸ்யமில்லாமல் சொன்னதைப் போல இருந்தது நந்தினிக்கு.. அதற்குள் அவர்கள் சுற்றிப் பார்க்க வேண்டிய பூங்கா வந்து விட நந்தினி குதித்துக் கொண்டு இறங்கினாள்.. உத்ராவை நடுவில் விட்டு வினித்தும்

நந்தினியும் நடந்தார்கள்.. வினித்தும் பேச்சில் இணைந்து கொள்ள நந்தினி அவனிடம் அவள் வயநாட்டில் குப்பை கொட்டிக் கொண்டிருக்கம் கதையை விவரித்தாள்.. மதிய உணவுக்கு ஹோட்டலுக்குத் திரும்பாமல் அருகிலிருந்த உணவகத்திற்கு அழைத்துச் சென்றான் வினித்..

“ஏன் அண்ணா..? ஹோட்டலுக்கப் போயிருக்கலாமே..” புரியாமல் கேட்டாள் நந்தினி..

ரவிச்சந்திரன் இருக்கும் போது மதிய உணவுக்காக ஹோட்டலுக்குச் சென்று வருவது என்பது வேறு.. அவன் இல்லாதபோது சென்று வருவது என்பது வேறு..

வினித் நல்ல வேலையில் இருந்தான்.. கை நிறையச் சம்பாதித்தான்.. நந்தினியைப் பார்க்க வேண்டும் என்று உத்ரா விரும்பியதால்தான் தேநிலவு கொண்டாட என்ற பெயரில் வயநாட்டுக்கு வந்து செல்ல ஒப்புக் கொண்டான்.. இல்லையென்றால் ரவிச்சநதிரனின் விருந்தாளியாக வயநாட்டில் தங்கியிருந்து தேநிலவு கொண்டாடுவதைத் தவிர்த்திருப்பான்.. அவனுக்கு அவனுடைய பணத்தில் மனைவியுடன் தேநிலவு கொண்டாட வேண்டும்..

இதை நந்தினியிடம் சொல்ல முடியுமா..? அவள் திருமணம் ஆகாதவள்.. சின்னப் பெண்.. அவளிடம் போய் கணவனாகப்பட்ட ஆணின் உணர்வுகள் இத்தகையவை என்று விளக்கம் சொல்லலாமா..?

ரவிச்சந்திரன் கூட வராத அந்தத் தினத்தில் சொந்த பணத்தில் ஊரைச் சுற்றி வர ஆசை கொண்டிருந்தான் வினித்.. அதை உத்ராவிடம் சொல்லியிருந்ததால் அவள்..

“ஹோட்டலுக்குப் போய் வர நேரமாகும் நந்தினி.. அத்தோட ஹோட்டல்ன்னா மதியச் சாப்பாட்டுக்குப் பின்னால் தூங்கி எழுந்திருக்கத் தோணும்.. இங்கேயே லன்ச்சை முடித்துக்கிட்டா.. ஊர் சுத்தறதைக் கண்டினியூ பண்ணலாம்.. தூக்கம் எங்கே ஓடிப் போகப் போகுது..? சென்னை திரும்பியதும் வேண்டிய மட்டும் தூங்கி எழுந்திருக்கலாம்.. இங்கே கோழிக்கோடில் கிடைத்திருக்கும் நேரத்தை வீணாக்காம சுத்திப் பார்க்க வேணாமா..?” என்று சொல்லிச் சமாளித்து விட்டாள்..

“யு ஆர் கரெக்ட் உத்ரா..” நந்தினியும் ஆமோதித்து தலையாட்டி விட்டாள்..

மனைவியின் புத்திசாலித்தனத்தை மெச்சி ஓர் ரகசிய பார்வையை செலுத்தினான் வினித்.. பக்கத்தில் நந்தினியிருப்பதை ஜாடை காட்டி இமைகளை மூடி கணவனின் பாராட்டை ஏற்றுக் கொண்டாள் உத்ரா.. அதை லேசாக பார்த்து விட்ட நந்தினி..

“நடத்துங்க.. நடத்துங்க..” என்று தலையை ஆட்டினாள்..

“ஒன்றுமில்லைடி.. ச்சும்மா..” உத்ரா புருவங்களைச் சுருக்கிச் சிரித்தாள்..

“ச்சும்மாக்காச்சுக்கும் ஜாடை காட்டிக் கிட்டிங்களா..? யார் காதில பூச் சுத்தற..?” நந்தினி ஆர்ப்பரித்தாள்..

“ஏய்ய்..” உத்ராவின் முகம் சிவந்து விட்டது..

சிரிப்பும் விளையாட்டுமாக தோழிகள் இருவரும் ஒருவரையொருவர் அடித்துக் கொள்ள உத்ரா வினித்தின் முதுகிற்குப் பின்னால் மறைந்து தப்பிக்க முனைந்தாள்.. நந்தினி வினித்தின் தோளைத் தொட்டு அவனுடைய முதுகிற்குப் பின்னால் ஒளிந்திருந்த உத்ராவை இழுத்தாள்.. தோழிகளின் சண்டையை விலக்கி விடாமல் சிரித்துக் கொண்டிருந்தான் வினித்..

அது கடலோரமாக இருந்த உணவகம்.. தண்ணீருக்குள் தூண்களை அமைத்துப் படகில் அமர்ந்தபடி சாப்பிடுவதைப் போன்ற உணர்வை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.. சுற்றிலும் தண்ணீர் இருக்க.. விளிம்போரமாக இருந்த டேபிளை அவர்கள் தேர்வு செய்து உட்கார்ந்தார்கள்..

“ஃபெண்டாஸ்டிக்..”

தண்ணீருக்கு மத்தியில் இருப்பதைப் போன்ற உணர்வைத் தந்த அந்த சூழலை ரசித்தபடி சொன்னாள் நந்தினி..

“கோழிக்கோடில் ஒன்வீக் இருந்தோம்டி உத்ரா.. இந்த ஊரைச் சுற்றிப் பார்த்தோம்.. பட்.. இந்த இடத்துக்கு வந்ததில்லை.. எவ்வளவு அழகான இடம் பாரு..”

“இது ரெஸ்ட்டாரெண்ட்ங்கிறதினால ரவிசார் இங்கே அழைத்துக்கிட்டு வந்திருக்க மாட்டாரு.. அவரோட ஹோட்டலில இல்லாத ஃபுட் அயிட்டமா..?”

“இருக்கலாம்.. அதனாலேயே இந்த இடத்தைப் பார்க்காம மிஸ் பண்ணிட்டேன் போல.. நல்ல வேளை.. வினித் அண்ணா இங்கே லன்ச் சாப்பிடக் கூப்பிட்டுக்கிட்டு வந்தார்.. இல்லேண்ணா கோழிக்கோடில இப்படியொரு

அழகான ரெஸ்ட்டாரெண்ட் இருக்குங்கிறதே எனக்குத் தெரியாம போயிருக்கும்.. தேங்க்ஸ் வினித் அண்ணா..”

“இதைவிட பெண்டாஸ்ட்டிக்கான இன்னொரு விஷயமும் இருக்கு நந்தினி.. அதைக் கேட்டதும் வினித்துக்கு டிரிபிள்ஸ் தேங்க்ஸே சொல்லுவ..”

“என்னடி அது..?”

“இங்கே ஸீ புட்ஸ் ஃபேமஸாம்.. கடலில் இருந்து உடனுக்குடன் மீன் பிடிச்சு பொரிச்சுத் தருவாங்களாம்..”

“வாவ்..! டபுள் ஃபெண்டாஸ்டிக்.. டிரிபிள் தேங்க்ஸ் அண்ணா..”

“நான் சொல்லலை..?”

சிரிப்பும் அரட்டையுமாக மதிய உணவை முடித்து விட்டு அவர்கள் கடலோர பூங்காவில் ஓய்வாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.. உத்ரா ஷாப்பிங் மாலுக்குப் போக வேண்டுமென்றாள்...

“இங்கேயிருக்கிற ஃபேமஸ் ஷாப்பிங் மாலுக்குப் போகலாம் வா..” என்று நந்தினி குதித்து எழுந்தாள்..

அது, இது என்று ஏகப்பட்டதை வாங்கிக் குவித்தாள் உத்ரா.. மாமனார், மாமியாருக்கு குளிர் காலத்தில் தேவைப்படும் என்று ஸ்வெட்டர், சால்வை.. மாமனார்க்கு வேலைப்பாடுகள் மிகுந்த பேனா.. மாமியாருக்கு ஜரிகை புடவை.. நாத்தனாருக்கு மலையாள ஜரிகை புடவை.. நாத்தனார் கணவனுக்கு லெதர் பேக்.. நாத்தனார் மகனுக்கு ஸ்வெட்டர், உடைகள்.. விளையாட்டு சாமான்கள் என்று புகுந்த வீட்டினருக்காக பார்த்துப் பார்த்து வாங்கினாள்..

'என்னடா இது..' என்று விழி விரித்த நந்தினி..

"உனக்கும் உன் அப்பாம்மாவுக்கும் பர்ச்சேஸ் பண்ணலையா..?" என்று ஞாபகப் படுத்தினாள்..

'கல்யாணமானா கணவனே கண்கண்ட உலகம்ன்னு மாறிப்போயிருவாங்களா என்ன..?' விசித்திரமாக இருந்தது நந்தினிக்கு..

"இந்தச் சேலை அழகா இருக்குல்ல.."

உத்ரா கையில் வைத்திருந்த புடவையின் அழகில் மயங்கினாள் நந்தினி.. ஒன்று போல இரண்டு சேலைகளை எடுத்தாள் உத்ரா..

“இது உனக்கு..” என்று நந்தினிக்கு ஒரு புடவையை பரிசளித்தாள்..

“கிரேட்..” சந்தோஷத்துடன் வாங்கிக் கொண்டாள் நந்தினி..

ஷாப்பிங் மாலில் டீயுடன் டிஃபனை மொக்கினார்கள்.. ‘யாழ்’ ஹோட்டலுக்கு அவர்கள் திரும்பும்போது இருட்ட ஆரம்பித்திருந்தது.. நாள் முழுவதும் ஊர் சுற்றிய அயர்வு அவர்கள் மூவரின் முகங்களிலும் அப்பியிருக்க.. அறைக்குப் போனதும் அயர்ந்து ஒரு உறக்கம் போட்டு விட்டு இரவு உணவு நேரத்தின் போது எழுந்து கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தார்கள்..

“பை.. உத்ரா.. பை அண்ணா.. டின்னர் டயத்தில டை னிங் ஹாலில மீட் பண்ணலாம்..” என்று கையாட்டி விட்டுக் அறைக்குச் சென்று கட்டிலில் விழுந்த நந்தினியால் அயர்ந்து உறங்க முடியாமல் போய் விட்டது..

# அத்தியாயம் 149

**பூ**ட்டுக்குப் பூட்டு வலிக்குது என்பாள் நந்தினியின் பாட்டி.. அதை அனுபவபூர்வமாக நீலிமலைக் காட்டின் மலையேற்றத்தின் போது உணர்ந்திருந்தாள் நந்தினி.. அதே வலியை அன்று மறுபடியும் உணர்ந்தாள்.. செக்கே, பிக்கே என்று பேசிச் சிரித்தபடி ஊரைச் சுற்றிய போது ஒன்றும் தெரியவில்லை.. கட்டிலில் விழுந்ததும் சர்வாங்கமும் வலித்ததில் கண்களை மூடிக் கை கால்களைத் தளர்வாக விட்டு ஓய்வெடுக்க முயன்றாள்.. மெல்ல வலி குறைவதைப் போல இருந்ததில் இமைகள் மூடித் தூக்கம் சொக்க ஆரம்பித்தது.. தூக்கத்தில் அமிழ்ந்து கொண்டிருந்தவளை...

“கிர்ர்ர்..” என்ற அழைப்பு மணி உடலை உலுக்கி விட்டு விழிக்க வைத்தது..

‘ரூம் பாயா இருக்கும்.. சாய் கொண்டு வரட்டேன்னு வந்து நிற்பான்.. ம்ப்ச்..’

இவனுடைய உபசரனையை நான் கேட்டேனா என்ற கோபத்துடன் கதவைத் திறந்தவள்..

“எனிக்கு சாய் வேண்டாம்.. கேட்டோ..” என்று மூடியிருந்த இமைகளைத் திறக்காமலே எரிந்து விழுந்து விட்டுக் கதவை மூட முயன்றவள்..

“உனக்கு நான் வேண்டாம்.. என் ஹோட்டலின் டீயும் வேண்டாம்ன்னு எனக்குத் தெரியும்..” என்ற கம்பீரமான கனத்த குரலில் தூக்கி வாரிப் போட்டவளாக..

“பாஸ்..” என்று இமைகளைத் திறந்தாள்..

“பூனைக் கண்களை மூடிக்கிட்டு பூலோகமே இருண்டு போய் விட்டதுன்னு நினைத்ததாம்.. நீ கண்களை மூடிக்கிறது அப்படித்தான் இருக்கு.. டோரை ஓபன் பண்ணு..” அதிகாரக் குரலில் உத்ராவிட்டான் ரவிச்சந்திரன்..

மூடிய கதவை நந்தினி திறக்க உள்ளே வந்தான்.. எதற்காக அறைக்குள் வருகிறான் என்று பதறிப்போன நந்தினி..

“என்.. என்.. என்ன..?” என்று தடுமாறினாள்..

நிதானமாக உள்ளே நுழைந்தவன்.. அதைவிட நிதானத்துடன் அறைக்கதவை மூடித் தாழிட்டதில் அரண்டு போனாள்..

“பாஸ்.. என்ன இது..?”

“எதைக் கேட்கிற..?” அவன் புருவங்களை உயர்த்தினான்..

“எதுக்காக டோரைக் குளோஸ் பண்றீங்க..?” நந்தினியின் குரல் நடுங்கியது..

“ஊம்..? உன்னுடன் ஃபர்ஸ்ட் நைட் செலபரேட் பண்ணலாம்ன்னு பிளான் பண்ணியிருக்கேன்...” ரவிச்சந்திரனின் கோபப் பார்வையில் அவள் குலை நடுங்கினாள்..

ஏன் கோபப்படுகிறான்..? எதற்காக கோபப் படுகிறான்...? அவன் கேபப்படும்படி எதுவும் நிகழவில்லையே... முதல்நாள் இரவில் அவனைப் பார்த்தவள் இப்போதுதானே மறுபடி பார்க்கிறாள்.. காலையிலிருந்து அவள் ஹோட்டலிலேயே இல்லையே..

கண்கள் இடுங்க அவன் பார் த்தான்.. நந்தினியின் முதுகுத் தண்டு ஜில்லிட்டது.. இது போன்ற பார்வை பார்த்தால் அவன் அவளைக் குத்திக் குதறப் போகிறான் என்று அர்த்தம்... அனுபவப் பட்டவளின் மனம் அஞ்சியது..

“உன்னை ரூமில்தானே இருக்கச் சொன்னேன்..? எங்கே போன..?”

‘இவ்வளவுதானா..?’ நந்தினியின் முகம் தெளிந்தது. அறியாத ஊரில் தனியாக ஊர் சுற்றி விட்டு வந்திருக்கிறாள் என்று கோபப் படுகிறான் போல..

அப்படியில்லை என்பதைச் சொல்லி விட்டால் அமைதியாகி விடுவான்.. இதற்குப் போய் இப்படிப் பயப்படுகிறாளே..

“டோன்ட் வொர்ரி பாஸ்.. நான் தனியா எங்கேயும் போகலை.. உத்ரா கூடத்தான் வெளியே போனேன்..” விளக்கம் சொல்ல ஆரம்பித்தாள்..

“உன் கூட உத்ரா மட்டும்தான் வந்தாங்களா..?” ரவிச்சந்திரனின் ஆழ்ந்த குரல் புயலை உள்ளடக்கி யிருந்தது.. நந்தினிக்குள் குளிர் பரவியது.. அவன் ஒரு முடிவோடுதான் வந்திருக்கிறான் என்று அவளுக்குத் தோன்றியது.. அவளைக் குறித்த அதிருப்தி அவன் மனதில் இருக்க வேண்டும்.. இல்லாவிட்டால் இந்தப் புலன் விசாரணையை ஆரம்பித்திருக்க மாட்டான்.. ஆனால் அது என்ன அதிருப்தி..?

“உத்ரா மட்டும் தனியா எப்படி வருவா பாஸ்.. வினித் அண்ணாவும்தான் கூட வந்தார்..”

“அவர் என்ன உன் கூடப் பிறந்த அண்ணனா..?”

“பாஸ்..” நந்தினி அதிர்ந்து போனாள்..

அங்கே தொட்டு, இங்கே தொட்டு இப்போது வினித்திடம் வந்து நிற்கிறானா..? மோகனைச் சொன்னால் கூட ஓர் அர்த்தம் இருக்கிறது.. நந்தினிதான் அவனைத் தம்பியாக நினைத்தாள்.. அவனோ மலர் டீச்சர் என்று படுத்தி எடுக்கிறான்.. வினித்தை எப்படிச் சொல்லலாம்..? உத்ராவின் கணவன் நந்தினிக்கு அண்ணனில்லையா..?

“உனக்கு வெட்கமாக இல்லை..?”

“யோசித்துப் பேசுங்க சார்.. வாயிருந்தா என்ன வேண்டுமானாலும் பேசி விடக் கூடாது..”

“எப்படி..? உனக்கு வாயிருக்கிறது என்கிறதுக்காக பாஸை சாராக்குகிறாயே.. அது போலவா..?”

“உங்களிடம் வேலைக்கு வந்தது தப்புன்னு பலமுறை நினைக்க வைச்சுட்டிங்க..”

“இப்பவும் நினைச்சாச்சு.. ஆம் ஐ கரெக்ட்..?”

“நீங்கதான் கரெக்ட் பர்சனாச்சே.. தப்பாப் பேசுவீங்க.. தப்புத்தப்பா யோசிப்பீங்க.. இதில் மட்டும் கரெக்டா கால்குலேட் பண்ணுவீங்க..”

“தப்பைப் பற்றி நீ பேசாதே.. செய்யறதெல்லாம் ராங்கான வேலை.. இதில் நியாயம் பேச வந்துட்ட..?”

“அப்படி என்ன ராங்கான வேலையைச் செய்துட்டேன்..?”

“ஏய்ய்.. பேசாதேடி.. அவங்க ஹனிமூன் கப்புள்.. தனியா ஊரைச் சுற்றிப் பார்க்கட்டும்ன்னுதான் அவங்களுக்கு இன்றைக்கு தனிமையைக் கொடுத்தேன்.. அவங்களுக்காக கார் அரேன்ஜ் பண்ணினேன்.. நீ ஊடே புகுந்து ஒட்டிக் கொண்டு கிளம்பிட்ட.. உன்னையெல்லாம்..”

ரவிச்சந்திரன் பல்லைக் கடித்ததில் தான் செய்தது தவறோ என்று நந்தினி தலை கிறுகிறுத்துப் போனாள்..

அவன் சொல்வதும் உண்மைதானே.. புதிதாக திருமணாமாகி தேநிலவு கொண்டாட வந்திருப்பவர்களுடன் அவள் ஒட்டிக் கொண்டது சரியில்லைதானே..

“உத்ராதான் கூப்பிட்டா..”

காற்று இறங்கிப் போன பலூன் போல கோபம் குறைந்து கிணற்றுக்குள் இருந்து பேசுபவளைப் போலப் பேசினாள் நந்தினி..

அவள்மீது தவறு இருக்கிறது என்பதில் அவளால் குரல் உயர்த்திப் பேச முடியவில்லை..

“ஒரு காட்டஸிக்குக் கூப்பிட்டிருப்பாங்க.. நீதான் ஏதாவது வேலையிருக்குன்னு சொல்லி மறுத்திருக்கனும்..”

“பொய் சொல்லச் சொல்கிறீங்களா..? நீங்கதானே உனக்கு வேலையேதும் இல்லை.. ரூமிலேயே ரெஸ்ட் எடுத்துக்கன்னு சொன்னீங்க..?”

“ஓ..! மேடம் உண்மை விளம்பியோ.. பொய் சொல்ல மாட்டிங்களோ.. பொய் சொல்ல விருப்பமில்லையா..? இல்லை அவங்களோட ஊர் சுற்றப் போகாமல் இருப்பதில் விருப்பம் இல்லையா..?”

அவன் உதடுகளைக் குவித்து ஏளனமாக கேட்டு வைத்ததில் அவள் வெறுத்துப் போய் விட்டாள்.. தெரியாமல் தவறு செய்து விட்டாள்.. அதற்காக இந்த க் காய்ச்சு காய்ச்சுவானா..?

'இவனுக்குப் பதிலடி கொடுத்தே ஆகனும்..' வன்மம் வைத்தவள்..

"இரண்டும்தான்னு வைத்துக்கங்களேன்.." என்று சொல்லி விட்டு அவன்..

"வாட்..!" என்று கண் சிவந்து கர்ஜித்ததில் நடுநடுங்கி விட்டாள்..

"வெட்கமாக இல்லையான்னு கேட்டால் மட்டும் ரோஷம் பொத்துக்கிட்டு வருதே.. இப்ப நீயாக உன் வாயால் உண்மையை ஒப்புக் கொள்கிறயே.. இதுக்கு என்ன சொல்கிற..?"

அவனது குறுக்கு விசாரணையைத் தாங்க முடியாமல் தலை நொம்பரம் (வலி) கொண்டு நொந்தது.. சற்றுக் கண்மூடி அயர்ந்து தூங்கி எழுந்தால் தேவலாம்.. எங்கே..?

இவன் அதற்கு வழி விடாமல் தேள் கொடுக்கு போல வார்த்தைகளால் கொட்டிக் கொண்டிருக்கிறானே..

'ம்ஹூம்.. உத்ராவும் வினித்தும் கொடுத்து வைத்தவங்க.. இந்நேரம் அசந்து தூங்கிக்கிட்டு இருப்பாங்க..

நா ன்தான் தூங்க முடியாம இவனிடம் மாட்டிக்கிட்டு முழிக்கறேன்..' அவளுக்கு ஏக்கமாக இருந்தது..

"ஏய்ய்.. நியு மேரிட் கப்புள் ஒட்டி உரசிக்கிட்டு இருப்பாங்க.. மூன்று நாள்களா அப்படித்தானே இருந்தாங்க..? இந்த நாலாவது நாளில் மட்டும் மாறி இருந்துருவாங்களா..? அவங்ககூடச் சேர்ந்து போயிருக்கிறயே.. உன்னை என்னன்னு சொல்கிறது..? அவங்களை வேடிக்கை பார்க்க ஆசைப்பட்டாயா..?"

நந்தினியின் முகத்தில் ரத்தம் பாய்ந்தது.. ரவிச்சந்திரனின் கேள்வியை அவளால் எதிர்கொள்ள முடியவில்லை.. இப்படியெல்லாம் கேட்டு வைப்பான் என்று தெரிந்திருந்தால் காய்ச்சல், தலைவலி என்று ஏதேனும் ஒரு காரணத்தைக் கண்டு பிடித்து உத்ராவுடன் போகாமல் தேங்கியிருப்பாள்..

'மாட்டிக்கிட்டுப் பாட்டு வாங்கனும்னு விதியிருக்கிறப்ப நான் என்ன செய்து தொலைக்கிறது..? இவன் எதில் குற்ற ம் கண்டுபிடிப்பான்னு தெரிந்து தொலைத்தால்தானே தப்பிக்க முடியும்..? உத்ராவுடன் அவுட்டிங் போனதுக்கும் குற்றம் கண்டு பிடிப்பான்னு தெரியாமப் போச்சே..' தவியாய் தவித்தாள் நந்தினி..

“உன் பேரண்ட்ஸ் அரேன்ஜ் பண்ணியிருந்த மேரேஜை கன்சிடர் பண்ணாம வேண்டாம்ன்னு சொல்லி ஓடி வந்தவதானே நீ..? உன் மீது உயிரை வைத்திருக்கேண்டின்னு சொல்கிற என் காதலையும் வேண்டாம்ன்னு சொல் கிற ரோபோதானேடி நீ..? ரோபோவுக்குக் கூட காதல் வந்திரும்..

நீ அதுக்கும் கீழே.. ஜடம்..! உனக்கு எப்படிடீ ரொமான்ஸைப் பற்றித் தெரியும்..?”

அவன் எய்த அம்புகள் மனதில் தைக்க வலி தாளாமல் கண்ணீர் மல்க நின்றாள் நந்தினி.. பேச்சு என்று வந்து விட்டால் அவன் கருணை காட்ட மாட்டான்.. விட்டு விளாசி விடுவான் என்று அறிந்து வைத்திருந்தும் அறியாமல் மாட்டிக் கொண்டதில் அவளுக்கு வாழ்க்கையே வெறுத்தது..

“நியு மேரிட் கப்புள்.. ஹனிமூன் செலிபரேட் பண்ண வந்திருக்காங்க.. அவங்களுக்குத் தனிமையைக் கொடுத்து ஒதுங்கி நிற்கனும்னு நினைக்காம அவங்களோட ஊர் சுற்றக் கிளம்பியிருக்கயே.. அந்த அளவுக்கு நீ தத்தியா..?”

நந்தினி பதில் சொல்லவில்லை.. கற்சிலை போல நின்றாள்.. எதிர்பாராமல் எதிர் கொள்ள நேர்ந்த தாக்குதலில்

அவள் பக்கமும் தவறு இருந்ததில் அவளுக்குப் பேச வாய் வரவில்லை..

“உன்னிடம் போய் புரிந்து கொள்வதைப் பற்றிப் பேசுகிறேனே.. யார் நீ..? உன்னைப் பற்றி மட்டும் தானே நீ யோசிப்ப..? உன் ஃபிரண்டோட தனிமையை பறிக்கறோமேனனு ஏன் யோசிக்கப் போகிற..?”

“நான் நினைத்துப் பார்க்கலை பாஸ்.. இதையெல்லாம் யோசிக்கலை..” குற்றஉணர்வுடன் சொன்னாள் நந்தினி..

“லன்ச்சுக்கு சீ ரெஸ்ட்டாரெண்டுக்குப் போனப்ப.. ‘வாவ்’ன்னு சொல்ல நீ யோசிக்கலையே.. டபுள் ஃபெண்டாஸ்டிக்..! டிரிபிள் தேங்க்ஸ்..! எதற்கு..? நான் காட்டாத இடத்தை வினித் காட்டிட்டானே.. அதற்கு.. அப்போதே பிடித்த மீனைப் பொறித்துத் தின்பதில் அத்தனை ஆசை..? ஊம்..?”

இவன் அவர்களைத் தொடர்ந்திருக்கிறான்... நந்தினி பேசியதைக் கேட்டிருக்கிறான்.. தன் சுதந்திரம் கேள்விக்குறியாகி விட்டதை உணர்ந்தாள் நந்தினி.. எந்த சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ள அவள் வயநாட்டுக்கு ஓடி வந்தாளோ அந்த சுதந்திரம் பறி போய்க் கொண்டிருக்கிறது..

அவள் அதைக் காப்பற்றும் வழி தெரியாமல் கட்டுண்டு நிற்கிறாள்..

ரவிச்சந்திரன் அருகிலிருந்த டீப்பாயின் மீதிருந்த புடவைப் பெட்டியை எடுத்துத் திறந்தான்..

“புது ஸாரி..!” என்றான்..

‘இதையும் நோட் பண்ணியிருப்பான்..’ அவள் பேசாமல் நின்றாள்..

“என்னிடம் கேட்க வேண்டியதுதானே..? நீ கேட்டதை வாங்கிக் கொடுக்க வேண்டும்ன்னு நான் காத்துக் கொண்டிருக்கிறேனே.. வினித் வாங்கிக் கொடுத்த புடவையை வாங்கிக்கிட்டு வந்திருக்கிறயே.. எப்படிடீ..?”

நந்தினிக்கு அழுகையே வந்து விட்டது..

“ப்ளீஸ் பாஸ்.. இது உத்ரா வாங்கிக் கொடுத்த புடவை..” என்று மன்றாடினாள்..

“பணம் கொடுத்தது யார்..? வினித்தானே..?”

ரவிச்சந்திரனின் கேள்வியில் இருந்த உண்மை அவளைச் சுட்டது.. இந்தக் கோணத்தில் அவள் நினைத்துப் பார்க்கவில்லையே.. அப்படியே இருந்தாலும் வினித் யார்..?

உத்ராவின் கணவன்.. நந்தினிக்கு உடன் பிறந்த அண்ணனைப் போன்றவன்.. அவன் புடவைக்குப் பணம் கொடுத்தது தவறா..?

“தவறுதான்..” அழுத்தம் திருத்தமாகச் சொன்னான் ரவிச்சந்திரன்..

# அத்தியாயம் 150

**அ**தைச் சொல்ல நீ யார் என்ற கேள்வி வாய்வரை வந்து விட்டது.. பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமை காத்தாள் நந்தினி.. இதுபோல அவள் பொறுத்துப் போகிறவளல்ல.. மனதில் நினைப்பதை வெளிப்படையாக பேசி விடுபவள்.. வயநாட்டுக்கு வந்த பின்னர்தான் பேச நினைப்பதை பேச முடியாமல் மௌனம் காக்கிறாள்..

‘இங்கே வந்திருக்கவே கூடாது..’

புருவச் சுளிப்புடன் எங்கோ பார்த்துக் கொண்டிருந்த நந்தினியின் பாராமுகத்தில் ரவிச்சந்திரன் ஆத்திரம் கொண்டான்.. அவன் கூறும் எதையும் அவள் காதில் போட்டுக் கொள்வதில்லை என்று குற்றம் சாட்டினான்.. என்ன கழுதைக்கு என்று நினைத்துக் கொண்டாள் நந்தினி.. அவன் அதிகாரம் காட்டிக் கொண்டே இருப்பான்.. அவள் அடங்கி அடங்கி போக வேண்டுமா..?

ஆத்திரம் தீரும் மட்டும் அவளைத் திட்டித் தீர்த்து விட்டுக் கிளம்பினான் ரவிச்சந்திரன்.. அவன் சென்றதும் கதவை அடைத்து விட்டுக் கட்டிலில் விழுந்தவளுக்குத் தூக்கம்

வரவில்லை.. துக்கம்தான் வந்தது.. அவளுடைய சுதந்திரம் கேள்விக் குறியாகியிருப்பதை உணர்ந்தாள்.. எப்படி அதை மீட்டெடுத்துப் பாதுகாப்பது என்றுதான் புரியவில்லை.. மலைப்பாக இருந்தது..

ஆயிரம் சிந்தனைகளுடன் அமர்ந்திருந்தவள் நேரம் ஓடுவதைக் கவனிக்கவில்லை.. செல்ஃபோனில் உத்ரா சாப்பிட அழைத்த போதுதான் திடுக்கிட்டு மணி பார்த்தாள்..

“தூங்கறயா நந்தினி..?”

உத்ரா வினவியபோது அவளுக்கு சிரிப்பதா.. அழுவதா என்று தெரியவில்லை.. தூங்கத்தான் ஆசைப்பட்டாள்.. தூங்க முடிந்ததா..?

“நான் செம தூக்கம் தூங்கினேன்.. வினித் என்னை தூங்குமூஞ்சின்னு சொல்லி ஒரே கிண்டல்.. அவரும்தான் தூங்கினார்.. அதைச் சொன்னா என்னளவுக்குத் தூங்கலைங்கிறார்.. ஓகே.. டின்னர் சாப்பிட நாங்க வந்தாச்சு.. ரவிசார் மட்டும் உட்கார்ந்திருக்கார்.. உன்னைக் காணோமேன்னுதான் ஃபோன் பண்ணினேன்.. கமான்.. க்விக்.. ரெண்டே நிமிஷத்தில டைனிங் ஹாலுக்கு வந்து சேரனும்.. என்ன..?”

உத்ராவின் குரலில் இருந்த உற்சாகத்தில் ஏக்கம் கொண்டாள் நந்தினி.. அவளும்தான் அன்று முழுவதும் உற்சாகமாக இருந்தாள்.. அவையனைத்தையும் சில நொடிகளில் அழித்து விட்டுப் போய் விட்டானே..

நந்தினி தளர்வாக எழுந்து அறைக் கதவைத் திறந்து லிப்டை நோக்கி நடந்தாள்.. டைனிங் ஹாலுக்கு அவள் போனபோது அவள் வரும் திசையை உறுத்துப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான் ரவிச்சந்திரன்.. அவன் பார்வையில் இவளது கால்கள் பின்னின.. வினித்திடம்

ரகசியம் பேசிச் சிரித்துக் கொண்டிருந்த உத்ரா குளித்து முடித்து மாற்றுடையில் புத்துணர்வோடு இருந்தாள்.. நந்தினியைப் பார்த்ததும்..

“இவளைப் பாருங்களேன்.. டிரஸ்ஸைக் கூடச் சேன்ஜ் பண்ணாம அப்படியே தூங்கி எழுந்து வந்து சேர்ந்திருக்கா..” என்று சிரித்தாள்..

‘உனக்குத் தெரியுமாடி..?’ தோழியை வெறித்தாள் நந்தினி..

நந்தினியின் வெறித்த பார்வையில் துணுக்குற்றாள் உத்ரா.. எதையோ பறிகொடுத்தவளைப் போல நந்தினி

சோர்ந்திருப்பதற்கான காரணம் என்னவாக இருக்கக் கூடும் என்று ஆராய்வதைப் போல தோழியின் முகத்தில் படிந்தது அவள் பார்வை..“”

நந்தினியின் கலங்கிச் சிவந்திருந்த விழிகள் அவள் தூங்கவில்லை என்பதை உணர்த்தின..

“உன் முகமே சரியில்லை நந்தினி.. ரெஸ்ட் எடுத்தியா.. இல்லையா..?” தூண்டித் துருவினாள் உத்ரா.

நந்தினி எதையோ சொல்ல முயன்று.. தோற்றுப் போனவளாக சோகையுடன் புன்முறுவல் செய்ய முயன்று அதிலும் தோற்றாள்..

‘இது என் ஃபிரண்ட் நந்தினிதானா..?’ உத்ராவின் புருவங்கள் சுருங்கின..

அன்று முழுவதும் நந்தினி உத்ராவுடன்தான் இருந்தாள்.. சிரிப்பும் சந்தோஷமுமாக இருந்தவள் மூன்று மணி நேரத்துக்குள் வாடிப் போய் வந்து சேர்ந்திருக்கிறாளே.. ஹோட்டலுக்குத் திரும்பியவள் தூங்காமல் அறையில் அழுது கொண்டிருந்தாளா..? ஏன்..? வீட்டு நினைவு வந்து விட்டதா..? அன்று முழுவதும் வராத வீட்டு நினைவு அயர்ந்து களைத்துத் தூங்கும் போது வந்து நிற்குமா..?

“என்னடி.. எதுவும் சொல்ல மாட்டேங்கிற.. தூங்கினியா இல்லையா..?”

நந்தினி பதில் சொல்ல முடியாமல் தடுமாறினாள்.. தூங்காத தூக்கத்தைத் தூங்கியதாக எப்படிச் சொல்வது..?

“உங்க ஃபிரண்ட் தூங்கலை..”

ரவிச்சந்திரன் சொன்னதில் நந்தினிக்குள் ஓர் விடுதலையுணர்வு வந்தது.. எதைச் சொல்வதாக இருந்தாலும் அவனே சொல்லிக் கொள்ளட்டும்.. பொய் சொல்லும் கொடுமையிலிருந்து அவள் தப்பித்தால் போதும்.. சொல்லவும் முடியாமல் சொல்லாமல் இருக்கவும் முடியாமல் தடுமாற வேண்டாம்..

அது உங்களுக்கு எப்படித் தெரியும் என்ற வினா விழிகளில் தொக்கியிருக்க ரவிச்சந்திரனை மௌனப் பார்வை பார்த்தாள் உத்ரா.. அதில் நந்தினிக்குள் சற்றுத் தெம்பு வந்தது.. ஏனென்று கேள்வி கேட்க எவரும் இல்லையென்று நினைத்தானா இந்த ரவிச்சந்திரன்..?

நந்தினிக்காக கேள்வி கேட்க உத்ரா இருக்கிறாள் என்பதை தெரிந்து கொள்ளட்டும்.. ஹ..!

“நான்தான் சம் இம்பார்டண்ட் பிஸினெஸ் டீடெயில் வேணும்னு நந்தினியை டிஸ்டர்ப் பண்ணிட்டேன்.. நான் கேட்ட டீடெயில்ஸை லேப்-டாப்பில் கேதர் பண்ணி பிரிண்ட் அவுட் எடுத்துக் கொடுத்தா.. ரெஸ்ட் எடுக்க டயமில்லை..”

கோர்வையாகப் பிணைந்து அவன் சொன்ன பொய்யில் அயர்ந்து போனாள் நந்தினி.. அவன் டீடெயில் கேட்டது உண்மைதான்.. என்ன டீடையில் கேட்டான்..? பினினெஸ் டீடெயிலையா கேட்டான்..?

‘பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்கிறானே..’

“நீ ஏன் நிற்கிற..?” ரவிச்சந்திரன் அவளை அதட்டினான்..

‘இங்கேயும் அதட்டனுமா..?’ தான் என்ன சிறுகுழந்தையா என்ற சினம் துளிர்த்தது நந்தினிக்கு..

‘பப்பா மாதிரியே ட்ரீட் பண்றான்..’

“நிற்கனும்னு நேர்த்திக்கடன் வைத்திருக்காளோ என்னவோ..”

தோழிக்கு எதுவுமில்லையென்ற நிம்மதியோடு சிரித்தாள் உத்ரா.. ரவிச்சந்திரனின் அதட்டும் பார்வையில் பல்லைக் கடித்தபடி அவன் பக்கத்தில் கடனேயென்று உட்கார்ந்து

வைத்தாள் நந்தினி.. இரவு உணவுக்கு வந்திருந்த உணவுவகைகள் மதியம் அவர்கள் உண்ட உணவு வகைகளாக இருந்தன..

“இதே ஃபுட் வெரைட்டிஸைத்தான் லன்சில சாப்பிட்டோம்..” என்று உத்ரா சொன்ன பின்புதான் அவற்றைக் கவனித்தாள் நந்தினி..

யதேச்சையாக ரவிச்சந்திரனின் முகத்தைப் பார்த்து விட்டாள்.. அவன் முகத்தைப் பார்க்கக்கூடாது என்ற வைராக்கியத்தோடு குனிந்திருந்தவளின் பார்வை உயர்ந்து அவன்மீது படிவதற்காகவே காத்திருந்ததைப் போல ஆழ்ந்து பார்த்தான் ரவிச்சந்திரன்.. நந்தினிக்குள் ஜிவ்வென்று ஒரு விதமான ரசாயன மாற்றம் நிகழ்ந்து வைத்தது.. அவனது பார்வை எதையோ சொல்வதைப் போல இருந்தது.. அது என்னவாக இருக்கக்கூடும் என்று குழம்பித் தவித்தாள் நந்தினி..

‘இதுக்குத்தான் இவனைப் பார்த்துத் தொலைக்கக் கூடாதுங்கிறது.. மனசுக்குள்ள என்னத்தை நினைச்சுத் தொலைச்சிருக்கான்னு ஒரு மண்ணும் புரிய மாட்டேங்குது..’

ரவிச்சந்திரன் அவள் பக்கமாக நகர்த்தி வைத்த தட்டுக்களை வேண்டாவெறுப்பாக இழுத்து சாப்பிட ஆரம்பித்த நந்தினி அவளையுமறியாமல்..

“வாவ்..!” என்றாள்..

நாவிலிருந்த உணவு வகைகளின் ருசியில் அவளது விழிகள் விரிந்தன.. உணவின் மீதான அவளது ஆராதனையில் கல்போலக் கடினப்பட்டிருந்த ரவிச்சந்திரனின் முக இறுக்கம் தளர்ந்து சிரிப்பு எட்டிப் பார்த்தது..

“செம டேஸ்ட் சார்.. லன்ச்சில நாங்க சாப்பிட்ட ஃபுட் இந்த அளவுக்கு டேஸ்டாய் இல்லை..” மனம் விட்டுப் பாராட்டினாள் உத்ரா..

“இந்த உண்மையை உரக்க உங்க ஃபிரண்டோட காதுகளில விழுகிற மாதிரி சொல்லுங்க..”

நந்தினியை துளைக்கும் பார்வை பார்த்தபடி அவன் சொன்னான்.. எதற்காக மதிய உணவில் அவள் சாப்பிட்ட உணவு வகைகளை இரவு உணவாக கொண்டு வரச் சொல்லியிருக்கிறான் என்று நந்தினிக்கு புரிந்து விட்டது..

“எங்க யாழ் ஹோட்டல் எல்லாவகையிலும் ஃபெண்டாஸ்டிக்கான ஹோட்டல்ங்க.. அக்காமடேஷனில மட்டுமில்லை.. ஃபுட் அயிட்டத்திலயும் இதை அடிச்சுக்க முடியாது..”

‘என்னைப் பார்த்துத்தான் ஜாடை பேசறான்..’

அவனுடைய ஹோட்டல் உணவுகளை விட வேறு ஒரு ஹோட்டலின் உணவு வகைகள் எந்த வகையிலும் மேம்பட்டதில்லையாம்.. பசி ருசியில் யாழ் ஹோட்டலின் உணவு வகைகளை அடித்துக் கொள்ள முடியாதாம்.. மதிய உணவின் போது நாக்கைச் சப்புக் கொட்டி.. நொட்டை விட்டு.. அவள் ‘பெண்டாஸ்டிக்..’ என்று ரசித்துச் சாப்பிட்டது தவறாம்.. அதை அவளுக்கு மறைமுகமாக உணர்த்துகிறாணாம்..

‘போடா..’ என்றிருந்தது அவளுக்கு..

‘உண்ணும் உணவை ரசித்து ஒரு சொல் சொல்லி விட்டது தப்பாடா சாமி..? இப்படித் தொட்டதெற்கெல்லாம் குத்தம் கண்டு பிடிச்சுக்கிட்டு இருந்தின்னா உன்னோடு எப்படிக் குப்பை கொட்டறதுன்னு மலைப்பா இருக்குடா..’

சிந்தனை போன திசையில் திகைத்துப் போனாள் நந்தினி.. அவனுடன் அவள் எதற்காக குப்பை கொட்ட

வேண்டும்..? பெல்ட் மன்னனுடனான அவளது திருமணத்தை நிறுத்தி விட்டதாக மேகநாதன் செய்தி அனுப்பிய மறுநிமிடம் அவள்..

'எஸ்கேப்..' என்று தஞ்சைக்குச் சிறகடித்துப் பறந்து விடப் போகிறாள்.. அந்த கிரேட் எஸ்கேப்பிற்காக அவள் காத்திருக்கும் போது தேவையற்ற வீண் நினைவுகள் எதற்காக வந்து தொலைக்க வேண்டும்..?

இரவு உணவு முடிந்து அவரவர் அறைகளுக்குப் பிரிந்து சென்ற போது "குட் நைட்.." சொன்ன உத்ராவின் முகத்தில் எதுவோ இருந்தது.. நந்தினியிடம் அவள் எதையோ சொல்ல முயன்றாள்.. சொல்லாமல் தோள்களைக் குலுக்கிக் கொண்டு கையாட்டி விட்டு நகர்ந்து விட்டாள்..

அவள் என்ன சொல்ல விரும்பினாள் என்று புரியாமல் உதட்டைக் கடித்தபடி அசையாமல் நின்றாள் நந்தினி..

"யாரைப் பார்க்கிற..?"

அவளது பார்வை சென்ற திக்கில் துழாவினான் ரவிச்சந்திரன்.. அந்த நேரம் பார்த்தா வினித் திரும்பிப் பார்த்துத் தொலைக்க வேண்டும்..? உத்ராவுடன் எதையோ

பேசிச் சிரித்தபடி திரும்பியவன் நந்தினியைக் கண்டதும் இயல்பாக தலையை அசைத்துத் தொலைத்து விட்டான்..

‘கடவுளே..! இவன் பார்க்கிற சமயத்திலா வினித் அண்ணா திரும்பித் தொலைக்கனும்..?’

கோழிக்கோடின் குளிரையும் மீறி அவளுக்கு வியர்த்துத் தொலைத்தது..

‘இவனைப் போல குயுக்தி மூளை படைத்த குதர்க்கவாதி பக்கத்தில நின்றுக்கிட்டு இருந்தா பனி பிரதேசத்தில கூட வியர்த்துக் கொட்டத்தான் செய்யும்..’ “வொய்ப் கூட ஹனிமூன் என்ஜாய் பண்ணத்தானே வந்திருக்கார்..?”

வினித்தைத்தான் குறிப்பிடுகிறான் என்பது புரிந்து போனதில் விதியை நொந்து கொண்டு மௌனம் சாதித்தாள் நந்தினி.. இந்தக் கேள்விக்கு என்ன பதிலைச் சொல்லித் தொலைப்பாள் என்ற கோபம் அவள் மன தில் துளிர்த்தது..

“பக்கத்தில வொய்பை வைத்துக்கிட்டு உன்னைத் திரும்பிப் பார்த்துத் தலையை ஆட்டறாரே.. என்ன..? பிரியா விடையா..?”

ஏதேனும் கட்டை மட்டும் நந்தினியின் கைகளுக்கு அகப்பட்டிருக்க வேண்டும்.. வருவது வரட்டும் என்று ரவிச்சந்திரனின் மண்டையில் ஓங்கி ஒரு போடு போட்டிருப்பாள்..

'மனிதனா இவன்..? எதில்தான் சந்தேகப்படுவதுன்னு ஒரு வரைமுறை வேண்டாமா..? அண்ணனைப் போல நினைக்கும் மனிதனைப் பார்த்து இந்தக் கேள்வியைக் கேட்கலாமா..?'

வழவழப்பான யாழ் ஹோட்டலில் அவனை அடிக்கச் சரியான ஆயுதம் அகப்படாது என்பதால் சுட்டு விழிப் பார்வையால் அவனைச் சுட்டெரிப்பதைப் போல பார்த்து வைத்தாள்..

"இப்பத்தான் நீ தமிழ்நாட்டுப் பெண்ங்கிறதைப் புரூவ் பண்ற.. ஹப்பா.. அனல் பறக்குது.. கண்ணகி மதுரையைப் பார்க்கிறதைப் போலவே பார்க்கிறயே.. ஹா.. ஹா.."

எதுவும் நடக்காததைப் போல சிரித்தான் ரவிச்சந்திரன்..

'எப்படி இவனால் எதுவும் நடக்காததைப் போல பிஹேவ் பண்ண முடியுது..?' முறைத்தபடி அவளுக்கான அறையை நோக்கி விரைந்து விட்டாள் நந்தினி..

அதை இதையென்று ஆயிரம் யோசனைகளுடன் படுக்கையில் தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தவள் அலுப்பு மேலிட்டால் அயர்ந்து உறங்கி விட்டாள்.. காலையில் அவள் காதருகே ஒலித்த செல்ஃபோன் ஒலியில் கண்விழித்தவள் தூக்கம் கலையாமல் இமைகளை இறுக்கி மூடியபடி செல்ஃபோனை எடுத்துக் காதுக்குக் கொடுத்து..

“ஹல்லோவ்..” என்றாள்..

“என்னடி நீ.. இப்படியிருக்க.. நானும் வினித்தும் ரெடியாகி பிரேக்ஃபாஸ்ட் சாப்பிட டைனிங் ஹாலுக்கு வந்துட்டோம்.. ரவிசார் மட்டும் தனியா உட்கார்ந்திருக்கார்.. நீ எங்கேன்னு கேட்டா இன்னும் வரலைங்கிறார்.. சீக்கிரமா வந்து சேரு..” மறுமுனையில் சப்தம் போட்டாள் உத்ரா..

“இல்லை.. உத்ரா.. நான் வரலை..” உறுதியாக மறுத்தாள் நந்தினி.

# அத்தியாயம் 151

மறுமுனையில் நிசப்தம் நிலவியது.. உத்ரா என்ன நினைத்துக் கொண்டிருப்பாள் என்ற நினைவில் கண்ணீர் அரும்பியது நந்தினிக்கு.. வயநாட்டுக்கு வந்தபின் நந்தினி மாறி விட்டாள் என்று நினைப்பாள்.. பெரிய இடத்தில் செல்வாக்குடன் வேலை பார்க்கும் திமிரை தோழியிடம் காட்டுகிறாள் என்று நினைப்பாள்.. வயநாட்டுக்கு தேநிலவு கொண்டாட வா என்று அழைத்துவிட்டு புறக்கணிக்கிறாள் என்று நினைப்பாள்.. பழி ஓரிடம்.. பாவம் ஓரிடம்..

'என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளட்டும்.. என்னால் ஊர் சுற்றப் போக முடியாது..' நந்தினி தீர்மானமாக இருந்தாள்..

அவளால் ரவிச்சந்திரன் பேசும் பேச்சுக்களை காது கொடுத்துக் கேட்க முடியவில்லை.. அதிலும் வினித்..! நந்தினிக்கு அண்ணன் போன்றவன்.. அவனை ரவிச்சந்திரன் பேசுவதற்கு இடம் கொடுக்கக் கூடாது..

இது ஒன்று மட்டுமே நந்தினியின் நினைவில் சுழன்றது..

"வரலையா..?" மறுமுனையில் உத்ரா கேட்டாள்..

“ம்ம்ம்.. வரலை..”

“ஏண்டி..?”

“பாஸ் சம் இம்பார்ட்ண்ட் வெர்க்ஸ் கொடுத்திருக்கார் உத்ரா.. அதைப் பார்க்கனும்.. ஸோ.. நீயும் அண்ணாவும் சைட் ஸீயிங்க்கு போயிட்டு வாங்க.. இன்றைக்கு என்னால் டைனிங் ஹாலுக்கும் வரமுடியாது.. ரூமுக்கே ஃபுட்டை கொண்டு வரச் சொல்லிச் சாப்பிட்டுக்கலாம்ன்னு இருக்கிறேன்.. ஹேவ் எ நைட் டே..”

மறுமுனையில் இப்போது கிசுகிசுப்பான பேச்சுச் சப்தம் கேட்டது.. உத்ரா ஃபோனை உள்ளங்கையில் பொத்திக் கொண்டு பேசுகிறாள் என்று யூகித்தாள் நந்தினி.. கொச கொச என்ற பேச்சுச் சப்தம் ஓய்ந்து உத்ரா ஃபோனை கட் பண்ணி விட்டாள்..

‘கோபமாயிருக்கும்..’

தலையணையில் முகம் புதைத்து தூக்கத்தை தொடர முயன்றாள் நந்தினி.. அதற்கு இடையூறு செய்வதைப் போல காலிங் பெல் கத்தியது..

‘யார்..?’

அழைக்காமல் எதற்காக ரூம் பாய் வர வேண்டும் என்ற கோபத்துடன் கதவைத் திறந்தவள் வெளியில் நிற்பது யார், எவர் என்று கூடப் பார்க்காமல்..

“நான் கூப்பிட்டேனா..?” என்று கத்தினாள்..

“நீ கூப்பிட்டால்தான் நான் வரனுமா..?” என்ற அமர்த்தலான கேள்வியில் அரண்டு போனவள்..

‘இவனா..?’ என்று கண்களைக் கொட்டி விழித்துப் பார்த்தாள்..

எதிரே ரவிச்சந்திரன் நின்று கொண்டிருந்தான்.. தூக்கத்தில் கலைந்திருந்த முடிக் கற்றையும்.. கசங்கியிருந்த நைட்டியும்.. வீங்கியிருந்த முகமுமாக கந்தல கோலமாக அவன் முன்னால் நிற்க வேண்டியிருக்கும் என்று அவள் நினைத்துக் கூடப் பார்த்திராததால் வெறுத்துப் போய் விட்டாள்..

‘வர்றேன்னு ஒரு ஃபோனைப் பண்ணிட்டு வந்த தொலைத்தால்தான் என்ன..? இப்படி திடுதிப்புன்னு சொல்லாமல் கொள்ளாம வந்து நின்னா என்னதான் செஞ்சு தொலைக்கிறது.. சும்மாவே பிசாசைப் போல இருப்பேன்..

இதில தூங்கின கண்ணும் வீங்கின முகமுமா வந்து நின்னா விளங்கிரும்..'

இந்த முகத்தைப் பார்த்தால் நிச்சயமாக அவன் காதல் சொல்லாமல் கொள்ளாமல் ஓடி விடும் என்ற நிச்சயத்துடன் அவனைப் பார்த்தால்.. அவன் அந்த முகத்தையும் காதலோ காதலுடன் கடித்துத் தின்னுவதைப் போலப் பார்த்துக் கொண்டிருந்தான்..

'ஆனாலும் இவனுக்கு அசாத்திய தைரியம்தான்..'

நந்தினிக்கு ஆச்சரியம் ஆச்சரியமாக இருந்தது.. முகத்தைக் கூடக் கழுவாமல் முன்னே வந்து நிற்கிறாள்.. அவளது முகவடிவை முழுநிலவை ரசிப்பதைப் போல அவன் ரசித்துப் பார்க்கிறான் என்றால் என்னத்தைச் சொல்லுவது..?

'வயநாட்டிலேயே அலைகிறானில்ல.. யாரோ மந்திரிச்சு விட்டுட்டாங்க போல.. சுயபுத்தியோட இருந்தா என்னைக் காதலிக்கிறேன்னு பினாத்த மாட்டான்..'

அவளுக்கு வேலை கொடுத்து ஆதரிக்கும் நன்றிக் கடனிற்காகவாவது அவன் கையில் ஒரு தாயத்தைக் கட்டிவிட வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள் நந்தினி.. அது மந்திரிக்கப்பட்ட தாயத்தாக இருக்க வேண்டும்..

அப்போதுதான் அவனைப் பீடித்திருக்கும் காதல் பிசாசு விலகி ஓடும்..

“ஹேய் தூங்கு மூஞ்சி..! நான் உனக்கு இம்பார்டண்ட் வொர்க் கொடுத்திருக்கேன்னு என் முன்னால் உட்கார்ந்திருக்கிற உத்ராவிடம் புரூடா விடறியே.. அவங்க என்னிடம் கேட்பாங்கன்னு யோசிக்க வேண்டாமா..?” என்று உல்லாசமாகச் சிரித்தான் ரவிச்சந்திரன்..

‘சிரித்து மயக்க கிளம்பி வந்திருக்கிறானா..?’ சினந்தாள் நந்தினி..

முந்தின நாள் இரவுதான் தேள் கொடுக்கு கொட்டியதைப் போன்ற வார்த்தைகளைக் கொட்டி விட்டுப் போயிருக்கிறான்.. விடிந்ததும் அதைத் துப்புறவாக மறந்து விட்டுச் சிரித்துக் கொண்டு நிற்கிறான்..

‘என்னை என்னன்னு நினைச்சிருக்கான்..?’

“உத்ரா என்னிடம் சண்டைக்கு வர்றாங்க.. அவங்களோட ஃபிரண்டுக்கு நான் வொர்க் கொடுத்து டிஸ்டர்ப் பண்றேனாம்.. அட்லீஸ்ட் அவங்க சென்னைக்கு ரிட்டர்ன் ஆகிற வரைக்குமாவது அர்ஜன்ட் வொர்க்ஸை கொடுக்காம இருக்கனுமாம்.. ரெக்வஸ்ட் பண்ணிக் கேட்டுக்கறாங்க.. நான்

எங்கேங்க வொர்க் கொடுத்தேன்னு கேட்டா நந்தினி பொய் சொல்ல மாட்டாளேங்கிறாங்க.. நான் மட்டும் பொய் சொல்கிறவனா..?''

நீ என்னவோ சொல்லிக் கொண்டிரு.. எனக்கென்ன என்று எங்கோ பார்த்துக் கொண்டு நி ன்றிருந்தாள் நந்தினி..

''ஏய்ய்..!'' செல்லமாக அவன் அவளுடைய கன்னத்திதைத் தட்டியதில் ஜிலீர் என்ற உணர்வு ஏற்பட ஒரடி பின்னால் நகர்ந்து மருண்டாள்..

''கன்னத்திலேதானேடி தட்டினேன்..? வேற என்ன செய்தேன்..?'' கனிவாக நியாயம் கேட்டான் ரவிச்சந்திரன்.

''வாடி, போடின்னு பேசாதீங்கன்னு சொல்லியிருக்கேன்..''

தன் எதிர்ப்பை பலத்த கண்டனக் குரலில் சொல்லத்தான் முயன்றாள்.. அது கழுதை.. வெறும் முணுமுணுப்பாக வந்து தொலைத்தது..

''ஊஹும்..? நான் உன்னை வாடி, போடின்னு சொல்லக் கூடாதா..? ஹா.. ஹா..''

அவள் என்னவோ பெருத்த நகைச்சுவையைச் சொல்லி விட்டதைப் போலச் சிரித்து மகிழ்ந்து போனான் ரவிச்சந்திரன்..

‘ஏண்டா இப்படிப் படுத்தி எடுக்கிற..? இம்சை அரசா..!’

அவன் எப்போது அங்கிருந்து நகர்வான் என்றிருந்தது நந்தினிக்கு.. அவளுக்கு கண்ணாடி பார்த்தாக வேண்டும்..

அது எப்படி தூங்கிய திருக்கோலத்தில் மட்டக் கண்றாவியாக நிற்பவளிடம் அவன் காதல் பேசி சிரித்து மகிழ்கிறான்..?

குளித்து.. நேர்த்தியாக உடையணிந்து.. ஒழுங்காக தலைவாரிப் பின்னியிருந்தாலே தான் பார்க்கச் சகிக்கும்படி இருக்கிறோம் என்று நந்தினி நம்ப மாட்டாள்..

இவன் என்னடாவென்றால் இந்தக் கோலத்தில் இருப்பவளிடம் மயங்கும் பார்வையை பார்த்து வைக்கிறானே..

“உனக்கு ஃபிப்டீன் மினிட்ஸ்தான் டயம்.. அதுக்குள்ள ரெடியாகி டைனிங் ஹாலுக்கு வந்து நிற்கிற..”

“எதுக்கு..?”

“ஊர் சுற்றத்தான்..”

“நான் வரலை..”

“ஏன்..? உன் பாஸ் சம் அர்ஜன்ட் வொர்க் கொடுத்திருக்கார்ன்னு உத்ராவிடம் சொன்ன கதையை என்னிடம் ஒப்பிக்காதே.. உன்னுடைய பாஸே நான்தான்..”

“எனக்கு வர இஷ்டமில்லை..”

“அதுதான் ஏன் என்கிறேன்..”

“தலை வலிக்குது..”

“பொய் சொல்லாதே.. உனக்கு அது வராது.. நீ வருகிற..”

“நான் வரலை..”

“வருகிற..”

“நானென்ன உங்க அடிமையா..?”

“என்னிடம் வொர்க் பண்றவ.. இன்றைக்கான உன் வொர்க் இதுதான்.. மைண்ட் இட்..”

முகத்தின் கனிவு மறைந்து கடுமை விரவியதில் இவன் நிமிடத்திற்கு நிமிடம் வேறு முகம் காட்டுகிறவன் என்று சலிப்பு வந்தது நந்தினிக்கு..

“டைம் பாஸ் ஆகிக்கிட்டே இருக்கு.. டைனிங் ஹாலில் வெயிட் பண்றேன்.. வந்து சேரு..”

அதிகாரத் தோரணையுடன் உத்தரவிட்டவன் டக் டக் என பூட்ஸ் சப்தம் எதிரொலிக்க கம்பீரமாக நடந்தான்.

கோபத்துடன் நாக்கைத் துருத்தி அழகு காட்டினாள் நந்தினி.. சட்டென அவன் திரும்பி விட மாட்டிக் கொண்டவளாக திருதிருத்தாள்..

“புதிதாய் மாட்டிக்கிட்டதைப் போல போஸ் கொடுக்காதே.. யூஷுவலா இந்தக் கிறுக்குத்தனத்தைத் தானே நீ செய்து வைப்ப..?”

ஒரு ஷொட்டுக் கொடுத்து விட்டு அவன் போய் விட்டான்.. அறைக் கதவை அசைத்து விட்டு உள்ளே வந்த நந்தினி அவசரமாக கண்ணாடி பார்த்தாள்.. அவளைப் பார்க்க அவளுக்கே சகிக்கவில்லை..

‘இந்த முகத்தை உத்து உத்துப் பாக்கறான்.. அடியே நந்தினி.. இதுக்காகவே நீ அவனோட காதலை கன்சிடர் பண்ணலாம்டி..’

நந்திதின குளியலறைக்குள் புகுந்து சடுதியில் குளித்து உடை மாற்றி ஹேண்ட் பேகை தோளில் மாட்டியபடி லிஃப்டிற்கு ஓடினாள்.. லிஃப்டில் இருந்தவர்கள் அவளை விசித்திரமாக பார்ப்பதை சட்டை செய்யாமல் கைக்கடிகாரத்தில் மணி பார்த்து விட்டு சுடு தண்ணீருக்குள் கையை விட்டு விட்டதைப் போல கைவிரல்களை உதறினாள்..

தரை தளத்தை லிஃப்ட் அசைந்ததும் மற்றவர்களை முந்திக் கொண்டு முதல் ஆளாக வெளிப்பட்டு டைனிங் ஹாலுக்கு ஓடி மூச்சிரைக்க நின்றாள்.. அவளை ஏற இறங்க அமர்த்தலாக ஓர் பார்வை பார்த்து விட்டுக் கைக்கடிகாரத்தில் மணி பார்த்த ரவிச்சந்திரன்..

“ஃபிப்டீன் மினிட்ஸில வரச் சொன்னேன்.. இப்போ ஸிக்ஸ்டீன் மினிட்ஸ் ஆகிடுச்சு..” என்று விழிகளை உருட்டினான்..

“ஆனாலும் இது அநியாயம் சார்..” உத்ரா சிரித்தாள்.. வினித் மெல்லிய புன்முறுவலுடன் அவளைப் பார்த்து..

“உட்காருங்க..” என்றான்..

‘இவன் பக்கத்திலேயில்ல உட்காரனும்..’ நந்தினி சேரைத் தள்ளிப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள்..

“விட்டால் மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸை பிடிக்காமலே சென்னைக்கு போய் சேர்ந்துருவ போல..” கடினமான முகத்துடன் சொன்னான் ரவிச்சந்திரன்..

அவள் சேரைத் தள்ளிப் போட முயல்வதைச் சொல்லிக் காட்டுகிறானாம்.. உத்ராவும், வினித்தும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற எண்ணத்துடன் நகர்த்திப் போட்ட சேரை இழுத்து ஒட்டிப் போட்டு உட்கார்ந்தாள் நந்தினி..

‘உரசியாச்சு.. வாயை மூடுடா..’

ரவிச்சந்திரனின் முகத்திலிருந்த கடினம் விலகி விட்டது..

‘அதெல்லாம் ஈஷிக்கிட்டா ஈன்னு ஆகிருவான்.. தேவனே..! ஈ சுந்தரமில்லாத சுந்தரியை பிரேமிப்பதாக பிராந்தை கொள்ளும் ஈ வல்லிய சுந்தரனை.. கேரளத்து ராஜாதி ராஜனைக் காத்து ரட்சிப்பீராக..’

தேவன் அவனைக் காத்து ரட்சிக்க வரவில்லை போல.. அவன் காதலாகி கசிந்துருகும் கண்களுடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்..

‘டேய்.. அந்தப் பக்கமாகத் திரும்பித் தொலைடா.. என் ஃபிரண்டும் அவளோட ஹஸ்பெண்டும் என்னைத் தப்பா நினைச்சுத் தொலைச்சிறப் போறாங்க..’

நந்தினி அவன் பக்கமே திரும்பவில்லை.. உத்ராவை பார்த்தாள்..

“நான் கூப்பிட்டா வேலையிருக்கு.. வர மாட்டேன்னு அடம் பிடிப்ப.. உன் பாஸ் நேரே வந்து ஆர்டர் போட்டா ஃபிப்டீன் மினிட்ஸில கிளம்பி ஓடி வருவ.. என்னடி நடக்குது இங்கே..?”

ரவிச்சந்திரனை எதிரில் வைத்துக் கொண்டு கிடுக்கிப் பிடி கேள்விகளைப் போட்டாள் உத்ரா..

# அத்தியாயம் 152

**தூ**ண்டிலைப் போட்டு விலாங்கு மீனைப் பிடிப்பது என்பது இதுதான்.. உத்ரா அதில் கை தேர்ந்தவள்.. மனதிலிருப்பதை மறைக்கத் தெரியாமல் உளறிக் கொட்டி விடும் நந்தினி இதுபோல பல தருணங்களில் உத்ராவிடம் சிக்கி உண்மையைக் கொட்டிக் கவிழ்த்திருக்கிறாள்..

“நந்தினி..”

“ம்ம்ம்..”

“கண்ணெல்லாம் சிவந்திருக்கே.. புத்தகத்திலே ஒத்தை எழுத்தைக் கூட விடாம கரைச்சுக் குடிச்சிட்டயோ..”

“இல்லையே..”

“ஓஹோ... ஏன் நந்தினி.. நைட் நான் கண்விழிச்சுப் பார்த்தப்ப டேபிள் லேம்ப் பக்கத்தில உன்னைப் போல ஓர் உருவம் உட்கார்ந்து படிச்சுக்கிட்டு இருந்ததே.. அது நீயில்லையாடி..?”

“ஹி..ஹி.. பார்த்துட்டியா.. அது நான்தான்..”

“விடியற்காலையிலும் பார்த்தேனே.. ஸோ.. நைட் முழுக்கத் தூங்கலை.. படிச்சுக்கிட்டே இருந்திருக்க..”

“தூக்கம் வரலைடி உத்ரா.. சரி.. எக்ஸாமை எழுதி முடிச்சுட்டு வந்து மொத்தமாத் தூங்கிக்கலாமேன்னு படிப்பை கன்டினியூ பண்ணிட்டேன்..”

“அப்புறம் ஏண்டி.. நான் கேட்டப்ப இல்லைன்னு சொன்ன..?”

நந்தினி மாட்டிக் கொள்வாள்.. உண்மையில் உத்ரா இரவில் கண் விழித்துப் பார்த்திருக்க மாட்டாள்... காலையில் என்று சொன்னதும் அப்படித்தான்.. நந்தினியின் குணம் தெரிந்து அவள் தூண்டிலை வீசினால் நந்தினி விலாங்கு மீனாய் அகப்பட்டுக் கொள்வாள்..

அன்று போல இன்றும் முகத்தில் அசடு வழிய..

“இல்லையே.. ஒண்ணுமில்லையே.. ஒண்ணுமே இல்லைடி உத்ரா..” என்று கைகளை விரித்து எங்கப்பா பரணில் இல்லையென்றாள் நந்தினி..

“நீ இல்லைன்னு சொல்கிற லட்சணமே எதுவோ இருக்குன்னு சொல்கிறதைப் போலதான் இருக்கு.. உன்னை அப்புறமாக் கவனிச்சுக்கிறேன்.. உட்காரு..”

உத்ரா.. ‘அப்புறமாய்’ என்று செக் வைத்ததில் கலங்கிப் போனாள் நந்தினி.. இனி எப்போது அவள் எதைக் கேட்டு வைப்பாளோ என்று பயந்து கொண்டே இருக்க வேண்டும்..

‘அந்தக் கழுதைக்கு இப்போதே எல்லாத்தையும் ஒப்பிச்சிரலாமே..’ என்ற முடிவுக்கு வந்தவளாய்..

“இல்லைடி உத்ரா..” என்று ஆரம்பித்தாள் நந்தினி..

“என்ன இல்லை..? என் பாஸ் ஆர்டர் பண்ணினா ஒபே பண்ணித்தான் ஆகனும்ன்னு சொல்கிறதுக்கு இத்தனை ஆக்ஷனா..? உத்ராவும் வினித்தும் வந்திருக்கிற நினைவு இல்லாம வொர்க்கை கொடுத்திட்டேன்.. அதுக்கப்புறம் தான் இவங்களோடு டைம் ஸ்பெண்ட் பண்றதுன்னா உனக்குப் பிடிக்குமேன்னு தோன்றியது. ஸோ.. உத்ரா ஃபர்ஸ்ட்.. வொர்க் நெக்ஸ்ட்ங்கிற டிசிஷனுக்கு வந்திட்டேன்.. உன்னையும் கிளம்பச் சொன்னேன்.. நீயும் கிளம்பி வந்திட்ட... இதைச் சொல்கிறதுக்கு குட் டைம் பார்ப்பியா..?” வெகு இலகுவாக அவளை அவளாக உருவாக்கிக்

கொண்டிருந்த இடியாப்பச் சிக்கலில் இருந்து மீட்டெடுத்தான் அந்த கேரளத்து ராஜாதி ராஜன்..

‘உஸ்ஸ்.. அப்பாடா..’ ஆசுவாசமான நந்தினியை நம்பாத பார்வை பார்த்தாள் உத்ரா..

‘போடி..’ காலை உணவில் கவனமானாள் நந்தினி..

‘இவங்களோடு டைம் ஸ்பெண்ட் பண்றதுன்னா உனக்குப் பிடிக்குமேன்னு பொடி வைச்சுப் பேசறான்.. ராஸ்கல்.. இவன் உத்ராவைச் சொன்னானா இல்லை வினித் அண்ணாவை மென்ஷன் பண்ணினான்னு எனக்குத்தானே தெரியும்..’ பொருமியது அவள் மனம்..

அன்றைய ஊர் சுற்றலில் நந்தினி தப்பித்தவறி உத்ராவிடம், வினித்திடமும் ஒரு வார்த்தை கூடப் பேசி விடாமல் அடை காத்தான் ரவிச்சந்திரன்.. அவளை அந்தப் பக்கம், இந்தப் பக்கம் திரும்ப விடவில்லை.. கணவனே கண் கண்ட உலகம் என்றிருக்கும் உத்ரா போனால் போகிறது என்று சில மணித் துளிகளில்தான் தோழியின் நினைவு வந்து அவளிடம் பேச முனைவாள்..

மிகச் சரியாக அந்த நொடியில் ஊடே புகுந்து ஆட்டத்தைக் கலைத்து விடுவான் ரவிச்சந்திரன்..

“நந்தினி.. ரப்பர் ஃபேக்டரியோட ஆன்னுவல் இன்கம் ரிப்போர்ட்ட பிரிபேர் பண்ணச் சொன்னேனே.. அதில் நான் சொன்ன பர்டிக்குலரை இன்குளூட் பண்ணிட்டியா..?” என்று வேலை சம்பந்தமாக பேசுவதைப் போல பேச ஆரம்பிப்பான்..

உத்ராவினால் தோழியிடம் பேச முடியாமல் போய் விடும்..

“இதுக்கு இவ அவுட்டிங்கே வராமல் இருந்திருக்கலாம் சார்..” உத்ரா அலுத்துக் கொண்ட போது.

“இருந்திருக்கலாம்தான்.. எங்கே..? அவுட்டிங் வராம வொர்க்கைக் கவனிக்கச் சொல்லியிருந்தா நந்தினியின் மனம் வொர்க்கில் இருந்திருக்காதே.. உங்களிடமில்ல இருந்திருக்கும்..?” என்று அவளை விட அலுத்துக் கொண்டான் ரவிச்சந்திரன்..

அந்த ‘உங்களிடமில்ல..’ என்ற வார்த்தையைச் சொல்லும்போது அவன் வினித்தைப் பார்த்தபடி சொன்னதுதான் இம்சையாக இருந்தது. .

‘இவ ஒருத்தி.. இந்தக் கேரளத்து இம்சை அரசனைப் பத்தித் தெரியாம வாய் கொடுக்கிறா..’ உத்ராவைப் பேசாமல் இருக்கும்படி கண்ஜாடை காட்டினாள் நந்தினி..

உத்ராவின் நெற்றி சுருங்கியது.. இதுபோன்ற பரிபாஷைகளை நந்தினி எங்கு கற்றாள் என்று வியந்து போனாள்..

நந்தினி இது போன்ற ஜாடைகளைச் செய்ய மாட்டாள்.. தேங்காய் உடைத்ததைப் போல எதையும் நேருக்கு நேர் பேசி விடுவாள்.. பரிபாஷைகளுக்கும் அவளுக்கும் ரொம்பத்தூரம்..

'நந்தினியா இது..?'

தோழியின் விழிகளில் தெரிந்த சஞ்சலத்தில் யோசனையாகிப் போனாள் உத்ரா.. அதைப் பற்றி அவளிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்றால் ரவிச்சந்திரன் நந்தினியை விட்டு நகரவில்லை.. அவளைத் தனது நிழல் போல கூட இருத்திக் கொண்டான்.. உத்ராவின் யோசனை அதிகமானது.. வினித்தை மறந்து விட்டு நந்தினியைக் கண்காணிக்க ஆரம்பித்தாள்.. வினித் கோபம் கொண்டான்..

"உன் புருஷன் நான்தாண்டி.. அங்கே என்ன பார்வை வேண்டிக் கிடக்கு..?"

நகைச்சுவையைப் போலச் சொன்னாலும் அது நகைச்சுவையல்ல அவனுடைய அடி மனதில் அமிழ்ந்திருக்கும்

பொறாமையின் வெளிப்பாடு என்பதில் கோபம் கொண்டாள் உத்ரா..

“அங்கே நிற்கிறது ரவிசார் மட்டுமில்லை வினித்.. நந்தினியும் தான்..” நறுக்கென்று பதில் சொன்னாள்..

“நான் நந்தினியைத்தான் சொன்னேன்.. நீ யாருன்னு நினைத்த..?” உற்றுப் பார்த்தபடி கேட்டான் வினித்..

“நீங்க யாரை நினைத்துச் சொன்னீங்களோ.. அவங்களைத்தான் நினைத்துப் பதில் சொன்னேன்.. போதுமா..?” உறுத்துப் பார்த்தபடி கேட்டாள் உத்ரா. கணவன் மனைவிக்குள் பிணக்கு வந்தது.. வினித் சிடுசிடுவென்று இருந்தான்.. வாழ்க்கையில் ஓர் முறை வரும் தேநிலவு.. அதை மனைவியுடன் தனிமையில் கழிக்க வேண்டுமென்றுதான் எல்லாப் புதுக் கணவன்மார்களும் ஆசைப்படுவார்கள்..

அவனும் அப்படித்தான் ஆசைப்பட்டான்.. வயநாட்டுக்கு வர வேண்டாம் என்று சொன்னான்.. சிம்லாவிற்குப் போகலாம் என்றான்.. அவனும் அவளுமாக இருக்க வேண்டும் என்று அவன் விரும்புவதை உணர்த்தினான்..

உத்ரா அதை மறுத்து விட்டாள்.. இதைச் சாக்கிட்டுத்தான் வயநாட்டுக்குப் போக முடியும் என்பதைச் சுட்டிக் காட்டினாள்..

“என்மேல நம்பிக்கை வைச்சுக் கிளம்பிப் போயிருக்காங்க.. அங்கே எப்படியிருக்கிறாளோ என்னவோ.. தினமும் பேச முடியலை.. மேரேஜ் நெருங்க நெருங்க அவளிடம் பேசுவது குறைந்து விட்டது.. மேரேஜுக்கப்புறம் நீங்க நெருங்கிட்டிங்க..” என்று சரசம் பேசிக் கணவனை சம்மதிக்க வைத்தாள்..

அந்த நினைவில் இன்று அவள் முகம் சிவந்ததில் வினித்தின் மனச் சுணக்கம் மறைந்து விட்டது.. மனைவியை வேட்கையுடன் பார்த்தான்.. ரவிச்சந்திரன் நந்தினியுடன் விலகி நடந்திருந்ததில் அவனும் உத்ராவும் மட்டும் கடலோர தென்னை மரங்களின் மத்தியில் தனித்து நின்றிருந்தார்கள்..

“நெருங்கறதுக்குத்தானேடி மேரேஜ் பண்ணிக்கிறது..?”

வளைந்திருந்த தென்னை மரத்தில் வாகாக சாய்ந்து நின்றிருந்த உத்ராவின் மீது அவன் சாய.. அவள் விழிகளை மூடிக் கொண்டாள்.. வினித்தின் உஷ்ண மூச்சுக் காற்று குளிர் பாடிந்திருந்த அவள் முகத்திற்கு கதகதப்பை ஊட்டியது..

“உத்ரா..” தாபத்துடன் அழைத்தான்..

“ம்ம்ம்..” போதையுடன் அவள் முணுமுணுத்தாள்..

“ஐ லவ் யு டி.. ஐ நீட் யு..”

“ம்ம்ம்..”

“உன் உலகத்தில நான் மட்டும்தாண்டி இருக்கனும்.. உன் ஃபிரண்டுக்குக் கூட அங்கே இடமில்லை..”

ஆவேசத்துடன் அவளைக் கட்டியனைத்து அவளது கழுத்தில் முகம் புதைத்தான் வினித்.. வெப்ப உதடுகளின் ஸ்பரிசத்தில் உத்ராவின் உடல் உஷ்ணமேற்றது.. நீ நந்தினியைத்தான் சொன்னாயா என்று கேட்க நினைத்து அந்தக் கேள்வியை மனதுக்குள் புதைத்தாள்.. அந்த நொடிகளில் இனிமையை கசப்பான கேள்விகளைக் கேட்டுக் குலைப்பதற்கு அவள் மனம் இடமளிக்கவில்லை..

உத்ராவின் பார்வை வினித்தின் மீது மட்டும் இருக்க வேண்டும் என்ற உரிமையுணர்வில் அவள் போதை கொண்டாள்.. அனைத்துக் காதலிகளுக்கும், மனைவிகளுக்கும் ஏற்படும் போதைதான் அது.. கள்ளூரும் போதை.. அவள் விரும்பும் அவளுடைய ஆடவன்.. அவனை மட்டும் அவள் விரும்ப வேண்டும் என்று உரிமை பாராட்டுவதில் உண்டாகும் போதை..

உத்ராவையும் அந்தப் போதை ஆட்கொண்டிருந்தது.. கணவனுக்கு இசைந்து கொடுத்தபடி அவனது முரட்டு முடியைக் கலைத்துக் காதோரமாக முணுமுணுத்தாள்..

“ஐ லவ் யு வினித்..”

“உன் மனசில நான் மட்டும்தான் இருக்கனும்..”

“ம்ம்ம்..”

“உன் பேரண்ட்ஸ்.. ரிலேடிவ்ஸ்ன்னு யாரும் இருக்கக் கூடாது..”

“ம்ம்ம்..”

“நந்தினி கூட..”

“அவருடன் சேர்ந்து ரவிசாரும் இருக்க மாட்டார்.. போதுமா..? அவர் நம்ம நந்தினிக்கு அடைக்கலம் கொடுத்திருக்கார்.. பாதுகாவலா இருக்கார்.. அதுக்காக அவர்மீது நன்றியுணர்வுதான் வருது.. ஃபேவரிடசம் வரலை.. புரிஞ்சுக்கங்க.. அவர் எத்தனை பெரிய ஸ்டாரா இருந்தாலும் எனக்கு என் புருஷன்தான் உயர்வு..”

“உத்ரா..”

வினித்தின் அணைப்பு இறுகியது.. பெண் மனம் மட்டுமில்லை.. ஆண் மனமும் அலை பாய்வது.. அவனைவிட சில விதங்களில் உயர்ந்த வேறொரு ஆண் அருகிலிருந்தால் அவன் மனது அலை பாயும்.. தன் துணையைச் சந்தேகப்படும்.. அவளைப் பத்திரப் படுத்திக் கொள்வதில் முனைப்புக் காட்டும்..

அலைபாயும் ஆண் மனதை அமைதிப் படுத்தும் வித்தையைக் கற்றவள் பெண்.. ஓர் சிறு பார்வை.. சரசமான பேச்சு.. தழுவல்.. உனக்கு மட்டும் நான்.. என்ற உத்திரவாதம்.. இது போதும்.. அலைபாயும் ஆண்மனதை அவள் வசப்படுத்த..

உத்ரா அந்த வித்தையைக் கற்றிருந்தாள்.. அவளுடைய ஆண்மகனை வசியம் செய்யப் பயின்றிருந்தாள்.. எப்போது எதிர்க்க வேண்டும்.. எப்போது அணைக்க வேண்டும் என்ற வாழ்க்கைப் பாடத்தின் அரிச்சுடியை அறிந்து வைத்திருப்பவள் அவள்..

இவை சொல்லிக் கொடுத்து வருவதில்லை.. சொல்லிக் கொடுக்கவும் இயலாது.. ஒவ்வொரு பெண்ணும் தனக்கான ஆடவனை கண்டு கொண்டு அவனிடம் சரணடையும் போது

அவனைச் சரணடைய வைத்து விடுவாள்.. விட்டுக் கொடுத்துக் கெட்டியாக இழுத்துப் பிடித்து அமுக்கிக் கொள்ளும் கெட்டிக்காரத்தனத்தைக் கற்று வைத்திருப்பவள்தான் பெண்..

வினித்தின் மனது சமனப்பட்டிருந்தது.. அவனுடைய விரலோடு விரல் கோர்த்தபடி காதல் பேசிய வண்ணம் மெல்ல மெல்ல நந்தினியைப் பற்றிய பேச்சை எடுத்தாள்..

“அப்பா, அம்மா, தம்பி, தாத்தா, பாட்டி, அத்தை, மாமா, சித்தப்பா, சித்தி, பெரியப்பா, பெரியம்மான்னு தஞ்சாவூரைச் சுத்தியிருக்கிற அத்தனை கிராமங்களிலும் அவளுக்குச் சொந்தக்காரங்க இருக்காங்க வினித்.. அத்தனை சொந்த பந்தங்கள் மத்தியிலே இளவரசியைப் போல வளர்ந்தவங்க நந்தினி.. அவளுடைய அப்பா தங்சாவூரிலே பெயர் சொல்கிறதைப் போல இருக்கிற பிரபலமான பணக்காரர்களிலே ஒருத்தர்.. அவரோட பெண், நான் சொன்ன வார்த்தைக்காக வயநாட்டுக்கு வந்து ரவி சாரிடம் வேலை செய்கிறா..”

“பட்.. இதில் அவங்களோட நண்மையும் இருக்கில்ல உத்ரா... நீ என்னவோ அவங்களைக் கஷ்டப்படுத்திட்டதைப் போலக் கில்ட்டியா.. ஃபீல் பண்றியே.. செஞ்சியிலே சூசைட்

அட்டெம்பட் பண்ணப் போனவங்க அவங்க.. அவங்களைக் காப்பாற்றி உன் வீட்டினரிடம் எதையும் சொல்லாம மறைத்து வயநாட்டுக்கு அனுப்பி வைத்திருக்க.. யு டிட் எ குட் ஜாப்.. அப்படிப்பட்ட கிரிட்டிகல் சிச்சுவேஷனை இண்டலிஜெண்டா ஹேண்டில் பண்ணின பாரு.. உன்னை அப்ரிஷியேட் பண்ணியே ஆகனும்.. யு ஆர் ஸோ ஸ்வீட்..”

வினித் உத்ராவின் கன்னத்தில் முத்தமிட்டான்..

‘இதுதான் அப்ரிஷியேட் பண்ணுகிற லட்சணமா..?’

உத்ராவுக்கு சிரிப்பு வந்தது.. யு ஆர் ஸோ கிரேட் என்றுதான் அப்ரிஷியேட் பண்ணுவார்கள்.. யு ஆர் ஸோ ஸ்வீட் என்று கொஞ்சத்தான் செய்வார்கள்..

காதலனுக்கு பாராட்டுவது கூட ஓர் வகையான கொஞ்சல்தான்..

# அத்தியாயம் 153

**வி**னித்தும் உத்ராவும் ஒருவருடன் ஒருவர் பிணைந்து நடந்தபடி கடலோர இயற்கைக் காட்சிகளை ரசித்துக் கொண்டிருந்தார்கள்..

“ஆக்ஷுவலா உத்ரா.. கேரளத்து இயற்கையழகு என்னை இம்ப்ரெஸ் பண்ணுது.. என்ன ஒரு கூல் கிளைமேட்..! நாம ஹனிமூன் கொண்டாடறதுக்கு ஏத்த இடம்தான்.. இதைவிட பெட்டரா எந்த இடமும் இருக்க முடியாதுதான்.. பட்.. நாம மட்டும் தனியா இருந்திருக்கனும்டி.. இப்பப் பாரேன்.. ஹனிமூன் கொண்டாடற ஃபீலே வரலை.. என்னவோ டூர் வந்திருக்கிற மாதிரியே இருக்கு..” வினித் ஆதங்கப் பட்டான்..

உத்ராவுக்கு சங்கடமாகத்தான் இருந்தது.. அவளுடைய தோழமைக்காக கணவனின் ஆசையை பின் தள்ளுகிறாளே என்று வருத்தம் கொண்டாள்..

“ஐ ஆம் ஸாரி..”

“ஏய்ய்..”

உத்ராவின் வருத்தத்தைப் பொறுக்க முடியாமல் அவள் தோளை அணைத்து இறுக்கிக் கொண்டான் வினித்..

“என் ஃபீலிங்கைச் சொன்னேன்டி.. இதுவும் கூட ஒரு வகையில் நல்லாத்தான் இருக்கு.. அப்பப்பக் கிடைக்கிற தனிமையிலே அப்பிக்கலாம் பாரு..”

“அப்பிக்கிறதோட இவர் நிறுத்திக் கொள்கிறவர்தான்..”

“ஏன் நிறுத்திக்கனும்..? நான் உன் புருஷன்.. லைசன்ஸ் உன் கழுத்தில் இருக்கு.. தொட்டுப் பார்த்துக்க..”

“உங்களைத் தொட்டுப் பார்த்துக்கவா..?”

“வேணாம்ன்னா சொல்லுவேன்..? வா.. தொடு..” ஆசையுடன் வினித் தன் மார்பைக் காண்பிக்க அதில் முகம் புதைத்தாள் உத்ரா.. புதிதாக திருமணம் ஆனவர்களுக்குப் பின்னிப் பிணைய காரணம் வேண்டும்.. கிடைக்கவில்லையென்றாலும் அவர்கள் அதை உற்பத்தி செய்து கொள்வார்கள்..

“உத்ரா..”

நந்தினியின் குரலில் அவசரமாய் விலகினாள் உத்ரா.. வினித்தின் முகத்தில் தெரிந்த ஏமாற்றத்தில் குற்ற உணர்வு ஏற்பட..

“ஸாரி எகெய்ன்..” என்றாள்..

“இட்ஸ் ஆல்ரைட்டுன்னு சொல்ல மாட்டேன்.. என்னன்னு கேட்டு அனுப்பிட்டு வா..”

நந்தினியை எங்கே அனுப்பி விட்டு உத்ராவை எங்கே வரச் சொல்கிறான்..? என்ற நினைவில் எரிப்பு வந்தது உத்ராவுக்கு.. வந்திருப்பது வயநாட்டக்கு.. ரவிச்சந்திரனின் விருந்தாளிகள் அவர்கள்.. நந்தினி உத்ராவின் தோழி.. ரவிச்சந்திரனின் பாதுகாவலில் இருப்பவள்.. அவளைத் தவிர்க்க முடியுமா..? அவளைத் தவிர்ப்பதற்காக உத்ரா வயநாட்டுக்கு வந்திருக்கிறாள்..? நந்தினியைப் பார்த்து விட்டுப் போகத்தானே வந்திருக்கிறாள்..?

‘காதலும், தாபமும் அனைத்தையும் மறக்கடித்து விடும் போல..’

“உத்ரா..” மறுபடியும் நந்தினி குரல் கொடுத்தாள்..

“இங்கே இருக்கேண்டி..” கணவனின் முறைப்பை ரசித்தவண்ணம் உத்ராவும் பதிலுக்கு குரலைக் கொடுத்தாள்..

“ரூமுக்கு வா.. போசிக்கறேன்.. அங்கே இருக்குடி உனக்கு..” வினித் தாழ்ந்த குரலில் எச்சரித்தான்.. அங்கே என்ன கிடைக்கும் என்ற அறிதலில் கிளர்ச்சியடைந்த உத்ரா..

“ச்சீய்..” என்று கணவனின் கையைக் கிள்ளினாள்..

“இங்கே இருக்கியா..?” என்றபடி வந்த நந்தினியின் கண்கள் கலங்கியிருந்தன..

“என்னடி ஆச்சு..?” உத்ரா பதட்டத்துடன் வினித்தை மறந்தவளாக தோழியின் கையைப் பிடித்து முகவாயை நிமிர்த்தி முகம் பார்த்தாள்..

“நத்திங்டி..” என்ற நந்தினியின் விழிகள் கண்ணீரில் மிதந்தன..

“ஒண்ணுமில்லாததுக்கா அழுவ..? என்னன்னு சொல்லு..”

உத்ராவின் வற்புஹறத்தலில் எதையோ சொல்ல வாய் திறந்த நந்தினி..

“வினித்..” என்ற ரவிச்சந்திரனின் குரலைக் கேட்டதும் திறந்த வாயை இறுக மூடிக் கொண்டாள்..

முக உணர்வுகளை அவன் அறியா வண்ணம் அவள் மறைத்துக் கொண்டதில் இமைகள் சுருங்க தோழியைப் பார்த்தாள் உத்ரா..

‘ஏன் இப்படி இருக்கிறா..?’

வாய் என்னவோ வினத்தை அழைத்தது.. பார்வை நந்தினியை மட்டுமே துழாவியது.. உத்ராவின் அருகில் நந்தினியைக் கண்டதும்..

“இங்கேதான் வருகிறன்னு சொல்லாம ஓடி வருவியா..?” என்று சப்தம் போட்டான் ரவிச்சந்திரன்..

நந்தினி உத்ராவின் முதுகிற்குப் பின்னால் மறைந்து கொள்ள..

“ஏன் சார்..? அவ இங்கே வராம வேற எங்கே போகப் போகிறா..?” என்று தோழிக்கு பரிந்து கொண்டு வந்தாள் உத்ரா..

“அதைச் சொல்லிட்டு வரனுமா.. வேண்டாமா..? இது கேரளா உத்ரா.. இவ பாட்டுக்கு வழி தப்பிப் போயிட்டா

என்னை நம்பி இவளை அனுப்பி வைத்திருக்கிற உங்களுக்கு யார் பதிலைச் சொல்வது..?'' படபடத்தான் ரவிச்சந்திரன்..

கோழிக்கோடின் கடற்கரையில் அங்கே இருக்கும் ரவிச்சந்திரனிடமிருந்து இங்கே இருக்கும் உத்ராவிடம் நந்தினி வந்து விட்டதற்காக இத்தனை பேச்சு..?

உத்ராவிற்கே அது ஓவர் என்று தோன்றியது.. இருந்தாலும் ரவிச்சந்திரனின் வார்த்தைக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதற்காக..

``நீயும்தான் சொல்லாம வரலாமாடி..? சாரிடம் ஒரு வார்த்தை சொல்லி விட்டு வருவதற்கென்ன..?'' என்று தோழியைக் கடிந்து கொண்டாள்..

``சொல்லத்தான் நினைத்தேன்..''

நந்தினி சொன்னது பழைய பாடலைப் போல இருந்ததில் வினித் ரசித்துச் சிரித்தான்.. அவன் சிரிப்பை ரசிக்காத ரவிச்சந்திரன் நந்தினியை முறைத்தான்..

``கேட்டுக்கங்க உத்ரா.. இங்கே வருகிறேன்னு சொல்கிறதுக்குக் கூட உங்க ஃபிரண்ட் நினைத்தாளாம்.. ஹௌவ் இஸ் இட்..?''

“ஏண்டி காமெடி பண்ற..? சார் கேட்கிறதுக்குப் பதிலைச் சொல்லு..”

“எதைச் சொல்கிறதா இருந்தாலும் கேட்கிற நிலைமையில இவர் இருக்கனுமே..”

“என்னடி சொல்கிற..?”

ரவிச்சந்திரன் குடித்திருக்கிறானோ.. அதனால்தான் அவள் சொல்வதை கேட்கக் கூடிய நிலைமையில் அவன் இல்லையோ என்ற சம்சயத்துடன் ரவிச்சந்திரனை சந்தேகத்துடன் பார்த்து வைத்தாள் உத்ரா..

‘ஸ்டடியாத்தான நிக்கிறாரு..? அப்புறம் ஏன் இவ இப்படிச் சொல்கிறா..?’

“குட்.. நான் டிரிங்க் பண்ணியிருக்கிறேனான்னு டவுட் படுகிறதைப் போல இருக்கு.. உங்க ஃபிரண்டுக்கு வேலை கொடுத்திருக்கேனில்ல..? இவ இதைப் போலதான் பெயர் வாங்கிக் கொடுப்பா..? உளருகிறது நானில்ல... இவதான்.. நான் ஸ்டடியாத்தான் இருக்கேன்..” உக்கிரத்துடன் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான் ரவிச்சந்திரன்..

“திஸ் இஸ் டூ மச் நந்தினி.. உனக்கு வேலை கொடுத்ததே தப்புங்கிற லெவலில சாரைத் திங் பண்ண வைக்கிற..? ஏண்டி இப்படிப் பினாத்தற..?”

“உனக்கு நான் பேசுகிறது பினாத் தலாத்தான் இருக்கும் உத்ரா.. அங்கே என்ன நடந்ததுன்னு உனக்குத் தெரியாது..”

“என்னடி நடந்தது..? கடலிலே இருந்த சுறா மீன் ஏதாச்சும் கரையில ஒதுங்கி நடந்துச்சா..?”

மனைவியின் நகைச்சுவையை ரசித்த வினித்..

“வாவ்..!” என்றான்..

ரவிச்சந்திரன் அவனை எரிப்பதைப் போல பார்த்து வைத்தான்..

‘ஜோக்கு..?’ என்றது அவனது பார்வை..

“நிஜமாவே ஜோக்தான் சார்.. உங்களுக்குச் சிரிப்பு வரலையா..?” வினித் விசாரித்தான்..

“வரலை..” ரத்தின சுருக்கமாக சொன்னான் ரவிச்சந்திரன்..

“அவளுக்கு வரலைன்னா விட்டு விடுங்களேன்..” என்றாள் உத்ரா..

“என்னவோ போ உத்ரா.. நீயும் உன் ஃபிரண்டும் பேசிக்கிறதைக் கேட்டா செம காமெடியா இருக்கு.. ஹா.. ஹா..” சிரித்து மகிழ்ந்து போனான் வினித்..

“எல்லாம் உன்னாலேதாண்டி.. எதைச் சொன்னாலும் தெளிவாச் சொல்கிறயா..? இப்போப் பார்.. உன்னாலே சார் டென்ஷன் ஆகிறார்.. வினித் ரிலாக்ஸ் ஆகிறார்..”

“நீ சும்மா இரு உத்ரா.. எதுக்கெடுத்தாலும் என்னையே குறை சொல்லாதே.. நானும் பாஸும் கடலோரமா நடந்துக்கிட்டு இருந்தோம்.. அங்கே பாஸோட கேர்ள் ஃபிரண்ட் வந்துட்டாங்க..”

‘ஓ..! கதை இப்படிப் போகுதா..?’

நந்தினியின் மனக் குமுறலுக்கான காரணத்தை கண்டு கொண்டாள் உத்ரா.. தோழியின் மனதில் சலனம் வந்திருப்பதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது..

“அவள் என் கேர்ள் ஃபிரண்டில்லை..” முகம் சுளித்தான் ரவிச்சந்திரன்..

“ஓ.. அப்ப லவ்வரோ..?” வேண்டுமென்றே கேட்டாள் நந்தினி..

பக்கத்தில் வினித், உத்ரா இருப்பதைப் பொருட் படுத்தாமல் அவளை ஆழ்ந்து இமைக்காமல் ஓர் பார்வை பார்த்தான் ரவிச்சந்திரன்.. மனம் படபடக்க நந்தினிதான் தலையைக் குனிந்து கொள்ள வேண்டியதாக இருந்தது..

வினித்தும் உத்ராவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.. அவர்களின் பார்வைகள் ரகசியம் பேசிக் கொண்டன..

இனம் இமைறியும் பார்வைப் பரிமாற்றம் அது.. "லுக்..! வாய் இருப்பதற்காக எதை வேண்டு மானாலும் பேசி விடக் கூடாது.. அவள் எனக்குப் ஃபிரண்டே இல்லை என்கிறேன்.. நீ லவ்வரான்னு கேட்கிற..? இது ஸ்டுப்பிட் கொஸ்டின்னு மத்தவங்களுக்குத்தான் தெரியாது.. உனக்குமா தெரியாது..?"

ரவிச்சந்திரன் 'உனக்குமா' என்ற வார்த்தையில் கொடுத்த அழுத்தத்தில் உதட்டைக் கடித்தாள் நந்தினி..

"ஐ டோன்ட் நோ பாஸ்.. நேற்று கல்ச்சுரல் ஃபங்ஷனில அவங்க உங்க மடி மேல உட்கார்ந்து உட்கார்ந்து பேசிக்கிட்டு இருந்தாங்களா..? நான் உங்க லவ்வரோன்னு நினைத்துட்டேன் பாஸ்.."

“நினைப்ப.. நினைப்ப.. ஏன் நினைக்க மாட்ட..? அவ என் மடியிலா உட்கார்ந்திருந்தா..? என் சீட் கைபிடியில உட்கார்ந்திருந்தா..”

“இரண்டுக்கும் நடுவில ஒரு இன்ச் கூட இடைவெளியில்ல பாஸ்..”

“பக்கத்து சீட்டில் நீ உட்கார்ந்திருந்த.. அதனால அப்படி உட்கார்ந்து விட்டா..”

“ஓ.. அது வேறு குறையா உங்களுக்கு..? சொல்லியிருந்தா நான் என் சீட்டை விட்டுக் கொடுத்துட்டு லாஸ்ட் ‘ரோ’க்குப் போயிருப்பேனே பாஸ்.. அப்போதும் ஒன்றும் கெட்டுப் போகலையே.. நான் பாட்டுப் பாட மேடையேறினப்ப அவங்க என் சீட்டை ஆக்குப்பை பண்ணியிருந்தாங்கள்ல.. அப்படியே உட்கார விட்டிருக்கலாமில்ல..? எதுக்காக அவங்களை எழுப்பி விட்டு என்னை உட்கார வைத்தீங்க..? உங்க மடிமேல அவ மறுபடியும் உட்கார்ந்து பேசனும்ங்கிற ஆசையினாலே தானே..?”

நந்தினிக்கு வாய் அதிகம் என்று உத்ரா சொல்லக் கேட்டிருக்கிறான் வினித்.. அதற்கு மேல் அவளது வாய் பற்றித்

தெரிந்து கொள்ள அவன் விரும்பியதில்லை.. புது மனைவியிடம் அவன் தெரிந்த கொள்ள ஏகப்பட்டவைகள் இருந்ததினால் அவன் நந்தினியின் பேச்சாற்றலைப் பற்றிக் கேள்வி கேட்க விரும்பியதில்லை..

அன்று அவள் போட்டுத் தாக்கிய தாக்கலில் தேநிலவை மறந்து அவள் பேச்சை படு சுவராஸ்யமாக வேடிக்கை பார்க்க ஆரம்பித்து விட்டான் வினித்..

நந்தினியின் தாக்குதலை விரும்பி ஏற்றுக் கொண்டிருந்தான் ரவிச்சந்திரன்.. அவள் நடத்திக் கொண்டிருந்த யுத்தத்தை ரசித்தான்.. அவன் எப்படி பந்து வீசினாலும் எதிர்கொண்டு பதிலுக்கு பந்தை வீசும் அவளது விதண்டாவாதம் அவனுக்குப் பிடித்திருந்தது.. இந்தக் கோபத்திற்கு மூல காரணம் என்ன..? நந்தினியின் மனதில் எழுந்திருக்கும் பொறாமைதானே.. காதல் துளிர்க்கும் போது பொறாமையும் சேர்ந்தே துளிர்க்கும்.. தன் உரிமை என்று நினைக்கும் இடத்தில்தான் பொறாமை வரும்..

நந்தினி ரவிச்சந்திரனை அவளுடையவன் என்று நினைத்து விட்டாளா என்ன..?

# அத்தியாயம் 154

**உ**த்ராவுக்கும் அதே எண்ணம் தோன்றியிருக்க வேண்டும்..

“வாடி.. இப்படி..” என்று தோழியைத் தள்ளிக் கொண்டு கிளம்பி விட்டாள்..

போகும் போது மறக்காமல் வினித்திடம் கெஞ்சுதலான சரசப் புன்னகையைச் சிந்தி..

“ஜஸ்ட் ஃபியு மினிட்ஸ் ப்ளீஸ்..” என்று ஒப்புதல் வாங்கிக் கொள்ளத் தவறவில்லை..

அவனிடம் அனுமதி வாங்காமல் உத்ரா தோழியுடன் தனித்துப் பேச செல்ல மாட்டாள் என்ற கர்வத்தினால் மிதப்பாக ரவிச்சந்திரனை ஓர் பார்வை பார்த்து விட்டு..

“டேய் யுவர் ஓன் டைம்..” என்று கொடை வள்ளலைப் போல அனுமதியை அள்ளி வழங்கினான் வினித்..

“வினித்துக்கு நான் கம்பெனி கொடுக்கறேங்க.. உங்க ஃபிரண்ட் எதுக்காக சொல்லாம வந்தாங்க என்கிறதைப் பொறுமையாக் கேட்டுத் தெரிந்த பின்னால் நீங்க வந்தால்

போதும்..” என்று வினித்தை தான் பார்த்துக் கொள்வதாக உறுதியளித்தான் ரவிச்சந்திரன்..

அவ்வளவு பெரிய கோடிஸ்வரன் வினித்துக்கு கம்பெனி கொடுக்கிறேன் என்று சொன்னதில் வினித்தின் மனதிலிருந்த கொஞ்ச நஞ்ச மனத்தாங்கலும் ஓடோடிப் போய் விட்டது..

“என்ன சார்.. நீங்க எனக்குக் கம்பெனி கொடுக்கிறதா..? நான் உங்களுக்குக் கம்பெனி கொடுக்கறேன்.. வாங்க சார்.. அப்படி கடலோரமா காலாற நடந்துட்டு வரலாம்..” என்று ரவிச்சந்திரனை அழைத்தான்.

“நீங்களும் உத்ராவும் என்னுடைய கெஸ்ட்.. ஸோ.. நான்தான் உங்களுக்குக் கம்பெனி கொடுக்கனும்..” கர்வமில்லாமல் சொன்ன ரவிச்சந்திரன் உத்ராவைப் பார்த்து..

“அதோ.. அங்கே இருக்கிற ரெஸ்ட்டாரெண்டில உட்கார்ந்து உங்க ஃபிரண்ட் மொக்கறதுக்கு எதையாவது வாங்கிக் கொடுத்துட்டு பேச்சை ஆரம்பிங்க.. அந்தப் பெண் முன்னாடியே என்னுடன் சண்டை போட்டாள்.. நான் திரும்பிப் பார்க்கிறதுக்குள்ள அங்கிருந்து எஸ்ஸாகிட்டா.. ஏன்னு கேளுங்க.. வயிற்றில எதையாவது போட்டுக்கிட்டு இருந்தாத்தான் இவ ஒழுங்காப் பேசுவா.. அங்கிருந்து

பார்க்கிறதுக்கு கடல் வியு பிரமாதமா இருக்கும்.. உங்களுக்குப் பிடித்த சீனரிஸை நீங்களும் பார்க்கலாம்.. உங்க ஃபிரண்டுக்குப் பிடித்த ஃபுட் வெரைட்டிஸை அவளும் மொக்கலாம்.. ஓகேதானே..?" என்று அபிப்ராயம் கேட்பதைப் போல ஆலோசனை வழங்கினான்..

நந்தினியை அவன் கணித்து வைத்திருந்த விதத்தில் உத்ராவுக்கும் வினித்துக்கும் சிரிப்பு வந்து விட்டது.. ஒன்று போல அவர்கள் சிரித்து வைத்ததில் வெறியாகிப் போன நந்தினி உத்ராவை மொத்தினாள்..

"இப்படி விட்டுக் குடுக்கிற ஃபிரண்ட் கிடைக்கிறதுக்கு நான் போன ஜென்மத்தில புண்ணியம் செய்திருக்கனும்டி.. காட்டிக் கொடுக்கிற எட்டப்பியே.. வினித் அண்ணா நீங்களுமா..?"

"யு டூ வினித் அண்ணா..? இப்படியில்ல நீ கேட்டிருக்கனும்.. ஹா.. ஹா.."

"ஏய்ய்.. அடங்குடி.. அண்ணா நல்லவர்தான்.. உன்னைக் கல்யாணம் பண்ணியிருக்காரில்ல.. அதான்.. உன் காத்து அடிச்சிருச்சு.."

“அதைவிடு.. இப்ப உன்னை எந்த காத்து, கருப்பு அடிச்சிருச்சுன்னு கண்டு பிடிக்கலாம்.. வினித்.. பர்ஸைக் கொடுங்க.. பில் பே பண்ண பணம் வேணும்..”

வினித் பேண்ட் பாக்கெட்டில் இருந்து பர்ஸை எடுப்பதற்குள் ரவிச்சந்திரன் பணத்தை எடுத்து நந்தினியிடம் நீட்டினான்.. உத்ராவிடம் கொடுக்காமல் நந்தனியிடம் அவன் நீட்டியதில் வெளிப்பட்ட அவனது புரிந்து கொள்ளலை மனதுக்குள் மெச்சிக் கொண்டான் வினித்..

‘சும்மாவா.. பிஸினெஸ் வெர்ல்டில சூப்பர் ஸ்டார் பட்டம் வாங்கியிருக்காரு..?’

வினித்தின் மனைவியிடம் ரவிச்சந்திரன் செலவு செய்ய பணத்தைக் கொடுக்கக் கூடாது.. நந்தினியிடம் கொடுக்கலாம்.. நந்தினி ரவிச்சந்திரனிடம் வேலை பார்ப்பவள்.. வித்தியாசமாக நினைக்க ஏதுமில்லை..

“வினித்தும் அவரோட வொய்ஃபும் நம்ம கெஸ்ட்.. இங்கே அவங்க ஸ்பெண்ட் பண்ற டேஸில அவங்களுக்கான அத்தனை செலவையும் நாமதான் பார்த்துக்கனும்.. அண்டர்ஸ்டாண்ட்..” என்று வினித்தை முக்கிய விருந்தாளியாக்கி உத்ராவை அவனது மனைவியென்று

அடையாளப் படுத்தி அதனால் அவர்களுக்கு அவளும் விருந்தாளியென்று சொல்லியதில் வினித்தின் கணவன் என்ற ஈகோ படு திருப்தியானது..

ரவிச்சந்திரன் நீட்டிய பணத்தை முறைப்புடன் வாங்கிக் கொண்டாள் நந்தினி.. இல்லையென்றால் அதற்கும் பாட்டு வாங்க வேண்டி வருமே..

இரு ஜோடிகளும் ஆண்கள் ஒருபுறம் என்று பிரிந்து நடந்தார்கள்.. உத்ராவுடன் சென்ற நந்தினி திரும்பிப் பார்த்த அதே நொடியில் வினித்துடன் நடந்து கொண்டிருந்த ரவிச்சந்திரனும் திரும்பிப் பார்த்து வைத்ததில் இருவர் பார்வைகளும் சந்தித்துக் கொண்டன..

ரவிச்சந்திரனின் கண்கள் மின்னியதில் வினித் என்னவென்று அறிந்து கொள்ளும் ஆவலில் திரும்பிப் பார்த்தான்.. நந்தினியின் உடலில் ஓடிய சில்ர்ப்பை அவளது முகம் பிரதிபலித்ததில்..

“என்னடி.. மந்திரிச்சு விட்ட கோழி போல ஒரு மார்க்கமா முழிக்கிற..?” என்று சந்தேகத்துடன் கேட்டபடி உத்ராவும் திரும்பிப் பார்த்தாள்.. ரவிச்சந்திரனும் நந்தினியும் கள்ளப்

பார்வை பார்ப்பதை இவர்கள் பார்த்து விட்டு.. தலையை ஆட்டிச் சிரித்தார்கள்..

“ஏய்ய்..! சைட்டா அடிக்கிற..?” உத்ரா மிரட்டினாள்.

“யாரை..? இந்த கம்மாண்டரையா சைட் அடிக்கிறேன்னு சொல்கிற..? இவனை சைட் அடிச்சிட்டாலும்.. கழுதையில..” நந்தினி சூள் கொட்டினாள்..

“உன் வாய்தான் அப்படிச் சொல்லுது.. ஆக்ஷனெல்லாம் வேற மாதிரி இருக்குது..”

“ஒரு ஆக்ஷனும் இல்ல..? உனக்குத் தெரியாதுடி உத்ரா.. ஈ கம்மாண்டர் ஆயிரம் பெல்ட் மன்னர்களுக்கு ஈக்குவல்.. ஒத்தை பெல்ட் மன்னனைச் சமாளிக்க முடியாமலே ஓடி வந்திருக்கேன்.. இதில ஆயிரம் பெல்ட் மன்னன்களுக்குச் சவால் விடற கம்மாண்டரையா கன்சிடர் பண்ணுவேன்..?”

“அப்படிங்கற..?”

“ஆமாங்கிறேன்..”

“நம்ப முடியலையே..”

உத்ரா வாயால் சொன்னதை வினித் பார்வையால் உணர்த்தினான்.. நந்தினியைப் பார்ப்பதை வினித் கண்டு கொண்டதில் சன்னமாக சிரித்த ரவிச்சந்திரன்..

“நத்திங்..” என்றான்..

‘ஒன்றுமேயில்லையா..?’ வினித் நம்பாத பார்வை பார்த்தான்..

“யு ஸீ வினித்..” ரவிச்சந்திரன் பேச்சை மாற்றி கேரளத்தின் அரசியல் சூழலைப் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டான்..

பதிலுக்கு வினித் தமிழகத்தின் அரசியல் சூழலை விமரிசித்து இரு மாநில அரசியலையும் ஒப்பிட்டுப் பேச ஆரம்பிக்க பேச்சு அப்படியே மத்திய அரசின் அரசியல் சூழலுக்குத் தாவியது.

வினித் உத்ராவையும் நந்தினியையும் மறந்து காரசாரமாக அரசியல் விவாதத்தில் இறங்கி விட்டான்.. ரவிச்சந்திரனுக்கு அதுதானே வேண்டும்.. கடலோரமாக போடப்பட்டிருந்த மர பெஞ்சுகளில் நிழல் குடைக்குக் கீழ் உட்கார்ந்தவன் அருகிலிருந்த குளிர்பான விற்பனை

வண்டியிலிருந்து வினித்துக்கும் அவனுக்கும் குளிர் பான பாட்டில்களை தருவித்து வினித்திடம் ஒன்றை நீட்டினான்..

“பேசிப் பேசித் தொண்டை வறண்டிருக்கும்.. கூல்டிரிங்க் சாப்பிட்டுத் தொண்டையை நனைத்துக்கங்க..”

ரவிச்சந்திரனின் உபசரிப்பில் கவரப் பட்டவனாக வினித் சிரித்தான்.. கடலோர மர பெஞ்சும்.. காலைத் தொட்ட கடலலையும்.. கையில் குளிர்பான பாட்டிலும்.. உடலில் படியும் குளிர் காற்றும்.. பார்ப்பதற்கு பச்சைப் பசேலென்று கண்ணுக்குக் குளிர்ச்சியைக் குடுத்த தென்னை மரங்களுமாக அந்தச் சூழலே குளிர் நிரம்பிய இனிமையானதாக இருந்தது.. வினித்துக்கு கேரளாவைப் பிடித்துப் போனது.

‘இதை விடவா சிம்லா அழகு..?’

அவன் இயற்கைக் காட்சிகளை ரசித்தபடி பேச்சைத் தொடர்ந்தான்.. காதலர்கள் காதல் மொழிகளைப் பேசிக் கொள்வது மட்டும் சுகமில்லை.. நண்பர்கள் உட்கார்ந்து அரசியலைப் பற்றி ஆய்வு செய்வது கூட சுகம்தான்.. என்பதை அனுபவ பூர்வமாக உணர்ந்தது அவன் மனது.. அங்கே உத்ரா நந்தினியை இழுத்துக் கொண்டு ரெஸ்ட்டாரெண்டுக்குள் நுழைந்தாள்.. கடலோரமாக இருந்த ரெஸ்ட்டாரெண்டின்

ஜன்னலோரமாக இருந்த இருக்கைகளில் அவர்கள் எதிரும் புதிருமாக அமர்ந்தார்கள்.. கடலின் அழகை ரசித்த உத்ரா..

“அழகா இருக்கில்ல..?” என்றாள்..

“இங்கே எல்லாமே அழகாத்தான் இருக்கும்..” அசட்டையாக பதில் சொன்னாள் நந்தினி..

“என்னடி இப்படி விட்டேற்றியாப் பேசற..? இயற்கையை ரசிக்கிறதுன்னா உனக்கு அவ்வளவு பிடிக்குமே..”

“இப்பவும் பிடிக்கும்தான் உத்ரா.. பட்.. மனசு ஒரு நிலையில் இல்லாம அலைபாயுதுடி.. எதிலும் மனசு ஒட்ட மாட்டேங்குது.. எரிச்சல் எரிச்சலா வருது.. சம் டைம்ஸ் ‘ஓ’ன்னு அழனும் போல இருக்கு.. எதனாலன்னு தெரியல.. வயநாட்டை விட்டு ஓடிடனும் போல இருக்கு.. ஆனாப் போக முடியல.. ஏன்னும் தெரியலை..”

நந்தினியின் கண்கள் கலங்கின.. உத்ராவுக்குத் தெரிந்தது.. ஏன், எதனால் என்பது அவளுக்குத் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது.. ஆனால் அதை அவள் உறுதிபடுத்திக் கொள்ள முயன்றாள்.. நந்தினியின் குணத்தை அறிந்தவள் உத்ரா..

அனைவரிடமும் இயல்பாக பழகுபவள்.. கலகலப்பாக பேசிச் சிரிப்பாள்.. ஆனால் காதல் என்று விழுந்ததில்லை.. கள்ளப் பார்வை பார்த்ததில்லை.. நேர் கொண்ட பார்வையுடன் பேசுவாள்.. எதிர் கொள்ள நேரிடும் காதல் விண்ணப்பங்களைத் தவிர்த்து விடுவாள்.. ஏண்டி என்றால்..

“எனக்குக் காதல் வரலையேடி..” என்று கையை விரிப்பாள்..

வராத காதலை வா, வா, என்று வெற்றிலை பாக்கு வைத்து அழைக்க வேண்டிய அவசியம்தான் என்ன என்ற கோட்பாடை உடையவள் நந்தினி.. காதல் சொல்பவர்களைக் காமெடி பீஸாக்கி சிரித்து விட்டுப் போய் விடுவாள்..

“இந்தப் பெண் என்னடா எதைச் சொன்னாலும் சீரியஸா எடுத்துக்காம சிரித்துட்டுப் போயிடுது..?”

தலையைப் பிய்த்துக் கொள்ளும் காதல் மன்னன்கள் நந்தினியிடம் காதல் சொல்வது கற்பாறையில் தலையை மோதிக் கொள்வதற்கு சமம் என்ற முடிவிற்கு வந்து விலகிப் போய் விடுவார்கள்..

‘இவளிடம் ஏதோ விடற நேரத்தில வேற யாருக்காவது ஏரோ விட்டாலாவது யூஸ் ஆகும்..’

இப்படிக் காதல் மன்னன்களையும்.. “ஹாய்..” சொல்ல வைத்து நண்பர்களாக்கி விடும் வல்லமை படைத்த நந்தினியா இப்படித் தடுமாறுகிறாள்..

கண் முன்னால் பரத்தி வைக்கப் பட்டிருந்த உணவு வகைகளை வெறித்துப் பார்த்தபடி இருந்த நந்தினியைப் பார்த்த உத்ராவிற்கு இவள் என் தோழி நந்தினிதானா என்ற சந்தேகம் எழுந்தது..

‘நந்தினியா இப்படி ஃபுட் வெரைட்டிஸைத் தொட்டுப் பார்க்காம விரதமிருக்கிறவளைப் போல வெறிச்சுப் பார்க்கிறா..?’

பித்துப் பிடித்தவளைப் போல இருந்த நந்தினியைப் பார்க்கப் பார்க்க உத்ராவுக்குக் கவலையாக இருந்தது..

**‘தூண்டிற் புழுவினைப் போல் - சிறு**

**சுடர் விளக்கினைப் போல்..**

**நீண்ட பொழுதாக என் நெஞ்சம் துடிக்குதடி..’**

எட்டயபுரத்தின் முண்டாசுக் கவிஞன் சொன்னது இதைத்தானோ..? வேண்டும் பொருள்களையெல்லாம் மனது வெறுத்து விட்டதடி என்று சொன்னானே..

**‘பாலிருக்கும்.. பழமிருக்கும்..**

**பசியிருக்காது..**

**பஞ்சணையில் காற்று வரும்**

**தூக்கம் வராது..**

**நாலுவகை உணவிருக்கும்..**

**ஆசை வராது..**

**நடக்க வரும் கால்களுக்கும்**

**துணிவிருக்காது..’**

கண்ணதாசன் பாடி வைத்தது இதைத்தானா..?

# அத்தியாயம் 155

**'வசீகரா..! என் நெஞ்சினிக்க..**

**உன் பொன் மடியில்**

**தூங்கினால் போதும்..'**

**எ**ன்று எழுதி வைத்தவள் பெண்.. தாமரையெனும் பெயர் கொண்டவள்.. ஆண் கவிஞர்கள் ஆதிக்கம் கெடுத்தும் திரைப்படத் துறையில் பெண் கவிஞராய் உள் நுழைந்து வசீகரித்தவள்..

எட்டயபுரத்து முண்டாசுக் கவியும், கண்ணதாசனும் ஆண்களாயிற்றே.. பெண்ணின் மன உணர்வுகளை இம்மியளவும் பிசகாமல் எப்படி எழுத்தில் வடித்தார்கள்..?

"சாப்பிடேண்டி.."

"ம்ப்ச்.. இண்ட்ரெஸ்ட் இல்லை உத்ரா.."

"ஏன்..?"

"தெரியலைங்கிறேனே.."

“ம்ம்ம்.. வயநாட்டில உன் வேலை எப்படியிருக்கு நந்தினி..?”

“ஏதோ இருக்கு..”

“ரவி சார் எப்படி ட்ரீட் பண்றார்..? எனி பிராப்ளம்..?”

இந்தக் கேள்விக்காகவே காத்திருந்ததைப் போல நந்தினி புலம்பித் தீர்த்து விட்டாள்..

“ஒரு நேரம் சிரிக்கிறார்.. ஒரு நேரம் பேசியே ஆளைச் சாகடிக்கிறார்.. பேச்சுன்னா பேச்சு.. அப்படியொரு பேச்சு உத்ரா.. உங்க வீட்டுப் பேச்சு.. எங்க வீட்டுப் பேச்சில்லை.. ஒட்டு மொத்தமா எல்லாப் பேச்சையும் குத்தகைக்கு எடுத்திருக்கிறதைப் போலப் பேசித் தீர்த்திடுவார்.. கொடுமையா இருக்கும்..”

“பார்த்தாத் தெரியலையே.. ஜெண்டிலா பிஹேவ் பண்றார்..”

“எல்லாம் வேஷம்டி.. மத்தவங்களிடம் ஒரு முகம் காட்டுவார்.. என்னிடம் வேற முகம் காட்டுவார்.. தேள் போலக் கொட்டறார் உத்ரா.. ஓடிடனும் போல இருக்கும்..”

“ஏன் ஓடலை..? ஐ மீன்.. எனக்கு ஒரு ஃபோனைப் போட்டுக் கிளம்பி வந்து விடறேன்னு சொல்லியிருக்கலாமே.. ஏன் சொல்லலை..?”

“உன்னிடம்தான் சொல்லலை.. நீ என்னாலே நிறையக் கஷ்டப்பட்டுட்ட.. திரும்பவும் உன்னைக் கஷ்டப்படுத்த வேண்டாம்ன்னு நினைத்தேண்டி.. மத்தபடி கோழிக்கோடில வந்து இறங்கிய ஒன் விக்கில வயநாட்டுக்குப் போகாம சென்னைக்கு ரிட்டர்ன் ஆகத்தான் பிளான் பண்ணினேன்.. நம்ம கிளாஸ் மேட் தீபா இருக்காள்ல.. அவளுக்குப் ஃபோன் போட்டு ஹெல்ப் கேட்டேன்.. அவளோட கசின் ஒருத்தி தனியா அபாட்மெண்ட் எடுத்துத் தங்கியிருக்கிறா.. அவகூட ஸ்டே பண்ணிக்கன்னு அவ சொன்னா..”

“நீயும் ஊம் கொட்டிக் கேட்டுட்டுக் கிளம்பிட்ட..? அறிவிருக்காடி.. அவதான் நம்ம ஃபிரண்ட்.. அவளோட கசின் சிஸ்டர் யாரோ.. எவரோ.. என்ன குணமோ..?

ஒருவேளை அவளோட பழக்க வழக்கம் சரியில்லாம இருந்திருந்தா என்ன செய்வ..? உன் பேரும் கெ ட்டு விடாதா..?”

“இதைத்தான் அவனும் சொன்னான்..”

“எவன்..?”

“கம்மாண்டர்..”

“யு மீன் ரவிசார்..?”

“அந்த மோரேதான்..”

“அப்பவே கவனிச்சேன்.. சான்ஸ் கிடைத்தா அவன், இவன்ங்கிற.. அவர் எவ்வளவு பெரிய மனிதர்ன்னு உனக்கே தெரியுமில்ல..?”

“ஆ ஆள் பெரிய அப்பாடக்கராவே இருக்கட்டும்.. எனிக்கு எந்தா..?”

“இந்தா..! இந்த உடைஞ்ச மலையாளத்தை வேற எவகிட்டாயவது பேசு.. என்கிட்ட வேணாம்.. உனக்கு என்னதாண்டி வேணும்..?”

“தெரியலையே..”

பரிதாபமாகச் சொன்ன நந்தினியைப் பார்க்க பாவமாகத்தான் இருந்தது..

“என்னதாண்டி உன் பிரச்னை..?”

“அவன்தாண்டிப் பிரச்னை..? எதுக்கெடுத்தாலும் கத்தறான்.. மாமியார் போலவே பேசறாண்டி.. கை பட்டாலும் குத்தம்.. கால் பட்டாலும் குத்தம்..”

“நீயேண்டி உன் கை, காலை அவர் மேல போடற..?”

உத்ரா என்னவோ வேடிக்கையாகத்தான் கேட்டாள்..

சூழ்நிலையை இலகுவாக்க நந்தினிக்கு சிரிப்பு மூட்டவென்றுதான் கேட்டாள்.. நந்தினிதான் பதறிப் போய் விட்டாள்..

‘என்ன இவ.. இப்படிக் கேட்கிறா.. நீலிமலை வுட்-ஹவுஸில் நான் அவன்மேல கையைக் காலைப் போட்டுத் தூங்கினது இவளுக்கு எப்படித் தெரியும்..?’

நந்தினி விழித்த பேய் முழியில் உத்ரா பயந்து போனாள்..

“என்னடி..? இப்படி முழிக்கிற..? உன்னை ஏதோ காத்துக் கருப்பு பிடிச்சிருக்குன்னு நான் கெஸ் பண்ணினது சரிதான் போல இருக்கே..”

உத்ரா வைத்த பிலாக்கணத்தில் அருகிலிருந்த இளம் ஜோடி திரும்பிப் பார்த்தது.. எந்த நொடியும் ‘எனி ஹெல்ப்’

என்ற கேள்வியுடன் அவர்கள் வந்து விடலாம் போலத் தோன்றியதில்..

“சத்தம் போடாதடி..” என்று உத்ராவை அடக்கினாள் நந்தினி..

“இதை நீ சொல்லி நான் கேட்க வேண்டியதாப் போச்சு பாரு.. நேரம்டி..” அதற்கும் ஒரு பிலாக்கணம் வைத்தாள் உத்ரா..

“உனக்கே தெரிந்தாச் சரி..”

“ஜோக்கடித்தா சிரிக்கனும்.. இப்படி பேய்முழி முழித்து பக்கத்தில இருக்கிறவளைப் பயமுறுத்தக் கூடாது..”

‘ஓ.. இவ ஜோக்தான் அடிச்சிருக்கா.. நீலிமலை வுட்-ஹவுஸ் பத்தி எதுவும் இவளுக்குத் தெரியாது போல.. நல்ல வேளைடி நந்தினி.. நீயாய் எதையாவது உளறிக் கொட்டி மாட்டிக்காம தப்பிச்சிட்ட.. சூப்பர்டி..’

நந்தினி மனதுக்குள் தன்னைத் தானே பாராட்டி மகிழ்ந்து கொண்டிருக்க.. அவளை உற்றுப் பார்த்த உத்ரா..

“நீ என்னிடமிருந்து எதையோ மறைக்கிறதைப் போல இருக்கே.. உன் முழியே சரியில்லையே..” என்று தூண்டித் துருவினாள்..

‘லேசர் முழிடி உனக்கு..’ நந்தினி சமாளிப்பதாக நினைத்துக் கொண்டு..

“ஹி.. ஹி.. என் முழியே அப்படித்தானேடி..” என்று சிரித்து மழுப்பினாள்..

“இந்த ஐந்து வருஷமா பார்த்து பழகிக்கிட்டு இருக்கிற எனக்கு உன் பார்வை எப்படியிருக்கும்ன்னு தெரியாது பாரு.. புதுசா சொல்ல வந்துட்ட.. சென்னையில இந்த முழியை நீ முழிச்சு நான் பார்த்ததேயில்லையே..”

“வயநாட்டுக்கு வந்த பின்னாலே மாறிருச்சு.. போயேண்டி..” நந்தினி அலுப்புடன் சொல்ல..

“அப்படியாடி சொல்கிற..?” என்று ஆனந்தமானாள் உத்ரா..

“எதுக்கு இந்த சந்தோஷம்..?” கண்கள் இடுங்க தோழியை மேலும் கீழும் பார்த்தபடி கேட்டாள் நந்தனி..

“நீதானேடி.. போயேண்டின்னு சொன்ன..?”

“அதுக்கு..?”

“வினித் கிட்டப் போயிரவா..? வந்து ரொம்ப நேரமாச்சு..”

தோழியின் மனதிலிருப்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்ற கடமை மறந்து காதலாகி கசிந்துருகினாள் உத்ரா..

“வந்து ரொம்ப நேரமாச்சா..?” ஒரு தினுசான குரலில் கேட்டு விட்டு கைக்கடிகாரத்தில் மணி பார்த்த நந்தினி.. மணிக்கட்டை உத்ராவின் முகத்திற்கு நேரே உயர்த்திக் காட்டி..

“முழுசா ஆறு நிமிஷம் கூட ஆகலை.. அதுக்குள்ள ஆளாப் பறக்கற.. உனக்கு உன் பகுமானம்.. போடி போ..” என்று பொரிந்து தள்ளினாள்..

இப்போது “ஹி..ஹி..” என்று அசடு வழிவது உத்ராவின் முறையானது..

“பேசிக்கிட்டே இருந்ததில நேரம் போயிருச்சோன்னு நினைச்சேண்டி..”

“என்னத்தைப் பேசினோம்..? இன்னும் ஆரம்பிக்கவே இல்லை..”

“ஃபுட்டைச் சொல்றியா..? நானும் நினைச்சேன்.. நம்ம நந்தினி எதைக் காக்க வைத்தாலும் ஃபுட் அயிட்டத்தைக் காக்க வைக்க மாட்டாளே.. இன்றைக்கு ஏன் இப்படி டிலே பண்றான்னு நினைச்சேன்.. நீ சொல்லிட்ட..”

“தின்கிறதை நான் மறந்தாலும் மத்தவங்க மறக்க மாட்டேங்கறீங்கடி.. என்னைத் திங்க வைக்கறதிலேயே குறியாய் இருக்கீங்க.. நல்லா வருவீங்கடி..”

“அதான் வந்துட்டோம்ல்ல..”

“யாரு..?”

“நானும் வினித்தும்..”

“ஒரு செகண்ட் கூட உன் ஹஸ்பெண்டை மறக்காம அவர் நினைப்பிலேயே இருக்க பாரு.. அங்கே நிற்கறடி நீ..”

“இல்லையே.. உன் கண் முன்னாலே உட்கார்ந்து தானே இருக்கேன்..?”

“ஜோக்கு..?”

“யெஸ்.. மை டியர்..”

“சிரிப்பு வரலை விட்டிரு..”

நந்தினி முகச் சுளிப்புடன் தட்டிலிருந்த மீன் வறுவலை முள் கரண்டியால் விண்டு சுவைக்க ஆரம்பித்தாள்.. அவளது கவனம் உணவின் ருசியில் இல்லாமல் எங்கோ பதிந்திருந்ததை புரிந்து கொண்டாள் உத்ரா..

தோழியுடன் சேர்ந்து மீன் வறுவலை சுவைத்தபடி..

“அவர் உன் பாஸ் நந்தினி.. கம்மாண்டிங் டோனில பேசறது சகஜமான ஒன்றுதான்.. இதுக்காக இந்த அளவுக்கு அப்செட் ஆகிற..?” என்று இதமாக வினவினாள்..

“இல்லடி.. இது அதுக்கும் மேலே போய்க்கிட்டு இருக்கு.. இந்த கம்மாண்டர் இருக்கானே.. எல்லாத்தையும் குதர்க்கமா பேசறான்..”

“ஃபார் எக்ஸாம்பிள்க்கு ஒண்ணே ஒண்ணைச் சொல்லு..”

“ஒன்னென்ன.. ஓராயிரம் சொல்லலாம்.. நேத்து இப்படித்தான்.. திடீர்ன்னு காலையில் ஃபோன் பண்ணி அவனுக்கு முக்கியமான வொர்க் வந்திருச்சுன்னு சொன்னான்.. உனக்கும் உன் ஹஸ்பெண்டுக்கும் கார் அரேன்ஜ் பண்ணியிருக்கிறதாகச் சொன்னான்.. அவங்க மட்டும் ஊரைச் சுற்றட்டும்.. நீ ரூமில ரெஸ்ட் எடுன்னான்..

நானும் அப்படித்தானேடி இருந்தேன்..? உங்ககூட வருகிறேன்னு நானா சொன்னேன்..?”

ஆத்திரமும் அழுகையுமாக நந்தினி கேட்டதற்கு சிந்தனையுடன் இல்லையென்று தலையை ஆட்டினாள் உத்ரா..

‘நேத்து நந்தினி எங்ககூட ஜாயின் பண்ணி ஊரைச் சுற்றிப் பார்க்க வந்ததிற்கு ரவிசார் கோவிச்சுக்கிட்டாரோ..?’

ஆமாம் என்று அதை ஊர்ஜிதம் செய்தாள் நந்தினி..

“திட்டுன்னா திட்டு.. அப்படியொரு திட்டு உத்ரா.. வாய் வலிக்காம திட்டித் தீர்த்துட்டான்.. எனக்கு இங்கிதமில்லையாம்.. கல்யாணம் வேண்டாம்னு ஓடி வந்தவதானே நீ.. உனக்குப் புதிதாய் கல்யாணம் பண்ணிக்கிட்ட புது ஜோடியின் மனசைப் பற்றி என்ன தெரியும்ன்னு கேட்டாண்டி.. நியுலி மேரிட் கப்புள்க்கு தனிமையைக் கொடுக்கனும்ங்கிற சென்ஸ்கூட எனக்கு இல்லையான்னு கத்தினான்டி.. இப்படிப் பேசுவான்னு தெரிந்திருந்தா நீ கூப்பிட்டப்ப நான் வரமாட்டேன்னு சொல்லியிருப்பேன் உத்ரா.. வந்துட்டு வாங்கிக் கட்டியிருக்க மாட்டேன்..”

மூக்கை உறிஞ்சிய தோழியைப் பார்க்கப் பார்க்க உத்ராவுக்கு பாவமாக இருந்தது.. நந்தினிக்கு இது போன்ற சூட்சும அறிவெல்லாம் கிடையாது.. ரவிச்சந்திரன் சொல்வது நியாயமானதாக இருந்தாலும் அதைப் பற்றிய எண்ணமே இல்லாத நந்தினியை இந்த அளவுக்குப் பேசி புண் படுத்தியிருக்க வேண்டிய அவசியமில்லையே.. பெற்றவர்கள், கூடப் பிறந்தவன், சொந்த பந்தம் என்று அனைவரையும் பிரிந்து அகதி போல வயநாட்டிற்கு வந்திருப்பவள் நந்தினி.. தனிமையுணர்வில் வாடியிருப்பாள்.. உத்ராவைப் பார்த்ததும் தோழியுடன் ஒட்டிக் கொள்ள வி ழைவதில் குற்றம் என்ன இருக்கிறது..?

“உங்ககூட நான் வந்தது தப்பாம்.. நாம எங்கேயெங்கே போனோம்ன்னு இவனுக்கு பாயிண்ட் டு பாயிண்ட் தெரிஞ்சிருக்குடி.. மதிய லன்ச்சுக்குப் போனப்ப அந்த சீனரியையும் ஃபுட் அயிட்டத்தையும் புகழ்ந்து சொல்லிட்டேனாம்.. நைட் டின்னருக்கு அந்த ஃபுட் அயிட்டத்தை கொடுக்க வைத்து அவனோட ஹோட்டல் ஃபுட்தான் உயர்த்தின்னு புரூவ் பண்றாண்டி..”

‘ஓ.. ஐ ஸீ.. அதனால்தான் நேற்று நைட் டின்னருக்கு அந்த ஃபுட் அயிட்டம்ஸை சர்வ் பண்ண வைத்தாரா..?’

நந்தினி மாற்று உணவகத்தின் உணவை புகழ்ந்து ஓர்வார்த்தை சொல்லி விட்டதை ரவிச்சந்திரன் ரசிக்கவில்லை என்பதில் உதட்டைக் கடித்து யோசனையானாள் உத்ரா..

“நேத்து அந்தப் பேச்சு பேசினானேன்னுதான் இன்னைக்கு நான் வர மாட்டேன்னு சொன்னேன்.. விடுவேனான்னு ரூமுக்கு வந்து சத்தம் போட்டுக் கிளப்பிக்கிட்டு வர்றாண்டி.. இன்னைக்கு மட்டும் நிங்க ஓல்டு மேரிட் கப்புளா ஆகிட்டிங்களா..?”

“என்னது..?”

“எனக்கும் இப்படிச் சிரிக்கனும்னு ஆசையாத்தான் இருக்கு உத்ரா.. சிரிக்க முடியலையே.. உன்னைப் பார்த்தாப் பொறாமையாய் இருக்குடி.. மனம் விட்டுச் சிரிக்க உன்னால் முடியுதே..”

‘இதைச் சொல்வது நந்தினிதானா..?’ உத்ராவினால் தன் காதுகளில் விழுந்த வார்த்தைகளை நம்ப முடியவில்லை..

# அத்தியாயம் 156

“ச்சீ.. பைத்தியம் போல உளராதே.. இப்ப என்ன நடந்திருச்சுன்னு இப்படிப் பேசற..? உன் பாஸ் கண்டிப்பானவரா இருக்கார்.. அவள் மெச்சூர்டு மேன்.. உனக்கு விவரம் பத்தாதுன்னு எடுத்துச் சொல்லியிருப்பார்.. இதுக்குப் போய் என்னென்னவோ பேசறியே...” கடிந்து கொள்வதைப் போலத் தோழியை சமாதானப் படுத்தினாள் உத்ரா..

“எனக்கு விவரம் பத்தாதுன்னு நீயும் சொல்லிட்ட.. வெரிகுட்.. உனக்கும் உன் ஹஸ்பெண்டுக்கும் நடுவே நான் இண்டர்ஃபியர் ஆகி டிஸ்டர்ப் பண்ணினது தப்புத்தாண்டி.. மன்னிச்சுக்க.. இந்தக் கம்மாண்டர் சொல்கிறதைப் போல இந்த விஷயத்தில் நான் ‘தத்தி’தாண்டி..”

“தத்தியா..? நீயா..? அடிச்சேன்னா பாரு.. தத்திதான் காலேஜ் ஃபர்ஸ்ட் வந்து கோல்ட் மெடல் வாங்கியிருக் காளாக்கும்..? வயநாட்டுக்கு வந்து டோட்டலா சேன்ஜ் ஆகிட்டடி.. உன் கான்ஃபிடன்ஸ் எங்கே போச்சு..?”

“ஊம்..? வயநாட்டு அரண்மனையிலே காணாமல் போயிருச்சு.. நீயும் ஏண்டி வயித்தெரிச்சலைக் கிளப்பற..?”

“விடு நந்தினி.. இதையெல்லாம் பெரிசு பண்ணிக்காதே.. அவரோட பாயிண்ட் ஆஃப் வியுவில நியுலி மேரிட் கப்புள்ஸுக்கு தனிமை கொடுக்கனும்னு சொல்லியிருப்பார்.. நீ உடனே அதைப் பிடித்துக்கிட்டு தொங்க ஆரம்பிச்சுராதே.. எப்போதும் போல இரு.. எனக்கும் வினித்துக்கும் நீ டிஸ்டர்ப் இல்ல..”

“இதை நீ சொன்ன போதாது உத்ரா..”

“வேற யாருடி சொல்லனும்..? வினித்தா..?”

“ஊஹும்.. அவன் சொல்லனும்..”

“ரவி சாரா..?”

“அந்தக் கம்மாண்டர் தான்..”

வஷிஷ்டர் வாயால் பிரம்மரிஷி பட்டம் பெற வேண்டும் என்று விசுவாமித்திரர் துடித்ததிற்கு காரணம் இருந்தது.. ரவிச்சந்திரனின் வாயால் நந்தினி உத்ராவைத் தொந்தரவு செய்யவில்லை என்று சொல்ல வேண்டும் என்று நந்தினி மருகுவதற்கு என்ன காரணம் இருக்கிறது..?

“ரவி சார் சொல்லனும்னு நீ ஏன் எதிர்பார்க்கிற..? அவர் சொல்கிறார்.. சொல்லாம இருக்கிறார்.. அது உன்னையேண்டி இந்த அளவுக்கு டிஸ்டர்ப் பண்ணுது..?”

உத்ராவின் கூர்மையான கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் திகைத்துப் போனாள் நந்தினி..

அதற்கு என்ன பதிலைச் சொல்வது என்று அவளுக்குத் தெரியவில்லை.. அவளைப் பற்றி ரவிச்சந்திரன் எப்படியோ நினைத்து விட்டுப் போகிறான்.. அது அவளை எதற்காக பாதிக்க வேண்டும்..? அவள் வயநாட்டில் விருந்தாளியாக வந்திருக்கிறாள்.. எந்த நொடியிலும் தஞ்சையிலிருந்து அவளுக்கு அழைப்பு வந்து விடும்.. வயநாட்டை விட்டுப் போய் விடுவாள்.. அப்படியிருக்கும் போது ரவிச்சந்திரனின் அதட்டல்களுக்கு ஏன் முக்கியத்துவம் கொடுக்கிறாள்..?

நந்தினி உத்ராவின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் தவிர்த்தாள்.. அதை அப்படியே கடந்து அன்றைய பேச்சிற்குத் தாவினாள்..

“நேத்து அப்படிச் சொன்னவன் இன்னைக்கு நீ வந்துதான் தீரனும்னு ஆர்டர் போட்டு இழுத்துக்கிட்டு வந்திருக்காண்டி.. என் மனசே ஆறலை உத்ரா.. நேற்று நான்

உங்ககூட வந்தது தப்பாம்.. அதே தப்பை இன்றைக்குச் செய்யலாமா..? இவனே அதைச் செய்ய வைக்கலாமா..? இது சரியா..?”

“சரியில்லைதான் நந்தினி.. பட்..”

உத்ரா பேச்சை ஓர் நொடி நிறுத்தி விட்டு புன்னகைத்தாள்.. புதிர் போட்ட அந்தப் புன்னகையில் குழம்பிப் போனாள் நந்தினி..

‘எதுக்காக இப்படி பொடி வைச்சு புன்னகை பூக்கிறா..? புன்னகை அரசி பட்டத்துக்கு அப்ளை பண்ணலாமான்னு டிரை பண்றாளா..? ஆல்ரெடி அந்தப் பட்டத்துக்கு இரண்டு நடிகைகள் செலக்ட் ஆகியிருக்காங்களே.. அடுத்ததா இவள் பெயரைச் சொல்லனும்னு பிளான் போடறாளா..?’

“சில உணர்வுகள் சரி, தப்புன்னு பிரிச்சுப் பார்த்து ஜஸ்டிஃபை பண்ணாது நந்தினி... நியாய அநியாயமெல்லாம் அதற்குத் தெரியாது..”

“என்னடி.. புதிர் போட்டுப் பேசற..?”

“புரியாத வரைக்கும் இது புதிர்தாண்டி.. புரிந்து விட்டா இதுதான் எல்லாம்ன்னு ஆகிரும்..”

“விளங்கலை உத்ரா..”

“விளங்கலை..?”

உத்ரா நந்தினியை ஆழ்ந்து பார்த்தாள்.. அவள் எதையோ ஆழமாகச் சொல்லப் போவதை யூகித்து விட்ட நந்தினியை மனம் படபடத்தது.. உத்ரா என்ன சொல்லப் போகிறாள் என்ற எதிர்பார்ப்புடன் தோழியையே பயபக்தியுடன் பார்த்து வைத்தாள்.. அவள் விழிகளில் சஞ்சலம் மிதந்தது..

“உனக்குப் புரியலையா நந்தினி..?” அதே ஆழ்ந்த குரலுடன் கேட்டாள் உத்ரா.

புரியவில்லை எனும் விதமாக.. இடம் வலமாக தலையை அசைத்தாள் நந்தினி..

“நேற்று ரவிசார் நம்மகூட வரலை.. அவர் வராம நீ மட்டும் எங்க கூட வந்ததை.. ஊர் சுற்றியதை அவரால் தாங்கிக்க முடியலை.. நம்ம கூட ஆண் துணையா வினித் இருக்கிறப்ப ஆட்டோமேடிக்கா உனக்கான செலவை வினித் செய்கிறதை ரவிசாரால் ஏத்துக்க முடியலை.. நீ வேறு ஒரு ஹோட்டலில் லன்ச் சாப்பிட்டு அப்ரிஷியேட் பண்ணினதையே அவரால் தாங்கிக்க முடியலைங்கிறப்ப.. என் கெஸ்ஸிங் சரியாக இருந்ததுன்னா வினித் உனக்கான லன்ச்சுக்கும்,

நான் எடுத்துக் கொடுத்த புடவைக்கும் ‘பே’ பண்ணினதை நிச்சயமா அப்ஜெக்ட் பண்ணியிருப்பார்.. அதுக்காக உன்னை திட்டியிருப்பார்.. ஆம் ஐ கரெக்ட்..?”

புத்திசாலிடி நீ என்ற ரீதியில் தோழியை பிரமிப்பாக பார்த்து வைத்தாள் நந்தினி..

“எப்படிடீ..?” வியப்பு அடங்காமல் கேட்டாள்..

“இதைத் தெரிஞ்சுக்க படு இண்டலெக்சுவலா இருக்கனும்ங்கிற அவசியமில்லை.. யங்கஸ்டர்ஸ் எல்லாத்துக்கும் இது புரியும்..”

“எனக்குப் புரியலையே..”

குழந்தையாய் கேட்டவளின் கன்னம் தட்டிச் சிரித்தாள் உத்ரா.. தோழியின் குழந்தைத்தனத்தை மனதுக்குள் சீராட்டினாள்..

“போகப் போக நீயும் புரிஞ்சுக்குவ..”

“நேத்து அப்படி பேசிட்டு இன்னைக்கு ‘வா, வா’ன்னு என்னை இழுத்துக்கிட்டு வந்திருக்கிறது சரியாடி..”

“அவருக்கு இது சரிதான்.. இன்னைக்கு அவருக்கு வொர்க் இருந்திருக்காது.. அதனால உன்னை ரூமில இருக்க

விடாம கிளப்பிக்கிட்டு வந்திருக்கிறார்.. நீ ஊர் சுற்றிப் பார்க்கிறதிலே அவருக்கு ஒண்ணும் பிராப்ளம் இல்லைடி.. அந்த ஊர் சுற்றலை அவரோடு சேர்ந்து சுற்றனும்.. எங்களுடன் சுற்றக் கூடாதுன்னு நினைக்கிறார்.. தட்ஸ் ஆல்..”

“அதுதான் ஏன்..?”

“தட் இஸ் பொஸஸிவ்னெஸ்.. எல்லோருக்கும் இது இருக்கும்.. ஏன் வினித்திற்கும் என் விஷயத்தில் பொசசிவ்னெஸ் உண்டு.. உன்னிடம் சொக்கிறதுக்கு என்ன.. நான் அவரை மட்டும்தான் பார்க்கனும்.. பேசனும்னு நினைப்பார்.. உன்னிடம் பேசறதுக்குக் கூட பெர்மிஷன் வாங்கிட்டுத்தான் பேசனும்.. இல்லைன்னா மூஞ்சியைத் தூக்கி வைச்சுக்குவார்.. சுள்ளு சுள்ளுன்னு பேசுவார்..”

“வினித் அண்ணாவும் இப்படிச் செய்வாரா..?”

நந்தினிக்கு ஆச்சரியமாகி விட்டது... அதுவரை ரவிச்சந்திரனை அடக்குமுறை செய்பவன்... ஆணாதிக்கவாதி.. முதலாளித்துவ பாஸிஸ்ட்.. அவளுடைய சுதந்திரத்தைப் பறிப்பவன்.. என்றெல்லாம் பலவாறாக நினைத்துக் கொண்டிருந்தவளுக்கு உத்ரா சொல்வது புதிதாக இருந்தது..

“நான்தான் சொல்கிறேனே.. எல்லோரும் பொசசிவானவங்கதான்.. ஜெண்ட்ஸ் மட்டுமில்லை.. லேடிஸும் அப்படித்தான் இருப்பாங்க.. எனக்கு இன்னொன்னையும் சொல்லு.. ரவிசார் நீ மத்த ஜெண்ட்ஸ்கிட்டப் பேசினாக் கோவித்துக்கிறாரா..?”

“வெறி பிடிச்சதைப் போலக் கத்தறாண்டி..”

சில தருணங்களில் அடி கை வைத்து விடகிறான் என்பதை உத்ராவிடம் சொல்லாமல் மறைத்தாள் நந்தினி.. சொன்னால் நீ ஏன் அதைத் தாங்கிக் கொள்கிறாய் என்று கேட்பாள்.. நந்தினிக்குத்தான் அதற்கான விடை தெரியவில்லையே.. ரவிச்சந்திரனுடன் உத்ரா சண்டையிடக் கிளம்பினாலும் ஆச்சரியப் படுவதிற்கில்லை.. உத்ரா இதை அனுமதிக்க மாட்டாள்..

ஏனோ தெரியவில்லை.. ரவிச்சந்திரனை உத்ராவிடம் காட்டிக் கொடுக்க நந்தினிக்கு மனம் வரவில்லை.. அவன் சொன்ன ‘ஐ லவ் யு..’ வையும்.. அதைத் தொடர்ந்து அவன் எடுத்துக் கொள்ளும் அதீத உரிமைகளையும் பற்றி அவள் வாய் திறக்கவில்லை.. உத்ரா ரவிச்சந்திரனைக் கேள்வி கேட்பதை நந்தினியால் பொறுத்துக் கொள்ள முடியாது.. அதை

ஏனென்று கேட்டால் பதில் சொல்ல முடியாமல் மலங்க.. மலங்க விழிப்பாள்..

நந்தினி சொல்லாமலே ரவிச்சந்திரன் சொன்ன 'ஐ லவ் யு' வைக் கண்டு பிடித்து விட்டாள் உத்ரா..

"ஐ திங்க்.. ரவி லவ்ஸ் யு.." என்று அவள் சொன்னபோது நந்தினிக்கு தூக்கிவாரிப் போட்டது..

'எப்படிக் கண்டு பிடித்தா..?' பரக்கப் பரக்க இவள் விழித்துக் கொண்டிருக்க உத்ரா அந்த குண்டைத் தூக்கிப் போட்டாள்..

"தட் ஸேம் டைம்.. யு லவ் ரவிச்சந்திரன்.."

"வாட்..?"

அடுத்த தூக்கிவாரிப் போடலில் தலை கிறுகிறுக்க கிர்ரென்று தலை சுழல்வதைப் போல இருந்தது

நந்தினிக்கு.. தலையைப் பிடித்துக் கொண்டாள்.. உத்ராவின் அனுமானம் உண்மையானதுதானா என்று அவள் மனம் பதறியது..

ரவிச்சந்திரன் நந்தினியிடம் 'ஐ லவ் யு' சொன்னதை நந்தினி உத்ராவிடம் சொல்லவில்லை.. ஆனாலும் உத்ரா மிக

எளிதாக ரவிச்சந்திரன் நந்தினியைக் காதலிக்கிறான் என்பதை கண்டு பிடித்துச் சொல்லி விட்டாள்..

அது உண்மையாக இருக்கும் போது நந்தினியும் ரவிச்சந்திரனைக் காதலிக்கிறாள் என்ற உத்ராவின் இரண்டாவது அனுமானமும் உண்மையாகத்தான் இருக்க வேண்டும்..?

‘நான் அவனைக் காதலிக்கிறேனா..?’

நந்தினிக்குள் எதுவோ நிகழ்ந்தது.. இன்பமா, துன்பமா என்று உணர முடியாத உணர்வு ஒன்று அவளுக்குள் கிளர்ந்து எழுந்தது.. தன்னைத்தானே புரிந்து கொள்ள முடியாமல் அவள் தடுமாறினாள்..

“எதுக்கு இந்த வாட்..? ஆயிரம் வாட்ஸ் கரெண்ட் உடம்பில பாய்ஞ்சுட்டதைப் போல அலருகிறயே.. ஏன்..?”

“என்னடி நீ.. என்னென்னவோ சொல்கிற..?”

“சிம்டம்ஸெல்லாம் அப்படித்தான் சொல்லுது.. நீ கண்ட்ரோல் பண்ண முடியாத அருவிடி.. ரவிசார் ஈஸியா உன்னைக் கண்ட்ரோல் பண்றார்.. அதைவிட நீயும் அவரிடம் கண்ட்ரோல் ஆகிற.. நோட் திஸ் பாயிண்ட்..”

“போடி.. நீயும்.. உன் பாயிண்ட்டும்.. சம்பளம் கொடுக்கிற முதலாளி கண்ட்ரோல் பண்ணினா கண்ட்ரோல் ஆகித்தானே தீரனும்.. ஆர்டரை ஒபே பண்ணாம இருக்க முடியுமா..?”

“கடனேன்னு ஒபே பண்றதுக்கும்.. காதலாய் ஒபே பண்றதுக்கும் வித்தியாசமில்லையா..?”

“அவனை நான் காதலிச்சிட்டாலும்.. போடி..”

“அவரை நீ காதலிக்கலேன்னா ஏண்டி அவரிடம் எவளோ ஒருத்தி நெருங்கிப் பழகிறதில டிஸ்டர்ப் ஆகிற..?”

பொட்டில் அறைந்ததைப் போலக் கேள்வி கேட்டாள் உத்ரா.. பொறி கலங்கிப் போனாள் நந்தினி..

“உத்ரா..”

“அந்தக் கல்ச்சுரல் ஃபங்ஷனிலேயே கவனிச்சேன்.. அந்தப் பெண் ரவிசாரிடம் சொஞ்சிக் கொஞ்சிப் பேசறா.. நீ பல்லைப் பல்லைக் கடிக்கிற.. சரியாத்தான் கவனிச்சிருக்கிற.. அவ சாரோட மடியில உட்காராத குறையாகத்தான் பேசினாள்.. நீ சாரிடம் வேலை பார்ப்பவள்ங்கிற பொசிஷன்ல்ல மட்டும் இருக்கிறவளா இருந்திருந்தா

முதலாளியோட பெர்சனல் விவகாரங்கள் நமக்கெதுக்குன்னு அதைக் கண்டுக்காம இருந்திருப்ப.. இன்னும் சொல்லப் போனா உன் இடத்தை அவருக்கு விட்டுக் கொடுத்துட்டு தள்ளிப் போய் உட்கார்ந்திருப்ப.. ஏண்டி அப்படிச் செய்யலை..?''

''என்ன கழுதைக்குச் செய்யனும்..?''

ரவிச்சந்திரனிடம் அப்பயி அந்தப் பெண்ணின் நினைவில் முகம் சுளித்தாள் நந்தினி.. அவள் ரவிச்சந்திரனின் மடியில் உட்காருவாளாம்.. அவர்களுக்கு தனிமையைக் கொடுத்து நந்தினி விலகிச் சென்று காவல் இருக்க வேண்டுமாம்..

''கொன்று விடுவேன்.. கொன்று..''

அவளையுமறியாமல் நந்தினி சீறி விட்டாள்.. புத்திசாலி உத்ரா அதைக் கேட்டுக் கொண்டிருக்கிறாள்.. நந்தினியின் மனதை இனம் கண்டு கொள்வாள் என்ற எச்சரிக்கை உணர்வு சிறிதளவும் இல்லாமல் சீற்றம் கொண்டவளைப் பிரியத்துடன் பார்த்தாள் உத்ரா..

''இந்தக் கோபம் எனக்கும் வரும்.. எப்போத் தெரியுமா..? என் வினித்திடம் எவளாவது உரிமையெடுத்துப் பேசி நெருக்கமா நின்னா நானும் இதைத்தான் சொல்வேன்.. இப்பச்

சொல்லு.. எனக்கு வினித்தின் மீது வரும் உரிமையுணர்வு உனக்கு ரவிசாரின் மீது வருகிறதா.. இல்லையா..?”

‘ஆமாம்தானே..’

நந்தினி தவித்துப் போனாள்.. அவள் மனதை புரிந்து கொண்டதில் விதிர்த்துப் போனாள்.. ரவிச்சந்திரனைப் பற்றி அவளுக்குத் தெரிந்த உண்மைகளை உத்ரா அறிய மாட்டாள்.. நந்தினி அறிவாளே.. அப்படிப்பட்டவன் மீது எப்படி அவளுக்கு காதல் வந்தது..? நந்தினியின் சுயமரியாதை எங்கே போனது..? உடல், மனம், ஆன்மா பரிசுத்தம் என்று இருப்பவள் அவள்.. ரவிச்சந்திரன் அப்படியா இருக்கிறான்..?

# அத்தியாயம் 157

**த**லையணையில் முகம் புதைத்து விழிந்திருந்தாள் நந்தினி.. அவளது இமையோரமாக கண்ணீர் வழிந்து கொண்டேயிருந்தது.. அவளை உள்ளிழுத்த நுரை மெத்தையில் அவளுக்கு உறக்கம் வரவில்லை.. புரண்டு புரண்டு படுத்துக் கொண்டே இருந்தாள்.. முகத்தை நனைத்த கண்ணீரை துடைக்கும் எண்ணமில்லாமல் விட்டத்தைப் பார்த்தாள்.. மேற் கூரையில் ஒளிர்ந்த சிறு சிறு விளக்குகள் கண்சிமிட்டி நீ ரவிச்சந்திரனைக் காதலிக்கிறாய் என்று கூவின..

“அந்த ஃபங்ஷனில அந்தப் பெண்ணால் நீ டிஸ்டர்ப் ஆன சோகத்தினாலேதானே ரவி சாரையே பார்த்துக்கிட்டு யமுனை ஆற்றிலே, ஈரக்காற்றிலேன்னு தாபமா ஒரு பாட்டை செலக்ட் பண்ணிப் பாடின..? கேட்டியே.. அந்தப் பாட்டிலே கேட்டியே.. ஆயர் பாடியில் கண்ணன் இல்லையோ.. ஆசை வைப்பதே அன்புத் தொல்லையோ.. பாவம் ராதான்னு பாடினயே.. நீ பாவப்பட்டது ராதையைப் பார்த்தா.. இல்லை.. உன்னை நினைத்தா..?”

“உத்ரா..”

“இதையெல்லாம் நான் நோட் பண்ணலைன்னா நினைக்கிற..? அன்னைக்குத்தான் அப்படின்னா இன்னைக்கு அவ ரவிசாரைப் பார்த்துப் பேச ஆரம்பிச்சதும் உனக்கு கோபம் பொத்துக்கிட்டு வந்திருச்சு.. தெரியாமல் தான் கேட்கிறேன்.. எவளோ ஒருத்தி.. ரவிசாருக்குத் தெரிந்த பெண்.. அவரிடம் பழகினவங்கிற உரிமையில் பேசினா உனக்கென்ன வந்தது..? நீயேண்டி கோவிச்சுக்கிட்டு சாரிடம் சொல்லிக்காம எங்களைத் தேடி வந்த..?”

“நான் சும்மா.. வந்து..”

நந்தினி தடுமாறினாள்.. தன் மனதை புரிந்து கொள்ளாத பேதையாக அவள் தவிப்பதைக் கண்ட உத்ரா கனிவுடன் தோழியின் கையைப் பிடித்துத் தட்டிக் கொடுத்தாள்..

“உனக்கு உன் மனது புரியலை நந்தினி.. அதுதான் விஷயம்.. ரவிசார் இந்த விஷயத்தில் தெளிவா இருக்கிறதைப் போல எனக்குத் தோணுது.. உன்னிடம் அந்தத் தெளிவில்லை.. அவர் மேல உனக்குக் காதலிருப்பதை நீ புரிஞ்சுக்கலை..”

“போடி.. அவரோட ஆக்டிவிட்டிஸில நான் இம்ப்ரெஸ் ஆகியிருக்கலாம்.. பார்க்க அழகாயிருக்கார்.. படு ஹேண்ட்சம் மேன்.. அதில் மனசு தடுமாறியிருக்கலா.. அழகான பெண்ணைக் கண்டா ஆண் தடுமாற மாட்டானா..? இந்த நியதி பெண்ணுக்கும் பொருந்தாதா..? ஆணுக்குத்தான் ரசிக்கத் தெரியும்.. பெண்ணுக்கு ரசிக்கத் தெரியாதா..? நான் கம்மாண்டரோட அழகில் சொக்கிப் போயிருக்கலாம்.. ஹி இஸ் எ கிரேட் சூப்பர் மேன் உத்ரா.. பிஸினெஸ் வெர்ல்டில ஸ்டார்.. நான் பணக்கார குடும்பத்தில் பிறந்தவள்தான்.. எங்கப்பா கோடிஸ்வரர் தான்.. இவன் அளவுக்கு நாங்க பணக்காரங்க இல்லை உத்ரா.. இவன் லெவலே வேற.. எட்டாத உயரத்திலிருப்பவன்.. உலகம் சுற்றும் வாலிபன்.. போதாக்குறைக்கு ராஜ குடும்பத்தில் கேரளத்து சூப்பர் கிங் ராஜா ரவிவர்மனோட வம்சாவழியில பிறந்திருக்கான்.. வயநாட்டு அரண்மனை, யாழ் ஸ்டார் ஹோட்டல்.. கணக்கு வழக்கில்லாத பிஸினெ ஸ்ன்னு மிரட்டறான்.. இந்த ஸ்டார் இமேஜில இவன் மேல எனக்கு ஒரு பேவரிடசம் வந்திருக்கலாம்.. இதெல்லாம் காதலாகி விடுமா..? சொல்லு..”

நந்தினியின் நீண்ட விளக்கத்தில் குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டிருந்தாள் உத்ரா.. நந்தினி பேசி முடித்ததும்.. தண்ணீர் தம்ளரை அவள் பக்கமாக நகர்த்தி வைத்து..

“குடி..” என்றாள்..

“கிண்டலா..?” என்று கேட்டபோதும் நீண்ட சொற்பொலிவை ஆற்றியிருந்ததால் தொண்டை வறண்டு போயிருந்த நந்தினி தண்ணீர் தம்ளரைக் கைப்பற்றித் தொண்டையில் சரித்து, மடக், மடக்கென்று குடித்து முடித்தாள்..

“இந்த லாங் ஸ்டேட்மெண்டே உன்னோட காதலை புரூவ் பண்ணுது நந்தினி..” நிதானமாகச் சொன்னாள் உத்ரா..

“ச்சும்மா பயமுறுத்தாதேடி.. எனக்கொன்னும் அவன் மேலே காதல் இல்லை..” வீம்பாக சொன்னாள் நந்தினி..

“ஆர் யு ஷ்யூர்..?” ஊடுருவும் பார்வையுடன் கேட்டாள் உத்ரா..

“ஷ்யூர்..” அவள் முகம் பார்க்காமல் சொன்னாள் நந்தினி..

“இதை என் முகத்தைப் பார்த்துச் சொல்லுடி..” சவால் விட்டாள் உத்ரா..

“ஏனாம்..? நீ யென்ன பூச்சாண்டியா..? உன் முகத்தைப் பார்த்துப் பேச நான் ஏன் பயப்படப் போகிறேனாம்..?”

தோள் தட்டியபடி பார்வையை உயர்த்தி உத்ராவை நேருக்கு நேராகப் பார்த்த நந்தினியால் ஓரிரு வினாடிகளுக்கு மேல் உத்ராவின் பார்வையை சந்திக்க முடியவில்லை.. பார்வையை தழைத்துக் கொண்டாள்..

“நான் சொல்லலை..? உன்னால் என்னை நேருக்கு நேர் பார்த்து பொய் சொல்ல முடியாது நந்தினி..” வெற்றிப் புன்னகையுடன் சொன்னாள் உத்ரா..

“போடி.. நீயாய் எதையாவது இமாஜின் பண்ணிக்காதே.. இப்படி குறுகுறுன்னு பார்த்தா உன் முகத்தை எப்படிப் பார்க்கிறதாம்..?” நந்தினி விட்டுக் கொடுக்காமல் மல்லுக்கட்டினாள்..

“உன் மனசில கள்ளம் வந்திருச்சுடி.. அதனாலதான் உன்னால் என் முகத்தைப் பார்த்துப் பேச முடியலை..” ஆணித்தரமாகச் சொன்னாள் உத்ரா..

‘அப்படியா..?’ நந்தினியின் மனம் கலங்கியது..

அவள் மனதில் கள்ளம் புகுந்து விட்டதா..? ரவிச்சந்திரனின் மீது காதல் வந்து விட்டதா..? அதை உத்ராவிடம் ஒப்புக் கொள்ளாமல் அவள் மறைக்கிறாளா..?

**‘உள்ளம் நிறைவிலோர்**

**கள்ளம் புகுந்திடில்**

**உள்ளம் நிறைவாமோ..?’**

அவளது மனம் கேட்டது.. தெளிந்த பளிங்கு நீர் போல ஸ்படிகமாய் இருந்த அவளது மனது கலங்கிப் போயிருந்தது.. கடலோரமாக ரவிச்சந்திரனும் வினித்தும் பேசியபடி நடந்து வருவதைப் பார்த்த உத்ரா..

“அவங்க வந்திட்டாங்க நந்தினி..” என்றபடி அவசரமாக கைகழுவ எழுந்து சென்றாள்..

“உன் ஆள் வந்துட்டா ஒரு செகண்டில என்னை மறந்திருவ..” நந்தினி குறைபட்டபடி உத்ராவின் பின்னால் போனாள்..

“கூட உன் ஆளும்தான் வருகிறார்..” கை கழுவியபடி சொன்னாள் உத்ரா..

“என் பாஸ் வருகிறார்ன்னு சொல்லு.. என் ஆளுன்னு சொல்லாதே..” கோபம் போலச் சொன்னவளின் மனதில் தென்றலடித்தது.. இனம் புரியாத ஒரு சுகம் நிரம்பியது..

‘என் ஆள்..’

மனதில் சொல்லும் போதே இனித்தது.. எதற்காக இந்த இனிமை என்று புரியாமல் அவள் திகைத்தாள்..

“அப்படியா..? அவர் உன் ஆளில்லையா..? ம்ம்ம்.. யாரோட ஆளா இருப்பார்..? அதோ.. அங்கே வருகிறாளே.. அவளோட ஆளா இருப்பாரோ..?”

உத்ரா சுட்டிக் காட்டிய திசையில் நின்றிருந்த பெண்ணைக் கண்டதும் நந்தினிக்கு எரிச்சல் வந்தது..

“இவ இன்னுமா போகலை..?” என்று சிடுசிடுத்தாள்.

“யாருக்குத் தெரியும்..? இவதானா அவ..? அதாண்டி.. அன்னைக்குப் ஃபங்ஷனில பார்த்த பெண்..”

“இந்தக் குரங்குதான்..”

“அநியாயமாய் பேசாதே.. அவளைப் பார்த்தாக் குரங்கு மாதிரியா இருக்கு..? கேரளத்துப் பெண்களுக்கு மட்டும்

எப்படிடீ நந்தினி இப்படியொரு அரைத்த மஞ்சளின் நிறம் வருது..”

“தெரியலை..”

நந்தினிக்குப் பற்றிக் கொண்டு வந்தது.. உத்ரா வர்ணித்ததைப் போலவே அந்தப் பெண் அரைத்த மஞ்சளின் நிறத்தில் இருந்தாள்.. செதுக்கி வைத்த சிற்பம் போன்ற உடல்வாகு.. அழகான முகம்.. அவளின் அழகில் நந்தினி பொறாமை கொண்டாள்..

“அவ பேர் என்னவாம்..? உனக்குத் தெரியுமா..?”

“என்னவோ தரங்கிணி அப்படின்னு கம்மாண்டர் கூப்பிட்டதைப் போல என் காதில் விழுந்தது.. சரியாக் கேட்கலை..”

“தரங்கிணி..! அழகான பெயர்.. ஆளைப் போல பெயரும் அழகாய் இருக்குள்ல..”

“சகிக்கலை..”

“போடி.. இவ்வளவு அழகாய் இருக்கிறா.. ரவி சார் ஆசையாசையாய் பேசிப் பழகறார்.. இவளைப் போய் சகிக்கலைன்னு சொல்கிறயே..”

“கம்மாண்டர் ஆசையாசையாய் பேசிப் பழகறானா..? நீ கண்டியா..?”

“காணாமலா சொல்கிறேன்..? அக்கட சூடு..”

நந்தினி பார்த்த போது ரவிச்சந்திரனிடம் தரங்கிணி நெருங்கிப் பேச ஆரம்பித்தாள்.. ரவிச்சந்திரன் நின்று விட.. வினித் நாகரிகம் கருதி நகர்ந்து வந்து விட்டான்.. உத்ரா வினித்திடம் போய்விட.. என்னவோ வெகுகாலம் பிரிந்திருந்தவர்களைப் போல அவர்கள் இருவரும் கண்ணோடு கண் பார்த்து.. கையோடு கை கோர்த்து ரகசியம் பேசிக் கொள்ள ஆரம்பித்தார்கள்..

நந்தினி தனியாக நிற்பதைப் போல உணர்ந்தாள்.. உத்ராவிடம் போகலாமென்றால் அது வினித்திற்கும் உத்ராவிற்குமான தனிமையைக் குலைத்து விடும்.. ரவிச்சந்திரனிடம் போக அவளுக்கு விருப்பமில்லை.. அது என்ன.. நந்தினி நிற்பதைக் கூடக் கவனிக்காமல் அவன் தரங்கிணியிடம் கடலை போட்டுக் கொண்டிருக்கிறான்..?

அந்தக் காட்சியைக் காண சகிக்காமல் நந்தினி அவனுக்கு முதுகு காட்டித் திரும்பி நின்றாள்.. தரங்கிணியிடம் பேசியபடி

நந்தினியை பார்வையால் துழாவிய ரவிச்சந்திரன் அவளைப் பார்த்து விட்டான்..

பேசியபடியே அவன் நந்தினியை நோக்கி நடக்க.. தரங்கிணியும் கூட நடந்தாள்.. நந்தினியின் தோள் தொட்டு அழைத்தான்.. அவன் விரல் பட்ட ஸ்பரிசத்தில் துள்ளிக் குதித்து தள்ளி நின்று திரும்பிப் பார்த்த நந்தினி அவனைக் கண்டதும்..

“நீங்க தானா..? நான் யாரோன்னு நினைச்சிட்டேன்..” என்று நிம்மதியானாள்..

ரவிச்சந்திரனின் கண்கள் மின்னின.. நந்தினி அதைக் கவனிக்கவில்லை.. அவர்களைக் கவனித்துக் கொண்டிருந்த தரங்கிணியைத்தான் கவனித்தாள்.. அவள் கண்களில் நெருப்பின் ஜ்வாலை தெரிந்தது..

‘இவ எதுக்கு என்னை எரிக்கிறதைப் போலப் பார்க்கிறா..?’

நந்தினி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்... அவள் என்னவோ தரங்கிணியின் சொத்தை கொள்ளையடித்து விட்டதைப் போல தரங்கிணி பார்த்த பார்வையை அவள் விரும்பவில்லை..

‘யார் சொத்தை யார் கொள்ளை அடிக்கிறதாம்..?’

“இங்கே என்ன பண்ணிக்கிட்டு இருக்கிற..?” தரங்கிணியை கண்டு கொள்ளாமல் நந்தினியிடம் கேட்டான் ரவிச்சந்திரன்..

‘பார்..’ நந்தினியின் பார்வை கர்வத்துடன் தரங்கிணியைப் பார்த்தது... அதில் தரங்கிணியின் முகம் சுருங்கியது.. நந்தினிக்கு ரவிச்சந்திரன் கொடுத்த முக்கியத்துவத்தை அவள் விரும்பவில்லை..

தரங்கிணி ரவிச்சந்திரனின் உறவுக்காரப் பெண்..

அவனைப் போலவே ராஜ பாரம்பர்ய பின்புலம் கொண்டவள்.. கோடிஸ்வரி.. கேரளத்தின் கதாநாயகனான ரவிச்சந்திரனைக் கரம் பிடிக்க வேண்டுமென்று அவர்களுடைய உறவு வட்டாரத்திலிருந்த மற்ற இளம் பெண்கள் கனவு கண்டதைப் போலதான் அவளும் கனவு கண்டு கொண்டிருந்தாள்.. மற்ற பெண்களுக்கு கிடைக்காத ஒரு வாய்ப்பு அவளுக்குக் கிடைத்திருந்தது.. தரங்கிணியின் அண்ணனும் ரவிச்சந்திரனும் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள்.. அந்தப் பழக்கத்தைப் பயன்படுத்தி அண்ணன் மூலமாக ரவிச்சந்திரனுடன் பழக ஆரம்பித்தாள் தரங்கிணி..

நண்பனின் தங்கை என்ற முறையில் ரவிச்சந்திரனும் அவளிடம் முகம் கொடுத்துப் பேசுவான்..

தரங்கிணியின் அண்ணன் தனபாலன் அப்படியொன்றும் ரவிச்சந்திரனுக்கு நெருங்கிய சிநேகிதனல்ல.. ஒன்றாகப் படித்ததினால் சிநேகிதன்.. அவ்வளவுதான்.. தனது பிறந்தநாள்.. குடும்ப விழாக்கள் என்று ரவிச்சந்திரனுக்கு அழைப்பு விடுப்பான் தனபாலன்.. அந்த நாள்களில் ரவிச்சந்திரன் ஊரில் இருந்தால்.. அதிமுக்கியமான வேலைகள் இல்லாமலிருந்தால்.. தனபாலனின் இல்ல விழாக்களுக்கு போய் வருவான்.. அந்த தினங்களில் ரவிச்சந்திரனை ஒட்டிக் கொண்டு கூடவே அலைவாள் தரங்கிணி.. அவனுடன் சேர்ந்து நிற்பதைப் போல செல்ஃபோனில் படம் பிடித்து பேஸ்-புக்கில் போட்டு விளம்பரம் தேடிக் கொள்வாள்..

தரங்கிணியை ரவிச்சந்திரன் திருமணம் செய்து கொள்ளலாம் என்ற யூகம் வயநாட்டு ராஜ குடும்பத்தினர் மத்தியில் விரவியிருந்தது.. அதைக் கேள்விப்பட்ட அஜந்தா தரங்கிணியைத் தேடிப் போய் சண்டையிட்ட கதையும்.. அதற்கு உன்னால் முடிந்ததைப் பார்த்துக் கொள் ரவிச்சந்திரன் எனக்குத்தான் என்று தரங்கிணி பதிலுக்குச் சண்டையிட்ட கதையும் உண்டு..

இந்தக் கதைகளைக் கேள்விப் பட்டிராத நந்தினி தரங்கிணியின் பின்புலம் அறியாமல் யாரோ எவரோ என்று நினைத்தாள்.. ஆனானப்பட்ட அஜந்தாவையே ‘வந்து பார்.. வட்டப் பாறைக்கு..’ என்று சொடக்குப் போட்டு சவால் விடும் தரங்கிணி நந்தினியிடம் தழைந்து போவாளா.. என்ன..?

# அத்தியாயம் 158

“**உ**த்ராவுடன் பேசி முடித்தாச்சுன்னு ஒரு ஃபோன் கால் பண்ண மாட்டியா..? நானும் நீ இப்போது கூப்பிடுவ.. பிறகு கூப்பிடுவன்னு காத்திருக்கேன்.. உன் ஃபோன் வந்தபாடாக இல்லை.. சரி பேசினது போதும்ன்னு உங்க இரண்டு பேருடைய பேச்சு வார்த்தையை ஸ்டாப் பண்ணிடலாம்ன்னு நானும் வினித்தும் தீர்மானம் போட்டுக் கிளம்பி வந்தோம்..”

தரங்கிணி என்ற ஒருத்தி அங்கே இல்லாததைப் போல நந்தினியின் கண்ணோடு கண் கலந்து பேசிக் கொண்டிருந்தான் ரவிச்சந்திரன்.. இருவரின் விழிகளும் கலந்ததில் நந்தினி தடுமாறினாள்.. வெகு நுட்பமான தடுமாற்றம் அது.. பெண்ணுக்கு பெண் மட்டுமே உணரக் கூடிய தடுமாற்றம்.. தரங்கிணி உஷ்ணமானாள்..

‘கதை இப்படிப் போகுதா..? யார் இவள்..?’

தரங்கிணி கேரளத்து அரச குடும்பங்களில் ஒரு குடும்பத்தின் பரம்பரையைச் சேர்ந்தவளாக இருந்தாலும் மூணாறில்தான் வளர்ந்தாள்.. அங்கே அவளுடைய தந்தைக்குச் சொந்தமாக எஸ்டேட் இருந்தது.. கோழிக்

கோடிற்கும், வயநாட்டுக்கும் அவ்வபோது வந்து போவாள்.. தெளிவாக தமிழ் பேசுவாள்.. உலகம் சுற்றிக் கொண்டிருக்கும் ரவிச்சந்திரன் எப்போதாவது ஓர்தரம் வயநாட்டுக்கு வந்து போகும் போது இவளுக்கு எப்படியாவது தகவல் கிடைத்து விடும்.. வயநாட்டுக்கு பறந்து வந்து விடுவாள்.. இப்போது அதிக நாள்களாக ரவிச்சந்திரன் வயநாட்டில் தேங்கி நிற்கும் தகவல் வந்திருந்ததில் கோழிக்கோடில் தங்கி ரவிச்சந்திரனிடம் காதல் பயிர் வளர்க்க முடியுமா என்று ஆழம் பார்க்க வந்திருந்தாள்..

‘அஜந்தா மட்டும்தான் வில்லின்னு நினைத்தேன்.. இங்கே இன்னொருத்தியும் போட்டிக்கு வந்திருக்கிறாளே..’

அந்த இன்னொருத்திக்கு ரவிச்சந்திரன் அளித்த முக்கியத்துவத்தில் தரங்கிணியின் அடி வயிறு கலங்கியது.. அஜந்தாவைப் பற்றி அவளுக்கு யாதொரு கவலையும் இல்லை.. ரவிச்சந்திரனுக்கும் அவனுடைய தாய், தங்கைக்கும் அஜந்தாவையும், அவளது குடும்பத்தையும் பிடிக்கவே பிடிக்காது.. அது தரங்கிணிக்கு சாதகமான ஒன்று.. அஜந்தாவின் அப்பா யோகானந்தன் எப்பேற்பட்ட ஊதாரியென்று வயநாட்டுக்கே தெரியும்.. தரங்கிணியின் அப்பா அப்படியில்லை.. தன் பரம்பரைப் பெருமையையும்

செல்வத்தையும் காப்பாற்றி வாழ்ந்து கொண்டிருப்பவர்.. இன்னொன்றும் இருந்தது.. தரங்கிணியின் அண்ணன் தனபாலன் ரவிச்சந்திரனைப் போலவே உலகம் முழுவதும் சுற்றும் இளம் தொழிலதிபன்.. ஏற்றுமதி வணிகத்தில் பிரசித்தி பெற்றவன்.. ரவிச்சந்திரனின் அளவு பேசப்படவில்லையென்றாலும் ரவிச்சந்திரனுக்கு அடுத்தபடி கேரளத்து வியாபார உலகம் கொண்டாடும் இடத்தில் இருப்பவன்..

அவனுக்கு ரம்ய மாலினியைப் பெண் கேட்டிருந்தார்கள்.. அது தொடர்பான திருமணப் பேச்சு வார்த்தைகளை ரகசியமாக வைத்திருந்தார்கள்.. அருள்மொழிவர்மனுக்கும் யாழினிக்கும் கூட இது தெரியாது.. முடிவு செய்த பின்பு பெரியவர்களிடம் சொல்லிக் கொள்ளலாம் என்று ரவிச்சந்திரன் சொல்லி விட்டான்.. தாய், தகப்பனுக்குத் தெரியாமல் ஒரு துரும்பபைக் கூடக் கிள்ளிப் போடாத ரவிவர்மன் மகளின் திருமண விஷயத்தில் மட்டும் மூச்சுக்கூட விடாமல் அமைதி காத்தார்..

ரம்ய மாலினியை தனபாலன் பார்த்திருக்கிறான்.. அது போல ரம்ய மாலினியும் தனபாலனை பார்த்திருக்கிறாள்.. உறவினர் வீட்டு விழாக்களில் தள்ளி நின்று கூட்டத்தின்

மத்தியில் பார்த்துக் கொண்ட பார்வை அது.. முறையான பெண் பார்த்தல் இன்னும் நடைபெறவில்லை.. அதுபற்றிப் பேச தனபாலனின் குடும்பத்தில் முயன்றாலும் ரவிச்சந்திரன் பிடி கொடுக்கவில்லை.. தனபாலன் அவனுக்கு நண்பன்தான்.. இருந்தாலும் ஏதோ ஒன்று ரவிச்சந்திரனின் மனதை உறுத்திக் கொண்டிருந்தது.. அது தனபாலனின் கல்லூரிக் காலக் காதல் லீலைகளாகக் கூட இருக்கலாம்..

ரவிச்சந்திரன் பெண்கள் விஷயத்தில் நேர்மையானவன் அல்ல என்றாலும் இதுவரை எந்தப் பெண்ணையும் அவன் காதலித்ததில்லை.. இதை நந்தினியிடம் சொன்னால் இது ஒரு பெருமையா என்று கேட்பாள்.. ஒரு பெண்ணைக் காதலிப்பதற்கான நேர்மை அவனிடம் இருக்கிறதா என்று கேட்டவள்தானே அவள்..!

தனபாலன் காதல் என்ற பெயரில் பல பெண்களை ஏமாற்றியவன்.. இதை ரவிச்சந்திரன் நன்கு அறிவான்.. ஆசைகாட்டி மோசம் செய்வதும் குற்றமே என்ற கோபம் அவனிடம் இருந்தது.. தனபாலனின் குடும்பத்தாரிடம் இதைப்பற்றி அவன் குறிப்பிடவில்லை.. தூது வந்த தரங்கிணியிடம் சொன்ன போது..

“யங் ஏஜில ஜெண்ட்ஸ் எல்லாம் முன்னே பின்னே இருக்கிறது சகஜம்தானே ரவி.. நீங்களே இப்படிச் சொன்னால் எப்படி..?” என்று கேட்டாள்..

அவள் அழுத்தம் கொடுத்த ‘நீங்களே..’ என்ற வார்த்தைக்கான அர்த்தம் எதுவென்பதை ரவி நன்கு அறிவான்.. நீயும் பெண்பழக்கம் உள்ளவன்தானே.. என் அண்ணனைச் சொல்ல உனக்கென்ன தகுதியிருக்கிறது என்ற மறைமுகக் கேள்விதான் அது..!

ரவிச்சந்திரன் இந்தக் கேள்வியை விரும்பவில்லை.. ரம்ய மாலினியின் வாழ்க்கைக்காக அவன் குரல் கொடுத்தால் தனபாலனும் அவனது குடும்பத்தாரும் இந்தக் கேள்வியைத்தான் முன்னிருத்துவார்கள் என்பதில் அவன் யோசனையானான்.. ரவிச்சந்திரன் எந்தப் பெண்ணையும் காதல் என்ற பெயரில் ஏமாற்றவில்லை என்பதை அவர்கள் மறந்து விடுவார்கள்..

அவன் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம்.. அது அவனுடைய தங்கையின் வாழ்வைப் பாதித்து விடக் கூடாது.. தனபாலன் ரம்ய மாலினியின் மீது உண்மையான காதலைக் காண்பிப்பான் என்று எப்படி அவன் நம்புவது..? நந்தினியிடம்

ரவிச்சந்திரன் காட்டும் காதலை தனபாலன் பல பெண்களிடம் காட்டியிருக்கிறானே..

ரவிச்சந்திரனுக்கு ரம்ய மாலினியின் சந்தோஷம் முக்கியம் தனபாலன் ரம்ய மாலினியை சந்தோஷமாக வைத்துக் கொள்வானா என்ற சந்தேகம் ரவிச்சந்திரனுக்கு இருந்தது.. அதை தெளிவு படுத்திக் கொள்ளாமல் திருமண பேச்சு வார்த்தையை ஆரம்பிக்கக் கூடாது என்பதில் அவன் உறுதியாக இருந்தான்..

தரங்கிணி அந்த உறுதியை உடைக்க முடியன்றாள்.. ரவிச்சந்திரனின் தங்கையை தரங்கிணியின் அண்ணன் திருமணம் செய்து கொள்வது என்பது அவர்களது உறவினர் வட்டாரத்தில் எவருக்கும் கிட்டாத வரம்.. தனபாலனுக்கு மட்டும் அந்த வரம் கிட்டி விட்டால் அதையே இறுக்கிப் பிடித்து ஏணியாக்கி ரவிச்சந்திரனை அவள் தொட்டு விடுவாள்..

ரவிச்சந்திரனை காதல் என்ற வார்த்தை சொல்லி அணுக முடியாது.. நண்பனின் தங்கை என்பதற்காக ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசிக் கொண்டிருப்பவன் இவள் காதல் சொல்லி விட்டால் பேசுவதையே நிறுத்தி விடுவான்.. அதனால் அந்த விஷப்பரிட்சையை தரங்கிணி மேற்கொள்ளவில்லை..

தனபாலன் ரம்ய மாலினிக்காக உருகுகிறான்.. அதற்காக தரங்கிணி ரவிச்சந்திரனிடம் பேச வந்திருக்கிறாள் என்று கதை பிணைந்து அந்தப் போர்வையில் ரவிச்சந்திரனுடன் பேச்சை வளர்த்துக் குளிர் காய்வாள்..

“இதையெல்லாம் நீ பேச வேண்டாமே.. உன் பேரண்ட்ஸை பேசச் சொல்லலாமே..” ரவிச்சந்திரன் நாசுக்காக கழன்று கொள்ளப் பார்ப்பான்..

“எங்கே..? அவங்க உங்க பேரண்ட்ஸிடம் பேச நினைத்தா நீங்கதான் முடிவெடுக்கனும்னு அவங்க எஸ்கேப் ஆகிடறாங்களாமே.. உங்களிடமே பேசலாம்ன்னு லைனில் வந்தா ஆல்வேஸ் உங்க ஃபோன் எங்கேஜ்டாவே இருக்காமே.. நேரில் பேச வருவதை நீங்க லைக் பண்ணுவீங்களோ.. மாட்டிங்களோ.. நோ அதர் வே.. என்னைத் துளைத்து எடுத்து அனுப்பி வைத்திடறாங்க.. நீங்க என்னை.. ஐ மீன்.. என் வார்த்தையை.. மறுக்க மாட்டிங்கன்னு அவங்க நம்பறாங்க.. வாட் கேன் ஐ டூ..?” செல்லமாக சிணுங்குவாள் தரங்கிணி..

“தேவையில்லாத நம்பிக்கையை அவங்க வளர்த்துக்க வேண்டாமே.. உன்னை.. ஐ மீன்.. உன் வார்த்தையை..

நான் மறுக்க மாட்டேன்னு தவறாய் நம்பிக்கிட்டு இருக்காங்களே.. அதைச் சொன்னேன்..” ரவிச்சந்திரன் பிடி கொடுக்க மாட்டான்..

தரங்கிணி அதற்கெல்லாம் அயர்ந்து பின்வாங்குகிற ஆள் அல்ல.. முகத்தில் அடித்தாற்போல் ரவிச்சந்திரன் பேசுவதைக் காதல் மொழியை அவன் பேசி விட்டதைப் போல வெட்கச் சிரிப்புடன் கேட்டுக் கொண்டிருப்பாள்.. ரவிச்சந்திரனின் கடுகடுத்த முகத்தையும் தரங்கிணியின் செல்லச் சிரிப்பு முகத்தையும் தொலைவிலிருந்து பார்ப்பவர்கள் ஊடல் கொண்டு கோபிக்கும் காதலனை கொஞ்சல் மொரி பேசி காதலி சமாதானப் படுத்திக் கொண்டிருக்கிறாள் என்றுதான் தோன்றும்..

அந்த அளவுக்கு சாகசம் பயின்றவள் தரங்கிணி.. என்ன ஒன்று.. அவளுடைய அத்தனை சாகசங்களில் ஒன்றுகூட ரவிச்சந்திரனிடம் எடுபடவில்லை..

இருந்தும் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தியாக தரங்கிணி தன் முயற்சியைச் செவ்வனே தொடர்ந்து கொண்டிருந்தாள்..

ரவிச்சந்திரன் நந்தினியுடன் வயநாட்டுக்கு வந்தபோது தரங்கிணி ஆஸ்திரேலியாவில் இருந்தாள்.. ரவிச்சந்திரன் அங்கே இருக்கிறான் என்று இவள் போனால் அவன் இந்தியாவிற்கு திரும்பி விட்டிருந்தான்.. உடனே திரும்ப முடியாமல் ஓரிரு மாதங்கள் கழித்துத் திரும்பியவள் மூணாறுக்குக் கூடப் போகாமல் நேராக கோழிக்கோடிற்கு வந்து விட்டாள்.. யாழ் ஹோட்டலுக்கே வந்திருப்பாள்.. ஓர்முறை அப்படி அவள் வந்த போது அவளுக்கான அறை வாடகையை ரவிச்சந்திரன் வசூலிக்கச் சொல்லி விட்டதாக ஹோட்டலின் மேனேஜர் சொல்லி விட்டார்..

“ஞான் எவரெண்டு அறியுமோ..?” என்று அவள் சீறியபோது..

“நிங்க எவராக இருந்தா எனிக்கெந்து மேம்..? எங்க எம்.டி பறஞ்ஞுதை ஞான் பறஞ் ..” என்று கண்டிப்பு காட்டி விட்ட மேனேஜர்..

தரங்கிணிக்கு அது மரியாதை குறைவாக தோன்றி விட்டது.. யாழ் ஹோட்டலில் இலவசமாக தங்கும் அளவுக்கு அவளென்ன பண வசதி இல்லாதவளா..? அவளுடைய அப்பா நினைத்தால் யாழ் ஹோட்டலைப் போல இன்னொரு

ஹோட்டலை விலைக்கு வாங்குவார்.. அல்லது உருவாக்குவார்.. அவள் யாழ் ஹோட்டலில் இலவசமாக தங்க நினைத்தது ரவிச்சந்திரனிடம் அவளுக்கு உரிமையிருக்கிறது என்று மற்றவர்களுக்கு உணர்த்துவதற்காக.. நண்பனின் தங்கை, உறவினர் என்றும் பாராமல் அவளிடம் அறை வாடகையை ரவிச்சந்திரன் வசூலிக்கச் சொன்னது அவனிடம் அவளுக்கு எந்தவிதமான உரிமையும் இல்லையென்று அவளுக்கு உணர்த்துவதற்காக..

தரங்கிணிக்கா அது புரியாது..? அது புரியாததைப் போல அவள் காட்டிக் கொண்டாள்.. இன்முகமாக அறை வாடகையை கொடுத்து விட்டு அறையைக் காலி செய்து கோழிக்கோடில் இருந்த அவர்கள் குடும்பத்தின் கெஸ்ட் ஹவுஸிற்குப் போய் விட்டவள் மறந்தும் அதைப் பற்றி ரவிச்சந்திரனிடம் ஓர்வார்த்தை கூடக் கேட்கவில்லை.. அந்தச் சம்பவத்திற்குப் பின்னால் யாழ் ஹோட்டல் பக்கம் தலை வைத்துக்கூடப் படுக்கவில்லை..

கல்ச்சுரல் ஃபங்ஷனுக்கு சிறப்பு விருந்தாளியாக ரவிச்சந்திரன் வரப் போகும் செய்தியை அறிந்து அவளும் அந்த விழாவில் கலந்து கொண்டாள்.. அப்போதுதான் நந்தினியை அவனுடன் பார்த்தாள்.. ரவிச்சந்திரனின் பக்கத்தில்

உரிமையுடன் நந்தினி உட்கார்ந்ததில் தரங்கிணிக்குள் பூகம்பம் உண்டானது..

'யார் இவள்..?'

இடைவேளையில் யதேச்சையாக ரவிச்சந்திரனைப் பார்த்ததைப் போன்ற பாவனையுடன் அவனருகில் சென்று குசலம் விசாரித்தவள் நந்தினியிடம் தனக்கும் ரவிச்சந்திரனுக்கும் உள்ள நெருக்கத்தை உணர்த்துவதற் காகவே அவன் மடியில் உட்காருவதைப் போல சோபாவின் கை பிடியில் உட்கார்ந்து பேசினாள்.. நந்தினி மேடையில் பாடப் போன போது இவள் கிடைத்தது வாய்ப்பென்று நந்தினியின் இடத்தில் உட்கார்ந்து விட்டாள்..

'இப்போத் தெரியும் அவளுக்கு.. இந்த தரங்கிணி யாருன்னு..'

ஆனால் தரங்கிணிக்குத்தான் நந்தினி யாரென்று தெரியாமல் போய் விட்டது.. கொஞ்சம் கூட முகத் தாட்சண்யம் பார்க்காமல் நந்தினியின் இருக்கையை விட்டுத் தரங்கிணியை எழுந்து கொள்ளச் சொல்லி விட்டான் ரவிச்சந்திரன்..

"நீ உன் சீட்டுக்குப் போகலாமே.. இது நந்தினிக்கான சீட்.."

முகத்தில் அடித்ததைப் போலச் சொல்லியதோடு நிற்காமல் மேடையை விட்டு கீழே இறங்கிக் கொண்டிருந்த நந்தினிக்கு கை கொடுக்கப் போய் விட்டான்..

# அத்தியாயம் 159

**த**ரங்கிணி யாரென்று அறியாமலே தான் யாரென்று தரங்கிணிக்குக் காட்டி விட்டாள் நந்தனி.. தரங்கிணியின் முகம் சுருங்கினாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவள் போய் விட்டாள்.. மறுநாள் ரவிச்சந்திரனைச் சந்திக்க முயன்றாள்..

“இம்பார்ட்டண்ட் வொர்க் இருக்கு..” என்று ரவிச்சந்திரன் மறுத்து விட்டான்..

தரங்கிணி விசாரித்த போது அது உண்மையாகவும் இருந்ததில் அவள் பல்லைக் கடித்துக் கொண்டு அன்று பொறுமை காத்து விட்டு மறுநாள் ரவிச்சந்திரனைப் பின் தொடர்ந்து கடற்கரையில் தற்செயலாக சந்திப்பதைப் போல சந்தித்து ஒட்டிக் கொண்டாள்..

“அண்ணன் உங்களிடம் ஒரு விஷயம் சொல்லச் சொன்னான்..” என்று சன்னக்குரலில் அவள் சொன்னதும் என்னவென்று கேட்பதற்காக நந்தினியை விட்டு இரண்டடி தள்ளி நடந்து விட்டான் ரவிச்சந்திரன்..

அவ்வளவுதான்.. நந்தினிக்கு கோபம் வந்து விட்டது.. ரவிச்சந்திரனிடம் சொல்லிக் கொள்ளாமல் நடந்து உத்ராவிடம் வந்து விட்டாள்.. பேச்சின் ஊடே நந்தினி எங்கேயிருக்கிறாள் என்று திரும்பிப் பார்த்த ரவிச்சந்திரன்.. நந்தினி தொலைவில் நடந்து கொண்டிருந்ததில் தரங்கிணியை அம்போ என விட்டுவிட்டு நந்தினியைப் பின் தொடர்ந்து விட்டான்..

தரங்கினிக்கு என்னவோ போல்தான் இருந்தது.. அதற்கெல்லாம் கௌரவம் பார்த்து அவள் கிளம்பி விட்டால் ரவிச்சந்திரனின் கரம் பற்ற அவள் போட்டிருக்கும் நீண்ட காலத் திட்டம் என்ன ஆவது..? அதனால் அவள் மரியாதையைப் பார்த்தால் வேலைக்கு ஆகாது என்று ரவிச்சந்திரனைத் துரத்திச் சென்றாள்.. அவன் வினித்துடன் நடக்க ஆரம்பித்ததும் விலகி நின்றிருந்தவள், அவர்கள் திரும்பி வந்ததும் ரவிச்சந்திரனிடம் நெருங்கி நின்றாள்..

வினித் நாகரிகம் கருதி நடந்து விட.. ரவிச்சந்திரன் தரங்கிணியிடம் என்ன விவரம் என்று கேட்டுக் கொண்டிருந்தான்.. உத்ராவும் வினித்தும் தனித்துப் பிரிந்து விட.. நந்தினி மட்டும் தனிமையில் நின்று கொண்டிருந்ததைக் கண்டவன் அவளை நெருங்கித் தோளைத் தொட்டு

அழைத்தான்.. திரும்பியவளின் கண்ணோடு அவன் கண் கலக்க.. தரங்கிணி உஷ்ணமானாள்..

அவனுடைய விரல் பட்ட இடம் வெப்பம் பட்டதைப் போல அந்தக் குளிருக்கு இதமாக இருந்ததில் நந்தினியின் மனம் மயங்கியது.. அவளது மனதில் ரவிச்சந்திரன் இருக்கிறான் என்று உத்ரா சொன்னதையே நினைத்துக் கொண்டிருந்தவளுக்கு அவனை நேருக்கு நேர் பார்க்கும் துணிவு வரவில்லை..

“ஹேய்.. உனக்கு என்ன ஆச்சு..?”

அருகில் தரங்கிணி இருப்பதை மறந்து உல்லாசமாக வினவினான் ரவிச்சந்திரன்..

“ஒன்.. ஒன்.. ஒண்ணுமில்லையே..” நந்தினி தடுமாறினாள்..

அவளது தடுமாற்றத்தைக் கூர்மையாக இனம் கண்டு கொண்டாள் தரங்கிணி.. இனம் இனமறியும்.. நந்தினி கவலைக்குரியவள் என்று அவளுக்கு விளங்கி விட்டது.. அஜந்தாவைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை.. ரவிச்சந்திரன் அவளை ஒரு மனுஷியாகவே நினைக்க மாட்டான்.. ஆனால் நந்தினி..? அவளுக்கு அவன் கொடுக்கும்

முக்கியத்துவத்தை தரங்கிணி கண்கூடாக ஒருமுறைக்கு இருமுறை பார்த்து விட்டாளே..

‘இவ எங்கேயிருந்து வந்து தொலைந்தா..?’

நந்தினி முகம் சிவக்கத் திரும்பி நின்றாள்.. ரவிச்சந்திரன் மறுபடியும் அவள் தோள் தொட்டு அழைத்தான்.. அவன் தொட வேண்டும் என்பதற்காகவே அவள் புறமுதுகு காட்டினாளோ என்று எரிச்சல் பட்டாள் தரங்கிணி.. மயக்கத்துடன் நந்தினி திரும்பியதில் அந்த மயக்கத்தை உடைக்க வேண்டுமென்ற வெறி தரங்கிணிக்குள் பொங்கியது..

“வெரி இம்பார்டண்ட் மேட்டரை உங்களுக்கு கன்வே பண்ணனும்னு நான் டூ டேஸா வெயிட் பண்ணிக்கிட்டு இருக்கேன் ரவி.. உங்களைப் பிடிக்க முடியலை..” சிணுங்கினாள்..

அதில் நந்தினியின் முகம் சுருங்கி விட்டது..

மயக்கத்திலிருந்து அவளை வெற்றிகரமாக வெளியே கொண்டு வந்துவிட்ட தரங்கிணி ரவிச்சந்திரனின் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்து விட்டாள்..

“டூ டேஸா வெயிட் பண்றியா..? வாட் ஃபார்..? கல்ச்சுரல் ஃபங்ஷனில அவ்வளவு நேரம் பேசிக்கிட்டு இருந்தியே.. அப்போதே சொல்லியிருக்கலாமே..” என்று தரங்கிணியிடம் கேட்டபடி நந்தினியை பின் தொடரச் சொல்லி சைகை செய்தபடி தரங்கிணியுடன் நடந்தான் ரவிச்சந்திரன்..

ஒரு இனிய கனவு கலைந்ததைப் போன்ற துயரம் நந்தினியின் மனதைக் கவ்வியது.. ரவிச்சந்திரனின் மீதான ஆதர்சத்தையும் தாண்டி ஏதோ ஒரு பிரியம் மனதுக்குள் முகிழ்வதை உணர்ந்தவளுக்கு அவனுடன் பேசிக் கொண்டிருக்க வேண்டும் போல இருந்தது.. குளிர்ச்சி நிரம்பிய அவனுடைய பிரத்யேக பார்வைக்காக அவள் ஏங்கினாள்.. அதை உணராதவனாக அவன் நகர்ந்து விட்டதில் அவளுக்குள் சினம் துளிர்த்தது.. எப்படி அவன் அவளை விட்டுவிட்டு தரங்கிணியுடன் சேர்ந்து நடக்கலாம் என்று பொருமினாள்.. அவனுடைய அந்தச் செயல் நந்தினியை பெரிய அளவில் பாதித்தது.. மற்ற நேரங்களில் அவளைத் தொட்டுத் தொட்டுப் பேசுகிறவன்.. அவள் தொட்டுப் பேச ஆசை கொள்ளும் போது விலகிச் செல்வது எதை உணர்த்துகிறது..? இது எதற்கான அறிகுறி..?

“நந்தினி..” உத்ராவின் அழைப்பொலி கேட்டது..

‘வினித் அண்ணாவுடன் கொஞ்சி முடிச்சிட்டாளா..?’

நந்தினிக்கு கோபம் கோபமாக வந்தது.. எதனால் அந்த கோபம் என்று அவளுக்கே விளங்கவில்லை.. அவளுக்கு ரவிச்சந்திரனிடம் அண்மை கிட்டவில்லை.. உத்ராவுக்கு வினித்தின் அண்மை வேண்டிய மட்டும் கிட்டுகிறது என்ற பொறாமையில் வரும் கோபமா இது..?

நீலிமலைக் காட்டின் மரக்குடிலில் அவனும் அவளுமாக இரண்டு நாள்கள் தங்கியிருந்தார்களே.. அப்போதெல்லாம் இந்தக் காதல் ஏன் அவள் மனதில் நுழைந்து தொலைக்கவில்லை..? அவன் கெஞ்சினானே.. ஒரு பொய்யாவது சொல் கண்ணே என்று பாடினானே.. அப்போதெல்லாம் மாறாத அவள் மனதில் எப்போது காதல் புகுந்தது..?

“என்னடி தனியா நிற்கிற..?”

“விதி..”

“அடேங்கப்பா.. பிலாசஃபி..? நீயெல்லாம் பிலாசஃபி பேசினா உலகம் தாங்காதுடி.. விட்டிரு.. ஆமாம்.. உன்னை பிலாசபி பேச வைத்துட்டு ரவிசார் எங்கே போனார்..?”

“அந்தத் தரங்கிணியோட போயாச்சு..?”

நந்தினி சுட்டிக் காட்டிய திசையில் பார்த்தாள் உத்ரா..

தரங்கிணியுடன் நடந்து கொண்டிருந்தவன் திரும்பிப் பார்த்து நந்தினியை ‘வா’வென கையாட்டி அழைத்தான்..

“பார்த்தியா உத்ரா..”

“பார்த்துக்கிட்டுத்தான் இருக்கேன்..”

“என்னை இங்கே நிற்க வைச்சுட்டு இவன் அந்த மேனா மினுக்கியோட ஊர்கோலம் போவானாம்..”

“மேனா மினுக்கியா..? யாரைடி சொல்கிற..?”

“எல்லாம் அந்தத் தரங்கிணிக் குரங்கைத்தான் சொல்கிறேன்..”

“அவளுக்கும் பட்டப் பெயரா..? ஐயோ பாவம்..”

“அவளா பாவம்..?”

“பின்னை இல்லையா..?”

“இல்லை..”

“ஓகே.. ஐ ஹேவ் நோ அப்ஜெக்ஷன்.. புரொசீட்..”

“ஐயா அவகூட ஜோடி போட்டு நடந்துக்கிட்டே என்னைப் பார்த்து கையாட்டுவானாம்.. நான் ஆட்டுக்குட்டி போல இவன் பின்னால ஓடனுமாம்.. இவன் அந்த கேரளத்து பேரழகியிடம் கொஞ்சிக்கிட்டுப் போவானாம்.. பொங்குதுடி..”

“எதுக்காக பொங்கற..? உன்னை ‘வா’ன்னு கூப்பிட்டாரு அது ஒரு குத்தமா..?”

“அது குத்தமில்லைடி.. அவ கூட ஜோடி போட்டு நடந்துக்கிட்டு என்னை ‘வா’ன்னு கூப்பிடறான் பாரு.. அதுதான் குத்தம்..”

“இங்கே நீ மட்டும் தனியா இல்ல நந்தினி.. நானும் வினித்தும் இங்கேதான் இருக்கிறோம்.. எங்ககூட நீயிருக்கிறன்னு நினைக்காம உன்னை அவருடன் கூப்பிட்டுக்கனும்னு நினைக்கிறார் பாரு.. அந்த ஆங்கிளில நீ யோகிக்கனும் நந்தினி..”

“போடி.. நீ எப்போப் பார்த்தாலும் அவன் பக்கமாத்தான் பேசுவ.. நீ எனக்கு ஃபிரண்டா..? இல்லை அவனுக்கு ஃபிரண்டா..?”

“உனக்குத்தாண்டி ஃபிரண்ட்.. அதனாலதான் உன்னை அவர் பாதுகாக்கிறதில எனக்கு சந்தோஷமா இருக்கு..”

“என்னை அடிமையாய் நடத்தறான் உத்ரா..”

“ஊஹூம்.. உன்னை உரிமையா நினைக்கிறார்.. நீ முட்டாளைப் போல அதை உணர்ந்துக்காம பேசற..”

நந்தினி எதை உணர்ந்தாளோ இல்லையோ.. ரவிச்சந்திரனின் மீது அவள் மனதில் ஆசையாசையாய் காதல் பொங்குவதை உணர்ந்தாள்.. அவனும் அவளுமாக தனித்திருந்த தருணங்களில் காதல் வந்து தொலைக்காமல் இப்படி மற்றவர்கள் பக்கத்தில் இருக்கும் போது காதல் வந்து அவளை இம்சைப் படுத்தியது.. ரவிச்சந்திரனின் மீதான ஆசை அதிகரித்ததில் அவள் சலனம் கொண்டாள்.. அவனைக் கட்டிக் கொள்ள வேண்டும் போல இருந்ததில் தவித்துப் போனாள்.. அவனைக் கட்டி அணைத்து மார்பில் முகம் புதைத்தவள்தான் அவள்.. மனதில் கள்ளமில்லாமல் பாதுகாவலனிடம் சரண் புகுவதைப் போல அவன் மார்பில் முகம் புதைவது வேறு.. இது வேறு..

இப்போதுதான் அவள் உள்ளத்தில் கள்ளம் புகுந்து விட்டதே..

‘எப்படி இது நிகழ்ந்தது..?’

ஆற்றாற்றுப் போனாள்.. எவராலும் அவள் மனதை அடிமை கொள்ள இயலாது என்று இறுமாப்புடன் இருந்தாளே.. இதோ ஓர் நொடியில் அவள் மனதை அவன் அடிமை கொண்டு விட்டானே..

இப்போது என்ன செய்யப் போகிறாள்..?

‘இவன்தான் வசியம் பண்ற வசியக்காரனாச்சே.. வசிய மருந்து ஒரு பார்சலோய்ன்னு தள்ளி விட்டிருப்பான்.. அலர்ட்டி இருக்காம வசியமாகித் தொலைச்சிட்டேனே..’

நந்தினியின் பார்வை அவனைத் தேடியலைந்தது.. அவன் தரங்கிணியிடம் பேசியபடி மறுபடியும் கையாட்டி அவளை அழைத்தான்.. தரங்கிணி இருக்கிறாளே என்று அவள் தயங்கினாள்.. மற்ற சமயம் என்றால் எவள் நின்றால் எனக்கென்ன என்று அருகில் போய் விடுவாள்..

இப்போது அப்படியில்லையே.. நந்தினி அவனிடம் மயங்கிப் போவது வழக்கம்தான் என்றாலும் இன்று வந்திருக்கும் புதுவிதமான மயக்கம் அவளை எங்கெங்கோ கொண்டு தள்ளுகிறதே.. அலைபாயும் அவள் மனதை சமனப் படுத்த அவளால் முடியவில்லையே.. அவன் அருகில் நிற்கும் போது அலை மோதும் அவள் மனது கரையுடைந்த

வெள்ளமாக அவன்மீது தாவி விட்டால் என்ன ஆவது..? தரங்கிணி என்ற ஒரு குரங்கு அருகில் நின்று தொலைக்கிறதே..

“ரவிசார் கூப்பிடுகிறார் பார்.. போ, போ..” உத்ரா முடுக்கி விட்டாள்..

“என்னைத் துரத்தியடித்திட்டு நீ வினித் அண்ணாகிட்டக் கொஞ்சப் போகனுமா..?” நந்தினி நகர மறுத்தாள்..

“உன்னைத் துரத்தியடித்துட்டுத்தான் நான் என் ஹஸ்பெண்டைக் கொஞ்சப் போகனுமா என்ன..? உன்னை இங்கே நிறுத்தி வைத்துட்டுப் போனா வேணாம்ன்னு இருக்கா..?” உத்ரா நிதானமாக கேட்டாள்..

“நீதானே.. எதை வேண்டும்னாலும் செய்வடி.. கல்யாணம் பண்ணிட்டு ஹஸ்பெண்ட் வந்தவுடனே ஃபிரண்டை த்ராட்டில விடற கேட்டகிரிதானேடி நீ.. போ.. போ.. அங்கே உன் வுட்பி உனக்காக காத்துக்கிட்டு இருக்கார்.. போய் கொஞ்சு..”

“அதில் உன்கேண்டி இத்தனை காண்டு..? நீயும் கொஞ்சப் போக வேண்டியதுதானே..? யார் வேண்டாம்ன்னு தடுத்தது..?”

“யாரைக் கொஞ்சச் சொல்கிற..? உன்னையா..?”

“என்னைக் கொஞ்ச என் ஆள் இருக்கிறார்.. நீ போய் உன் ஆளைக் கொஞ்சு..”

நந்தினிக்கு கிளுகிளுப்பாக இருந்தது.. உத்ரா அடையாளம் காட்டிய அவளுடைய ஆளாகப்பட்ட ரவிச்சந்திரனைப் பார்த்தாள்.. தரங்கிணியுடன் பேசிக் கொண்டிருந்தாலும் நந்தினியைத்தான் அவன் பார்த்துக் கொண்டிருந்தான்.. அவளையே பார்த்துக் கொண்டிருந்தவனைப் பார்த்தவளின் மனம் படபடத்தது.. அவனிடம் மயங்கிப் போனாள்..

அலையடிக்கும் அலைகடலை விட அதிகமாக அலை பாய்ந்தது அவள் மனது.. அவனைப் பார்த்தாள்.. தரங்கிணியுடன் பேசியபடி அவன் நகர்ந்து விட்டதில் அவளது பார்வை பதறி எங்கே அவனென்று தேடியலைந்தது.. அருகில்தான் அவன் நின்று கொண்டிருந்தான்.. அவளுடைய பார்வை அவனைத் தேடுவதை பார்த்துக் கொண்டுதான் இருந்தான்.. தரங்கிணியை மறந்து நந்தினியே குறியானான்.. அவளது பார்வை அவனைக் கண்டுபிடித்து அவன் மீது படியப் போகும் அந்த அற்புத நொடிக்காக காத்திருந்தான்.. அவள்

பார்வையும் அவனைக் கண்டு பிடித்து அவன் மீது படிந்து விட்டது..

அந்தப் பார்வை..! அதில் தெரிந்த வேகம், காதல், தாபம்..! ரவிச்சந்திரன் அவனாக இல்லை.. வேறொரு உலகத்தில் இருந்தான்.. அது கோடிஸ்வர ரவிச்சந்திரனைத் தேடும் பார்வையாக இல்லை.. அவளது மனதைக் கொய்த மாயவனைத் தேடும் பார்வை..

நந்தினியின் மனதை வென்று விட்டதை புரிந்து கொண்ட ரவிச்சந்திரன் தரங்கிணியை மறந்தான்.. அவள் பேசிக் கொண்டிருந்ததையும் மறந்தான்..

விலகி வேகமாக நந்தினியை நோக்கி நடந்து விட்டான்.. தரங்கிணியால் அவனது வெளிப்படையான புறக்கணிப்பை தாங்கிக் கொள்ள முடியவில்லை..

# அத்தியாயம் 160

‘**இ**து நந்தினிதானா..?’

ரவிச்சந்திரனின் கண்கள் மின்னின.. அவனுடைய பார்வையை எதிர்கொள்ள முடியாமல் தவித்துத் தடுமாறிய அவள் பார்வையில் அவன் கள் உண்ட சிங்கமாக போதை கொண்டான்..

ஆழ்ந்த அவனது பார்வையின் போதையில் அவளது கன்னங்களில் ரோஜாக்கள் பூத்தன.. வெட்கச் சிகப்புடன் அவனைப் பார்க்காமல் கடலில் மறைந்து கொண்டிருந்த அந்தி வானத்தின் சூரியனைப் பார்த்தாள்..

அவளது வெட்கத்தை பார்த்தவனின் இதழ்களில் இளநகை படர்ந்தது.. வார்த்தைக்கு வார்த்தை எதிலும் அந்த வாயாடி பேச்சிழந்து தவித்ததை அணுவணுவாக அவன் ரசித்தான்..

லேசாக விழியுயர்த்தி அவனைப் பார்ப்பதும் அவனது பார்வையைச் சந்தித்து விட்டால் தடுமாறி கடல்லைகளைப் பார்ப்பதுமாக அவள் அடித்த கூத்தைப் பார்க்க முடியாமல் உத்ரா அவள் கையைக் கிள்ளி விட்டாள்..

“ஸ்ஆ.. வலிக்குதுடி குரங்கே..!”

ரவிச்சந்திரனை மறந்து கையை உதறினாள் நந்தினி..

“குரங்கா..?” வினித் தன் மனைவியை சற்றுப் பார்த்து விட்டு..

“அப்சரஸ் போல இல்ல இருக்க..” என்று சொக்கினான்..

உத்ராவின் முகத்தில் மத்தாப்பூ ஒளிர.. நந்தினி தோழியை ஏற இறங்க பார்த்து விட்டு..

“ஆனாலும் இது அநியாயம் அண்ணா.. அப்சரஸை நீங்க நேரில பார்த்திருக்கீங்களா..?” என்று ஆட்சேபித்தாள்..

“இதோ.. என் கண்ணெதிரே நிற்கிறாளே..”

கிடைத்த வாய்ப்பைத் தவற விடாமல் இறுகப் பற்றிப் கொண்ட வினித் அடுத்த ஐஸ்கட்டியை உத்ராவின் தலைமீது ஏற்றினான்..

“இது மட்டும் அப்சரஸுக்குத் தெரியனும்.. அப்சரஸ் போஸ்ட்டே வேண்டாம்ன்னு ரிசைன் பண்ணிட்டுப் போயிருவாங்க..” என்றாள் நந்தினி..

அவளது துடுக்குத்தனத்தில் லயித்தான் ரவிச்சந்திரன்.. தோழியை கிண்டலடித்து வாய் வளர்த்துக் கொண்டிருந்த

அந்த வாயாடி ரவிச்சந்திரனைப் பார்த்து விட்டால் பேச்சை மறந்து திக்கித் திணறினாள்..

“இதென்ன புதுசா இருக்கு..?” உத்ரா கேலி செய்தாள்..

அது புதிதாகத்தான் இருந்தது.. அதற்கு முன்னாலும் ரவிச்சந்திரன் பார்க்காதபோது அவனைப் பார்ப்பதும்.. அவன் பார்த்து விட்டால் அகப்பட்டுக் கொண்டவனாக தடுமாறுவதுமாக நந்தினி கூத்தடித்திருக்கிறாள்தான்.. அந்தத் தடுமாற்றம் வேறு.. இந்தத் தடுமாற்றம் வேறு.. ரவிச்சந்திரனைப் பார்த்த பார்வையில் மறைக்க முடியாத மயக்கம் இருந்தது.. அந்த மயக்கம் இரும்பை இழுக்கும் காந்தமாக அவனை ஈர்த்தது..

“ஏய்ய்.. முடியலைடி..” நந்தினியின் முதுகைத் தட்டிச் சிரித்தாள் உத்ரா..

“போடி.. குரங்கு..” நந்தினி முறைத்தாள்..

“மறுபடியும் குரங்கா..?” வினித் கண்டனம் தெரிவித்தான்..

“இவளுக்கு கோபம் வந்தா எல்லோரையும் குரங்காக்கிருவாங்க.. இப்பத்தான் அந்தத் தரங்கிணிக்கு

குரங்குப் பட்டம் கொடுத்தா..” கணவனை சமாதானம் செய்தாள் உத்ரா..

“யாரைச் சொன்னாங்க..? அதோ.. அந்தப் பெண்ணையா..?”

ஆச்சரியத்துடன் கேட்டான் வினித்.. மஞ்சள் கலந்த மைதா மாவின் நிறத்திலிருந்த தரங்கிணிக்கு குரங்கு என்று நந்தினி பெயர் வைத்ததை அவன் மனது ஒப்பவில்லை..

“அழகா இருக்காங்க.. அவங்களைப் போய் குரங்குங்கறிங்களே..” ஆற்றாற்றுப் போனான்..

“என்னடி உத்ரா.. இப்பத்தான் உன்னை அப்சரசஸ்ன்னு ஆராதனை பண்ணினாரு.. ஒன் செகண்டில அந்தத் தரங்கிணி சைடில கோல் அடிக்கிறாரு.. ஸேம் சைடு கோல் போடறாருடி.. எதுக்கும் நீ சுரிதாரை அவாய்டு பண்ணிட்டு சேலையிலேயே இரு..” நந்தினி தீவிரமான முகபாவனையுடன் சொன்னாள்..

“எதுக்குடி..?” புரியாமல் கேட்டாள் நந்தினி..

“அப்பத்தான் உன் சேலை முந்தானையிலே முடிச்சுப் போட்டு அண்ணாவை ஸேவ் பண்ணிக்கத் தோதாயிருக்கும்..” சிரிக்காமல் சொன்னாள் நந்தினி..

“செம வாலு இல்ல..” வினித் உத்ராவிடம் சிரிக்க அவளும் சேர்ந்து சிரித்தாள்..

“உன் முன்னாடியே அந்தத் தரங்கிணிக் குரங்கை அழகுன்னு சொல்கிறார்.. நீ என்ன ஏதுன்னு கேட்காம சிரித்து மகிழ்ந்து போகிறயே.. ஏமாளியா இருக்காதே உத்ரா..” நந்தினி தூண்டிவிட்டாள்..

“நீ சொல்கிறதிலயும் பாயிண்ட் இருக்குடி நந்தினி.. அவ அழகா இருக்காளா..? ரூமுக்கு வாங்க.. வைச்சுக்கறேன்..” உத்ரா எச்சரிக்க..

“என்னடி நீ.. கட்டிக்கிட்டவரைப் போய் வைச்சுக்கிறேங்கிற..?” என்று சந்தேகம் கேட்டு விட்டு உத்ராவிடம் குட்டு வாங்கினாள் நந்தினி..

“ஆனாலும் உனக்கு இம்புட்டு வாய் ஆகாதுடி.. என்ன பேச்சுப் பேசற..” உத்ராவுக்கு வெட்கமாகி விட்டது..

“சாஃப்ட் லேடியா இருக்கிற என் வொய்ஃபை கேடியா மாத்தப் பார்க்கறிங்களே.. அழகை ரசிச்சா அது ஒரு குத்தமா..?” ஆதங்கப்பட்டான் வினித்..

“இதே கொஸ்டினை நான் கேட்டால் நீங்க தாங்கிக்குவீங்களா..?” ‘சுருக்’ எனக் கேட்டு விட்டாள் உத்ரா..

வினித்தின் முகம் விழுந்து விட்டது.. ரவிச்சந்திரன் நந்தினியின் காதைப் பிடித்துத் திருகி..

“ஹனிமூனுக்கு வந்தவங்களை டைவர்ஸ் வரைக்கும் போக வைத்து விடுவ போல இருக்கே.. உன்னை நம்பி ஹனிமூன் கொண்டாட வந்திருக்காங்க பாரு.. இவங்களைச் சொல்லனும்..” என்று கடிந்து கொண்டான்..

“ஸ்ஆ.. வலிக்குது.. விடுங்க பாஸ்..” விலக்குவதற்காக அவன் கையைப் பிடித்த நந்தினியின் உடலில் மின்சாரம் பாய்ந்ததைப் போன்ற உணர்வு.. வலிமையான அவனது கரத்தின் மீது அழுந்திய அவளது மென்மையான கையை உத்ராவும் வினித்தும் அறியாத வண்ணம் அவன் அழுந்தப் பிடித்து விட்டான்.. அவனது விரல்களின் இறுக்கத்தில் அடங்கிய அவள் விரல்கள் நடுக்கத்துடன் விலகிக் கொள்ள முயன்றன.. அவன் விடவில்லை.. அவளுக்கும்

அவனுக்குமான அந்த ரகசியப் போராட்டத்தில் அவளது உடல் சூடேறியது..

நந்தினியின் தலை கவிழ்ந்தது.. அவளது பெண்மையின் வெட்கத்தை உணர்ந்தவனின் முகத்தில் வெற்றிப்புன்னகை வந்தது.. அவன் விரல்களைத் தள்ளி விடும் திராணியற்றுப் போனவளாக அவள் தவித்துப் போனதில் அவன் இன்பம் கொண்டான்..

ஒரு வழியாக தன் விரல்களை விடுவித்துக் கொண்ட நந்தினி ஒதுங்கி நின்றாள்.. அவளது தளிருடல் நடுங்கிக் கொண்டிருந்தது.. உதடுகள் துடித்தன.. ரவிச்சந்திரனுக்கு அவளை அள்ள அணைத்துக் கொள்ள வேண்டும் போல இருந்தது..

‘இப்ப மட்டும் இவ தனியா என்னிடம் மாட்டியிருக்கனும்..’

தனிமை கிடைக்காத தாபத்துடன் பெருமூச்சு விட்டவன் உத்ரா, வினித்தின் மனத்தாங்கலின் நினைவில் அவர்கள் பக்கமாக திரும்பினான்..

“பொசசிவ்னெஸ் என்கிறது காதலர்களின் அடையாளம் வினித்..”

ரவிச்சந்திரன் சொல்லிக் கொண்டிருக்க நந்தினி ஆச்சரியத்துடன் உத்ராவைப் பார்த்தாள்..

‘நீ சொன்ன ஸ்டேட்மெண்டை இவனும் சொல்கிறாண்டி..’ என்றன அவளது விழிகள்..

அதை கண்டு கொள்ளாமல் ‘உம்’ மென்று இருந்தாள் உத்ரா..

“ஹேய்.. நிஜமாகவே நீ அண்ணா மேல கோபமா இருக்கியா..? போடி முட்டாள்.. அந்தக் குரங்கைப் பார்த்து அழகுன்னுதானே அண்ணா சொன்னார்.. அப்சரஸ்ன்னு சொல்லலையே.. அதை இந்தக் குரங்கைப் பார்த்துத்தானே சொன்னார்..?”

நந்தினி கேட்டதும் ‘பக்’ கென்று சிரித்து விட்டாள் உத்ரா.. வினித்தின் முகத்தில் தெளிவு வந்தது.. இனி உலக அழகியே எதிரில் வந்தாலும். ‘ப்பா.. யாரு இந்தக் குரங்கு..?’ என்று உத்ராவிடம் கேட்க வேண்டும் என்று மனதுக்குள் சங்கல்பம் செய்து கொண்டான்..

“குரங்குதாண்டி பார்க்கிற எல்லோரையும் குரங்காக்கும்.. அந்த வகையில நீதாண்டி முதல் குரங்கு..” நாக்கைத் துருத்தி அழகு காட்டினாள் உத்ரா..

“விடுடி.. விடுடி.. குரங்கில இருந்துதானடி மனித குலமே தோன்றியிருக்கு..? நீயும் குரங்கு, நானும் குரங்கு.. நினைத்துப் பார்த்தால் எல்லாருமே குரங்குதான்..” பொன்மொழியை உதிர்த்துத் தப்பித்தாள் நந்தினி..

‘எப்படி பால் வீசினாலும் எஸ்கேப் ஆகிடறா..’ ரவிச்சந்திரன் உதட்டை மடித்துக் கடித்தபடி ஒரு மார்க்கமாக அவளைப் பார்த்தான்..

அவனுடைய ரகசிய பார்வையில் முகம் சிவந்து போனாள் நந்தினி.. ஓர் ஆறு நிமிடங்கள் அவளுக்கும், அவனுக்குமாக தனிமை கிடைத்து விட்டால் போதும்..

‘ஐ லவ் யு..’ என்று அவனிடம் சொல்லி விடுவாள்..

‘நான் இவனை லவ் பண்றேன்..’ மனது உணர்ந்து கொண்ட அந்த உண்மையை உடனடியாக அவனுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் போல இருந்தது..

‘யெஸ்.. ஐ லவ் ஹிம்.. ஐ லவ் திஸ் கம்மாண்டர்..’ அவள் மனம் கூவியது.. அதில் அவளது மனம் தித்தித்தது..

மனம் கூவிய கூவலை அவனிடம் சொல்ல வேண்டுமானால் அவனுக்கும் அவளுக்குமான தனிமை தேவை.. அது இல்லாததில் அவள் தவித்துப் போனாள்..

அவன் கேட்ட போதெல்லாம் சொல்லாமல் இருந்து விட்டு இப்போது திடிரென காதல் ஞானோதயம் வரப் பெற்றவளாக அவனிடம் அவள் காதல் சொல்ல துடித்த போது தனிமை எங்கோ தொலைவில் நின்று கண்ணாமூச்சி காட்டிக் கொண்டிருந்தது..

'மத்த நேரங்களில எல்லாம் உத்ராவும், வினித் அண்ணாவும் ஜோடி போட்டு.. ஹஸ்கி வாஸ்சில் கொஞ்சிக்கிட்டே தலை மறைவாய் ஆகிருவாங்க.. இவன் தனியாய் என்னை இழுத்துக்கிட்டு நடப்பான்.. ரொமான்டிக்காப் பார்ப்பான்... நான்தான் இவன் விடுகிற மலரம்புகளுக்கு பயந்துக்கிட்டு எஸ்ஸாவேன்.. இப்ப என்னடான்னா எனக்கு இவன்கூடத் தனியே பேசனும்னு தோணுது.. உத்ராவும் வினித் அண்ணாவும் நகராம இங்கேயே நங்கூரம் போட்டு நின்றுக்கிட்டு இருக்காங்களே..'

மாலை மயங்கி இருள் பரவ ஆரம்பித்திருந்த அந்த நேரத்தில் உத்ராவும் வினித்தும் தனித்துப் பேச நகர முடியாது

என்பதைக்கூட யோசிக்க முடியாமல் மனதுக்குள் பரபரத்தாள் நந்தினி.. பறவைகள் கூடுகளுக்குத் திரும்பும் நேரம் போல அது அவர்கள் அறைகளுக்குத் திரும்பும் நேரம்.. அதனால்தான் அவர்கள் இருவரும் சன்னக்குரலில் பேசியபடி.. ஒட்டி உராய்ந்தபடி அங்கேயே நின்றிருந்தார்கள்..

செல்ஃபோனில் யாருடனோ பேசியபடி நந்தினியைப் பார்த்த ரவிச்சந்திரனின் புருவங்கள் சுருங்கின.. அவனிடம் அவள் எதையோ சொல்லத் துடிப்பதை உணர்ந்து கொண்டவனின் புருவங்கள் என்ன என்று வினவும் விதமாக உயர்ந்து இறங்கின..

நந்தினி கிறங்கிப் போனாள்.. அதுவரை அவள் உணர்ந்த மயக்கம் போல இல்லாமல் கிளர்ச்சியூட்டி அவளைக் கிறங்கடித்தது இந்த மயக்கம்..

மூன்று வார்த்தைகள்..! மூன்றே மூன்று வார்த்தைகள்..

‘ஐ லவ் யு..’

இவற்றை அவனிடம் அவள் சொல்லி விட்டால் போதும்.. அவள் மனதில் குடிகொண்டிருக்கும் பரபரப்பு அகன்று விடும்.. அகல்விளக்கின் அமைதி அவள் மனதில் நிலைகொண்டு விடும்..

அந்த மூன்று வார்த்தைகளை எப்போது அவனிடம் சொல்லுவாள்..?

அவளது விழிகளில் தெரிந்த இறைஞ்சுதலில் ரவிச்சந்திரன் செல்ஃபோனை அணைத்து விட்டான்.. இருள் பரவியிருந்த அந்தக் கடற்கரையில் கடலலைகளின் ஓசை காதில் விழுந்து கொண்டிருக்க.. ஊசிக் குளிர் காற்று உடலைத் துளைக்க.. அவனது மனமும் உடலும் அவளைத் தேடி ஒட்டிக் கொள்ளத் துடித்தன..

அவளது விழிகளும் தேடலை உணர்த்தியதில் அவன் உடல் சூடேறியது.. உத்ராவும் வினித்தும் அவனைப் பார்த்ததில் தன்னை அடக்கிக் கொண்டவனாக..

“போகலாமா..?” என்றான்..

“ஷ்யூர்..” வினித்தும் உத்ராவும் முன்னால் நடக்க ஆரம்பிக்க பின் தங்கிய ரவிச்சந்திரன் நந்தினியின் கையைப் பிடித்து இழுத்து நிறுத்தி..

“என்ன..?” என்றான்..

கவிந்திருந்த இருளும்.. பனிக்காற்றும்.. கடலலையும் நந்தினிக்கு உறுதுணையாக இருக்க.. அவள் தன் மனதைத் தெரியப்படுத்திவிட வேண்டும் என்ற வேகத்துடன்..

“நான்.. நான்.. நான்..” என்று தடுமாறினாள்..

“நீ.. வந்து..?”

“அது.. அது..”

“எது..? எது..?”

ரவிச்சந்திரன் விளையாட்டாகப் பேசியபடி நந்தினியை நெருங்கினான்.. நடுங்கும் அவள் தோள்களில் கையை வைத்துத் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டான்.. அவளது உச்சந்தலையில் சிறு முத்தம் பதித்தவன் மென்மையாக..

“என்னிடம் எதற்கு இந்த தயக்கம் நந்தினி..? சொல்ல நினைப்பதை தயங்காமல் சொல்..” என்றான்.. அவனது இறுக்கமான அணைப்பில் தைரியம் வரப்பெற்றவளாக நந்தினி வாயசைக்க முயன்றபோது..

“ரவி..” என்றபடி அங்கு வந்து விட்டாள் தரங்கிணி..

'இன்னுமா இந்த மோகினிப்பிசாசு இந்த இடத்தை விட்டுப் போகவில்லை..?' நந்தினி அவசரமாக ரவிச்சந்திரனை விட்டு விலகினாள்..

அவளும் ரவிச்சந்திரனும் நெருக்கமாக நின்று கொண்டிருந்ததைப் பார்த்து விட்ட தரங்கிணியின் கண்கள் வேட்டை நாயின் கண்களைப் போல அந்த இருளில் ஜொலித்தன..

# அத்தியாயம் 161

“**வா**ட் யு வாண்ட் தரங்கிணி..?”

ரவிச்சந்திரனின் குரலில் அப்பட்டமான எரிச்சல் வழிந்தோடியது.. அது நந்தினிக்குத் திருப்தியாக இருந்தது.. இதைவிட முகத்தில் அடித்ததைப் போல ஒருத்தியை புறக்கணிக்க முடியாது..

நந்தினி கண்டு கொண்ட அந்த எரிச்சலை தரங்கிணி கண்டு கொள்ளவே இல்லை.. மாறாக தேனினும் இனிய குரலில்..

“வெயிட் பண்ணுன்னு சொல்லிட்டு வந்தவர் என்னை மறந்துட்டு இங்கேயே நின்றுட்டீங்களே.. எங்கே நீங்கன்னு தேடி வந்தால் வாட் டு யு வாண்ட்ன்னு கொஸ்டின் பண்றீங்க.. ஐ வான்ட் ஒன்லி யு ரவி.. டு யு நோ இட்..?” என்று குழைந்தாள்..

கைப்பொருளை யாரோ பிடுங்க முனைவதைப் போல விதிர்த்துப் போனாள் நந்தினி.. அவளது உடலும் மனமும் அதிர்ந்தன.. அஜந்தாவின் வழிதலையே அவளால் சமாளிக்க

முடியவில்லை.. இதில் இன்னும் ஒருத்தி.. தெரிந்து இரண்டு பேர்.. தெரியாமல் எத்தனை பேரோ..?

நந்தினிக்குள் விசனம் உண்டானது... ரவிச்சந்திரனின் மீது ஏன் காதல் வந்து தொலைத்தது என்று மருகினாள்.. அவளது விசனத்தை அவன் உணர்ந்து கொண்டானோ என்னவோ..

“ஸ்டாப் திஸ் நான்ஸென்ஸ்..” என்று உறுமினான்..

“வொய் திஸ் ஆங்க்ரி..?” அறியாப் பெண்ணைப் போல தரங்கிணி இமை கொட்டியதைப் பார்க்கச் சகிக்காமல் பல்லைக் கடித்தாள் நந்தினி..

இப்படிப் பச்சைக் குழந்தையைப் போல இமை கொட்டி ராவடி செய்வியா என்று தரங்கிணியை கன்னம் கன்னமாக அப்பு அப்ப வேண்டும் போல ஆவேசம் உண்டானது..

‘என்கிட்ட இப்படி பசப்ப மாட்டேங்கிறாளே.. ஆம்பளையைப் பார்த்தாத்தான் இந்தப் பசப்பு வரும் போல..’

“உன்னிடம் பல தடவை சொல்லி விட்டேன் தரங்கிணி.. இந்த டைப் ஆஃப் பேச்சை அவாய்டு பண்ணனும்னு வார்ன்

பண்ணிட்டேன்.. நீ மாறுகிறதைப் போல இல்லை.. ஐ டோன்ட் லைக் திஸ் பிஹேவியர்.. யு ஸீ..”

“ரவி..”

“குளோஸ் யுவர் மவுத்.. ஹூ ஆர் யு..? ஆப்டர் ஆல் யு ஆர் மை ஃபிரண்ட்’ஸ் சிஸ்டர்.. அந்த ஒரு ரீசனுக்காக உன் முகத்தைப் பார்த்துப் பேசினா நீ லிமிட்டைக் கிராஸ் பண்ற.. வாட் ஆர் யு திங்கிங்..? ”

இப்போதாவது தரங்கிணி வாயை மூடிக் கொள்வாள்.. நந்தினியின் முன்னால் பேச்சுக் கேட்க வேண்டியிருக்கிறதே என்று விலகிப் போய் விடுவாள் என்றுதான் நந்தினி நினைத்தாள்..

அவளது கணிப்பை தவிடு பொடியாக்கினாள் தரங்கிணி..

“ஐ திங்க் டோடலி எபௌட் யு டார்லிங்..” என்று மறுபடி இமை கொட்டினாள்..

நந்தினியால் தாள முடியவில்லை.. முகம் இறுக கையிரண்டையும் முன்புறமாக மடித்துக் கட்டிக் கொண்டு கடலோரமாக போய் நின்று விட்டாள்.. அலை கடல் அவளைப் பார்த்துச் சிரிப்பதைப் போல இருந்தது.. அவன் காதல்

சொன்னபோது நீ காதில் வாங்கிக் கொள்ளவில்லை.. இன்று நீ காதல் சொல்ல நினைக்கும் போது அவன் காதில் போட முடியவில்லை.. இதுதான் வாழ்க்கை.. தேடும் போது எதுவும் கிடைக்காது.. நீ தேடாதபோது உன்னைத் தேடி வரும்.. இந்த சூட்சுமத்தைப் புரிந்து கொண்டால் எது வந்தாலும் எதிர் கொள்கிற பக்குவம் உனக்கு வந்து விடும் என்று கடலலை அவள் காதோடு சொன்னதைப் போல இருந்தது..

‘பேசாம நீலிமலைக் காட்டில அவன் ஐ லவ் யு சொன்னபோதே ஓகே டார்லிங் ஓகேன்னு சொல்லியிருக்கனும்..’ நந்தினி மனதுக்குள் புலம்ப..

‘அப்போதுதான் அவன்மீது உனக்குக் காதல் வரலையே..’ என்று நினைவுறுத்தியது அவள் மனம்..

ரவிச்சந்திரனின் மீதான அவளது ஈர்ப்பிற்கு இனக்கவர்ச்சிதான் காரணம் என்று அவள் நினைத்துக் கொண்டிருந்தாளே.. அது காதலின் வெளிப்பாடாக இருக்கக் கூடும் என்று நினைத்தும் பார்க்கவில்லையே..

“ம்ப்ச்.. கடலோரமா போய் நிற்காதே.. நைட் டைம்.. வா, போகலாம்..”

ரவிச்சந்திரன் தரங்கிணி அங்கே நின்று கொண்டிருப்பதைப் பொருட்படுத்தாமல் நந்தினியின் அருகே விரைந்து அவளது தோள் பற்றி இழுத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்து விட்டான்..

உன்னுடன் இவ்வளவு பேசியதே அதிகம் என்று அவன் செய்கையில் உணர்த்தி விட்டதில் தரங்கிணி கொதித்துப் போனாள்..

வேக எட்டுக்களுடன் ரவிச்சந்திரனின் முன்னால் போய் நின்று வழி மறிப்பதைப் போல ஒற்றைக் கையை குறுக்கே நீட்டி..

“வெயிட் ரவி.. நாம் பேச வேண்டியிருக்கு.. இந்தப் பெண்ணை அனுப்பி விடுங்கள்..” என்றாள்..

“கையை மடக்கு..” கண்டிப்புடன் சொன்னான் ரவிச்சந்திரன்..

“மடக்கலைன்னா..?”

“ஒடித்து விடுவேன்.. மைண்ட் இட்.. என்னை யாருன்னு நினைத்த..? போ.. போய் உன் அண்ணனிடம் கேட்டுப் பார்.. ரவிச்சந்திரன் நல்லவர்களுக்குத்தான் நல்லவன்ங்கிறதை

அவன் கதை, கதையாய் சொல்வான்.. என்ன தைரியமிருந்தா வழியை மறிக்க வருவ..? உன் அண்ணனுக்கே நான் தயவு, தாட்சண்யம் பார்க்க மாட்டேன்.. உனக்குப் பார்த்து விடுவேனா..?”

“ஓ நோ.. லேடிஸிடம் ஸாப்ட் நேச்சராப் பேசனும்ங்கிற கர்ட்டஸி கூட உங்களிடம் இல்லையா ரவி..? யூஷுவலா நீங்க இப்படி பிஹேவ் பண்ண மாட்டிங்களே..”

“நான் இப்படி பிஹேவ் பண்றதைப் போல நீயும் நடந்துக்கிட்டது இல்லை.. கர்ட்டஸியைப் பத்தி நீ பேசாதே.. நீ என்ன கர்ட்டஸியை ஃபாலோ பண்ற..?”

“நீங்க தேர்ட் பெர்சனில்லயே ரவி. . நான் உங்களை அப்படி நினைக்கலையே..”

“பட்.. நான் உன்னை அப்படித்தான் நினைக்கிறேன்.. நீ எனக்குத் தேர்ட் பெர்சன்தான்..”

தரங்கிணியும் என்னென்னவோ பேசிப் பார்த்து விட்டாள்.. அவளுக்கும் ரவிச்சந்திரனுக்கும் ஆழ்ந்த பிணைப்பு உண்டு என்று நந்தினியின் மனதில் படிய வைத்து விட ஆனமட்டும் முயற்சி செய்து பார்த்து விட்டாள்.. எந்தப் பலனும்

ஏற்படவில்லை.. ரவிச்சந்திரன் சற்றுக்கூட அசைந்து கொடுக்கவில்லை..

‘கல் கோட்டையைக் கூட ஞான் தகர்த்து எறிஞ்சுருவேன்.. ஈ ரவிச்சந்திரன் இரும்புக் கோட்டையாய் இருந்து தொலைக்கிறானே..’ தரங்கிணிக்கு ஆயாசமாக இருந்தது..

கடைசி அஸ்திரமாக ரம்ய மாலினியின் பெயரை பிரயோகித்தாள்..

“இவ்வளவுதான் உங்க தங்கை பாசம் போல.. ரம்யாவுக்கு ரிலேட்டிவ்ன்னா உங்களுக்கும் ரிலேட்டிவ் தானேன்னு நான் தப்பாக் கால்குலேஷன் போட்டுட்டேன் போல.. நீங்க வேற.. ரம்யா வேறதானே..?”

“நோ..”

ஒற்றை விரலை உயர்த்தி.. ஒற்றை எழுத்தில் எச்சரித்தான் ரவிச்சந்திரன்.. அவனுடைய அந்த ஆவேசத்தில் நந்தினி பயந்து போனாள்.. உக்கிரமென்றால் உக்கிரம்.. அப்படியொரு உக்கிரம்..

“இதுவரைக்கும் எப்படியோ தெரியாது.. நீ இந்த அளவுக்கு என்னை டிஸ்டர்ப் பண்ணினதுக்குப் பின்னாடி ரம்ய மாலினியைப் பத்திப் பேசக்கூட உனக்கும், உன் குடும்பத்துக்கும் ரைட் கிடையாது..”

“வாட் ஆர் யு ஸேயிங் ரவி..?”

தரங்கிணி பதறிப் போய் விட்டாள்.. அவளுடைய மிகப் பெரிய துடுப்புச் சீட்டே ரம்ய மாலினிதான்.. அவளை தனபாலனுக்கு திருமணம் செய்து கொடுக்கலாமா என்று ரவிச்சந்திரன் சற்று யோசித்ததினால்தான் தனபாலனின் தங்கையான தரங்கிணியிடம் நின்று பேசினான்.. இல்லாவிட்டால் ‘யார் நீ’ என்ற துச்சப் பார்வையோடு மற்ற பெண்களைக் கடந்து போகிறதைப் போல இவளிடமும் முகம் கொடுத்துப் பேசாமல் கடந்து போயிருப்பான்..

“ரவி.. இந்த மேரேஜ் புரோபசலை இரண்டு குடும்பத்திலும் விரும்புகிறாங்க..”

“இந்த செகண்டில நான் அதை விரும்பலை.. ஸோ.. என் குடும்பத்திலும் இனி விரும்ப மாட்டாங்க.. போ.. போய் உன் குடும்பத்திடம் சொல்லி விடு.. ரவிச்சந்திரன் அவனுடைய

தங்கைக்கு தனபாலனைப் போன்ற ஒரு மாப்பிள்ளையை ஓர்நாளும் பார்க்க மாட்டான்னு சொல்லிப் புரியவை..”

இருளில் தரங்கிணி தனித்து நிற்கிறாளே என்ற கவலை சிறிதளவும் இல்லாமல் அவளை விட்டு விலகி நந்தினியை கை வளைவுக்குள் பத்திரப் படுத்தி இழுத்தபடி நடந்து விட்டான் ரவிச்சந்திரன்.. சற்று முன் நந்தினி கடலோரமாக நடந்து சென்றதற்கே அவன் அவளைக் கடிந்து கொண்டதை நினைத்துப் பார்த்த தரங்கிணிக்கு ரவிச்சந்திரனின் மனதில் தரங்கிணிக்கான இடம் எதுவென்று புரிந்து விட்டது..

தனபாலனின் திருமணத்தை வைத்து ரவிச்சந்திரனை அடைந்து விடலாமென்று அவள் திட்டம் தீட்டியிருக்க.. அவளாலே தனபாலனின் திருமணம் நின்றே போய் விட்டதே..

இதை தனபாலன், தரங்கிணியின் குடும்பத்தில் அவ்வளவு எளிதாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள் என்பதில் தரங்கிணிக்குத் துயரமாக இருந்தது... இந்தத் திருமண ஏற்பாட்டை அவர்கள் ஆவலாக எதிர் பார்த்திருந்தார்கள்... கேரளாவின் முண்ணனி பணக்காரனாக... முதன்மையான தொழிலதிபனாக ரவிச்சந்திரன் மட்டுமே இருந்தான்.. அவனுடைய பெயரும் புகழும் உலகம் முழுவதும் பரவிக்

கிடந்தது... அவனுக்கு அடுத்த நிலையில் இருந்து தனபாலன் மட்டுமல்ல.. இன்னும் சில கோடிஸ்வர ராஜபாரம்பர்ய இளம் தொழிலதிபர்கள் இருந்த ார்கள்.. அவர்களில் திருமணமாகாத வாலிபர்கள் ரம்ய மாலினியைத் திருமணம் செய்து கொள்ளும் கனவோடு பெண் கேட்டிருந்தார்கள்.. அவர்களில் தனபாலனை மட்டும் தேர்ந்தெடுத்து அவனுக்குப் பெண் கொடுக்கலாமா வேண்டாமா என்று யோசிக்கும் அளவுக்கு ரவிச்சந்திரன் முக்கியத்துவம் கொடுத்திருந்ததிற்கான ஒரே காரணம் அவன் ரவிச்சந்திரனுடன் படித்த நண்பன் என்பதினால் தான்.. அந்த முக்கியத்துவத்தையும் தரங்கிணி இன்று உடைத்து விட்டாள்..

இதை அவளின் குடும்பத்தார் எப்படி எதிர் கொள்ளப் போகிறார்களோ என்று தரங்கிணிக்குக் கவலையாக இருந்தது.. ரவிச்சந்திரனின் தங்கையை தனபாலனுக்கு திருமணம் செய்து கொள்வதால் அவளுடைய குடும்பத்தின் மதிப்பு உச்சத்தில் ஏறி விடும்.. ரவிச்சந்திரனின் மைத்துனன் என்ற உறவு தனபாலனை உயரத்துக்கு கொண்டு போய் அவனுடன் இரண்டாம் நிலையில் இருக்கும் மற்ற தொழிலதிபர்களை மூன்றாம் நிலைக்குத் தள்ளி விட்டிருக்கும்..

இவையிரண்டும் இல்லாமல் போய் விட்டதை தனபாலன் எப்படி எடுத்துக் கொள்வானோ என்று தரங்கிணி கலங்கிப் போனால்.. அதற்கு தரங்கிணிதான் காரணம் என்று தெரிய வந்தால் அவளைச் சும்மா விடமாட்டான்..

ரம்ய மாலினியின் மீது தனபாலனுக்கு என்றும் அதீத பிரேமம் கிடையாது.. இப்போதும் அவன் சில பெண்களிடம் காதல் சொல்லி விளையாடிக் கொண்டுதான் இருந்தான்.. அடக்கி வாசி என்று தரங்கிணிதான் எச்சரித்து வைத்திருந்தாள்.. ரம்ய மாலினி ரவிச்சந்திரனின் தங்கை.. அவளைத் திருமணம் செய்து கொண்டால் தனபாலன் உச்சத்திற்கு போய் விடுவான்.. இந்த ஒன்றிற்காக மட்டும்தான் தனபாலன் அடக்கி வாசித்தான்.. அவன் இதற்காகத்தான் ரம்ய மாலினியைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறான் என்று ரவிச்சந்திரன் கணித்து வைத்திருந்ததினால்தான் தனபாலன் பெண் கேட்டதும் உடனே சம்மதம் தெரிவிக்காமல் இழுத்தடித்துக் கொண்டிருந்தான்..

எக்கேடோ கெட்டுத் தொலையென்று தரங்கிணியை அம்போ என விட்டு விட்டு ரவிச்சந்திரன் வந்து விட்டதில் நந்தினிக்கு உறுத்தியது.. கோபமாக இருந்தவனிடம் பேசவும் பயமாக இருந்தது..

அவள் காதல் சொல்வதற்கு அந்த நேரம் உகந்ததல்ல..

“அவங்க தனியா நிற்கிறாங்களே..”

“தனியாத்தானே வந்தா..? ஸோ.. தனியாய் நிற்கிறா.. இது அவளோட பிராப்ளம்.. நம்முடையதில்லை.. கீப் கொயட்..”

“பாவம் பாஸ்..”

“அவளா பாவம்..? நீ வேற.. இவ அஜந்தாவை விட டேன்ஜரஸ்..! ஓ காட்..! ரம்ய மாலினியை இவளோட அண்ணனுக்கு மேரேஜ் பண்ணிக் குடுக்கறதுக்கு எனக்கு மனதே வரலை.. தனபாலனோட கேரக்டர் ஒரு பக்கம்.. இன்னொரு பக்கம் ஏதோ சரியில்லைன்னு தலைக்குள் ஒரு அலாரம் அடிச்சுக்கிட்டே இருந்தது.. வாட் ஃபார்ன்னு இப்போத்தான் புரியுது.. என்ன ஒரு சாகசம்..! இவ இருக்கிற வீட்டில என் தங்கை எப்படி நிம்மதியா இருக்க முடியும்..? யு நோ.. ரம்யா வெரி சாஃப்ட்..! அவளுக்கான குடும்பம் இதுவல்ல..”

இதில் நந்தினிக்கு மாற்றுக் கருத்தே இல்லை.. ரம்ய மாலினியைப் போன்ற மென்மையான குணம் கொண்ட தேவதைக்கு எப்பேற்பட்ட குடும்பம் அமைய வேண்டும்..

இந்தத் தரங்கிணியைப் போன்ற நாத்தனார் இருக்கும் குடும்பத்தில் அவள் வாழ்க்கைப் படக் கூடாது..

அவர்களுக்காக காத்திருந்த உத்ராவும், வினித்தும் அவர்கள் தனிமையில் மனம் விட்டுப் பேசியிருப்பார்கள் என்று தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தார்கள்..

அருகில் வந்த ரவிச்சந்திரனின் கோப முகத்தில் திகைத்துப் போன உத்ரா நந்தினியிடம்..

“என்னடி..?” என்றாள்..

“ஒன்றுமேயில்லை..” நந்தினி ஆயாசத்துடன் சொன்னாள்..

# அத்தியாயம் 162

**அ**றைக்கதவைத் திறந்து உள்ளே வந்த நந்தினிக்குள் இன்பமான அயர்வு இருந்தது.. எனக்குள் தேடித்தேடி உன்னை நான் கண்டு கொண்டேன் என்று ஒரு கவிதையை ஏதோ ஒரு பத்திரிக்கையில் படித்த ஞாபகம்.. அதைப் போல அவளுக்குள் தேடித்தேடி ரவிச்சந்திரனின் மீதான காதல் இருப்பதைக் கண்டு பிடித்து விட்ட குதூகலம் அவளது உடலெங்கும் வியாபித்திருந்தது..

**‘இனம் விளங்கவில்லை - எவனோ**

**என்னகம் தொட்டு விட்டான்..’**

பாரதியென்ன பெண்ணுடலுக்குள் கூடு விட்டுக் கூடு பாய்ந்து அவளது மன உணர்வுகளை இனம் கண்டு கொண்டாரா என்ன..?

தரங்கிணியுடன் வாக்குவாதம் செய்து நேரம் கடந்திருந்ததில் ரவிச்சந்திரன் எரிச்சலோடு இருந்தான்.. போதாத குறைக்கு வெளிநாட்டுக் கம்பெனியிலிருந்து அவனுக்கு முக்கியமான ஃபோன் ஒன்று வந்து விட்டது..

இரண்டு மணி நேரம் கழித்து மறுபடியும் தொடர்பு கொள்வதாகச் சொல்லிப் ஃபோனைத் துண்டித்து விட்டான்..

“கடுப்படிக்கிறாங்க.. நமக்கு நைட் டைம்ன்னா அவங்களுக்கு டே டைம்.. அதனால தூங்க விடாம டிஸ்டர்ப் பண்ணுவாங்க.. அவங்க ஆபிஸில் வந்து உட்கார்ந்துட்டா நாமும் அவங்களைப் போல வேலை செய்து கொடுக்கனும்னு நினைப்பாங்க.. நம்ம தூக்கத்தைப் பற்றி நினைக்க மாட்டாங்க..” வினித்திடம் சொன்னான்..

“உங்க அஸிஸ்டெண்ட் யாராவது இந்த வொர்க்கை முடித்துக் கொடுக்கலாமே..” வினித் தயக்கத்துடன்தான் கேட்டான்..

ரவிச்சந்திரனின் உயரத்துக்கு அவன் வினித்தை நண்பனாக ஏற்றுக்கொண்டு சமதையாக பழகுவதே பெரிது.. இதில் அவனுடைய தொழில் சம்பந்தமான விவகாரங்களில் அபிப்ராயம் சொல்லப் போய்.. நீயெல்லாம் எனக்கு அறிவுரை சொல்கிற அளவுக்கு வந்து விட்டாயா என்ற ரீதியில் அவன் கோபப்பட்டு விட்டால் என்ன செய்வது..? இல்லை.. என்தொழில்களைப் பற்றி உனக்கு என்ன தெரியும் என்று முறைத்து விட்டாலும் என்ன ஆவது..?

வேலையின் நெருக்கடியைப் பற்றி ரவிச்சந்திரன் வினித்திடம் பகிர்ந்து கொள்ளும் போது வினித் தலையை மட்டும் ஆட்டிவிட்டு சும்மா இருக்கவும் முடியாது..

இருதலைக்கொள்ளி எறும்பின் நிலைமையில் தான் வினித் தர்மசங்கடத்துடன் அந்தக் கேள்வியைக் கேட்டான்.. ரவிச்சந்திரன் இயல்பாக வினித்தைப் பார்த்துப் புன்னகைத்ததில் வினித்துக்குள் ‘அப்பாடி’ என்ற நிம்மதி பரவியது..

“இது எனக்கு மட்டும் தெரிந்த கான்பிடென்சியல் டீடெயில்ஸ்... நான்தான் பார்த்துக் கொல்லனும்.. லேப்டாப்பில் உட்கார்ந்தால் ஒன் அவரில் வேலை முடிஞ்சிரும்... டோன்ட் வொர்ரி..”

களைத்திருந்த அவன் முகத்தைப் பார்த்த நந்தினிக்கு அவனுடைய களைப்பை வாங்கிக் கொள்ள முடிந்தால் நன்றாக இருக்குமன்று தோன்றியது.. அவனை மடியில் சாய்த்து நெற்றியை வருடிக் கொடுக்க வேண்டும்.. முடி கோதி தாலாட்டுப் பாடவேண்டும்..

**‘தூக்கம் உன் கண்களைத் தழுவட்டுமே..**

**அமைதி உன் நெஞ்சினில் நிறையட்டுமே..**

**அந்தத் தூக்கமும் அமைதியும் நானானால்**

**தொடர்ந்திருப்பேன் நெஞ்சில் தவழ்ந்திருப்பேன்..'**

அவளது மனது பாடிய பாடலை விழிகளில் கண்டாளோ என்னவோ.. உத்ரா நந்தினியைக் கோர்த்து விட்டாள்..

"இவதான் உங்க பெர்சனல் செக்கரட்டியாச்சே சார்.. பேசாம இவளைத் தூக்கத்தை தியாகம் செய்து வொர்க் பண்ணச் சொல்லுங்க.. என்னடி..? வாயை மூடிக்கிட்டு சும்மா இருக்க..? வாயில் என்ன கமர்கட்டையா வைத்திருக்க..? நான் வொர்க் பண்ணித் தரேன்னு சொல்ல வேண்டியதுதானே.. உனக்கு சார் கொடுக்கிற சம்பளம் வேஸ்ட்டுடி.."

"விட்டா நானே வேஸ்ட்டுன்னு போட்டுக் கொடுப்படி நீ.. இப்படியாப்பட்ட ஃபிரண்ட் கிடைக்க நான் கொடுத்து வைச்சிருக்கனும் போ.. பாருங்க பாஸ்.. நீங்க கொடுக்கிற வேலையைக் குறையில்லாமத்தானே நான் செய்துக்கிட்டு இருக்கேன்..? அப்புறம் எதுக்காக இவளிடம் பாட்டு வாங்க வைக்கறீங்க... என்ன வொர்க்குன்னு என்னிடம் சொல்லிட்டு நீங்க தூங்கப் போங்க பாஸ்.. எனக்கும் லேப்-டாப்பை ஆபரேட் பண்ணத் தெரியும்.. மனசிலாயி.."

நந்தினி ரோஷப்படுவதைப் போல அவனது வேலையின் சுமையை வாங்கிக் கொள்ள முயன்றாள்..

“நீதானே..” என்றவனின் முகத்தில் களைப்பு நீங்கி சிரிப்பு வந்தது..

அதைக் கவனித்த உத்ராவுக்கு நந்தினி இவனுடைய ஊக்கசக்தி என்று தோன்றியது.. அவளுடன் வாயாடுவதை அவன் விரும்புவதை உத்ரா உணர்ந்திருந்தாள்.. அவனுடைய மனதை லேசாக்கும் மாய வித்தை நந்தினியிடம் இருப்பதில் உத்ராவுக்குள் வியப்பு வந்தது.. இதை நந்தினி அறிவாளா என்று தனக்குள் போட்டுக் கொண்டாள்..

இருபத்தி நான்கு மணி நேரமும் கால்களில் சக்கரம் கட்டிக் கொண்டிருப்பதைப் போல ஓரிடத்தில் நிற்காமல் ஓடிக் கொண்டிருக்கும் ஓர் மனிதன்.. இரண்டு மாதங்களாக ஓரிடத்தில் தேங்கி நிற்கிறான் என்றால் நந்தினியின் சக்தியை என்னவென்று சொல்வது..?

“நீ நிஜமாவே எனக்கு ஹெல்ப் பண்ணனும்னு நினைத்தா என் வேலையில் தலையைக் குடுக்காம உன் ரூமுக்கு ஓடியே போயிரு.. தட்’ஸ் தி கிரேட் ஜாப் யு நோ.. ஹா.. ஹா..”

ரவிச்சந்திரனின் சிரிப்பில் நந்தினிக்கு ரோஷம், ரோஷமாக வந்தது.. ரோஷப்படுவதைப் போல நடித்தால் இவன் உண்மையாகவே ரோஷப்பட வைக்கிறானே..

“வொய்.. வொய்..?” வலது உள்ளங்கையைக் குவித்து நியாயம் கேட்டாள்..

“எதுக்கு இப்படி வொய், வொய்ன்னு காதோரமா ‘ஙொய்..’ன்னு சப்தம் போடற..? ஹா.. ஹா..”

“உங்களோட வொர்க் டென்ஷனைக் குறைக்கலாம்ன்னு நினைத்தா நீங்க நோஸ் கட் கொடுப்பீங்களா..?”

“என் வொர்க்கில நீ தலையைக் கொடுத்தாத்தான் டென்ஷன்.. எதையாவது எக்குத்தப்பாய் நோண்டி வைத்தேன்னு வை.. அத்தனை ஃபிகரும் கொலாப்ரேஷன் ஆகி சொதப்பித் தொலைத்து சோதித்து வைத்திரும்.. அதுக்கு நீ ஹெல்ப் பண்றேன்னு இண்டர்ஃபியர் ஆகாம இருக்கிறதுதான் பெட்டர்..”

“அது என்ன பாஸ் ஃபிகர்கள் எல்லாம் உங்களுக்கு மட்டும்தான் மடியும்ன்னு அப்படியொரு கான்ஃபிடென்ஸ்..? அத்தனை ஃபிகரும் லேடி ஃபிகரா என்ன..?”

நந்தினியின் கேள்வியில் உத்ரா, வினித்துக்கும் சிரிப்பு வந்துவிட அவர்கள் ரவிச்சந்திரனுடன் சேர்ந்து சிரித்தார்கள்..

“இப்படித்தாங்க உத்ரா.. உங்க ஃபிரண்ட் அப்பப்ப அவளோட இண்டலிஜென்சியோட லெவலை ப்ரூவ் பண்ணுவா.. இவளை பெர்சனல் செக்கரட்டரியா அப்பாயிண்ட் பண்ணியிருக்கோமேன்னு மனது பதக், பதக்குன்னு அடித்துக்கும்..”

“அதுவாவது உங்களை அடிக்குதே.. பெர்சனல் மேனேஜர் வேலைன்னு தானேடி உத்ரா.. நீ சொன்ன.. இவர் என்னடான்னா வார்த்தைக்கு வார்த்தை இவரோட பெர்சனல் செக்கரட்டரி நான்னு சொல்கிறார்.. இதுக்காகவாடி பி.டெக் படிச்சேன்..?”

“ஆஹா.. உலகத்திலேயே பி.டெக் படித்தவ இவ ஒருத்திதான் என்கிற நினைப்பிலேயே பேசுகிறா பாருங்க உத்ரா.. அங்கே நிற்கிறா இவ..”

“நோ பாஸ்.. நான் காரில உங்க பக்கத்தில் உட்கார்ந்திருக்கேன்..”

“என்ன ஒரு கண்டுபிடிப்பு..! கொலம்பஸெல்லாம் உன் கண்டுபிடிப்புக்கு முன்னால் நிற்கக்கூட முடியாது நந்தினி..

அடிக்கடி இப்படி உன் கண்டு பிடிப்பைச் சொல்லி அரள வைக்கிற பார்த்தியா..''

''உங்களுக்குப் போய் நான் ஹெல்ப் பண்ண நினைத்தேன் பாருங்க.. என்னைச் சொல்லனும்..''

''ஆக.. நீ வேலை பார்க்க நினைக்கலை... இதை ஹெல்ப்பா நினைத்திருக்கிற.. உனக்கு சேலரி எதுக்காக கொடுத்துக்கிட்டு இருக்கிறேன்னு நினைக்கிற..''

ரவிச்சந்திரனும் நந்தினியும் மிக்கி-மௌஸைப் போல அடித்துக் கொள்வதைப் பார்க்க உத்ராவுக்கும் வினித்துக்கும் வேடிக்கையாக இருந்தது.. ரவிச்சந்திரன் வெகு இயல்பாக நந்தினியை 'அவள், இவள்..' என்று பேசுவதைக் கவனித்தாள் உத்ரா.. நந்தினி அதை ஆட்சேபிக்காததும் அவள் மனதில் பதிந்தது..

வினித்தின் முழங்கை அவளது விலாவில் இடித்தது.. அவள் கவனித்த அதே விவரங்களை அவனும் கவனித்து விட்டானாம்.. அதை அவளுக்கு அறிவுறுத்துகிறானாம்..

'இவருக்கு என் இடுப்பில் இடிக்க இது ஒரு சாக்கு..'

உத்ராவுக்கு கிளுகிளுப்பாக இருந்தது... இதுபோன்ற கணவன் மனைவியின் அன்யோன்ய பரிபாஷை அவளுக்கு பிடித்தமானதாக இருந்தது.. கும்பலில் இருந்தாலும் தனித்து நிறுத்தும் பரிபாஷை இது.. வினித்திற்கும் அவளுக்கும் இடையே ஓடும் ரகசிய ஜாடைகளை உள்ளடக்கிய பரிபாஷை..

'நானும் கவனித்தேன்..' என்று கூறும் விதத்தில் அவனது புறங்கையைத் தட்டினாள் உத்ரா.. அதற்காகவே காத்திருந்ததைப் போல வினித்தின் விரல்கள் அவள் விரல்களோடு பிணைந்து கொண்டன.. பின்சீட்டில் அமர்ந்திருந்ததால் சந்தடி செய்யாமல் அவன் நகர்ந்து உட்கார்ந்து நெருக்கத்தை அதிகப் படுத்தியதில் உத்ராவுக்கு ஏதேதோ நிகழ்ந்தது..

புதிதாக திருமணமான தம்பதிகள் எங்கே இருந்தாலும் தங்களுக்கென ஓர் உலகை சிருஷ்டித்து விடுவார்கள்.. நொடிப் பொழுதில் சிருஷ்டித்த உலகில் உத்ராவும் வினித்தும் மூழ்கியிருக்க நந்தினியும் ரவிச்சந்திரனும் வெற்றிகரமாக தங்களின் சண்டையை தொடர்ந்து கொண்டிருந்தார்கள்..

"இப்ப என்னதான் சொல்கிறீங்க பாஸ்..? நான் உங்களுக்குத் தேவையா.. தேவையில்லையா..?"

ரவிச்சந்திரனின் கண்களில் எதற்காக அப்படியொரு பிரகாசம் வந்து நிற்கிறது என்று நந்தினிக்குத் துளியளவும் புரியவில்லை.. அவள் என்னவோ என் உதவி உங்களுக்கு வேண்டுமா, வேண்டாமா என்று தான் கேட்டாள்... கேட்ட விதம்தான் அந்த லட்சணமாக அமைந்து விட்டது..

‘எதுக்கு இப்படி கண்ணில பல்பை எரிய விடறான்..’ நந்தினி அவனை விசித்திரமாக அவனைப் பார்த்து வைத்தாள்..

‘என்ன பேசினோம்ன்னு தெரியாம விழிக்கிறா..’ ரவிச்சந்திரனின் சிரிப்பு அதிகரித்தது..

“சிரித்தது போதும்.. என் கேள்விக்கென்ன பதில்..?”

நந்தினி கோபத்துடன் கேட்டாள்..

“பாட்டுப் பாடறியா..?”

“உங்கிட்டப் பாடிட்டாலும்..”

“ஏனாம்..? நான் கலா ரசிகனில்லையா..?”

“யார் அந்தக் கலா..?”

“நீ அதிலேயே இரு.. என்னை நம்பவே கூடாதுங்கிற முடிவோட இருக்கறவளை எப்படித் திருத்தறது..?”

“யாரும் இங்கே திருத்துகிற மாதிரி இல்லை.. நீங்க திருந்தினால் சரி..”

“நீதான் என்னைத் திருத்தேன்..”

ரவிச்சந்திரனின் பார்வை.. வா.. வந்து என்னைத் திருமணம் செய்து கொண்டு என்னவளாகி என்னைத் திருத்து என்று அறை கூவி அவளை அழைத்தது..

‘வருகிறேன்..’ அவள் மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்..

‘உன்னைத் திருத்துவதற்காக வரவில்லை.. உன்னுடன் சேர்ந்து வாழ்வதற்காக வருகிறேன்.. எப்படி எனது நிறை குறைகளுடன் என்னை நேசித்து நீ காதலிக்க ஆரம்பித்தாயோ.. அதைப் போல உனது நிறைகுறைகளுடன் உன்னை ஏற்றுக்கொண்டு என் மனதில் இருத்தி நான் காதலிக்க ஆரம்பித்திருக்கிறேன்.. உனக்காக நான் எதையும் செய்வேன்.. இதை நீ அறிவாயா..?’

அவன் தேடிய காதலுடன் அவள் அவனுக்காக உருகிக் கொண்டிருக்கிறாள்.. இதை அவனிடம் சொல்ல முடியாமல் தரங்கிணி குறுக்கே வந்து விட்டாள்.. கடற்கரையில்தான் அப்படியென்றால் ஹோட்டலிலும் சொல்ல முடியாமல்

ரவிச்சந்திரனுக்கு எதிர்பாராத வேலை வந்து சேர்ந்து விட்டதே..

முக்கியமான வேலையின் நினைவோடு இருப்பவனிடம் எப்படிக் காதலைச் சொல்வது...? ஓடுகிற ஓட்டத்தில் கேட்டுக் கொள்ளக் கூடியதா காதல் எனும் உணர்வு..?

அது அற்புதமானது... அதைச் சொல்லும் நொடிகளில் எவ்விதமான மனக்கிலேசமும், தடைகளும், இடையூறுகளும் அவர்களுக்கு இடையே இருக்கக் கூடாது.. காதலைச் சொல்லப் போகும் அவளும்.. கேட்கப் போகும் அவனும் பாரமற்ற லேசான மனதுடன் இறக்கை விரித்து வானத்தில் பறக்கும் உற்சாக மனநிலையுடன் இருக்க வேண்டும்..

நீலிமலைக்காட்டிலே.. மீன்முட்டி அருவிகளைப் பார்த்து முடித்த அற்புதமான அந்த நொடியிலே புல்தரையில் அவள் மீது சரிந்து அவன் அவளிடம் காதல் சொன்னானே.. அதைப் போன்றதொரு நொடி அவளுக்கு வேண்டும்..

வேலையிருப்பதால் டின்னரை முடித்து விட்டு அவரவர் அறைகளுக்கு சென்று விடலாம் என்று ரவிச்சந்திரன் சொன்னதை மற்றவர்கள் ஏற்றுக் கொண்டு டைனிங் ஹாலுக்குப் போனார்கள்..

# அத்தியாயம் 163

**உ**டைமாற்றிக் கட்டிலில் விழுந்து புரண்ட நந்தினிக்குள் சந்தோஷம் சதிராடியது.. அவள் மனதிலிருந்த சந்தோஷத்தை வாய்விட்டுக் கூவ வேண்டும் போல இருந்தது.. உத்ராவிடம் சொல்லாமென்றால் அவள் வினித்துடன் உறவாடிக் கொண்டிருக்கும் நேரம் அது.. தாள முடியாத காதல் உணர்வுகளை மனதில் சுமக்க முடியாமல் தடுமாறிய நந்தினி இளைப்பாறும் வகை தெரியாமல் செல்ஃபோனை எடுத்து அதிலிருந்த ரவிச்சந்திரனின் படங்களைப் பார்வையிட ஆரம்பித்தாள்..

‘இன்னைக்கு உறங்கினாப்புலதான்..’

உறக்கம் வராத அந்த இரவுப் பொழுது நீண்டிருப்பதைப் போல அவளுக்கு அயர்வை ஏற்படுத்தியது.. அவனருகில் இருக்கும்போது நேரம் நிற்காமல் ஓடிக் கொண்டிருப்பதைப் போல இருந்தது.. அவனில்லாத அந்தத் தனிமையில் ஒவ்வொரு நொடியும் யுகங்களாக கனத்தது..

செல்ஃபோனில் சிரித்துக் கொண்டிருந்த ரவிச்சந்திரனின் போட்டோவின் மீது கவிழ்ந்து முத்த மிட்டாள்.. நேரிலே இப்படி

முத்தம் கொடுத்திருந்தால் அவன் எப்படி மகிழ்ந்து போயிருப்பான் என்று நினைத்துப் பார்த்தாள்..

'ஆ சுந்தர புருஷனை கட்டுக்குள் அடக்கியிருக்க முடியாதல்லோ..'

உணர்வுகள் பொங்கி எழுந்ததில் உதட்டைக் கடித்து உணர்வுகளை அடக்க முயன்றாள்... ரவிச்சந்திரனின் மீதான காதல் அட்சய சுரபியைப் போல பொங்கி வழிந்தது..

தலையனையின் மீது செல்ஃபோனை நிமிர்த்தி நிற்க வைத்து.. குப்புறப் படுத்துக் கால்களை ஆட்டியபடி போட்டோவைப் பார்த்தாள்.. அவன் நேரிலே இருப்பதைப் போலவே இருந்தது.. இவனை மறக்க முடியுமா என்று மலைத்தாள்..

**"உன்னை நினைக்கவே..**

**நொடிகள் போதுமே..**

**உன்னை மறக்கவே..**

**யுகங்கள் ஆகுமே.."**

வாய் விட்டுச் சத்தமாக பாடினாள்.. பூட்டியிருந்த ஏஸி அறையின் சுவர்களில் அவளது பாடல் பட்டு எதிரொலித்தது..

ரவிச்சந்திரனின் போட்டோவைப் பார்த்து அவனுடன் பேசுவதைப் போலப் பாடிக் கொண்டிருந்தாள்.. அவன் காதல் சொன்ன நாளை நினைத்து உதட்டைச் சுழித்து அழகு காட்டினாள்..

**"நீ கேட்கையில்**

**சொல்லவே இல்லையே..**

**நான் நினைக்கையில்**

**ஓரமாய் வலிக்குதே..**

**என் மார்பில் காதல் வந்து**

**மையமிட்டதே..**

**ன்னை நினைக்கவே..**

**நொடிகள் போதுமே..**

**உன்னை மறக்கவே**

**யுகங்கள் ஆகுமே.."**

நந்தினி செல்ஃபோனை எடுத்து ரவிச்சந்திரனின் போட்டோவின் மீது முகம் புதைத்துக் கட்டிக் கொண்டாள்.. அவளது கண்களில் இருந்து கண்ணீர் துளி வழிந்தோடியது..

மூடிய இமைகளுக்குள் ரவிச்சந்திரன் வந்து நின்றான்.. புருவங்களை உயர்த்தி இறக்கிக் கண் சிமிட்டினான்.. இவள் மயங்கிக் கிளர்ந்தாள்.. இமைகளைத் திறந்து விழித்தபோது இவனைப் பிரிந்து தஞ்சாவூர் செல்ல நினைத்திருந்தேனே.. இவனைப் பிரிய முடியுமா என்று மனது திகைத்தது.. இவனை மறக்க முடியுமா..? மறத்தல் சாத்தியமா..?

பெல்ட் மன்னனை நீ திருமணம் செய்து கொள்ள வேண்டாம்.. திரும்பி வந்து விடு என்று மேகநாதன் மகளை அழைக்கும் நாளுக்காக காத்திருப்பவள்.. மேகநாதன் அழைத்தவுடனே துள்ளிக் குதித்து தந்தையின் பின்னால் ஓடி விடுவாளா என்ன..?

ஓர் அடிகூட நகர முடியாமல் காதல் என்னும் இரும்புத்தளை அவள் கால்களைப் பிணைத்திருப்பதில் நந்தினி கண்களை இறுக்கி மூடிப் பெருமூச்சு விட்டாள்..

ரவிச்சந்திரன் இல்லாத வாழ்வை அவளால் வாழ முடியாது.. அவனை அவள் நினைக்கவில்லை என்று நினைத்திருந்தாளே.. அது எவ்வளவு பெரிய முட்டாள் தனம்..

**“நான் உன்னை மறந்த சேதி**

**மறந்து விட்டேன்..**

**ஏன் இன்று குளிக்கும் போது**

**நினைத்துக் கொண்டேன்..?**

**கண்மூடி சாயும் பொழுதிலும்**

**உன் கண்கள்**

**கண் முன்பு தோன்றி மறைவதேன்..?**

**ஏன்..? ஏன்..? ஏன்..?"**

ரவிச்சந்திரனின் போட்டோவைப் பார்த்துக் கேள்வி கேட்டாள்.. ஒரு பொய்யாவது சொல் கண்ணே.. உன் காதல் நான்தானென்று.. அந்தச் சொல்லில் உயிர் வாழ்வேன் என்று நீலிமலைக்காட்டின் மரக்குடிலில் அவளைப் பார்த்துப் பாடியவன்.. பொய் சொல்ல வேண்டிய அவசியமேயின்றி அவள் மனதில் உண்மையிலேயே காதல் பொங்கி வழிந்து கொண்டிருப்பதை அறியாதவனாக அதே ஹோட்டலில் வேறு ஒரு அறையில் வேலையில் மூழ்கியிருந்தான்.. ஓடிச்சென்று அவன் அறைக் கதவைத் தட்டி நானும் உன்னைக் காதலிக்கிறேன் என்று சொல்லி விடலாமா என்று துடித்தாள்.. பெண்மைக்கே உரித்தான தயக்கம் அவளைக் கட்டிப் போட்டது.. அவன் நீலிமலைக் காட்டில் காதல்

சொன்னபோதே.. நானும் உன்னைக் காதலிக்கிறேன் என்று பதில் சொல்லியிருந்தால் இத்தனை இம்சையில்லையே என்று நந்தினி தன்னைத்தானே நொந்து கொண்டாள்..

இப்படியா மனதுக்குள் வந்து நிற்கும் காதலை அவனிடம் சொல்ல முடியாமல் தவிப்பாள்..?

கோழிக்கோடில் அவனிடம் வழிந்த ரோஸியின்மீது ஏன் கொலைவெறி வந்தது..? அவனுடைய அத்தை மகள் ரத்தினம் அஜந்தாவைப் பார்த்தாலே நந்தினிக்கு ஏன் ஆகாமல் போனது..? இப்போது தரங்கிணியின் மீது ஏன் பகைமை உணர்வு வருகிறது என்று அனைத்து கேள்விகளுக்கும் அவளுக்கு விடை கிடைத்து விட்டதைப் போல இருந்தது..

ஏதோ ஒருவகையில் ரவிச்சந்திரன் அவளை ஈர்த்திருக்கிறான்.. கண்டவுடன் காதல் என்பதைப் போல இல்லாவிட்டாலும் அவனைக் கண்டதிலிருந்து அவன்மீது அவளுக்குள் ஓர்விதமான உரிமையுணர்வு ஏற்பட்டிருந்ததை அவளால் மறுக்க முடியவில்லையே.. அவன் மீதான கோப, தாபத்திற்கும் அவனிடம்தானே அவள் அடைக்கலத்தை நாடினாள்..?

**“நீ என்னைக் கேட்டபோது..**

**காதலில்லை..**

**நான் காதலுற்ற போது**

**நீயுமில்லை..**

**ஒற்றைக் கேள்வி**

**உன்னைக் கேட்கிறேன்..**

**இப்போதும் எந்தன்மீது**

**காதல் உள்ளதா..?"**

இல்லையென்று அவன் சொல்லி விட்டாள் என்று நினைத்துக் கூடப் பார்க்க முடியாமல் அவளது நெஞ்சம் நடுங்கியது.. இல்லை.. ரவிச்சந்திரன் அப்படிச் சொல்ல மாட்டான்.. அவளை என்றென்றும் காதலிப்பான் என்று மனதுக்குள் சமாதானம் செய்து கொண்டாலும்.. ஓரமாக ஓர்பயம் வந்து எட்டிப் பார்த்தது.. இல்லை.. அப்படி நடக்கக் கூடாது என்று பதறித் தவித்தாள்.. அவனது அணைப்பில் அடங்க வேண்டும் போல ஆவேசம் கிளர்ந்தது..

**"ஹார்மோன்களின் சத்தம் கேட்குதே..**

**உன் காதிலே..**

**என்று கேட்கும் இந்தச் சத்தம்..?**

**உன்னை நினைக்கவே நொடிகள் போதுமே..**

**உன்னை மறக்கவே..**

**யுகங்கள் ஆகுமே..”**

இந்த அளவுக்கு அவள் மனதை அவன் ஆக்ரமித்திருக்கிறான் என்பதே அன்றுதான் அவளுக்குப் புரிந்தது.. அவளுடைய முறை மாப்பிள்ளைகள் பலர் இருக்கிறார்கள்.. அனைவரும் பணக்காரர்கள்தான்.. படித்தவர்கள்தான.. அழகான தோற்றத்துடன் இருப்பவர்கள்தான்.. உறவினர் வீட்டுத் திருமணங்கள், கோவில் திருவிழாக்கள் போன்றவற்றில் நந்தினி கலந்து கொள்ளும் போது அவள் இருக்கும் இடத்தைச் சுற்றி வட்டமிடுவார்கள்.. நந்தினி அவர்கள் இருக்கும் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டாள்.. நந்தகுமார்கூட.. அவனுடைய முறைப்பெண்கள் அவனை அப்படிச் சுற்றி வளைத்து முற்றுகையிடவில்லையே என்று ஏக்கப் பெருமூச்சு விடுவான்..

கல்லூரியில் உடன் படித்த மாணவர்கள் அவள் மீது காதல் கணைகளை வீசியதுக்கு.. அதை அப்படியே பிடித்து

அது என்ன சைஸில் இருக்கிறது என்று அழகு பார்த்து காலடியில் போட்டு மிதித்து விட்டு எதுவுமே நடக்காததைப் போல அவர்களிடம் வாய் வேறு வளர்ப்பாள்.. இவளிடம் அம்பு விடுவது கால விரயம் என்று போதி மரத்தடியில் உட்காராமலே அவர்கள் ஞானம் வரப் பெற்றவர்களாக அம்பு விடவேறு பெண்ணைத் தேடிப் போய் விடுவார்கள்..

டூப்ளிகேட் ரவிச்சந்திரன் கூட அவள்மீது காதல்கணை வீச முயன்று தோற்றுக் கொண்டிருப்பவன்தானே..

**“என்சாலை எங்கும் எங்கும்**

**ஆண்கள் கூட்டம்..**

**என் கண்கள் சாய்ந்ததுண்டு..**

**சேர்ந்ததில்லை..**

**காட்சி யாவும் புதைந்து போனதே..**

**என் நெஞ்சம்**

**உன்னை மட்டும்**

**தோண்டிப் பார்ப்பதேன்..?”**

நந்தினி கட்டிலில் புரண்டு படுத்து அறையின் கூரையில் மிளிர்ந்த மின்மினி விளக்குகளை வெறித்தாள்.. முதன் முதலாக ரவிச்சந்திரனைக் கண்ட நொடியிலிருந்து அந்தநொடி வரை நடந்த நிகழ்வுகளை அவளது நெஞ்சம் அசை போட்டுப் பார்த்தது.. நீலிமலைக் காட்டின் புல்தரை நினைவுக்கு வந்தது.. அவன் காட்டிய வேகத்தை நினைத்துப் பார்த்தவளுக்குள் நாணம் வந்தது..

அன்று ஏன் அவனை மறுக்கத் தோன்றவில்லை..? அவனை விட்டு விலகும் திராணியில்லாதவளாக ஒட்டிக் கிடந்தாளே.. ஓர் எல்லையைத் தொட்டபோது ஏன் மறுத்தாள்..?

**“உன்னோடு அன்று**

**கண்ட காதல் வேகம்..**

**என்னோடு எட்டி நின்ற**

**நாகரிகம்..**

**கண்ணில் கண்ணில்**

**வந்து போகுதே..**

**என் நெஞ்சம்**

கட்டில் மீது திட்டுகின்றதே.."

கட்டிலின் மீது கிடந்த நந்தினியின் நெஞ்சம் பெருமூச்சு விட்டது.. ரவிச்சந்திரனின் புகைப்படத்தின் மீது கவிழ்ந்து புரண்டவளின் இதயம் விம்மியது..

எது நடந்தபோதும் அவனை விட்டுப் பிரிய முடியாமல் அவள் தவித்தது எதனால்..? பெற்றவர்கள், உடன் பிறந்தவன்.. என்று அனைவரையும் பிரிந்து ஓடி வந்தவள் அவனைப் பிரிய முடியாமல் வயநாட்டில் தேங்கி நின்றது எதற்காக..? ரவிச்சந்திரன் என்ற கம்பீர ஆணழகனைப் பிரிந்து அவளால் எங்கும் செல்ல முடியாது என்ற உண்மையை ஏன் அவள் உணராமல் போனாள்..

நந்தினியின் மனம் ரவிச்சந்திரனைத் தேடியது.. அவன் வேண்டும் என்று உடலும் மனமும் தேடும் இந்தத் தேடலின் முடிவுதான் என்ன..? எப்போது விடியும்..? எப்போது அவள் அவனிடம் அவளுடைய மனதிலிருக்கும் காதலைச் சொல்லப் போகிறாள்..?

"உன் தேடலோ..

காதல் தேடல்தான்..

**என் தேடலோ..**

**கடவுள் தேடும் பக்தன் போல..**

**உன்னை நினைக்கவே**

**நொடிகள் போதுமே..**

**உன்னை மறக்கவே**

**யுகங்கள் ஆகுமே..”**

விடியாத இரவினுக்கே விடியலைத் தேடி நின்ற அந்தப் பேதை மெல்ல இமை மூடித் தூங்க முயற்ச்சித்தாள்.. தூக்கம் வருவேனா என்று மல்லுக் கட்டியது..

நகரும் மணித்துளிகளை அவள் கணக்கிட்டுக் கொண்டிருக்க.. தொழிலின் வரவு செலவை ரவிச்சந்திரன் கணக்கிட்டுக் கொண்டிருந்தான்..

# அத்தியாயம் 164

**க**டலுண்டி பறவைகள் சரணலாயத்தின் அழகில் சொக்கிப் போன உத்ராவும், வினித்தும் பிரமிப்புடன் கை விரல்களைக் கோர்த்தபடி தீவுக்குள் நடந்து விட, நந்தினி தனித்து விடப்பட்டாள்..

“வாட் எ பியுட்டிஃபுல் பிளேஸ்..! இங்கே ஹனிமூன் வரனும்னு நீ அடம் பிடிச்சதுக்கு உன்மேல என் மனசில ஓரமா கொஞ்சம் கோபம் இருந்தது.. நம்மோட ஸ்பெஷல் டேஸோட இம்பார்ட்டன்ஸை நீ புரிந்துக்கலையோன்னு ஃபீல் பண்ணினேன்.. இந்த இடத்தில நிற்கிறப்பதான் தெரியுது.. ஏன் கேரளாவை கடவுளோட தேசம்ன்னு மக்கள் கொண்டாடறாங்கன்னு.. தேங்க் யு உத்ரா.. நீ அடம் பிடிச்சு இங்கே அழைத்து வரலைன்னா இந்த ஃபீலிங்சை நான் மிஸ் பண்ணியிருப்பேன்..”

உத்ராவின் விரல் நீவி வினித் சொன்னபோது உத்ரா சந்தோஷப் பட்டுப் போனாள்.. சிநேகியைப் பார்க்க வேண்டுமென்ற சுயநலத்துக்காக கணவனின் ஆசையைப் பின்தள்ளி விட்டாளோ என்ற குற்றஉணர்வு அவள் மனதை

அரித்துக் கொண்டிருந்தது.. அதனாலேயே நந்தினியுடன் சேர்ந்து ஊர் சுற்றாமல் கழன்று வினித்துடன் ஒட்டிக் கொள்வாள்..

இப்போது அந்தக் குற்ற உணர்ச்சியிலிருந்து விடுபட்டு விட்டதில் மனம் லேசாகி விட்டது.. வினித்தின் கை வளைவில் தன் கைகளைப் பிணைத்து அவன் தோளில் தலை சாய்த்துக் கொண்டாள்.. அதைத் தற்செயலாக பார்த்து விட்ட நந்தினி சங்கடத்துடன் தள்ளி நடந்து மரங்களின் மறைவில் நின்று கடலை வெறித்தாள்..

அவள் மனதில் சஞ்சலம் குடி கொண்டிருந்தது.. காலையில் எழுந்து கொள்ளும்போதே இன்று எப்படியும் தன் மனதில் உணரும் காதல் உணர்வுகளை ரவிச்சந்திரனிடம் சொல்லி விடவேண்டும் என்ற தீர்மானத்துடன்தான எழுந்தாள் நந்தினி.. மனதுக்குள் இன்பப் பரபரப்பு வந்திருந்ததில் ‘லா..லா..’ என்று பாட்டுப் பாடியபடி குளியலறைக்குள் புகுந்தாள்.

“லவ் பெர்ட்ஸ் லவ் பெர்ட்ஸ்..” என்று பாடல் தூள் கிளப்பியது..

“தக்கத்திமித் தா..” என்றபடி சுவர் அலமாரியைத் திறந்து சிறந்த உடையைத் தேடினாள். .

நந்தினி அப்படியெல்லாம் மெனக்கெட்டு உடையைத் தேர்வு செய்து அலங்காரம் பன்னிக் கொள்ளும் ஆள் அல்ல..

‘அதெல்லாம்தான் ‘ம.மு’, ‘ம.பி’ன்னு ஆகிருச்சே..’

நந்தினி தலையை ஆட்டிக் கொண்டாள்..

மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸில் ஏறுவதற்கு முன்னால் இருந்த நந்தினி வேறு.. அவள் காதல் என்றால் என்ன கலரில் இருக்கும் என்று கேட்டு வைப்பவள்.. கருப்பா, சிகப்பா..? கை, கால் முளைத் திருக்குமா..? என்றெல்லாம் எள்ளி நகையாடுபவள்..

மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸில் ஏறிய பின்னால்தான் கதையே தலைகீழாய் மாறிப் போய் விட்டதே.. ரவிச்சந்திரன் என்ற ஆணழகனை மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸில் சந்தித்தாலும் சந்தித்தாள்.. அவள் அவளாக இல்லாமல் வேறு எவளாகவோ ஆகிவிட்டாள்..

**“நானே நானா..?**

**யாரோதானா..?**

மெல்ல.. மெல்ல..

மாறினேனா..?”

லவ் பெர்ட்ஸின் ஊடே வேறு பாடல் புகுந்தது.. மெரூன் வண்ணத்தில் ஜரிகைப் புள்ளிகளிட்ட மைசூர் சில்க் சேலையைத் தேர்ந்தெடுத்து மேலே சாய்த்துக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள்..

‘இது ஸுட் ஆகுமில்ல..?’

ஆகும் என்றுதான் தோன்றியது.. அந்தச் சேலை நந்தினியின் நிறத்துக்கு எடுப்பாக இருக்கும் என்பது ஒரு புறமிருக்க.. அது ரவிச்சந்திரன் எடுத்துக் கொடுத்த

வேலை என்பதில் அன்று அந்தச் சேலை யை உடுத்திக் கொள்ள வேண்டுமென்று அவள் விரும்பினாள்.. இதே கோழிக்கோடில்தான் அவன் அவளுக்கு அந்தச் சேலையை வாங்கிக் கொடுத்திருந்தான்.. ரவிச்சந்திரனும் அவளுமாக ஊர் சுற்றியபோது அவள் ஷாப்பிங்க என்று அள்ளிக் கொண்ட அனைத்துக்கும் அவன்தான் பணம் கொடுத்தான்.. சம்பளத்தில் கழித்துக் கொள்வான் என்று சமாதானம் சொல்லியிருந்தான்.. அப்படிச் செய்தானா என்று தெரியவில்லை.. கேட்டால் அவன் ‘டோஸ்’ விடுவான் என்ற

பயத்தினால் நந்தினியும் இதுவரை அதைப் பற்றிக் கேட்கவில்லை..

அன்று அவள் அள்ளிக் கொண்டிருந்தவைகளில் இந்தச் சேலையும் ஒன்று.. நன்றாக இருக்கும் எதையும் அவள் தேர்வு செய்ய மாட்டாளா என்று அந்தச் சேலையைச் சுட்டிக் காட்டி உசுப்பி விட்டு வாங்க வைத்திருந்தான்.. அந்த நினைவில் செல்லச் சிரிப்புச் சிரித்தவள்..

‘ஆ மனுஷன் கள்ளனல்லோ..’ என்று உதட்டைச் சுழித்தாள்..

**“கண்ணைத் தொட்டுப்**

**பெண்ணைத் தொட்டு**

**நெஞ்சைத் தொட்டது ஆசை..!**

**ஆசைக் கனவில் யாரோ பாட**

**காற்றில் வந்தது ஓசை..!”**

லேசாக சுழன்று ஆடியபடி சேலையைச் சுற்றிக் கொண்டாள்.. நேர்த்தியாக கட்டி முடித்து கண்ணாடி பார்த்தவளுக்கு அவன் இந்தச் சேலையை நினைவில்

வைத்திருப்பானா என்ற ஏக்கம் வந்தது.. இது தான்தானா என்று ஆச்சரியப்பட்டுப் போனாள்..

நந்தினியா இப்படி ஏங்குவது..?

**"மாறியது நெஞ்சம்.."** அவளது பாடலும் மாறியது..

**"மாற்றியவர் யாரோ..?**

**காரிகையின் உள்ளம்..**

**காண வருவாரோ..?**

**மாறியது நெஞ்சம்..**

**மாற்றியவர் யாரோ..?"**

செல்ஃபோனில் இருந்த ரவிச்சந்திரனின் போட்டோவைப் பார்த்து அது நீதாண்டா என்று நாக்கைத் துருத்தி அழகு காட்டினாள்.. தலைவாரி தளர்வாகப் பின்னலிட்டு.. விழிகளுக்கு மைதீட்டி.. நெற்றியில் மெரூன் வண்ண ஸ்டிக்கர் பொட்டை ஒட்டி முடித்து கண்ணாடியில் அழகு பார்த்தாள்..

"வாவ்..! செமத்தியா இருக்கேடி நந்தினி.." மகிழ்ந்து போனாள்..

‘ஞான் வல்லிய சுந்தரியாக்கும்.. ஆ சுந்தர புருஷன் எண்ட சேலில (அழகில) மயங்கி.. என் சேலை முந்தானை முடிச்சில் சிக்குவானல்லோ..’

எப்போது அவனைப் பார்ப்பாள் என்றிருந்தது.. மணியைப் பார்த்தாள்.. அப்போதுதான் ஆறு என்றது அது..

‘அடிப்பாவி நந்தினி.. அதுக்குள்ள எழுந்து குளிச்சு முடிச்சு ரெடியாகி உட்கார்ந்திட்டியா..? இன்னும் அவன் தூக்கத்தை விட்டு எழுந்திருச்சிருக்க மாட்டானேடி..’

வயிற்றுக்குள் பறந்த பட்டாம்பூச்சிகளின் பரபரப்பைக் கட்டுப்படுத்த முடியாமல் இன்பமான இம்சையைக் கொண்டாள் நந்தினி.. அவனுக்குப் ஃபோன் பண்ணலாமா என்று யோசி த்தாள்.. மற்ற நாள்களில் எல்லாம்..

“ஏய்ய்.. சோம்பேறி.. இன்னுமா தூங்கற.. எழுந்திரு..” என்று செல்ஃபோனில் அழைப்பவன்..

அன்று மட்டும் பேசாவிரதம் இருப்பவனைப் போல செல்ஃபோனில் அழைக்காமல் சோதித்தான்..

‘அவன் கூப்பிடாட்டி என்ன..? நான் கூப்பிடலாமில்ல..’

நந்தினி செல்ஃபோனை எடுத்தாள்.. கை விரல்கள் நடுங்கியதில் அது நழுவி கட்டிலில் விழுந்தது..

‘அடி இவளே..! அவன் என்ன அறியாத மனிதனா..? இன்னைக்குத்தான் புதிதா அவனிடம் பேசப் போகிறயா..? ஒழுங்கா செல்ஃபோனை எடுத்துப் பேசித் தொலைக்கிறதுக்கு என்ன..?’ மனது தாளித்துக் கொட்டியது..

‘ஹி..ஹி..’ மனதிடம் அசட்டுச் சிரிப்புச் சிரித்தபடி செல்ஃபோனை கைப்பற்றி ஒருவழியாக ரவிச்சந்திரனின் செல்நம்பரை அழுத்தி விட்டாள்.. மறுமுனையில் அழைப்பொலி போய் கொண்டே இருந்தது.. அவன் எடுக்கவில்லை..

‘ரிங் போய்க்கிட்டே இருக்கு.. என்ன செய்கிறான்..?’

அழைப்பொலி முடிந்து விடும் கடைசி நொடியில் ஃபோனில் அவன் குரல் கேட்டது.. இவள் ஆசையாசையாக என்னென்ன பேச வேண்டும், எப்படியெப்படி பேச வேண்டும் என்று மனதுக்குள் வரிசைப் படுத்திக் கொண்டிருக்க.. அவன் மூன்றே மூன்று வார்த்தைகள்தான் சொன்னான்..

“டோன்ட் டிஸ்டர்ப் மி..”

நந்தினியின் ஆசை அலைகடலானது.. அமைதியாகி விட்ட செல்ஃபோனை வெறித்துப் பார்த்தாள்..

**‘ஆசையோ அலைபோலே..**

**நாமெல்லாம் அதன் மேலே..**

**ஓடம் போல ஆடிடுவோமே..**

**வாழ் நாளிலே..’**

அவளது மன ஓடம் ஆடியது.. சோக கீதம் பாடியது.. தத்துவத்தை உதிர்த்தது..

‘என்னடா இது..’ என்று வெறுத்துப் போனாள் நந்தினி..

அறைக்குள்ளேயே அடைந்து கிடந்தால் அவள் மனப் புழுக்கத்தில் வெம்பி ஒரு வழியாகி விடுவாள் என்று தோன்றியதால் அறையைப் பூட்டி விட்டு காரிடாரில் நடந்தாள்..

‘பிரேக்ஃபாஸ்ட்டுக்கு எல்லாம் வந்து சேர்கிறதுக்கு குறைந்த பட்சம் இரண்டரை மணி நேமாவது ஆகிரும்.. அதுவரைக்கும் ஸ்விம்மிங் பூல் பக்கம் உட்கார்ந்திருக்கலாம்..’

அவளது உற்சாகம் காற்றுப் போன பந்து போல சுருங்கி விட்டது.. நந்தினி யோசனையுடன் நடந்தாள்.. அவள் மனதை

ரவிச்சந்திரனிடம் சொல்வதற்கு இன்னும் எத்தனை மணித்துளிகள் அவள் காத்திருக்க வேண்டும்..?

“ஹாய்..! டு யு நோ திஸ் பிளேஸ்..?”

எதிரே நின்ற வெளிநாட்டு இளைஞனின் பார்வையில் அப்பட்டமான ஆசையிருந்தது.. அவனைப் பார்த்தால் முகவரியைக் கேட்பவனைப் போலத் தோன்றவில்லை.. அவளை பார்வையிலேயே துகிலுரிந்து சாப்பிட்டான்..

‘இப்படிப் பார்க்காதேடா ராஸ்கல்..’ நந்தினியின் உடல் முழுவதும் கூசியது..

“ஐ டோண்ட் நோ.. பிளீஸ் சர்ச் இன் கூகுள்.. ஆர்.. என்கொயர் இன் ரிசப்ஷன்..” என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே..

“இங்கே என்ன செய்கிற..?” என்ற ரவிச்சந்திரனின் கோபக் குரல் தேனினும் இனிதாக அவள் காதுகளில் நுழைந்தது..

‘இங்கே இவன் இருக்கிறானா..?’

காலம் காலமாய் பார்த்துவிட வேண்டுமென்று காத்துக் கிடந்தவளைப் போலத் தவிப்புடன் அவள் திரும்பினாள்..

அவள் எவனோ ஒரு வெளிநாட்டு வாலிபனுடன் பேசிக் கொண்டிருக்கிறாள் என்ற ரௌத்ரத்துடன் உறுமிக் கொண்டிருந்த ரவிச்சந்திரனின் விழிகள் அவளது ஆவலைக் கண்டதும் மின்னின.. அவளது அழகை ரசித்தவன் அவள் உடுத்தியிருந்த சேலையை அடையாளம் கண்டு கொண்டான்.. கவனமாக ஒப்பனையில் மிளிர்ந்த அவளது அழகில் சொக்கிப் போனவனாக அவளைப் பிய்த்துத் தின்று விடுவதைப் போல மேய்ச்சல் பார்வை பார்த்து வைத்தான்..

இதே போன்றதொரு பார்வையைத்தான் அந்த வெளிநாட்டு வாலிபனும் பார்த்து வைத்தான்.. அவன் பார்வையில் அருவெறுப்புக் கொண்ட நந்தினியின் பெண் மனம்.. அதைவிடக் கூடுதலான ரவிச்சந்திரனின் மேய்ச்சல் பார்வையில் நானத்துடன் விருப்பம் கொண்டது..

‘எப்படிப் பார்க்கிறான் பார்.. ராஸ்கல்..’ நந்தினி முகம் சிவந்தாள்..

“இந்நேரத்துக்கு நீ எழுந்து கொள்வதே பெரிய விஷயம்.. இதில குளித்து.. டக்கரா டிரஸ் பண்ணி ஸ்விம்மிங் பூல் பக்கம் வாக் வந்துக்கிட்டு இருக்க..?

என்ன ஆச்சு..?” கிண்டலாக அவளை விசாரித்தான்..

“அது.. ச்சும்மா..” நந்தினியின் முகச் சிகப்பு அதிகமானது..

“ஒரு கொஸ்டினுக்கு ஆன்சர் பண்றதுக்கு இத்தனை வெட்கமா..? இது ரொம்ப நல்லாயிருக்கு.. என்னை இம்ப்ரெஸ் பண்ணுது.. இன்றைக்கு நீ ரொம்பவும் புதிதாத் தெரியற நந்தினி..”

அன்றுதான் புதிதாகப் பிறந்ததைப் போல உணர்ந்தாள் நந்தினி.. அவனுக்காகவே பிறந்திருப்பதைப் போலவும் உணர்ந்தாள்.. உலகமே புதிதாகத் தெரிந்தது..

**‘புதிய வானம்..**

**புதிய பூமி..**

**எங்கும் பனிமழை பொழிகிறது..’**

கோழிக்கோடின் பனிக்காற்றில் உடல் சிலிர்க்க அவனைப் பார்த்தவளுக்குள் ஆசை வெள்ளம் பெருகியது..

“அவனுடன் உனக்கென்ன பேச்சு..? இதற்காகத்தான் ஸ்விம்மிங்க பூல் பக்கம் வந்தாயா..”

வழக்கமான அமில வார்த்தைகள்.. ஆனால்.. அதைச் சொல்பவனின் முகமும்.. கேட்டுக் கொண்டவளின் முகமும்

வெறுப்பை வெளிக்காட்டாமல் ஆசையை வெளிப் படுத்தியதுதான் அதிசயமாக இருந்தது..

“அதானே பார்த்தேன்..”

“எதைப் பார்த்த..? என்னையா..?”

உன்னைத்தான் பார்த்தேன் என்ற உண்மையைச் சொல்ல வேண்டுமென்றுதான் ஆசைப்பட்டாள் நந்தினி.. அதைச் சொல்ல முடியாமல் நாணம் தடுத்தது..

“என்னடா.. இன்னும் விதண்டாவாதமாப் பேசலையேன்னு நினைத்தேன்..”

“என்னடான்னு யாரைச் சொல்கிற..? என்னையா..?”

போடா என்றிருந்தது நந்தினிக்கு.. அவளை அவன் வம்பிழுத்ததில் அவளுக்குள் பொங்கிய உணர்வலைகளில் மூழ்கி மூச்சுத் திணறிப் போனாள்..

# அத்தியாயம் 165

“**உ**ங்களைச் சொல்லிட்டாலும்..”

உதட்டைச் சுழித்து அழகு காட்டினாள் நந்தினி.. அவள் அதைச் செய்வாள் என்று அவனுக்குத் தெரியுமே.. அந்த உதட்டுச் சுழிப்பைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையினால்தானே அவளிடம் அவன் வம்பிழுத்தான்..

நந்தினியின் சுழித்த உதடுகளில் முத்தமிட வேண்டும் போல வேட்கை கொண்டான் ரவிச்சந்திரன்.. அவனது விழிகளில் தெரிந்த வேட்கையில் மிரண்டாலும் அந்த வேட்கையின் மீது தீராத ஆசை கொண்டாள் நந்தினி.. அவள் மீதான அவனது வேட்கையை விரும்பவும் செய்தாள்..

“வெள்ளைக்காரன் பேசினா பதில் பேசிக்கிட்டு நிற்பியா..? நானும் வெள்ளையாக அழகாகத்தானே இருக்கேன்.. என் கூட பேசேண்டி..”

‘டீ’ன்னு சொல்லிட்டான்..’ காற்றில் மிதந்தாள் நந்தினி..

அவளை வாடி, போடி என்று அவன் அழைப்பதை அவள் ஆட்சேபித்தவள் என்ற விவரமே சுத்தமாக அவளுக்கு மறந்து விட்டது.. அவனுடைய உரிமையான அந்த அழைப்பிற்காக

மழையை வேண்டும் சாதகப் பட்ஷியைப் போல மனதுக்குள் அவள் ஏங்கிக் கொண்டிருந்தாள்..

“அபாண்டமா பேசாதீங்க பாஸ்.. இன்னைக்குன்னு சீக்ரம் எழுந்திருச்சுட்டேன்..”

“அதுக்கே மழை கொட்டோ கொட்டுன்னு கொட்டப் போகுது பாரு..”

“இல்லேன்னாலும் வயநாட்டில மழை கொட்டாது பாருங்க.. வருஷம் பூராவும் மழை கொட்டற சிரபுஞ்சியில்ல வயநாடு..!”

“இது கோழிக்கோடுடி..”

“கோழிக்கோடும் வயநாடும் பூமிக்கு இந்தப் பக்கமாவும் அந்தப் பக்கமாவும் இருக்குது பாருங்க.. இதோ கூப்பிடு தொலைவில இருக்குது வயநாடு..”

“எங்கே கூப்பிடு பார்க்கலாம்..”

“எதை..?”

“வயநாட்டை..”

“என்ன அலுவலுக்காம்..?”

“நீ கூப்பிட்டா வயநாடு வருகிறதான்னு பார்க்க வேண்டாமா..?”

“அதிலெல்லாம் வித்தாரம் தெரிஞ்ச ஆளுதான்..”

“வித்தாரமா..? வாட்’ஸ் தி மீனிங் ‘வித்தாரம்..?’”

“இது வேறயா..? வித்தாரம் மீன்ஸ் தி கிரேட் ரவிச்சந்திரன்..! போதுமா..? போவிங்களா.. வித்தாரத்துக்கு மீனிங் கேட்டு வந்திட்டாரு..”

“அவன் என்ன கேட்டான்..?”

“எவன்..?”

“வெள்ளைக்காரன்..”

“மறக்க மாட்டிங்களே..”

“உன்னைத்தானே..? மறக்கவே மாட்டேண்டி..”

ரவிச்சந்திரன் ஆழ்ந்த குரலில் சொன்னான்.. நந்தினிக்குள் எதுவோ நிகழ்ந்தது.. மனதுக்குள் மத்தாப்பூ சொரிவதைப் போல இருந்தது.. ரவிச்சந்திரனின் அந்த வார்த்தைகள் உண்மையாக இருக்க வேண்டும், நிலைக்க வேண்டும் என்று மனது பிரார்த்தனை செய்தது.. உண்மையில்லாத வார்த்தைகளை அவன் சொல்ல

மாட்டான்தான்.. அவன் சொல்லும் வார்த்தைகள் என்றென்றும் நிலைத்து நிற்பவைதான்.. இருந்தாலும் அலை மோதும் பெண் மனம் சஞ்சலம் கொள்ளாமல் இருக்க வேண்டுமே..

நந்தினிக்கு அவன் மார்பில் முகம் புதைக்க வேண்டும் போல இருந்தது.. அவனைக் கட்டித் தழுவிக் கதறியழ வேண்டும் போல தவித்துப் போனாள்.. காதலின் வேகம் அவளைப் பாடாய் படுத்தியது.. நீ என்னுடையவன், நான் உன்னுடையவள் என்று சொல்லத் துடித்தாள்..

அவளது தவிப்பையும் துடிப்பையும் அவதானிப்பதைப் போலக் கூர்மையாக அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான் ரவிச்சந்திரன்.. தீட்சண்யம் மிகுந்த அந்தப் பார்வையில் அவளது தடுமாற்றம் அதிகமானது..

“நான் பேசினா ஊமையாகிடற.. வெள்ளைக்காரன் பேசினா மட்டும் கேசுவலாப் பேசுவியா..?”

அவளை அவளுடைய தடுமாற்றத்திலிருந்து வெளியே இழுக்க வேண்டும் என்பதற்காகவே அநியாயமாய் பேசி வைத்தான் ரவிச்சந்திரன்..

அவனது முயற்சிக்குப் பலன் இருந்தது..

“யார் கேசுவலாய் பேசினதாம்..?” மூக்கை விடைத்துக் கொண்டு சண்டைக்கு கிளம்பி விட்டாள் நந்தினி..

‘இஃது..’

ரோஷக்கார நந்தினியை உசுப்பி விட்டு அவளது ரோஷத்தில் குளிர் காய்ந்தான் ரவிச்சந்திரன்..

“வேறு யார் பேசினதாம்..? நீதான்..”

“சும்மா பேசினேன்.. பேசினேன்னு சொல்லாதீங்க பாஸ்.. சீக்கிரமா எழுந்திருச்சுட்டதில சீக்கிரமாக் குளிச்சு ரெடியாகிட்டேன்..”

“பார்த்தாலே தெரிகிறதே..”

துளைக்கும் அவனது லேசர் பார்வைக்கு என்னென்ன தெரிந்தது என்று மனதுக்குள் எழுந்த கேள்வியில் லஜ்ஜை கொண்டாள் நந்தினி..

‘இவன் இருக்கானே.. இப்படித்தான் இடக்கு மடக்கா பேசி வைப்பான்..’

“இது கோழிக்கோடில் பார்ச்சேஸ் பண்ணின ஸாரிதானே..?”

அவன் கண்டுபிடித்து விட்டான் என்பதில் நந்தினிக்குள் சந்தோஷ மழை பெய்தது.. அவன் வாங்கிக் கொடுத்த சேலைதான் அது என்று சொல்லாமல் நாசுக்காக அவன் அடையாளம் கண்டு கொண்டதை அடையாளம் காட்டியதில்..

'ஈ ரவிச்சந்திரன் வல்லிய மனுஷனல்லோ..' என்று உவகை கொண்டாள் நந்தினி..

"ம்ம்ம்..."

"ஃபெண்டாஸ்ட்டிக்கா இருக்கு.."

'சேலை மட்டும்தானா..?' அவள் மனதில் ஏமாற்றம் கவிந்தது..

"நீயும்தான்.." அவள் முகத்தை உற்றுப் பார்த்தபடி சொன்னான் அவன்..

நந்தினி உதட்டைக் கடித்தாள்.. உணர்வுகளின் ஆளுமைக்கும் உதடுகளுக்கும் என்ன சம்பந்தமோ தெரியவில்லை.. அதிகமாக உணர்வுகளின் தாக்குதலுக்கு ஆளாகிறபோது உதடுகளை மடித்துக் கடிக்கத் தோன்றுவதன் சூட்சுமம் யாதென்று புரியவில்லை..

உணர்வுகளின் ஆக்ரமிப்பிலிருந்து ஓடி ஒளிய முடியாததால் வெள்ளைக்காரனைப் பற்றிய கேள்விக்குப் பதில் சொல்வதைப் போல தப்பிக்க முனைந்தாள் நந்தினி..

“வெள்ளைக்காரனிடம் பேசனும்னு யார் நினைத்தா..?”

“நீ நினைக்கலையா..?”

“இல்லை..”

“வேற யாரிடம் பேச நினைத்த..?”

“ஏன் உங்களிடம் பேச நினைத்தேன்னுதான் வைத்துக்கங்களேன்..”

நந்தினி மறைமுகமாக தன் மனதை உணர்த்த முயன்றாள்.. அவன் விழிகள் மின்னின... அவள் மனதிலிருப்பதை முழுமையாக உணர்ந்து கொண்டானா என்று புரியாமல் அவள் தவித்தாள்.. எப்போதும் போல அப்போதும் அவள் இ யல்பாக எதையோ சொல்கிறாள் என்று அவன் நினைத்துக் கொள்வானோ..

அப்படித்தான் என்பதைப் போல அவன் மேலும் கீழுமாக அவளை ஓர் பார்வை பார்த்து விட்டு..

“பேச நினைத்தவள் பேசியிருக்க வேண்டியது தானே..?” என்று கேட்டான்..

“பேசினேனே..”

“எப்போது..?”

“இப்போதுதான்.. கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே ஃபோன் பண்ணினேனே.. நீங்கதான் டோன்ட் டிஸ்டர்ப் மீன்னு கடிச்சுட்டுப் ஃபோனை கட் பண்ணிட்டிங்க..”

நந்தினி குற்றம் சாட்டும் பாவனையுடன் முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு சொன்னாள்..

‘வாட் எ சைல்டிஷ் கேர்ள்..!’ அவன் அதையும் எப்போதும் போல விளையாட்டுத்தனமாய் எடுத்துக் கொண்டு ரசித்தான்..

“அது நீதானா..? ஹா.. ஹா.. ஸாரிடி.. நான் யார் கால் பண்றாங்கன்னு பார்க்கக் கூட இல்லை.. அமெரிக்காக்காரன் வேற ஒரு லைனில இருந்தான்.. அந்த டென்ஷன்..”

நந்தினியின் மனது மேலும் இனிப்பானது..

அவளுடைய ஃபோன் காலை அவன் தவிர்க்கவில்லை.. என்னைத் தொந்தரவு செய்யாதே என்று அவளிடம் சொல்லவில்லை.. வேறு யாரோ என்ற நினைவில் அவன்

சொல்லியிருக்கிறான்.. பேசுவது அவள் என்பதைக் கவனித்திருந்தால் எத்தனை கோடி வருமானம் வருவதாக இருந்தாலும் அமெரிக்காக்காரனை அம்போ என விட்டு விட்டு நந்தினியிடம்தான் அவன் பேசியிருப்பான்..

அவனும் அதைத்தான் சொன்னான்..

“பேசறது நீதான் என்பதைக் கவனித்திருந்தா அமெரிக்காரனை அப்புறமாப் பேசுன்னு சொல்லியிருப்பேன்.. நீதாண்டி எனக்கு முக்கியம்..”

காதலாகி கசிந்துருகிப் போனாள் நந்தினி.. அவனை அவள் பார்த்த பார்வையில் புருவங்களை உயர்த்தியவன்..

“என்னடி..?” என்றான் கண்கள் மின்ன..

“ஒன்றுமில்லை..” அவளுக்கு வெட்கம், வெட்கமாக இருந்தது..

“ஹைய்யோ.. இது நீதானா..? அசத்தறடி.. புதுசாப் பார்க்கிற.. புதுசாப் பேசற.. புதுசாய் சிரிக்கிற.. எல்லாமே வித்தியாசமாய் இருக்கே.. என்ன..? என்மீது காதல் வந்திருச்சா..?”

இதை எதற்காக வேடிக்கை போல கேட்டு வைக்கிறான் என்று மனதுக்குள் பொருமினாள் நந்தினி..

அவன்மீது அவளுக்கு காதல் வரவே வராதா..?

“ஓகே..! மேடத்துக்கு என்மீது காதல் வந்த விட்டதுன்னே வைத்துக்கலாம்..”

‘அடப்பாவி..! அதையேண்டா சந்தேகக் கேஸில வைக்கிற..?’

“அதை என்கிட்டத்தானே சொல்லனும்..?”

‘அதுக்குத்தானே ஃபோன் பண்ணினேன்..? நீதானே என் நம்பர்ன்னு கவனிக்காம கடி, கடின்னு கடிச்சுட்டு கட் பண்ணின..’

“வெள்ளைக்காரனிடம் ஏன் சொன்ன..?”

‘டேய்.. டேய்.. அவன்கிட்ட என்னத்தைடா சொன்னேன்..? பக்கத்தில இருந்து கேட்டவனைப் போல பழி போடறியேடா..’

நந்தினிக்குப் பற்றிக் கொண்டு வந்தது..

“நீங்க கண்டிங்க..” என்று வெடித்தாள்..

“கண்டதைத்தானே சொல்கிறேன்..” சிரிப்பை அடக்கிக் கொண்டு அவன் சொன்னான்..

“நேரத்தைப் பார்க்காம சீக்கிரமா ரெடியாகித் தொலைச்சுட்டேன்.. பிரேக்ஃபாஸ்ட்டுக்கு டயமிருந்தது..”

“அதைச் சொல்லு.. நம்ம நந்தினி எப்படி பிரேக்ஃபாஸ்ட்டை மறந்தான்னு நினைத்தேன்.. நீ சொல்லிட்ட..”

“ஹலோ பாஸ்.. உங்களுக்கெல்லாம் வயிறில்லையா..”

“இதோ இருக்கே..”

அவன் வயிற்றைக் காட்டினான்..

தொப்பையில்லாத கட்டு மஸ்தான உடல் கட்டு அவளைக் கவர்ந்து இழுத்தது.. அவனை ஆசையுடன் பார்த்தாள்..

“ஆக்ஷுவலா நீ ஃபுட் அயிட்டத்தைத்தான் இத்தனை இண்ட்ரெஸ்ட்டா பார்த்து வைப்ப.. இன்றைக்கு என்ன ஆச்சுடி..? என்னை இத்தனை இண்ட்ரெஸ்ட்டாப் பார்த்து வைக்கிற.. இப்படி நீ பார்த்து நான் பார்த்ததே இல்லை நந்தினி.. இது எவ்வளவு நல்லாயிருக்கு தெரியுமா..?”

நந்தினிக்கு அழுகையே வந்து விட்டது.. அவளால் ரவிச்சந்திரனிடம் காதலைச் சொல்லவே முடியாதா..? அவள் எதைச் சொன்னாலும் எப்படிப் பார்த்தாலும் அவன் விளையாட்டுத்தனமாகவே எடுத்துக் கொள்கிறானே..

“முடியலை..” என்றாள்..

“பசி தாங்க முடியலையா..?” அவன் கரிசனத்துடன் கேட்டான்..

“உங்களிடம் பேசுகிறதுக்கு அந்த வெள்ளைக்காரனிடமே பேசியிருக்கலாம்..” கடுப்பாகி விட்டாள் நந்தினி..

“என்னடி சொன்ன..?” நரசிம்ம அவதாரம் எடுத்தான் ரவிச்சந்திரன்..

“வாய்க்கு வாய் என்னை தத்தின்னு சொல்லுவீங்களே.. இப்பத் தத்தியாய் நிற்கிறது யாராம்..?”

“யார்..?”

“நீங்கதான்.. வேறு யாராம்..? டைம் பாஸ் பண்ண ஸ்விமிம்மிங் பூல் பக்கம் வாக் வந்தேன்.. அவன் எதிரே வந்தான்.. ஏதோ அட்ரஸ் கேட்டான்.. எனக்குத் தெரியாது..

கூகுளில சர்ச் பண்ணு.. இல்லேன்ன ரிசப்ஷனில விசாரின்னு சொல்லிக்கிட்டு இருந்தேன்.. நீங்க வந்திட்டிங்க..”

“அதுக்காகவா எனக்கு ‘தத்தி’ன்னு நேம் கொடுக்கிற..?” அவன் சந்தேகமாக முகவாயைத் தடவியபடி அவளை ஆராய்ச்சியாய் பார்த்து விட்டு..

“இல்லைன்னு தோன்றுதே.. வேறு ஏதோ இருக்கிறது போல இருக்கிறதே..” என்று சொன்னவன் அவளருகே குனிந்து..

“என்னடி..?” என்றான்..

நந்தினி சொல்லத்தான் நினைத்தாள்.. வாயைத் திறந்தால் வார்த்தை வந்து தொலைக்காமல் காற்று வந்து தொலைத்தது..

# அத்தியாயம் 166

**பே**ச முடியாமல் திருதிருத்தவளை விசித்திரமாய் பார்த்தான் ரவிச்சந்திரன்.. நந்தினியா இது என்று ஆச்சரியமாக இருந்தது அவனுக்கு.. வாய் வலிக்குமே என்று கவலைப்படாமல் மடைதிறந்த வெள்ளம் போலப் பேசித் தள்ளும் நந்தினியாவது.. பேச முடியாமல் தடுமாறி நிற்பதாவது..

“ஹேய்.. உனக்கு என்னாச்சு..?”

அவளது முகத்திற்கு நேராகக் குனிந்து விரல் சொடுக்கினான்.. அவள் இமை கொட்டி மலங்க மலங்க விழித்தாள்.. பேசத்தான் முயற்சி செய்தாள்.. பேச்சுத்தான் வந்து தொலைக்கவில்லை.. அதைச் சொன்னால் அவன் மட்டுமல்ல.. அகில உலகத்தில் எவருமே நம்ப மாட்டார்கள்..

**‘இஞ்சி இடுப்பழகா..!**

**மஞ்சச் சிகப்பழகா..!**

**கள்ளச் சிரிப்பழகா..!**

**மறக்க மனம் கூடுதில்லையே.. ஏய்ய்..’**

மனதுக்குள் அருமையருமையாய் பாடல் வந்து தொலைத்தது.. எதிரில் நின்ற இஞ்சி இடுப்பழகன்.. மஞ்சள் சிவப்பு நிறத்துடன்.. கள்ளச் சிரிப்பழகனாகத்தான் அவளது கருத்தைக் கவர்ந்தான்.. அதை வாய் விட்டுச் சொன்னால் இஞ்சி இடுப்பழகன் இஞ்சி தின்ற சிங்கமாக வயநாடு முழுவதும் குதித்தாடி விடுவான்..

அவளால்தான் சொல்ல நினைத்ததை சொல்ல முடியவில்லையே..

அவள் படும் பாட்டைப் பார்க்க அவனுக்கு வேடிக்கையாக இருந்தது.. இமைகள் சுருங்க சிரித்தபடி அவளை கேலி செய்ய வாய் திறந்தான்.. மிகச் சரியாக அந்த நேரத்தில் செல்ஃபோன் ஒலித்து அவனை அழைத்தது.. அதைக் காதுக்கு கொடுத்தபடி..

“எனி இம்பார்ட்டண்ட் நியுஸ்..?” என்று அவளிடம் கேட்டான்..

செல்ஃபோனில் பேசாமல் அவளிடம் அவன் பேசியதில் அவள் இதமாக உணர்ந்தாள்.. அவளுக்கான முக்கியத்துவத்தை என்றுமே அவன் குறைத்ததில்லை என்பதில் கர்வமானவள் இல்லையெனும் விதமாக தலையசைத்தாள்..

“ரூமுக்குப் போ.. பிரேக்ஃபாஸ்டப்ப மீட் பண்ணலாம்..”

அவன் நடந்து விட்டான்.. நந்தினி அறைக்குள் போகாமல் தனக்குப் பேச்சு வருகிறதா என்று சோதிக்க பாட்டுப் பாடிப் பார்த்தாள்..

**“நான் பேச வந்தேன்..**

**சொல்லத்தான் ஓர்**

**வார்த்தையில்லை..”**

கனிரென்று பாடல் வெளிப்பட்டதில்..

“இப்ப மட்டும் உணக்கையா சத்தம் போடு..” என்று தன்னைத்தானே திட்டியபடி தலையில் கை வைத்தாள்..

“என்னடி.. உனக்கு நீயா பேசிக்கிட்டு இருக்க..? நம்ம ஊரா இருந்தா வெயில் தாங்காம பினாத்தறன்னு சொல்லலாம்.. இது குளிரான கோழிக்கோடு.. இங்கே மூளை உருக சான்ஸ் இல்லையே..” என்றபடி அங்கே பிரசன்னமானாள் உத்ரா..

“ஒரு மனுஷி நிம்மதியா ஸ்விம்மிங் பூல் பக்கம் வாக் வந்துரக் கூடாதே.. வரிசை கட்டி வார வந்துருவீங்களே.. நீயென்ன இந்தப் பக்கம்..? வினித் அண்ணா எப்படி

உன்னைத் தனியா வாக் வர விட்டார்..?” உத்ராவை விசாரித்தாள் நந்தினி..

உத்ராவும் மெரூன் வண்ணப் புடவையில்தான் இருந்தாள்.. “வினித் குளிச்சுக்கிட்டு இருந்தாரா.. நான் டிரஸ் பண்ணிட்டு ஸ்விம்மிங் பூல் வியுவைப் பார்க்க ஜன்னல் பக்கமா வந்தேனா.. நீ வந்துக்கிட்டு இருந்த.. என்னைப் போலவே மெருன் கலர் புடவையில் இருந்தியா.. ஸேம் ஸேம் ஸ்வீட் கேட்கலாம்ன்னு வினித் குளித்துட்டு வர்றதுக்குள்ள நைஸா நழுவி வந்தேன்.. இங்கே வந்தா நீ உனக்கு நீயே பேசிக்கிட்டு இருக்கிற..” நந்தினியிடம் விவரித்தாள் உத்ரா..

‘ஆக.. இவள் நானும் அவனும் பேசிக்கிட்டு இருந்ததைப் பார்க்கலை..’ சுதாரித்துக் கொண்ட நந்தினி..

“ஆக.. அண்ணாவுக்குத் தெரியாம எஸ்கேப் ஆகி வந்திருக்கேன்னு சொல்லு.. அதுதானே பார்த்தேன்.. அண்ணாவாவது.. உன்னைத் தனியே அனுப்பறதாவது.. மேட் ஃபார் ஈச் அதர்ன்னு ஒட்டிக்கிட்டு இல்ல உலா வருவீங்க..” நந்தினி பதிலுக்கு தோழியை வாரினாள்..

“நாளைக்கு உனக்கும் மேரேஜ் ஆகுமில்ல.. அப்ப நீயும் உன் ஹஸ்பெண்டும் ஒட்டிக்கிட்டு வர்றீங்களா.. இல்லை..

கட்டிக்கிட்டு வர்றீங்களான்னு நானும் பார்க்கத்தானே போறேன்.. அன்னைக்கு இருக்குடி உனக்கு..” தோழியின் கையைக் கிள்ளினிாள் உத்ரா..

“இதை ஒண்ணைக் கண்டுபிடிச்சு வைச்சிருக்கடி.. ஆன்னா, ஊன்னா அரைக்கிலோ சதையைக் கிள்ளியெடுத்துடறது.. குரங்கே..!” கிள்ளுப் பட்டக் கையைத் தடவிக் கொண்டே திட்டினாள் நந்தினி..

“அது ஏண்டி எதுக்கெடுத்தாலும் குரங்கையே கூப்பிடற..? போன பிறவியில குரங்காய் பிறந்திருப்பாயோ..?” உத்ரா சந்தேகம் கேட்டுக் கொண்டிருந்த போது..

“போன பிறவிக்கு ஏன் போறிங்க..? இந்தப் பிறவியிலும் உங்க ஃபிரண்ட் அப்படித்தான்..” என்றபடி அங்கே வந்தான் ரவிச்சந்திரன்..

‘இவன் போகலையா..?’ நந்தினிக்குள் புது ரத்தம் பாய்வதைப் போல உற்சாக ஊற்று பாய்ந்தது.. அன்றுதான் புதிதாய் பார்ப்பதைப் போல அவனை ஆசையாசையாய் பார்த்து வைத்தாள்.. உத்ராவுடன் பேசிக் கொண்டிருந்தவன் அவளைக் கவனிக்கவில்லை.. அது அவளுக்கு வசதியாகப்

போய் விட்டது.. உச்சி முதல் உள்ளங்கால்வரை பார்வையிடப் பார்வையிட..

‘இவன்தான் எத்தனை மேன்லியா ஹேண்ட்சம்மா இருந்து தொலைக்கிறான்..’ என்று அவளுக்கு ஏக்கமாக இருந்தது..

அவனுடைய வசதி வாய்ப்பைப் பற்றி அவள் யோசிக்கவில்லை.. அவனளவு இல்லாவிடினும் அவளும் பணக்கார வீட்டில் கோடிஸ்வரப் பரம்பரையில் பிறந்தவள்தான்.. என்ன ஒன்று.. அவன் வீடு அரண்மனை என்று அழைக்கப்படுகிறது.. அவள் வீடு பங்களா என்று அழைக்கப்படுகிறது.. அவ்வளவுதான்.. மற்றபடி அவன் உலகம் சுற்றும் வாலிபனாக ‘யாழ்..’ நட்சத்திர ஹோட்டல் தொடரின் அதிபராக இருக்கிறான்.. அவள் தஞ்சாவூர் தவக்களையாக... பூர்வீக கிராமத்தின் தோப்புகளும், துரவுகளும், காவேரிக் கரையுமாக இருக்கிறாள்.. அவன் நுனி நாக்கு ஆங்கிலமென்றால் இவள் செந்தமிழ் நாட்டின் தமிழச்சி..! அவன் மடிப்புக் கலையாத நேர்த்தியான உடைகளுடன் கோட்டும் சூட்டுமாக விளம்பர மாடலைப் போல படு ராயலாக தோற்றமளித்தால், இவள் உடுத்திய வேகத்தில் உடைகளைக் கசக்கி, தலை கலைந்து.. அப்போதுதான் பத்துப்

பேருடன் சண்டை போட்டு விட்டு வந்ததைப் போல கந்தலகோலமாக காட்சியளிப்பாள்.. நேர்த்தியின் மறுபெயர் ரவிச்சந்திரன்.. சோம்பேறித்தனத்தின் திருவுருவம் நந்தினி..!

‘ரெண்டும் செட் ஆகுமா..?’ காலம் கடந்த கவலை ஏற்பட்டது நந்தினிக்கு..

அவன் ராஜ பரம்பரையில் பிறந்தவன்.. கேரளாவின் கோடிஸ்வரன்.. உலகத்தில் உள்ள பிஸினெஸ் மேகசின்கள் எல்லாம் கொண்டாடும் ஸ்டார்..! லொட்டு, லொசுக்கு பற்றிக்கூட அவள் கவலைப்படவில்லை..

அவனுடைய ஆண்மை ததும்பும் கம்பீர கவர்ச்சிகரமான அழகிற்கு முன்னால் அவளால் நிற்கக்கூட முடியுமா என்றுதான் கவலைப்பட்டுக் கரைந்து போனாள்..

கரிய நிறத்தில் எண்ணைப் பசையின்றி அலைபாய்ந்த அவனது முன்னுச்சி முடி நெற் றியில் படிந்தது.. அதை அவன் புறங்கையால் தள்ளி விட்டபடி பேசிய விதம் அலாதியானதொரு அழகாக இருந்தது.. பேச்சின் ஊடே அவன் சிரித்தபோது அவனது கவர்ச்சி கூடுவதாக நந்தினியின் மனம் ஜொள்ளியது..

‘இருக்கிற அட்ராக்ஷன் போதாதுன்னு இது வேறயா..? சும்மாவே ஆளை மயக்குவான்.. இதில சிரிச்சு வேற வைச்சான்னா.. ஹம்மாடியோவ்.. தொலைஞ்சேன்.. ஆனாலும் நந்தினி.. ஒரு ஆம்பளைக்கு இத்தனை அழகு கூடாதுடி.. ஸ்விம்மிங் பூலில ஸ்விம் பண்றவ கூட இவனைப் பார்த்துக்கிட்டே டைவ் அடிக்கிறாளே.. இவனைக் காதலிச்சுத் தொலைச்சிருக்கியே.. இவனை எப்படிக் கட்டிக் காப்பாத்தப் போற..?’

இருக்கும் கவலைகளில் இந்தக் கவலைதான் பெருங்கவலையாக இருந்தது நந்தினிக்கு.. வரிசைப்பற்கள் தெரிய அவன் சிரித்த அழகைச் சற்றுத் தொலைவில் சாய்வு நாற்காலியில் நீச்சலுடையுடன் சாய்ந்து படுத்திருந்த நீலக்கண் வெள்ளை அழகி ரசித்ததில் இவளுக்கு ‘பகீர்’ என்றிருந்தது..

அவன் சொன்ன காதலை அவள் ஏற்றுக் கொள்ளவில்லை.. அவள் மனதில் காதல் வந்து விட்டதை அவன் இன்னும் அறியவில்லை.. இப்படியாகப்பட்ட நிலையில் எவளாவது அழகு தேவதை, சொப்பன சுந்தரி வந்து ‘ஐ லவ் யு’ சொல்லித் தொலைச்சு கரெக்ட் பண்ணிட்டா என்ன செய்கிறது..? வெள்ளை ளத் தோலும்.. நீலக் கண்ணுமா.. வந்து நின்னா இவன் மயங்கி ‘ஆஹா’ன்னு அவ பின்னாடி போயிர

மாட்டானா..? நந்தினி, நந்தினி.. நான் உன்கிட்ட சொன்ன ஐ லவ் யு வுக்கு நீ எந்த ரெஸ்பான்ஸும் கொடுக்கலை.. ஸோ.. அவ சொன்ன ஐ லவ் யுவை நான் கன்சிடர் பண்ண வேண்டியதாப் போயிருச்சு.. நீ பேசாம பெல்ட் மன்னனுக்கு வாழ்க்கைப்பட்டு பெல்ட் அடியை வாங்கிக்க.. நான் நீலக்கண் வெள்ளைக்காரியோட ஸ்விட்சர்லாந்துக்கு ஹனிமூன் போகப் போறேன்னு டாட்டா, பைபை சொல்லிருவானோ..

நினைக்கும் போதே நெஞ்சுவலி வந்துவிடும் போல இருந்ததில் நீலக்கண் அழகிக்கு முதுகு காட்டி நின்று கொண்டாள் நந்தினி..

‘ஒரு டவலை எடுத்துப் போர்த்திக்கிட்டுப் படேண்டி..’ என்று மனதுக்குள் அர்ச்சனை வேறு.. அகன்ற நெற்றி.. செதுக்கி வைத்ததைப் போன்ற நாசி என்று கிரேக்க சிற்பத்தைப் போல படு அழகாக இருந்த அவன் முகத்தை ஆசையுடன் பார்த்தாள்..

‘இவன் எனக்குக் கிடைப்பானா..?’ ஏங்கித் தவித்தது அவள் மனம்..

இந்தப் பெண் மனம் இருக்கிறதே.. அது அனைவரும் சொல்வதைப் போல ஆழமானதுதான்.. யாராலும் அளவிட

முடியாத நுண்ணிய உணர்வுகளைக் கொண்டது.. விசித்திரமானது.. பாசம் வைக்காத போது பற்றற்ற துறவியைப் போல இருக்கும்.. பாசம் வைத்து விட்டால் அனைத்தும் நீயே என்று சரணடைந்து விடும்..

நந்தினியும் அது போல்தான் இருந்தாள்.. அவளுக்கு யாதுமாகி நின்ற ரவிச்சந்திரனின் மீது கரை காண முடியாத காதலுடன் பைத்தியமாகி நின்றாள்..

தேக்குமரத் தோள்களும்.. அகன்று பரந்த மார்பும்.. நீண்டிருந்த கை, கால்களுமாக அவன் அவளைப் படுத்தி எடுத்தான்.. அவனது காதலை ஏற்காமல் நிராகரித்த தன் முட்டாள்தனத்தை நினைத்து நினைத்து நொந்து போனாள் நந்தினி.. இதோ அவள் மனதில் காதல் ததும்பிக் கொண்டிருக்கிறது.. அவன் கேட்ட காதலுடன் அவள் அவனிடம் சரண் புகத் தயாராக நின்று கொண்டிருக்கிறாள்.. கைக்கு எட்டும் தொலைவில்தான் அவனும் இருக்கிறான்..

ஆனால் அவளால் அவனிடம் காதல் சொல்ல முடியவில்லையே.. அதற்கான அவளுக்கும் அவனுக்குமான பிரத்யேகத் தனிமை அவளுக்குக் கிட்டவில்லையே.. ஏன்..?

அவனும் அவளுமாக நீலிமலைக்காட்டில், மரக்குடிலில் கழித்த இரண்டு தினங்களை நினைத்துப் பார்த்தாள் நந்தினி.. அவளது கைக்குக் கிடைத்தும் முட்டாள்தனமாக அவள் நழுவ விட்ட அரிய நொடிகள் அவை..

பொங்கியது அவள் மனம்.. அவனைக் கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்து மார்பில் சாய வேண்டும் போல மனது பரபரத்தது.. எதுவும் செய்ய இயலாத சூழல் அவளைக் கட்டிப் போட்டு சோதித்தது..

“உத்ரா..”

வினித்தின் குரல் கேட்டதில் நந்தினி நிம்மதியாக உணர்ந்தாள்.. உத்ராவைக் கவர்ந்து தன்னிடம் இழுத்துக் கொள்ளும் வினித்தின் மீது அவள் கொண்டிருந்த கோபமெல்லாம் காற்றாக பறந்து விட்டிருந்தது..

‘கட்டின புருஷனை ரூமில் விட்டுவிட்டு.. பழகின ஃபிரண்டை எட்டத்தில் நிறுத்தி விட்டு.. கம்மாண்டர் கூட அரட்டையடிச்சுக்கிட்டு இருக்காளே.. இவள் கழுத்தைப் பிடித்துக் குரல்வளையைத் திருகினால்தான் என்ன..?’ என்ற வன்முறை எண்ணங்களை நந்தினியின் மனதில் விதைத்துக் கொண்டிருந்தாள் உத்ரா..

ரவிச்சந்திரனுடன் உத்ரா வெகு சகஜமாக பேசிச் சிரித்துக் கொண்டிருந்ததை அவள் விரும்பவில்லை.. அது என்ன கம்மாண்டருடன் இந்தக் குழாவு குழாவுகிறாள் என்று காண்டாகியிருந்தாள்.. கையிலிருந்த ஹேண்ட் பேக்கின் வாரைப் பிடித்து அதை ஒரு சுழற்று சுழற்றி உத்ராவின் பின் மண்டையில் தாக்கி.. போடி.. போய் ரூமிலிருக்கும் உன் புருஷனைக் கவனி என்று சப்தம் போடும் கொதிநிலையில் இருந்தவளின் மீது வினித் வந்து பனிநீரை ஊற்றிக் குளிர வைத்து விட்டான்..

மனைவி விஷயத்தில் வினித் பொசசிவ் ஆனவன்.. நந்தினியுடன் உத்ரா பேசுவதையே சகித்துக் கொள்ள மாட்டான்.. உத்ரா என்னடாவென்றால் ரவிச்சந்திரனுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருக்கிறாள்..

‘வந்துட்டாருடி உன்னோட கம்மாண்டர்..’ நந்தி மகிழ்ந்து போனாள்..

# அத்தியாயம் 167

**சு**ம்மா இருக்காமல் ரவிச்சந்திரனுடன் சிரித்துப் பேசி அளவளாவிக் கொண்டிருந்த உத்ராவை அவளது காதல் கணவன் வினித் சும்மா விட மாட்டான் என்பதில் நந்தினிக்குள் உண்டான மகிழ்ச்சிக்கு அளவேயில்லை..

‘கல்யாணமானவ அடக்கி வாசிக்கனும்.. கம்மாண்டர்கிட்ட உனக்கென்னடி பேச்சு..?’

ஆத்மார்த்தமான தோழியையும் விரோதிக்க வைக்கும் ஆற்றல் படைத்தது காதல்..

“வினித்..” பதறித் திரும்பினாள் உத்ரா.. அவளது பதட்டத்தை ரசித்தாள் நந்தினி..

‘எதுக்காக கம்மாண்டரிடம் வாய் வளர்க்கனும்..? எதுக்காக இப்படி பயந்து நடுங்கனும்..? ஒழுங்கா மரியாதையா ஒரு ஹாயோடு கழன்றுக்கிட்டுப் போயிருக்கலாமில்லையா..?’

வினித்திடம் உத்ரா வாங்குப் பெறப் போகும் மகோன்தை நிகழ்வைக் காண ஆவ லுடன் தயாரானாள் நந்தினி..

“வொய் திஸ் டென்ஷன்..?” படு கேசுவலாக உத்ராவிடம் கேட்ட ரவிச்சந்திரன்..

“ஹாய் வினித்.. குட்மார்னிங்.. ஹேவ் எ நைஸ் டே..” என்று வினித்தை வரவேற்றான்..

“குட்மார்னிங் சார்..” இறுக்கமான முகத்துடன் உத்ராவைத் துளைப்பதைப் போல உறுத்துப் பார்த்தபடி சொன்னான் வினித்..

உத்ராவின் முகம் கலங்கிச் சிவந்ததில் ‘வேணும்டி உனக்கு..’ என்ற திருப்தி உண்டானது நந்தினிக்கு..

அவளே மனதில் வந்து விட்டக் காதலைச் சொல்ல வாய் வராமல் தவித்துக் கொண்டிருக்கிறாள்.. இதில் பூஜை வேளைக் கரடி போல தோழிவந்து ஊடே புகுந்து நந்தினி பேச முடியாத பேச்சுக்களைப் பேசி.. அவளால் சிரிக்க முடியாத சிரிப்புக்களைச் சிரித்துக் கொண்டிருந்தால் அவளுக்கு கொலைவெறி வராதா..?

“வி ஆர் வெயிட்டிங் ஃபார் யு..” வினித்தின் கோபத்தைக் கவனிக்காததைப் போலச் சொன்னான் ரவிச்சந்திரன்..

‘அதுசரி.. அடுத்தவன் பெண்டாட்டி கூட அரட்டையடிச்சா நல்லாத்தான் இருக்கும்.. இதுவே இவன் இல்லாம நான் வேற யார்கூடவாவது பேசிக்கிட்டு இருந்தா வண்டை, வண்டையாக் கேட்பான்.. ஊருக்கு ஒரு நியாயம்.. இவனுக்கு ஒரு நியாயமா..?’ நந்தினி பல்லைக் கடித்தாள்..

“தேங்க் யு சார்..” ரவிச்சந்திரனிடம் சொல்லியபடி உத்ராவின் பக்கமாக திரும்பிய வினித்..

“என் ரெட் கலர் ஷர்ட்டை எங்கே வைத்த..?” என்று கோபத்துடன் கேட்டான்..

அது நிச்சயமாக ரெட் கலர் ஷர்ட்டுக்காக வந்த கோபமில்லையென்று நந்தினிக்கும் புரிந்தது..

உத்ராவுக்கும் புரிந்தது..

“ஷெல்பில் அடுக்கி வைச்சிருந்தேனேங்க..” உத்ரா மென்று விழுங்கினாள்..

“ஷெல்பில் இருந்தது இறக்கை முளைச்சுப் பறந்து போயிருக்குமா..? குளித்துட்டு வந்து சர்ட்டைப் போடலாம்ன்னு பார்த்தாக் காணோம்.. உன்கிட்டக் கேட்கலாம்ன்னு பார்த்தா உன்னையும் காணோம்.. ஒரு மணி நேரமா வெயிட்

பண்ணிப் பார்த்துட்டு கைக்கு கிடைச்ச சார்ட்டை எடுத்து மாட்டிக்கிட்டு வந்து சேர்ந்திருக்கேன்..” உத்ரா அறையில் இல்லாமல் போன குற்றத்திற்காக அடாது பழிகளை அடுக்கினான் வினித்..

‘அடப்பாவிகளா..!’ அயர்ந்து போனாள் நந்தினி..

‘ஒட்டு மொத்தமா எல்லா ஆம்பளைகளும் இப்படியாடா இருப்பீக.. எப்படிடா இந்தக் குணத்தை மெயின்டெயின் பண்ணறீங்க.. இவ வந்து பத்து நிமிஷம் கூட ஆகலை.. உங்க ஊரில இதுதான் ஒரு மணி நேரக் கணக்கா..? பாவம்டி உத்ரா நீ..’

வினித் கொடுத்த ஓவர் டோஸில் நந்தினிக்கே உத்ராவின் மீது இரக்கம் வந்து விட்டது..

“ஆனாலும் இது அநியாயம் அண்ணா... இப்போத்தான் இவளை இழுத்துக்கிட்டு வந்தேன்.. நீங்க ஒரு மணி நேரமாச்சுன்னு உடான்ஸ் விடறிங்க..” என்று தோழிக்கு கை கொடுத்தாள்..

‘அப்பாடா..’ உத்ராவின் முகம் தெளிந்தது..

'இனி வினித் அண்ணா இல்லாம ரூமை விட்டு நகரமாட்டா..' நந்தினிக்கு அதுவே போதுமானதாக இருந்தது..

"நீங்க வந்து இழுத்துக்கிட்டு வந்தீங்களா..?" வினித்தின் கோபம் சற்றுக் குறைந்தது..

"யெஸ்.. நான்தான் வந்து உத்ராவைக் கூப்பிட்டுக்கிட்டு வந்தேன்.. அதுண்ணா.. இன்னைக்குன்னு சீக்கிரமா முழிச்சு ரெடியாகிட்டேனா.. ரூமில இருப்புக் கொள்ளலை..

ஜன்னல் வழியா எட்டிப் பார்த்தா.. ஸ்விம்மிங் பூல்..! பக்கத்தில போய் பார்க்கலாம்ன்னு ஆசையாகிருச்சு.. நீங்களும், உத்ராவும் ரெடியாகிருந்தா சேர்ந்து போகலாம்ன்னு வந்தேனா.. உத்ரா மட்டும்தான் ரெடியாகி இருந்தா.. நீங்க குளித்துக்கிட்டு இருக்கிறதாச் சொன்னா.. நீங்க குளித்துட்டு வருகிறதுக்குள்ள ஸ்விம்மிங் பூலைப் பார்த்துட்டு வந்துரலாம்ன்னு நான்தான் இவ கையைப் பிடிச்சுத் தரதரன்னு இழுத்துட்டு வந்தேன்.. இவ மாட்டேன், மாட்டேன்னு சொல்லிக்கிட்டே முரண்டு பிடிச்சுத் திரும்பிப் போகப் பார்த்தாளா.. வழியில பார்த்தவங்க எல்லாம் நான் இவளைக் 'கிட்நாப்' பண்றேன்னு சந்தேகப் பட்டு விசாரிக்க ஆரம்பத்துட்டாங்கன்னா பார்த்துக்கங்களேன்.. இதுக்குத்தான்

வயநாட்டுக்கு ஹனிமூனுக்கு வர்றேன்னு வந்தியாடின்னு நாலுப் பாட்டுப் பாடினதும்தான் அடங்கினா..”

நந்தினி சரளமாக கதை பிணைய அதை சுவராஸ்யமாக வேடிக்கை பார்த்தான் ரவிச்சந்திரன்.. அவன் கண்களில் ‘பொய்யா சொல்கிற..?’ என்ற செல்ல மிரட்டல் இருந்தது.. ‘உன்னால்தாண்டா இந்தக் கப்ஸா..’ நந்தினி அவனை முறைத்தாள்..

“ஓ..” என்றபடி ரவிச்சந்திரனை யோசனையுடன் பார்த்தான் வினித்..

“பாஸ் இப்பத்தான் வந்தார்..” அவன் மனமறிந்து சொல்ல வேண்டியதைச் சொன்னாள் நந்தினி..

“அப்படியா..” வினித்தின் நெஞ்சுக்கு நிம்மதி கிடைத்து விட அவன் கோபம் முற்றிலுமாக மறைய ஆசுவாசமானான்..

“பிஸினெஸ் டீடெயில் ஒண்ணைக் கேட்கிறதுக்காக வந்தார் பாஸ்.. நானும் உத்ராவும் இங்கேயிருக்கிறோம்ன்னு சொன்னதும் நீயே கனடாக்காரன்கிட்ட அந்த டீடெ யில்ஸைச் சொல்லிருன்னு ஃபோனை என் கையில கொடுத்துட்டு.. நீங்க எங்கேன்னு உத்ரா கிட்ட விசாரிச்சுக்கிட்டு இருந்தார்.. பாஸ் கேட்கிறதுக்கும் நீங்க எண்ட்ரி கொடுக்கிறதுக்கும் சரியா

இருந்தது.. ஏன் அண்ணா.. நீங்களும் பாஸும் சொல்லி வைத்துக்கிட்டு ஒருத்தர் பின்னால ஒருத்தர் என்ட்ரி ஆனிங்களோ..? இந்த ஆம்பளைகளே இப்படித்தாண்டி உத்ரா.. நம்மை ஏப்ரல் ஃபூலாக்க என்ன வேண்டுமானாலும் பிளான் போடுவாங்க..''

நந்தினி போட்ட போட்டில் வினித் கிளீன் போல்டாகி விட்டான்..

''இல்லையில்ல..'' என்று சிரித்தபடி..

''நான் இப்பத்தான் சாரைப் பார்க்கிறேன் உத்ரா.. பிளான் எதுவும் போடலை.. நம்பு..'' என்று மனைவியைக் கெஞ்ச ஆரம்பித்துவிட்டான்..

''இனி மகளே.. உன் சமர்த்து..'' தோழியின் காதோரமாக முணுமுணுத்த நந்தினி அவளை வினித்தின் பக்கம் தள்ளி விட்டு..

''அண்ணாவை நம்பறதா வேண்டாமான்னு கலந்து பேசி ஒரு முடிவுக்கு வாங்கடி..'' என்று கலாய்த்தாள்..

வினித்தை ஏறிட்டுப் பார்த்த உத்ராவின் விழிகள் கலங்கின.. தேநிலவுக்கு வந்த இடத்தில் கணவனின்

கோபத்துக்கு ஆளாகி விட்டோமோ என்று பயந்து போயிருந்தவள்.. நொடிப் பொழுதில் நிலைமை மாறி விட்டாலும் அந்த பயம் முற்றிலுமாக அகலாமல் கலங்கி நின்றபடி..

“இவரை நம்பாம வேற யாரை நம்பப் போறேன் நந்தினி..? எனக்கு எல்லாமே இவர்தான்.. இதை கலந்து பேசித்தான் ஒரு முடிவுக்கு வரனுமா என்ன..?” என்று கணவனின் விழியோடு விழி கலக்கக் கேட்டாள்..

வினித் நெகிழ்ந்து விட்டான்.. மனைவியின் சரணாகதியில் அவனது மனதிலிருந்த கிலேசங்கள் ஓடோடி விட்டன.. ரவிச்சந்திரனும் நந்தினியும் அங்கே நின்று கொண்டிருப்பதை மறந்து போனவனாக கைகளை விரித்து.. இமைகளை மூடி உத்ராவை அழைத்தான்.. கடலில் கலக்கும் நதியாக உத்ரா கணவனின் கைகளுக்குள் புகுந்து விட்டாள்..

‘என்னாங்கடா இது..’ நந்தினிக்கு வெறுத்துப் போய் விட்டது..

அவள் ரவிச்சந்திரனிடம் செய்ய நினைத்ததை உத்ரா அவள் கணவனிடம் செய்து கொண்டிருக்கிறாள்.. நந்தினியும் ரவிச்சந்திரனும் அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்..

‘காதல் சொல்ல வந்தவ வாய்க்குப் பூட்டுப் போட்டு விட்டதைப் போல நிக்கறேன்.. புருஷன் பொண்டாட்டியா இருக்கிறதுக என்னவோ இன்னைக்குத்தான் பாத்துக் கிட்டதைப் போலக் கட்டிப் புடிச்சுக்கிறாங்க.. இந்த சீனைப் பார்க்கவா இங்கே வந்தேன்..?’

நாம் நடக்கலாம் என்பதைப் போல ரவிச்சந்திரன் ரகசிய சமிக்ஞை செய்தான்.. இதற்கு ஒன்றும் குறைச்சல் இல்லை என்ற கோபத்துடன் நந்தினி அவனைப் பின் தொடர்ந்தாள்.. தள்ளி நட க்காமல் அவளுடன் ஒட்டி உரசியபடி நடந்தவன் அவளைப் பார்த்து இமை சிமிட்டி..

“உனக்கேண்டி இவ்வளவு பொறாமை..?” என்று கேட்டான்..

நந்தினிக்குத் தூக்கிவாரிப் போட்டது.. உத்ரா அவனிடம் பேசியதில் நந்தினி காண்டானதை கண்டு கொண்டானோ..

‘இவன் எதைப் பத்திப் பேசறான்னு தெரியாம வாய் விட்டிறக் கூடாது..’ மனதுக்குள் தீர்மானித்துக் கொண்டவள்..

“யாருக்கு யார் மேல பொறாமையாம்..?” என்று தலையை ஒரு பக்கமாகச் சாய்த்துக் கேட்டாள்..

“போஸெல்லாம் நல்லாத்தான் இருக்கு.. நீதான் நீயா இல்லை.. உத்ரா எனக்குத் தங்கை போல.. அவங்க கூட நான் பேசினா பொறாமைப் படுவியா..?”

அவன் நிதானமாக கேட்டான்..

‘கண்டு பிடிச்சுட்டான்..’

தெளிவானதில் மறைத்துப் பேச வேண்டிய அவசியமில்லாமல் போய்விட விடுதலையுணர்வுடன் அவனை நேருக்கு நேராகப் பார்த்து முறைத்தாள் நந்தினி..

“உத்ரா உங்களுக்குத் தங்கையா..? எப்போயிருந்து..?”

“வினித் உனக்கு அண்ணாவானாரே.. அப்போதிருந்து.. ஆர் யு மேட்..? உன் அண்ணனின் வொய்ஃப் எனக்கு தங்கை முறையில்லையா..?”

‘ஆஹா..! எப்படியெல்லாம் முறை சொல்றடா மச்சான்..’

நந்தினிக்கு சந்தோஷமாக இருந்தது.. அவன் உத்ராவிடம் தங்கையிடம் பேசும் நினைவோடுதான் பேசியிருக்கிறான் என்பதில் அவள் மனதில் ஆறுதல் உண்டானது..

“அவங்களிடம் நான் பேசிக்கிட்டு இருந்த போது என்னையே சாப்பிட்டு விடுவதைப் போலப் பார்த்துக்கிட்டு

இருந்தியே.. ஏண்டி..? சைட் அடிக்கிறயா..? என் மீது காதல், கீதல் வந்துருச்சா..?”

உல்லாசமாகத்தான் அவன் கேட்டான்.. அவனை அவள் பார்வையிட்டதில் மகிழ்ந்து போய்த்தான் கேட்டான்.. அவளுக்குத்தான் மகிழ்ச்சியில்லை.. கேள்வி கேட்டவன் அதை உணர்வு பூர்வமாக கேட்காமல் நகைச்சுவையைப் போல கேட்டுத் தொலைக்கிறானே..

“ஆமாம்.. நான் உங்களைக் காதலிக்கிறேன்தான்..”

மனம் படபடக்க அவனைப் பார்க்க முடியாமல் நீச்சல் குளத்தைப் பார்த்தபடி சொல்லி விட்டாள்.. நீரலைகளின் சலசலப்பைப் போல அவளது மனம் சளசளத்தது..

‘என்ன செய்வான்..? வினித் அண்ணா கை விரித்ததைப் போல இவனும் கையை விரித்து கண்களால் என்னைக் கூப்பிடுவானா..?’

உடலுக்குள் ஓர்விதமான பரபரப்பு உற்பத்தியானது.. அவனது அழைப்பிற்காக அவள் காத்திருந்தாள்.. அவன் அழைத்ததும் அவனை இறுக்கிக் கட்டியனைத்து உம்மா கொடுக்க வேண்டும் போல மனது பரபரத்தது.. ரத்த நாளமெங்கும் எதிர்பார்ப்பு நிறைந்திருந்தது.. இப்போது

கூப்பிட்டு விடுவான்.. அப்போது கூப்பிட்டு விடுவான் என்று அவள் காத்திருக்க.. அவன் பகபகவென சிரித்து வைத்தான்..

“ஜோக்..? நான் சிரிக்கனுமாக்கும்..? நாளைக்குச் சேர்த்து வைத்து இன்னும் கொஞ்சம் அதிகமாச் சிரிக்கறேன்.. ஓகே.. இவள் என்னைக் காதலிக்கிறாளாம்.. குட் ஜோக்.. வா.. வா.. உனக்குப் பிடித்த பிரேக்ஃபாஸ்ட் அயிட்டம்ஸ் உனக்காக காத்திருக்குது.. அதை வெட்டறதை விட்டு விட்டு வீணாய் சிரிப்பை மூட்டாதே.. காதலன்னா உனக்கு அவ்வளவு ஈஸியாப் போச்சில்ல..? ஹா.. ஹா..”

‘அடப்பாவி ரவிச்சந்திரா..!’

நந்தினி அப்படியே அசையாமல் நின்று விட்டாள்.. அவளுக்கு காதல் வரவே வராது என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்கும் ரவிச்சந்திரனை நினைத்துத் தலையில் அடித்துக் கொள்ளலாம் போல இருந்தது..

அவனுக்குத்தான் காதல் வரும்.. அவளுக்கு வராதா..?

‘என்னை ரோபோன்னே முடிவு கட்டிட்டானா..?’ அவளுக்குச் சிரிப்பதா, அழுவதா என்றே தெரியவில்லை..

‘வெறும் ரோபோன்னு முடிவு கட்டலை நந்தினி.. தின்னிப் பண்டார ரோபோன்னு முடிவு கட்டியிருக்கான்..’ அவளது மனச்சாட்சி வேறு உணக்கையாக வியாக்கினம் வைத்தது..

ஸ்தம்பித்து நின்றவளைப் பார்த்து அவன் கேள்வியாக புருவங்களை உயர்த்தி வேறு சோதித்து வைத்தான்..

# அத்தியாயம் 168

‘**போ**டா.. டேய்ய்ய்...’

நந்தினிக்கு வெறி வெறியாக வந்தது.. அழகான மென்சிரிப்புடன் அவன் புருவங்களை உயர்த்தி இறக்கியதில் வழக்கம் போல மயக்கம் வந்து தொலைத்ததில் இவளுக்கு வெறி வெறியாக வந்தது.. முதலிலாவது மயக்கம் மட்டும்தான் வந்து தொலைக்கும்.. இப்போது கிறக்கமும் சேர்ந்து வந்து தொலைத்து இம்சை செய்தது..

‘நம்பித் தொலைடா.. நான் உன்னைக் காதலிக்கிறேண்டா..’

நந்தினி மனதுக்குள் புலம்பினாள்.. அலை பாய்ந்த அவனது சிகையில் விரல் விட்டுக் கோத வேண்டும் போல அவளது மனம் அலைபாய்ந்து தவித்தது.. அதை உணராமல் அவன் அவளை மேய்ச்சல் பார்வை பார்த்து கிளர்ச்சியைக் கிளப்பினான்..

‘பெரிய ரோமியோ..! காதல் மன்னன்னு மனசுக்குள்ள நினைப்பு.. இவனுக்கு மட்டும்தான் காதல் வரும்ன்னு மனசுக்குள்ள தெனாவெட்டு.. நான் பார்த்தாலும் பார்த்தேன்..

இவனைப் போல மண்டைக்கனம் பிடிச்ச ஆளைப் பார்த்ததேயில்ல.. மனுஷனுக்கு காசு, பணத்தில மண்டைக் கனம் வரலாம்.. தான் அழகாய் மன்மதனைப் போல இருக்கிறோம்ன்னு மண்டைக் கனம் வரலாம்..

மத்தங்களை விட புத்திசாலியா, திறமைசாலியா இருக்கிறதில மண்டைக் கனம் வரலாம்.. யாராலும் அசைக்க முடியாத இரும்பு மனுஷன்ங்கிறதில மண்டைக் கனம் வரலாம்.. இவனுக்கு மட்டும்தான் காதல் வரும்ங்கிற மண்டைக் கனம் வரலாமா..?’

அந்தத் தலைக்கனம் பிடித்த காதல் மன்னன் நொடிக்கொரு தரம் அவளைப் பார்த்துக் கண்சிமிட்டினான்.. ஒரு மார்க்கமாகக் கடித்துத் தின்பதைப் போலப் பார்த்து வைத்தான்.. ஒட்டி நடப்பதைப் போல கட்டிக் கொண்டு நடந்தான்.. அவளைக் கிளப்பி விடும் அத்தனை காதல் லீலைகளையும் செய்து விட்டு அவளிடம்..

“என்ன யோசனை..? ஃபுட் அயிட்டத்தில உனக்குப் பிடிச்சக் கோழிக்கோடன் அல்வா இருக்குமா இருக்காதான்னுதானே திங்க் பண்ற..?” என்று கேட்டு வைத்தான்..

உண்பதைத் தவிர அவளுக்கு வேறு எதிலும் ஆர்வம் வந்து விடாது என்ற அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருப்பவனிடம் உன்னை உண்ண வேண்டும் போல ஆசை பெருகுதடா என்று எப்படித் தன் மன உணர்வுகளை அவள் சொல்வாள்..? வெறுத்துப் போனவளாக..

“ஆமாம்..” என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னாள்..

“நினைத்தேண்டி.. எனக்கு அல்வா கொடுக்கிறதில உனக்கு அத்தனை ஆசை..? ம்ம்ம்..?”

தீர்க்கமாக அவன் பார்த்த பார்வை திணறடித்தது.. எப்போதும் அவளுக்கு எரிச்சலை மூட்டும் ‘வாடி, போடி,’ யென்ற உரிமையான அழைப்பு அப்போது குளிர்ச்சியைக் கொடுத்தது.. அவனுடைய அடாவடித்தனமான பேச்சை அவள் விரும்பினாள்..

“ஆமாம் சாரே..” அவன் பாணியிலேயே பதில் சொன்னாள்..

“சாரே..? ம்ம்ம்.. பாஸ் சார் ஆகிட்டேனா..?”

“ஊஹும்.. பாஸ் ‘சாரே’ ஆகிட்டார்..”

“ஸோ.. எனக்கு அல்வா கொடுக்கிறதில படு இண்ட்ரெஸ்ட்டா இருக்கிற..?”

“யெஸ்.. யெஸ்.. யெஸ்.. யெஸ்.. யெஸ்.. யெஸ்..”

“எதுக்கு இத்தனை யெஸ்..?”

“அம்புட்டுக் காண்டு பாஸ்..”

“வாட் ஃபார்..?”

“அது இருக்கு மெனி பாயிண்ட்ஸ்.. எடுத்து விட்டேன்னு வையுங்க.. இன்னைக்கு ஒரு நாள் போதாது.. இவர் பெரிய பிஸினெஸ் மேக்னெட்டாம்.. உலகமே கொண்டாடுதாம்.. என்கிட்டக் கேட்டிருக்கனும்.. வண்டியா வண்டியா அடுக்கியிருப்பேன்..”

“எதை..?”

“உங்க அறிவோட லெவலை.. ஆஹா.. எதையெதை எப்படியெப்படி மீன் பண்ணிக்கறிங்க.. புல்லரிக்குது போங்க.. அப்படியே சூடம் ஏத்திச் சாம்பிராணி காட்டிக் கன்னத்தில போடலாம் போல இருக்கு..”

அவன் கன்னத்தில் நான்கு அப்ப அப்ப வேண்டும் போல ஆத்திரம் ஆத்திரமாக வந்ததை அடக்கிக் கொண்டு சொன்னாள்..

அவனுக்கா அது புரியாது..? இடுங்கிய கண்களுடன் அவளை ஆராய்ச்சியாக உற்றுப் பார்த்தவன்..

“இது புகழ்ச்சி போலத் தெரியலையே..” என்றான்..

‘தெரிஞ்சாச் சரி..’ நந்தினி கழுத்தை ஒரு வெட்டு வெட்டி நொடித்தபடி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்..

“ஹௌ நைஸ்.. இதையெல்லாம் எப்படிடீ செய்கிற..?” அவன் ஆச்சரியத்துடன் கேட்டான்..

“வர்றீங்களா.. அப்படி ஸ்விம்மிங் பூல் பக்கமா உட்கார்ந்து கிளாஸ் எடுக்கிறேன்..” அவள் சிரிக்காமல் அழைத்தாள்..

அவளுக்கும் சேர்த்து வைத்து அவன்தான் சிரித்தான்.

“இன்னைக்கு செம காண்டில இருக்க போல இருக்கு.. எதுக்குன்னுதான் தெரிய மாட்டேங்குது.. ஹும்..”

நந்தினியின் முகத்தையே அவன் உற்றுப் பார்த்ததில் முகம் சிவக்க அவள் தரையைப் பார்க்க.. அவன்..

“வாவ்..!” என்றான்..

‘இது எதுக்காம்..?’

“வெட்கப் படுகிறப்ப நீ ரொம்ப அழகா இருக்கிற நந்தனி..” அவன் குரல் கரகரத்தது..

காதல்வயப்பட்டால் அவனது குரல் கரகரத்து விடுவதை உணர்ந்திருந்தவளுக்கு போடா என்றிருந்தது.

‘நீ ஏங்கும் காதலுடன் உனக்காக ஏங்கி நிற்கிறேன்.. என்னிடம் நிறைந்திருக்கும் காத லை உணராமல்.. என்னிடம் இல்லாத அழகை ஃபீல் பண்ணி ரசிக்கிறயே.. நீயெல்லாம் எப்படித்தான் வெற்றிக்கொடி கட்டிக்கிட்டு இருக்கியோ..’

“என்னன்னு தெரியலை.. இன்றைக்கு நீ ரொம்பவும் அழகா இருக்கிறதைப்போல அட்ராக்ஷன் ஆகுதுடி.. யூசுவலாவே நீ பேரழகுதான்.. இன்றைக்கு அதிகப்படியான அழகு..” அவளை ஆசையுடன் பார்த்தான்..

நந்தினி விழிகளை உயர்த்தி அவனைப் பார்த்தாள்.. அவள் விழிகளோடு விழி கலந்தவன் அவளை அணைத்து முகத்துக்கு நேரே குனிந்தான்.. அடர்ந்த செடிகளின் மறைவில்

இழுத்துக் கொண்டான்.. மறுப்பின்றி உடன்பட்ட நந்தினியின் மனம்..

'ஹோ..' வென்ற உணர்ச்சிப் பேரலைகளில் மூழ்க ஆரம்பித்தது..

'இதோ.. முத்தமிடப் போகிறான்..'

விழிமூடி எதிர்பார்ப்புடன் அவள் தொய்ந்த போதுதானா அவனுடைய செல்ஃபோன் ஒலிக்க வேண்டும்.

'இந்த செல்ஃபோனுக்கு எதுக்கு இத்தனை காண்டு..? எனக்கு வில்லியே இதுதான்.. அஜந்தாவும், தரங்கிணியும் கூட்டுச் சேர்ந்து மந்திரிச்சு ஏவி விட்டிருப்பாங்களோ.. அது செல்ஃபோனா என்னை சோதிக்குதோ..'

ரவிச்சந்திரன் எரிச்சலுடன் செல்ஃபோனை பார்த்து விட்டு..

"அமெரிக்கா கிளையண்ட்ஸ்.." என்று முணுமுணுத்தான்..

உணர்வுகள் வடிந்த நிலையில் நந்தினி அவன் கையை விலக்கி விட்டு நகர யத்தனித்தாள்... இடது கையில் செல்ஃபோனை பிடித்துக் காதுக்குக் கொடுத்திருந்தவன்.. நகர

முற்பட்டவளை வலது கையால் இறுக்கிப் பிடித்து நிறுத்தி வைத்தான்.. இரு நிமிடப் பேச்சுக்குப் பின் செல்ஃபோனை அணைத்து பாக்கெட்டில் போட்டவன்..

“ஃபோன் பேசி முடிக்கிற வரைக்கும் வெயிட் பண்ண மாட்டியா..? ஓடறதிலேயே குறியாய் இருக்கிற..?” என்று எரிந்து விழுந்தான்..

‘எதற்கான எரிச்சல் இது.. ?’ நந்தினியின் மனதில் இதம் வந்தது..

அவன் நினைத்தது நடக்கவில்லையென்பதால் வந்த எரிச்சல் இது.. நந்தினி முகச் சிகப்புடன் பேசாமல் இருந்தாள்..

“மை டியர்..” அவன் குரல் கரகரத்தது..

அவளை இறுக்கி அணைத்து அவன் முத்தம் கொடுத்தபோது நந்தினிக்குள் இருந்த அனைத்து ஏமாற்றங்களும் பறந்து விட்டன.. அவளுக்குள் இருக்கும் காதலை அவன் உணராமல் இருக்கலாம்.. ஆனால் அவனுக்குள் இருக்கும் அவள் மீதான காதல் துளிக்கூட குறையவில்லை.. நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. அவளுக்கு அதுவே போதுமானதாக இருந்தது.. மறுப்பின்றி உடன்பட்டவளை விடுவித்து

அவளது முகம்தடவி முடிகோதி விட்டவன்.. “இன்றைக்கு என்னடி ஆச்சு..? என் குவினுக்கு என் மேல் இரக்கம் வந்திருச்சு போல இருக்கே..? முரண்டு பிடிக்காம அலோவ் பண்ணிட்டயே..” என்று திருப்தியுடன் கேட்டான்..

முகச் சிகப்புடன் நந்தினி விலகி நடந்தாள்.. அவளுடன் சேர்ந்து நடந்தவன்..

“என் காதலை கன்சிடர் பண்ணவே மாட்டாயாடி..?” என்று தாபத்துடன் கேட்டான்..

‘ஏண்டா இம்சை பண்ற..?’ நந்தினி முட்டிக் கொள்ள மொட்டைச் சுவர் அகப்படுமா என்று சுற்று முற்றும் பார்த்தாள்..

நட்சத்திர ஹோட்டலான ‘யாழ்’ பளிங்குச் சுவருடன் பளபளவென இருந்தது.. அதில் முட்டி ஆகப்போவதென்ன என்று பல்லைக் கடித்தபடி அவனை முறைத்தாள்..

“என் காதலைப் புரிஞ்சுக்கவே மாட்டியாடி..?”

‘பேசாம இருடா.. இல்லேன்னா குரல்வளையை நெறிச்சுருவேன்..’

ஆறடிக்கும் அதிக அளவில் உயர்ந்து நிற்கும் அந்த நெடியோனின் தோள் சாய்வதே பெரும் பாடாக இருக்கிறது.. இதில் குரல்வளையை எப்படிப் பிடிப்பது என்ற பலத்த யோசனையுடன் அவளிருக்க..

“என்ன..? கோழிக்கோடிலதானே இருக்கிறோம்..

இப்படியே ரூட் விட்டு மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸை பிடித்து இவனிடமிருந்து எஸ்கேப் ஆகிடலாம்ன்னு பிளான் பண்றியா..?” என்று அவன் புருவங்களை நெறித்தான்..

‘உன்னை விட்டு ஓடிப் போக முடியுமா..? என்னால் முடியுமா..?’ அவள் பெருமூச்சு விட..

“முத்தம்தானேடி கொடுத்தேன்.. முதலிரவா கொண்டாடிட்டேன்..? அதுக்காகவா இப்படியொரு பெருமூச்சு..? என்னை விட்டு எஸ்கேப் ஆகிடனும் என்கிற பிளான்..? ஊம்..?”

அவள் மனம் புரியாமல் அவன் கடுகடுத்தான்.. இதில்..

“ஏண்டி இப்படியே இருக்கிற..? மாறவே மாட்டாயா..?” என்ற கேள்வி வேறு..

‘மாறியது நெஞ்சம்ன்னுதானேடா ஓடி வந்தேன்.. நீதான் எனக்குக் காதல் வரவே வராதுன்னு முடிவே பண்ணிட்டயே..’

டைனிங் ஹாலை நெருங்கி விட்டார்கள்.. இன்று ஊர் சுற்றும் போது கிடைக்கும் தனிமையில் எப்படியும் தன் மனதை புரிய வைத்து விடவேண்டும் என்ற உறுதியோடு இருந்தாள் நந்தினி..

ஒருதலைக்காதலாக இருந்திருந்தால் மறைத்து விடலாம்.. போலியாக சிரித்தபடி பிரிந்து விடலாம்..

இது இருதலைக்காதல்.. அது புரியாமல் அவன் அவனை அவள் காதலிக்கவில்லையென்று சினந்து கொண்டிருக்கிறான்..

‘இதுதான் வன் கொடுமைடா..’

உத்ராவும் வினித்தும் உலகை மறந்தவர்களாக ரகசியப் பேச்சும் சிரிப்புமாக டைனிங் ஹாலின் மூலையில் இருந்த டேபிளை ஆக்ரமித்திருந்தார்கள்..

“ம்ஹூம்.. கொடுத்து வைத்தவன்.. அவனைக் காதலிக்கிற வொய்ஃப் கிடைச்சிருக்கா.. எனக்குன்னு நீ வந்து வாய்ச்சிருக்கயே..”

ரவிச்சந்திரன் பொறாமையில் காய்ந்தான்.. நந்தினி பார்த்த மௌனப் பார்வையில் குழம்பிப் போய்..

“என்னடி..?” என்றான்..

நந்தினி பதில் பேசாமல் மறுமூலையைத் தேர்ந்தெடுத்து உட்கார்ந்தாள்.. அவளை ஒரு மார்க்கமாகப் பார்த்தபடி..

“இதிலெல்லாம் செம விவரம்தாண்டி.. உத்ராவையும், வினித்தையும் டிஸ்டர்ப் பண்ணக் கூடாதுன்னு தள்ளி உட்காருகிற..? இந்த அண்டர்ஸ்டாண்டிங்கை என் மேட்டரில் காண்பிக்க மாட்டேன்னு அடம் பிடிக்கிறயே..” என்று நெடிய பெருமூச்சை வெளிவிட்டான்..

நந்தினியின் ஊடுறுவும் பார்வையில் புருவங்களை உயர்த்தி அவளைக் கிறங்கடித்தவன்..

“இன்றைக்கு ஒரு தினுசாத்தாண்டி இருக்கிற.. புதிர் போடுகிறதைப் போல பார்த்து வைக்கிற.. வாட்’ஸ் தி மேட்டர்ன்னுதான் புரிய மாட்டேங்குது.. உனக்குக் கூட சஸ்பென்ஸ் வைக்கத் தெரியுமா நந்தினி..?” என்று வியந்தான்..

‘எனக்குக் காதலிக்கவே தெரியும்.. உனக்குத்தான் அது தெரிய மாட்டேங்குது..’

இப்போது நந்தினி நெடிய பெருமூச்சை விட்டாள்.. அவன் அதற்க்கும் குதர்க்கமான ஓர் காரணத்தைக் கண்டுபிடித்தான்..

“யாரை நினைத்துப் பெருமூச்சு விடற..? பெல்ட் மன்னனை நினைத்தா..?” கண்கள் இடுங்கக் கேட்டு வைத்தான்..

வேறு ஒரு சமயமாக இருந்திருந்தால் நந்தினி கடுப்பாகி ‘ஆமாம்’ என்று சொல்லியிருப்பாள்.. அன்று அப்படிச் சொல்ல முடியவில்லை.. உன்னிடம் பேச என்னால் முடியாது என்று ஆயாசத்துடன் முறைத்து வைத்தாள்..

காலை உணவை முடித்து ஹோட்டல் வாசலுக்கு வந்தபோது ரவிச்சந்திரன் காரில் ஏறவில்லை..

“அமெரிக்கக் கம்பெனியோட பிஸினெஸ் மீட்டிங் இருக்கு.. ஈவினிங்கே நாம அரண்மனைக்குக் கிளம்பியாகனும்.. ஸோ.. கடலுண்டி பறவைகள் சரணாலயத்தை நீங்க பார்த்துட்டு வந்திருங்க.. லன்ச் டயத்தில மீட் பண்ணலாம்..” என்று சொல்லி விட்டான்..

நந்தினியால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.. அவனும் அவளும் கடலுக்கு மத்தியில் தீவு போல இருக்கும் பறவைகள் சரணாலயத்தில் சுற்றிக் கொண்டிருக்கும் போது அவன் கரம் பிடித்து காதல் சொல்லி மார்பில் சாய்ந்து கொள்ள வேண்டும் என்ற அவளது கனவு கலைந்ததில் அவளுக்குப் பித்துப் பிடித்ததைப் போல ஆகிவிட்டது..

“அஸ் எ பெர்சனல் செக்கரட்டரி.. நான் உங்க கூட இருந்தாகனுமே பாஸ்..” தேங்கி நிற்க முயன்றாள்..

“சும்மா ஃபிலிம் காட்டி சிரிப்பை மூட்டாம ஊரைச் சுற்றப் போ.. நீ ஹெல்ப் பண்ணிட்டாலும்..” அவன் மறுத்து விட்டான்..

அவன் இல்லாமல் உத்ரா, வினித்துடன் அவள் ஊர் சுற்றுவதை அவன் விரும்ப மாட்டான் என்று உத்ரா சொன்னாளே.. அது பொய்யா..? அவள்மீது அவனுக்கு உரிமையுணர்வு இல்லையா..?

அவனை ஏக்கமாகப் பார்த்தபடி அவள் காரில் ஏறுவதைப் பார்த்துக் கொண்டே இருந்தான் ரவிச்சந்திரன்.. முதல் நாளில் இருந்தே நந்தினியின் செய்கைகள் அனைத்தும் வித்தியாசமானதாக இருந்ததைப் போல அவனுக்குத்

தோன்றியது.. அவளது விழிகளில் தெரியும் தவிப்பு..! இதழ்கள் துடிக்கும் துடிப்பு..! பார்வையில் தெரியும் மருகல்..!

இவை அத்தனையும் அவனுக்கு எதை உணர்த்த முனைகின்றன..? ரவிச்சந்திரனின் மூளையில் மின்னல் வெட்டியது.. இது காதலா..?

'நந்தினி..!'

பரவசத்துடன் அவன் படியிறங்கியபோது கார் பறந்து விட்டது..

**- ஆறாம் பாகத்தில் தொடரும்...**


லட்சுமி பாலாஜி பதிப்பகம்